# சமூக அறிவியல் கற்பித்தல்

# முதலாம் ஆண்டு

## அக மதிப்பீடு

**I. பொதுவான செய்முறைப் பயிற்சிகள்:**

a) கற்கும் பாடங்கள் (1–7) = 175 (S.S. = 25)

b) கற்பித்தல் பயிற்சி (3 – 7) = 300 (S.S. = 60)

c) செய்முறைப்பயிற்சி (பொதுவானவை) 625

**II. சமூக அறிவியல் கற்பித்தல் (செய்முறைப் பயிற்சிகள்)**

| | | |
|---|---|---|
| 1. | சமூக அறிவியல் கற்பித்தல் வளநூல் செய்முறைப் பயிற்சிகள் | 5 |
| 2. | பாடத்தொடர்பான வகுப்பறை உள்/வெளிச் செயல்பாடுகள் | 5 |
| 3. | தேர்வுகள் | 5 |
| 4. | இரண்டு கருத்தரங்க பங்கேற்புகள் | 5 |
| 5. | வினா வங்கி (அனைத்து வகையான புறவய வினாக்கள்)<br>i. 3–5 வகுப்பு வரை உள்ள பாடத்திற்கு<br>ii. வளநூல் உள்ள பாடப்பகுதி | 5 |
| | மொத்தம் | 25 |

**III. (வளநூல் செய்முறைப் பயிற்சிகள்)**

| வ.எண். | செய்முறைப் பயிற்சிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | படத்தொகுப்பு | 2 |
| 2. | காலக்கோடு | 10 |
| 3. | களப்பயண அறிக்கைகள் | 2 |
| 4. | ஒப்படைப்புகள் | 10 |
| 5. | கலந்துரையாடல் அறிக்கைகள் | 5 |
| 6. | வினா–விடை வங்கி | 1 |
| 7. | சொற்பொழிவு – பங்கேற்பு | 2 |
| 8. | (i) மாதிரிப் பாராளுமன்றம் – பங்கேற்பு அறிக்கை | 2 |
| | (ii) தொலைக்காட்சி பாராளுமன்ற நிகழ்வுகள் உற்று நோக்கல் – அறிக்கை | |
| 9. | செயல்திட்டம் | 2 |
| 10. | விவாதம் – அறிக்கை | 1 |
| 11. | செய்துகற்றல் – பங்கேற்பு | 3 |
| 12. | கருத்தரங்கம் – பங்கேற்பு | 3 |
| 13. | நிலவரைப்படம் புத்தகம் (3 முதல் 5 வகுப்பு வரை) | 1 |
| 14. | சுவர் நிலவரைப்படம் | 1 |

# சமூக அறிவியல் – பாடத்திட்டம்
## முதலாம் ஆண்டு

| பாடப்பொருள் | செய்முறை |
|---|---|
| **பகுதி அ – பாடப்பொருள்** | |
| **அலகு I** | |
| **மனித வாழ்க்கையில் வரலாற்றின் தாக்கம் –** கல்வி – சமுதாயம் – அரசியல் – பொருளாதாரம் – சமயம் – கலாச்சாரம் – கலை மற்றும் கட்டிடக்கலை | – படங்கள் சேகரிப்பு, ஆவணங்கள் சேகரிப்பு – ஒப்படைப்புகள் – செயல் திட்டம் – நிலவரைப்பட பயிற்சிகள் – காலக்கோடு வரைதல் படத்தொகுப்பு – கால அட்டவணைகள் – மைல் கல் வரைதல் – நாடகம் – கலந்துரையாடல் – வினாடிவினா – களப்பயணம் – இணைய தளம் மூலம் கற்றல் செயல்பாடு. |
| **அலகு II** | |
| **இந்திய அரசியலமைப்பு**<br>முகப்புரை – சிறப்பியல்பு – நெறிமுறைக் கோட்பாடுகள் – இந்தியாவில் கட்சி முறை – அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் – குடியுரிமை – இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் மகளிர், சிறார் மற்றும் இயலாதோர் நலன் மற்றும் கல்வி தொடர்புடைய சட்டங்கள் | குழுச்செயல்பாடு – ஒப்படைப்புகள் சிறப்பு விருந்தினர் விரிவுரைகள் |
| **அலகு III** | |
| **மத்திய – மாநில – உள்ளாட்சி அரசமைப்புகள்**<br>**மத்திய அரசு**<br>பாராளுமன்றம் – உறுப்பினராதல் நடைமுறைகள் – மத்திய அரசின் ஆட்சி அமைப்பு – அதிகாரங்கள் மற்றும் பணிகள் – நீதி, சட்டமன்ற மற்றும் ஆட்சி அதிகாரங்கள் – உச்ச நீதி மன்றம் – நீதித்துறைப் பணிகள் மற்றும் அதிகாரங்கள்.<br>**மாநில அரசு**<br>மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் – சட்ட பேரவை – சட்ட மேலவை – மாநில சட்டமன்றத்தின் பணிகள் – மாநில நிர்வாகத்துறை – ஆளுநர் – முதலமைச்சர் – அமைச்சரவை – மாநிலத் நீதித்துறை – பணிகளும், அதிகாரங்களும்<br>**உள்ளாட்சி**<br>உள்ளாட்சி அமைப்புகள் – பஞ்சாயத்து ராஜ் சட்டம் – ஊராட்சி ஒன்றியம் – மாவட்ட ஊராட்சி – மாநிலத் தேர்தல் ஆணையம் – நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் – பேரூராட்சி – நகராட்சி, மாநகராட்சி, பணிகள் / அதிகாரங்கள் | – மாணவர் பாராளுமன்றம்<br>– ஒப்படைப்புகள்<br>– தொலைக்காட்சியில் ஒலிப்பரப்பாகும் பாராளுமன்ற நிகழ்வுகளை உற்றுநோக்கி அறிக்கைத் தயாரித்தல்.<br>– செயல்திட்டம்<br>– மைய, மாநில அரசுகளில் பணிகளையும், அதிகாரங்களையும் பட்டியலிட்டு, வேறுபாடுகளையும், சிறப்பம்சங்களைப் பற்றிய ஆய்வு அறிக்கை தயாரிக்க. |

<table>
<tr><td colspan="2">அலகு IV</td></tr>
<tr><td>பேரண்டம் – அண்டம் – சூரிய மண்டலம்<br>புவி – வடிவம் மற்றும் அமைப்பு – புவியின் சுற்றுதல் வலம் வருதல் – இரவு / பகல் – பருவக்காலங்கள் – கிரகணங்கள்.<br>நிலவியல் – புவி தோன்றிய விதம் – கண்டப்போக்கு கோட்பாடு – கண்டங்கள் – பெருங்கடல்கள் – நாடுகள் – மலைகள் – பீடபூமிகள் – சமவெளிகள் – பாறை அமைப்புகள் – நிலநடுக்கம் – எரிமலைகள் – மனித வாழ்க்கையில் இவற்றின் தொடர்பு.</td><td>தானே கற்றல் கருவி தயாரிப்பு, சூரிய மண்டலம்<br>– சூரிய மண்டலத்தில் புவி அமைவிடத்தின் சிறப்பம்சங்களைப் பற்றி கலந்துரையாடல்.<br>– மக்கள் இடம் விட்டு இடம் பெயர்வதன் காரணங்களை ஆராய்ந்து அறிக்கை தயாரித்தல்.<br>– களப்பணி – உற்றுநோக்கல் – வட்டார புவியியல் (நிலத்தோற்றங்கள்) – பதிவு செய்தல் – அறிக்கை தயாரித்தல்.<br>– நிலத்தோற்றங்கள் (மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், ஆறுகள்) பற்றி நிலவரைப் படப் புத்தகம் தயாரித்தல்.</td></tr>
<tr><td colspan="2">பகுதி ஆ – கற்றல் முறைகள்</td></tr>
<tr><td colspan="2">அலகு I</td></tr>
<tr><td>சமூக அறிவியல் கற்பித்தலின் பொருள், வரம்பு மற்றும் நோக்கங்கள்<br>மனித வளர்ச்சிக்கு, சமூக அறிவியலின் பங்கு – தனிமனித வளர்ச்சி – அறிவு வளர்ச்சி – சமூக வளர்ச்சி – அரசியல் அறிவு வளர்ச்சி – பொருளாதார மற்றும் தேசிய வளர்ச்சி</td><td>பாடத் தொடர்பான விவாதங்கள், குழு செயல்பாடுகள்</td></tr>
<tr><td colspan="2">அலகு II</td></tr>
<tr><td>செயல்திட்டம்<br>வரையறை, பொருள் மற்றும் படிநிலைகள் – முக்கியத்துவம் மற்றும் பயன்கள் – சமூக அறிவியலில் செயல் திட்ட முறை மேற்கொள்ளக் கூடியத் தலைப்புகள்</td><td>தெரிவு செய்யப்பட்ட செயல்திட்ட முறை தலைப்புகள்<br>– கிராமத்தின் வரலாறு / புவியியல் / பொருளாதாரம் / கல்வி பற்றிய ஆய்வு<br>– சுற்றுவட்டாரக் கோவில்களின் கலை மற்றும் கட்டிடக்கலையின் சிறப்பு<br>– இந்தியர்களின் வாழ்க்கையில் ஆங்கிலேயர் ஆட்சியின் தாக்கம்<br>– தகவல் தொழில் நுட்பத்தில் இந்தியாவில் முன்னேற்றம்</td></tr>
<tr><td colspan="2">அலகு III</td></tr>
<tr><td>புவிமாதிரி – நிலவரைப்படம் – நிலப்படப் புத்தகம் படித்தறிதல்<br>புவி மாதிரி படித்தறிதல்<br>அட்சக்கோடுகள் – தீர்க்கக்கோடுகள் – காலநிலை மண்டலங்கள் – நேர மண்டலங்கள் – நேரக் கணக்கீடு – புவி மாதிரியில் இடங்களின் அமைவிடம் காணல்.</td><td>செய்து காட்டல்<br>குழு வேலைப்பாடு – ஒப்படைப்புகள் – பணிமனை – கண்காட்சி அமைத்தல் – அன்றாட நிகழ்வுகள் பற்றிய செய்திகளைச் சேகரித்தல்.</td></tr>
</table>

<table>
<tr><td>நிலவரைப்படம் படித்தறிதல்<br>நிலவரைப்படத்தின் அடிப்படைக் கூறுகள் (தூரம், திசை, வண்ணங்கள், முறைக் குறியீடுகள் – நிலவரைப்பட வகைகள் – உள்ளூர் வரைப்படம் – இயற்கையமைப்பு நிலவரைப்படம், வானிலை நிலவரைப்படம், பொருளாதார நிலவரைப்படங்கள், நிலவரைப்படம் உருவாக்குதல், வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல், நிலவரைப் படத்தில் இடங்களை குறித்தல், நிலவரைப்படங்களை பெரிதாக்குதல் / சிறிதாக்குதல்.<br>நிலப்படப் புத்தகம் படித்தறிதல்<br>இடங்களின் இருப்பிடத்தைக் கண்டறிதல் – நிலவரைப்படம், புவிமாதிரி மற்றும் நிலப்படப் புத்தகம் மூன்றிற்கும் உள்ள வேறுபாடுகள் – அன்றாட மனித வாழ்க்கையில் நிலவரைப்படம், புவிமாதிரி மற்றும் நிலப்படப் புத்தகத்தின் பயன்கள்</td><td></td></tr>
<tr><td colspan="2" align="center">அலகு IV</td></tr>
<tr><td>கருத்தரங்கம்<br>வரையறை மற்றும் பொருள் – கருத்தரங்கத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் – திட்டமிடல் – நடத்தும் முறை – மீள்பார்வை– மதிப்பிடல் – கருத்தரங்கின் பொழிப்புரை மற்றும் அறிக்கை – நன்மைகள் – கற்றல் – கற்பித்தலில் கருத்தரங்கத் தலைப்புகள்</td><td>சமூகப் பிரச்சனைகள் சார்ந்த கருத்தரங்குகள்<br>– சுற்றுச் சூழல் பிரச்சனைகள்<br>– கருத்தரங்க பொழிப்புரை மற்றும் அறிக்கை தயாரித்தல்.</td></tr>
<tr><td colspan="2" align="center">அலகு V</td></tr>
<tr><td>களப்பயணம்<br>வரையறை மற்றும் பொருள் – களப்பயண பார்வை இடங்கள் களப்பயணம் – ஏற்பாடு, நடைமுறைப் படுத்துதல் – கலந்துரையாடல் – அறிக்கைத் தயாரித்தல் – சமூக அறிவியல் களப்பயணம் மேற்கொள்ளக் கூடிய திறன் பகுதிகள்.</td><td>திறன் தொடர்பான பொருட்கள் சேகரித்தல் – கண்காட்சி அமைத்தல் – மாசுக் கட்டுப்பாடு வாரியம், கோளரங்கம், அருங்காட்சியகம் – பார்வையிடல்.</td></tr>
<tr><td colspan="2" align="center">அலகு VI</td></tr>
<tr><td>செயல்வழிக் கற்றல்<br>– செயல்வழிக் கற்றல் – பொருள் மற்றும் வரையறை.<br>– செயல்வழிக் கற்றலில் திறன் / திறன்பகுதிகள் அமைப்பு<br>– செயல்வழிக்கற்றலில் மதிப்பீட்டின் அமைப்பு<br>– செயல் வழிக்கற்றலின் நன்மைகள்</td><td>செயல்வழிக் கற்றல் – சமூக அறிவியலில் உள்ள கற்றல் செயல்பாடுகள்<br>– கற்றல் அட்டைகள் தயாரித்தல்.</td></tr>
</table>

# சமூக அறிவியல் கற்பித்தல்

## முதலாம் ஆண்டு

### பொருளடக்கம்


| அலகுகள் | பகுதி – அ – பாடப் பொருள் | பக்கம் |
|---|---|---|
| I | மனித வாழ்க்கையில் வரலாற்றின் தாக்கம் | 1 |
| II | இந்திய அரசியலமைப்பு | 45 |
| III | மத்திய – மாநில – உள்ளாட்சி அரசமைப்புகள் | 71 |
| IV | பேரண்டம் – அண்டம் – சூரிய மண்டலம் | 94 |
| | **பகுதி – ஆ – கற்பித்தல் முறைகள்** | |
| I | சமூக அறிவியல் கற்பித்தலின் பொருள், வரம்பு மற்றும் நோக்கங்கள் | 121 |
| II | செயல் திட்டம் | 132 |
| III | புவிமாதிரி – நிலவரைப்படம் – நிலப்படப்புத்தகம் – படித்தறிதல் | 139 |
| IV | கருத்தரங்கம் | 172 |
| V | களப்பயணம் | 180 |
| VI | செயல்வழிக் கற்றல் | 186 |
| | **இணைப்புகள்** | |
| | வினாத்தாள் வடிவமைப்புகள் | 200 |
| | மாதிரி வினாத்தாள்கள் | 202 |
| | அக மதிப்பீடு | 206 |

| வினாத்தாள் வடிவமைப்பு I | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலாம் ஆண்டு பாடப்பொருள் | | | | | | | | | | | | | |
| பாடப்பொருள் | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்துதல் | | | திறன் | | | மதிப்பெண்கள் |
| | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | |
| அலகு 1 | 1(2) | 1 (4) | – | 1(2) | 1(4) | – | – | – | – | – | – | – | 12 |
| 2. | – | 1(4) | – | – | – | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | 12 |
| 3. | 1(2) | 1(4) | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | – | – | – | 14 |
| 4. | 1(2) | 1(4) | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | – | – | – | 14 |
| பாடம் நடத்தும் முறை | | | | | | | | | | | | | |
| அலகு 1 | 1(2) | 1(4) | – | 1(2) | – | 1(10) | – | – | – | – | – | – | 18 |
| 2. | – | 1(4) | – | – | – | – | 1(2) | – | 1(10) | – | – | – | 16 |
| 3. | 1(2) | – | – | 1(2) | – | – | 1(2) | – | – | – | 1(4) | 1(10) | 20 |
| 4. | 1(2) | – | – | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 12 |
| 5. | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | – | – | – | 10 |
| 6. | – | – | – | 1(2) | 1(4) | – | – | – | 1(10) | – | – | – | 16 |
| **மொத்தம்** | **12** | **28** | **–** | **14** | **20** | **10** | **12** | **8** | **20** | **2** | **8** | **10** | **144** |

## வினாத்தாள் வடிவமைப்பு II

### சமூக அறிவியல் – முதலாம் ஆண்டு

| பாடப் பொருள் | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்துதல் | | | திறன் | | | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | |
| அலகு 1 | 1(2) | 1 (4) | – | – | 1(4) | – | – | 1(4) | – | 1(2) | – | – | 16 |
| 2. | – | 1(4) | – | – | 1(4) | – | 1(2) | – | – | 1(2) | – | – | 12 |
| 3. | 1(2) | – | – | 1(2) | – | – | 1(2) | 1(4) | – | – | – | – | 10 |
| 4. | – | – | – | 1(2) | 1(4) | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | 14 |
| பாடம் நடத்தும் முறை | | | | | | | | | | | | | |
| அலகு 1 | 1(2) | – | – | – | – | 1(10) | – | 1(4) | – | – | – | – | 16 |
| 2. | – | 1(4) | – | 1(2) | – | – | 1(2) | – | 1(10) | – | – | – | 18 |
| 3. | 1(2) | – | – | – | – | – | – | – | – | 0 | – | 2(10) | 22 |
| 4. | 1(2) | – | – | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 12 |
| 5. | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 1(2) | – | – | 12 |
| 6. | – | – | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 12 |
| **மொத்தம்** | **10** | **16** | **–** | **10** | **20** | **10** | **12** | **20** | **10** | **8** | **8** | **20** | **144** |

| வினாத்தாள் வடிவமைப்பு I | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலாம் ஆண்டு பாடப்பொருள் | | | | | | | | | | | | | |
| பாடப்பொருள் | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்துதல் | | | திறன் | | | மதிப்பெண்கள் |
| | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | |
| அலகு 1 | 1(2) | 1 (4) | – | 1(2) | 1(4) | – | – | – | – | – | – | – | 12 |
| 2. | – | 1(4) | – | – | – | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | 12 |
| 3. | 1(2) | 1(4) | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | – | – | – | 14 |
| 4. | 1(2) | 1(4) | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | – | – | – | 14 |
| பாடம் நடத்தும் முறை | | | | | | | | | | | | | |
| அலகு 1 | 1(2) | 1(4) | – | 1(2) | – | 1(10) | – | – | – | – | – | – | 18 |
| 2. | – | 1(4) | – | – | – | – | 1(2) | – | 1(10) | – | – | – | 16 |
| 3. | 1(2) | – | – | 1(2) | – | – | 1(2) | – | – | – | 1(4) | 1(10) | 20 |
| 4. | 1(2) | – | – | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 12 |
| 5. | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | – | – | – | 10 |
| 6. | – | – | – | 1(2) | 1(4) | – | – | – | 1(10) | – | – | – | 16 |
| மொத்தம் | 12 | 28 | – | 14 | 20 | 10 | 12 | 8 | 20 | 2 | 8 | 10 | 144 |

**வினாத்தாள் வடிவமைப்பு II**

**சமூக அறிவியல் – முதலாம் ஆண்டு**

| பாடப் பொருள் | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்துதல் | | | திறன் | | | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | |
| அலகு 1 | 1(2) | 1 (4) | – | – | 1(4) | – | – | 1(4) | – | 1(2) | – | – | 16 |
| 2. | – | 1(4) | – | – | 1(4) | – | 1(2) | – | – | 1(2) | – | – | 12 |
| 3. | 1(2) | – | – | 1(2) | – | – | 1(2) | 1(4) | – | – | – | – | 10 |
| 4. | – | – | – | 1(2) | 1(4) | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | 14 |
| பாடம் நடத்தும் முறை | | | | | | | | | | | | | |
| அலகு 1 | 1(2) | – | – | – | – | 1(10) | – | 1(4) | – | – | – | – | 16 |
| 2. | – | 1(4) | – | 1(2) | – | – | 1(2) | – | 1(10) | – | – | – | 18 |
| 3. | 1(2) | – | – | – | – | – | – | – | – | 0 | – | 2(10) | 22 |
| 4. | 1(2) | – | – | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 12 |
| 5. | – | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 1(2) | – | – | 12 |
| 6. | – | – | – | 1(2) | 1(4) | – | 1(2) | – | – | – | 1(4) | – | 12 |
| மொத்தம் | 10 | 16 | – | 10 | 20 | 10 | 12 | 20 | 10 | 8 | 8 | 20 | 144 |

4.5 கண்டநகர்வு கோட்பாடு / நிலவியல் பலகைகள்

4.6 புவி நிலத்தோற்றங்கள்

4.6.1 மலைகள்

4.6.2 பீடபூமிகள்

4.6.3 சமவெளிகள்

4.6.4 பாறைகள்

4.7 நிலநடுக்கங்கள்

4.7.1 நிலநடுக்கம் – காரணங்கள்

4.7.2 நிலநடுக்கம் – அறியும் கருவி

4.7.3 நிலநடுக்கம் – கண்காணிக்கும் துறை

4.7.4 நிலநடுக்கம் – பாதுகாப்பு

4.8 எரிமலைகள்

4.8.1 எரிமலைகள் – வகைகள்

4.8.2 எரிமலை வெடிப்பு – விளைவுகள்

4.8.3 எரிமலையும், காலநிலையும்

4.9 முடிவுரை

4.10 பார்வை நூல்கள்

## கற்றல் செயல்கள்

| வ. எண் | அலகுக் கூறுகள் | செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேகரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | சூரிய மண்டலம் | மாதிரி தயாரித்தல் – சூரியக் குடும்பம் | சூரியக் குடும்பத்தில் உள்ள 9 கோள்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை சேகரித்தல் | – | நூலகப் புத்தகங்கள் இணைய தளம் |
| 2. | புவி | கலந்துரையாடல் (அறிக்கை) சூரியக் குடும்பத்தில் புவியின் சிறப்பம்சம் | புவியைப் பற்றிய அடிப்படைத் தகவல்கள் மற்றும் மற்ற கோள்களும் புவிக்கும் உள்ள வேறுபாடுகள் | – | நூலகப் புத்தகங்கள், வள நூலில் குறிப்பிட்டுள்ள பார்வை நூல்கள் மற்றும் இணைய தளம் |
| 3. | புவிசுழற்சி | செய்து கற்றல் – புவி சுழற்சி இரவு / பகல் விளைவு (வகுப்பறை செயல்பாடு) | வகுப்பறைச் செயல்பாடு தேவைப்படும் பொருட்கள், புவி மாதிரி, டார்ச் விளக்கு, மேசை | | நூலகப் புத்தகங்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | புவி வலம் வருதல் (கிரகணங்கள்) | செய்து கற்றல் – புவி வலம் வருதல் கிரகணங்கள் (வகுப்பறை செயல்பாடு) | வகுப்பறைச் செயல்பாடு புவி, சந்திரன், சூரியன் – இவற்றிற்கு மாணவர்களிடையே மாதிரிகளாக நிறுத்தி கிரகணங்கள் மற்றும் புவியின் வலம் வருதல் பற்றி அறிதல் | | நூலகப் புத்தகங்கள் |
| 5. | நிலவியல் பலகைகள் | செய்து கற்றல் – நிலவியல் பலகைகள் (வகுப்பறைச் செயல்பாடு | வகுப்பறைச் செயல்பாடு ஒளி உட்புகும் தாள்கள் 2 (nos).<br>1. உலகம் – கண்டங்கள் பெருங்கடல்கள்<br>2. நிலவியல் பலகைகள் – ஒன்றின் மேல் ஒன்றைப் பொருத்தி நிலவியல் பலகைகள் கண்டங்களிலும் பெருங்கடல்களிலும் எவ்வாறு பரவியுள்ளன என்பதை அறிதல். | | நூலகப் புத்தகங்கள் |
| 6. | புவி நிலத் தோற்றங்கள் | களப்பயணம் அறிக்கை தயாரித்தல் உனது மாவட்டத்தில் நிலத்தோற்றம் | நிலத்தோற்றங்களின் அமைப்பு, அமைவிடத்தின் சிறப்பிடம், சிறப்புப் பெயர்கள், தொடர்பான புகைப் படங்கள் முதலியவை | | நூலகப் புத்தகங்கள் |
| 7. | நிலநடுக்கம் | நிலவரைப்படம் வரைதல் – உலக நிலநடுக்க மண்டலங்கள், அதில் அமைந்துள்ள முக்கிய நாடுகள் | உலகப் புறவரி நிலவரைப்படம் | | நிலவரைப் படப்புத்தகம், நூலகப் புத்தகங்கள் |
| 8. | எரிமலை | நிலவரைப்படம் வரைதல் – உலக எரிமலைப் பகுதிகள், முக்கிய எரிமலைகளின் பெயர்கள், அவை அமைந்துள்ள நாடுகள் | உலகப் புறவரி நிலவரைப்படம் | | நிலவரைப்படப் புத்தகம், நூலகப் புத்தகங்கள் |

# பகுதி அ – பாடப்பொருள்

## அலகு – I

# மனித வாழ்க்கையில் வரலாற்றின் தாக்கம்

### அறிமுகம்

ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தின் ஒரு அங்கம். ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம், அதில் வாழும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது. மக்கள், தம் வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள, தமக்கு முன்பு வாழ்ந்த மக்களின் வரலாற்றைப் பின்பற்றி, வெற்றி கண்டு வரலாறும் படைக்கின்றனர். மக்களால் வரலாறு கூடுகிறது; வரலாற்றால் மக்களின் வாழ்க்கை செம்மையுறுகிறது. மக்கள் வாழ்க்கையின் அடிப்படைக் கூறுகளான கல்வி, சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம், கலாச்சாரம், பண்பாடு, கட்டிட நுண்கலைகள் ஆகிய அனைத்தும் கடந்த கால வரலாற்றின் தாக்கத்தினால் வளர்ச்சியுற்று மேம்பாடு அடைந்தவையே.

இன்றைய உலகளாவிய பொருளாதாரமும் (Global Economy), வர்த்தக மேம்பாடும் தொலைத் தொடர்பு சாதனங்களைப் படிப்படியாகக் கண்டுபிடித்த வரலாற்றின் விளைவே என்பதை மறுக்க இயலாது. செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி, தொலையுணர்வு (Remote sensing) முறையில் புவியிலுள்ள வளங்களைக் கண்டுபிடிப்பதும், கணக்கெடுப்பதும், மனித வாழ்க்கைக்கு தேவையானப் பொருட்களாக வளங்களை மாற்றுவதும் கடந்த கால அறிவியல் வல்லுநர்களின் கண்டுபிடிப்புகளின் தொகுப்பே என்பதும் அறிவோம். எனவே, மனித வாழ்க்கைக் கூறுகள் ஒவ்வொன்றின் வளர்ச்சிக்கும், வரலாற்றின் தாக்கம் ஒவ்வொரு கால கட்டத்திலும் எவ்வாறு இருந்தது என்பதை மாணவ ஆசிரியர்களும், பள்ளி மாணாக்கர்களும் உணர்ந்து கொள்ளவும், வரலாற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும் இப்பாடப்பொருளில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

### அலகுக் கூறுகள்

1.1 மனித வாழ்வின் கல்வி வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

1.2 மனித வாழ்வின் சமூக வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

1.3 மனித வாழ்வின் அரசியல் வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

1.4 மனித வாழ்வின் பொருளாதார வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

1.5 மனித வாழ்வின் சமய வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

1.6 மனித வாழ்வின் கலாச்சார பண்பாட்டு வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

1.7 மனித வாழ்வின் கலை–கட்டிடக்கலை வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

1.8 முடிவுரை

1.9 பார்வை நூல்கள்

**கற்றல் செயல்கள்**

| வ. எண் | அலகுக் கூறுகள் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | வரலாற்றின் தாக்கம் | படத்தொகுப்பு | புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைகள், உதவியுடன் வரலாற்றின் தாக்கம் பற்றிய தகவல்களை சேகரிக்க / அவற்றின் படத்தொகுப்பு | | நூலகங்கள் / வெளி இடங்கள், புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைகள், உதவியுடன் சேகரித்தல். |
| 2. | சுதந்திரப் போராட்ட நிகழ்வுகள் | காலக்கோடு தயாரித்தல் | நூலக உதவியுடன், சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளைக் குறித்தல். | பள்ளிப் பாடப் புத்தகங்கள் | – |
| 3. | வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் | களப்பயணம் | வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்திற்கு களப்பயணம் மேற்கொண்டு அறிக்கைத் தயாரித்தல். | – | நிறுவனத்திற்கு அருகிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தைத் தேர்ந்தெடுத்தல். |
| 4. | சமூகச் சீர்த்திருத்த வாதிகள் | ஒப்படைப்பு | சமூக சீர்திருத்தவாதிகள் பற்றியத் தகவல் சேகரிப்பு | பள்ளிப் புத்தகங்கள் | நூலகப் புத்தகங்கள் |

## 1.1 மனித வாழ்வின் கல்வி வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

### 1.1.1 வேதக்காலத்தின் கல்வி முறையும் அவற்றின் பங்களிப்பும்

உபநிடதங்கள், பிராமணங்கள் போன்ற அடிப்படைச் சான்றுகளின் வழியே, வேதக் காலத்தில் கல்வியின் நிலை அறியப்படுகிறது.

வேதக்காலத்தில் குருகுல முறை நிலவியது. தந்தையின் வேண்டுக் கோளுக்கிணங்க பிரம்மச்சரியம் மற்றும் ஆஸ்ரம் வாழ்க்கை முறையில் உபநயனம் என்ற சடங்கினைச் செய்து கல்வி கற்பித்தல் தொடங்கப்பட்டன. 12 ஆண்டுக்காலம் மாணவர் குருவின் இல்லத்தில் வாழ்ந்து,

யாகத்திற்கு தேவைப்படும் பொருளைச் சேகரித்தல், யாசகம் செய்தல், ஆசிரியரின் வீட்டுப் பணிகள் ஆகியவற்றை செய்து, ஆசிரியர் கற்பிக்கும் கல்வியைப் பெற்றார்கள். இத்தகு ஆசிரியர் சார்ந்த கல்வி முறை அன்று வேதக் காலத்தில் நிலவியது.

மென்மேலும் தத்துவங்கள், இலக்கியங்கள் படிக்க விருப்பம் உடையவர்கள், இலக்கியத்தில் புலமை பெற்றவர்களை நாடிச் சென்று உயர் கல்வி பெற்றனர். இலக்கியங்கள் மற்றும் கல்வியில் மிகுந்த ஈடுபாடு உடைய அரசர்கள், கல்வியாளர் மாநாட்டினைக் கூட்டி, கல்வி மேன்மை அடைய, வழி வகுத்தனர்.

சமயத்தைச் சார்ந்த கல்வி முறை நிலவியது. வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் வாய்மொழியாகக் கற்பித்து மனப்பாடம் செய்யப்பட்டன. தருக்கம், இலக்கணம், வானவியல், கணிதம், சோதிடம், படைப்பயிற்சி போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. புனித சடங்குகள், யாகங்கள் செய்யும் விதிமுறைகள், யாகப் பீடங்களின் அமைப்புமுறை ஆகியவைக் கற்பிக்கப்பட்டன. இவை "**அளவியல் முறை, ஜியோமிதி**" போன்ற பாடங்களின் வளர்ச்சிக்கு முன்னோடியாக திகழ்கின்றன.

முன்வேதக்காலத்தில் பெண்களும் கல்வி கற்றனர். பின்னரே பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. எனினும் அரச குடும்ப பெண்களும், உயர்குடி பெண்களும் கல்விக் கற்றனர். யாகம், வேள்விகள் நடத்தும் முறை அந்தணர்களுக்கும், போர் பயிற்சி சத்திரியர்களுக்கும் கற்பிக்கப்பட்டன. சாதி முறைச் சார்ந்த கல்வி பின்வேதக் காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டன.

உலக அறிவு (இலக்கணம், கணிதம், மருத்துவம், சோதிடம், ஒழுக்கம், நல்ல நடத்தை, நல்ல வாழ்க்கை முறை) சமய அறிவு (வேதங்கள், வேதாந்தங்கள்) உயர் தத்துவ அறிவு ஆகியவை கல்வியின் மையப் பொருளாக இதிகாச காலங்களிலும், ஸ்மிருத்தி காலங்களிலும் வளர்ச்சிப் பெற்றன.

மனப்பாடம் செய்தல், ஆசிரியர் கூறியதை மீண்டும் மீண்டும் கூறல், தானே உச்சரித்துப் படித்தல், கற்பனை வழிக்கற்றல், கலந்துரையாடல், வாதம் செய்தல் போன்ற வேதக்காலக் கற்றல்முறைகள் இன்றும் நடைமுறையில் காணப்படுகின்றன.

## 1.1.2 புத்த, சமண சமயக் கால கல்வியின் பங்களிப்பு

புத்த, சமண சமயக் காலங்களில் புத்த சங்கங்கள், புத்த பிட்சுகளை உருவாக்கிய விகாரங்கள், சமண மடங்கள், கல்வி மையங்களாகத் திகழ்ந்தன. நாளந்தா, தட்சசீலம், விக்ரமசீலம் மிகச் சிறந்த கல்வி மையங்களாகத் திகழ்ந்தன. இவையனைத்தும் விகாரங்களிலிருந்து தோன்றிய கல்வி மையங்களாகும். இந்தியர் மட்டுமின்றி, திபெத், சீனா போன்ற நாடுகளிலிருந்து மாணவர்கள், நாளந்தா, தட்சசீலம், விக்ரமசீலம் ஆகிய கல்விமையங்களில் கல்வி பயின்றனர்.

629 கி.பி.யில் யுவான் சுவாங் இந்தியா வந்து பதினைந்து ஆண்டுகள் தங்கியிருந்தார். அக்காலத்தில் நிலவிய பிராமண கல்வி முறை, புத்த கல்வி முறைகளை தன்குறிப்பேட்டில்

எடுத்துரைத்துள்ளார். அசாங்கா, வசுபந்து, பார்சவர், சந்திரவர்மன், அசுவகோசர் போன்ற கல்வியாளர் பெயர்கள் யுவான் சுவாங் குறிப்பில் இடம் பெற்றுள்ளன.

இக்காலக் கட்டத்தில், தொடக்க கல்வியில், முதலில் மொழியின் வார்த்தைகள் கற்பிக்கப்பட்டன. அடுத்தக் கட்டமாக இலக்கணம், கலை கைவினைத் தொழில்கள், மருத்துவம், தத்துவம் ஆகிய ஐந்துவகை அறிவியல்கள் மற்றும் புனித நூல்களும் கற்பிக்கப்பட்டன என யுவான் சுவாங் தனது குறிப்பில் எடுத்துரைத்துள்ளார்.

சமயம் சார்ந்த கல்வியுடன், கலைகள், கைவினைத் தொழில்கள், வண்ணந்தீட்டுதல், சிற்பக்கலை, கட்டிடக்கலை, நூற்றல், நெய்தல் போன்றவைகளும் கற்பிக்கப்பட்டன. பேச்சு வழக்கு மொழியாகிய பாலிமொழியும் கற்பிக்கும் மொழியாக பயன்படுத்தப்பட்டது. தத்துவங்கள் உயர் கல்வியாக கற்பிக்கப்பட்டன.

சமயம் வாழ்க்கைக் கல்வி, பாலி போன்ற பேச்சு மொழிக்கல்வி, தத்துவக்கல்வி போன்றவை கல்வி முறையின் சிறப்புத் தன்மைகளாகும். பெண் துறவிகள் கல்வி கற்றனர். தொடக்கக் கல்வி, உயர் கல்வி வளர்ச்சி, தொழிற்கல்வி, வெளிநாட்டவர் இந்தியாவில் பயின்றமை, அறிவியல் கல்வி, அறுவை சிகிச்சை பயிற்சி, தர்க்கங்கள், விவாதங்கள் அடிப்படையில் கற்றல், தத்துவக் கல்வி, கட்டுப்பாடு நிறைந்த கற்றல் முறை, பேச்சு மொழிவழிக்கற்றல், ஆசிரியர் – மாணவர் சுமூகமான உறவின் வழி கற்றல் ஆகியவைகள் சமண – புத்தகால கல்வி முறையின் பாராட்டத்தக்கப் பங்களிப்பாகும்.

குருக்குலக்கல்வி முறை, புத்தவிகாரங்கள், சங்கங்கள், சமணமடங்கள், கோவில்கள் போன்றவைக் கல்வி மையங்களாக திகழ்ந்தன. தத்துவக் கல்வி வளர்ச்சி, இலக்கியக் கல்வி வளர்ச்சி, கல்வி மாநாட்டின் வழியே கல்வி பெற்றல், வானவியல், கணிதவியல், தருக்கம், போன்ற உயர்கல்வி வளர்ச்சிகள் பண்டையக்கால கல்வி வளர்ச்சியின் மையக் கூறுகளாகத் திகழ்ந்தன.

### 1.1.3 தென்னிந்தியாவில் கல்வி முறை

தமிழகத்தில் சங்க இலக்கியங்களில் கணக்காயர் என்றச் சொல் ஆசிரியரை குறிக்கும் சொல்லாகத் திகழ்ந்தது. கணக்காயர் சமுதாயத்தில் சிறப்பான இடத்தில் வைத்து போற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சமணர்கள் ‘அமண்’ பள்ளிகளையும் புத்த மதத்தினர் ‘விகாரங்களையும்’ நிறுவிக் கல்விப் பணியைச் செய்தனர். பல்லவ மன்னர்கள் வேதக் கல்வி நிறுவனங்களை ‘‘கடிகை’’களாக நிறுவினர். கடிகைகள் உயர்கல்வி மையங்களாகத் திகழ்ந்தன. இவற்றில் மாணவர்கள் தங்கி பயின்றனர். காஞ்சி மிகச்சிறந்த கல்வி மையமாகத் திகழ்ந்தது. வேதங்கள், புராணங்கள் ஆகிய கல்வி வளர்ச்சி பணிக்காக பல்லவ மன்னர்கள் மானியங்கள் வழங்கினர். ஆயுர்வேத மருத்துவம், தர்மசாத்திரங்கள் கற்பிக்கப்பட்டன. வேதக்குடியினர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். இக்கல்வி நிலையங்கள் தென்மண்டலங்களில் ‘‘சாலைகள்’’ என்ற பெயரில் விளங்கின.

### 1.1.4 சோழர் காலம்

கல்வி நிலையங்கள் வழியாகவும் பொது விழாக்களின் வழியாகவும், காப்பியங்களும், புராணங்களும் கற்பிக்கப்பட்டன. திண்ணைப்பள்ளிகளும், ஆரம்பநிலைக் கல்வியை கற்பித்தன. கோவில்களுடன் இணைந்து, கல்வி நிலையங்கள் செயல்பட்டன. உயர் கல்வி நிலையங்களில் வேதியர் குலத்தவர் மட்டுமே உணவும் உறையுளும் பெற்றனர். முதலாம் இராசேந்திரன் வட ஆற்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் கிராமத்தில் எழுப்பிய கல்வி நிலையத்தில் 340 மாணவர்களும், 14 ஆசிரியர்களும் இருந்தனர். பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள திருப்புவனத்தில் 240 மாணவர்களும், 12 ஆசிரியர்களும் இருந்தனர். ஆசிரியர்களுக்கு நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டன.

## டெல்லி சுல்தானியர் – முகலாயர்கள் – கல்வித்தாக்கம்

### 1.1.5 டெல்லி சுல்தானியர் மற்றும் முஸ்லிம்களின் கல்விமுறை – மக்தாப்பு

தொடக்கக் கல்வி கற்பிக்கும் நிறுவனங்களாக ‘‘மக்தாப்புகளும்’’, உயர் கல்வி கற்பிக்கும் நிறுவனங்களாக ‘‘மதரசாக்களும்’’ விளங்கின. பெரும்பாலும் மக்தாப்புகள் மசூதிகளோடு இணைந்து காணப்பட்டன. மௌலிகள் ஆசிரியராகப் பணியாற்றினார்கள். இக்கல்வி நிறுவனங்களில் குரானும் மற்றும் வழிபாட்டு முறைகளும் அரேபிய, பாரசீக மொழிகளில் கற்பிக்கப்பட்டன. முகமது கோரி, முதல் மதரசாவை ஆஜ்மீரில் நிறுவினார். மதரசாவில் அரேபிய மொழி, இலக்கியம், இலக்கணம், தர்க்க சாஸ்திரம், அறிவியல், அரசியல், பொருளாதாரம், வண்ணம் தீட்டுதல், தந்த சித்திரவேலைபாடுகள், ஆபரணங்கள் செய்தல், பூவேலைபாடுகள் போன்ற கலைத்திறன்களும் கற்பிக்கப்பட்டன. சுயமாகக் கற்று, சிறந்த முறையில் தேறிய மாணவர்களுக்கு அரசாங்கத்தில் முக்கியப் பதவிகளும் அளிக்கப்பட்டன. அரசு தாராளமான உதவித் தொகையை, கல்வி நிறுவனங்களுக்கு வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பீஜப்பூர், அகமத் நகர், கோல்கொண்டா, மாளவம், ஜான்பூர், வங்காளம், முல்தான் ஆகிய பகுதிகளின் அரசர்களும் கல்வி சிறக்க பாடுபட்டனர்.

டெல்லி சுல்தான்கள், அமீர்கள், மாநிலங்களை ஆண்ட முஸ்லிம் ஆட்சியாளர்கள், பிரபுக்கள் ஆகியோர் பாரசீக மொழி இலக்கியங்கள் வளர பெரும் ஆதரவு நல்கினர். டெல்லி, ஜலந்தர், ஃபிரோஸாபாத் போன்ற இடங்களில் முஸ்லிம்களின் கல்வி நிலையங்கள் பெரும் நூலகங்களுடன் இணைந்து வளர்ச்சிப் பெற்றன. டெல்லியில் நிறுவப்பட்ட இம்பீரியல் நூலகம் மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்தது. ஜலாலுதீன் கில்ஜி, அமீர் குஸ்ருவை அந்நூலகத்தின் தலைவராக நியமித்தார்.

சுல்தானியர் கல்வித் திட்டத்தின் வளர்ச்சியினால், வரலாற்று நூல்களும் இஸ்லாமிய நூல்களும் எழுதப்பட்டன. எடுத்துக்காட்டாக இஸ்லாமிய உலகின் பொது வரலாற்றைக் கூறும் ‘தபகாத் இ – நாசீரி’ என்ற நூலை மின் ஹாஜித்தின் எழுதினார். ‘மெஸ்னவிகள்’ என்ற சிறந்த வரலாற்று நூலை அமீர் குஸ்ரு எழுதினார். மேலும் பெரோஸ்ஷாதுக்ளக் தொழிற்பயிற்சி மையங்களை நிறுவி, போர்க்கலையைக் கற்பிக்கச் செய்தமை, சுல்தானியக் கல்வி வளர்ச்சியின் மற்றொரு மையக் கல்லாகத் திகழ்கிறது.

## 1.1.6 முகலாயர் ஆட்சிக் காலம்

சுல்தானியர்கள் போன்றே, முகலாயர் ஆட்சிக் காலத்திலும் சமயம் சார்ந்த கல்வி, கணிதம், ஒழுக்கம், ஜியோமிதி, வானவியல், தருக்கம், வீட்டைப் பராமரிக்கும் கலை, அரசியல், மருத்துவம் ஆகியவை கல்வி நிலையங்களில் கற்பிக்கப்பட்டன. பல்வேறு சமஸ்கிருத மொழி இலக்கியங்கள் பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. முகமதியர்கள் மட்டுமே கல்வி நிலையங்களில் அனுமதிக்கப்பட்டனர். அக்பர் காலத்தில் இந்துக்களும் மதரசாக்களில் கல்விப்பயில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முகலாய அரசர்களும் அதிக அளவில் கல்வி மையங்களுக்கு நிதி ஒதுக்கினார்கள். ஜஹாங்கீர் "வாரிசு இல்லாத செல்வந்தர்கள் மற்றும் வெளிநாட்டு பயணிகள் இறப்பின் அவர்களின் செல்வம் அனைத்தும் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும்" என்ற ஆணையைப் பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவுரங்கசீப் ஏழை எளியவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அதிக அளவில் நிதியை வழங்கினார். சமயச் சார்பான கல்வி, போர்முறை கற்றல், எழுத்துக்கலை, தாராள நிதி ஒதுக்கீடு ஆகியவை முகலாயர் ஆட்சிக் காலத்தின் தனித்தன்மைகளாக விளங்கின.

## 1.1.7 ஆங்கிலேயர்களின் கல்விப் பங்களிப்பு

ஆங்கிலேய அரசின் 1813 ஆம் ஆண்டு பட்டயச்சட்டத்தின் மூலம் கல்விப்பணிக்காக ஒரு லட்சம் ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்தது. இது கல்விப் பணி வளர்ச்சிக்கு அடிகோலியது. 1822 ஆம் ஆண்டு சென்னை ஆளுநர் சர் தாமஸ் மன்றோ ஆணையின்படி எடுத்த கல்வி கணக்கெடுப்பில் கற்றோர் எண்ணிக்கை 1:1000 என்று நிரூபிக்கப்பட்டது. கல்வி விசாரணைக்குப் பிறகு சென்னையில் நிறுவப்பட்ட கல்வி மைய நிறுவனம் பல்வேறு வளர்ச்சிப் பெற்று இன்றைய 'மாநிலக் கல்லூரியாக' திகழ்கிறது.

மெக்காலே கருத்தின் அடிப்படையில் ஆங்கில வழிக் கல்வி நடைமுறை படுத்தப்பட்டது. ஆங்கிலேய அரசு "கீழ் நோக்கிக் கசிதல் கோட்பாட்டைப்" பின்பற்றியது. கீழ்நோக்கிக் கசிதல் என்பது உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்கு மேலைநாட்டு கல்வியினை அளித்தல் மூலம் கல்வியறிவு சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள பொது மக்களுக்கு சிறிது சிறிதாக பரவும் என்பதாகும்.



தாமஸ் மன்றோ



மெக்காலே

கல்வி வளர்ச்சியின் அடுத்த முன்னேற்ற நிலையை சார்லஸ் உட் அறிக்கை (1854) ஏற்படுத்தியது. உயர் கல்வி ஆங்கில வழியாகவும், தொடக்கக் கல்வி வட்டார மொழிவழியாகவும் கற்பித்தல்; சமய நடு நிலைமை ஏற்ற கல்வி நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தல், இயக்குனர் தலைமையில் மாநிலங்களில் கல்வித் துறைகள்; சென்னை, கல்கத்தா, பம்பாய் பல்கலை கழகங்களின் தொடக்கம்; கல்லூரிகள்; உயர்நிலைப்பள்ளிகள்; நடுநிலைப்பள்ளிகள்; ஆங்கிலோ வட்டார பள்ளிகள்; தாலுக்காவில் பள்ளிகள்; மக்கள் கல்வி; ஆசிரியர் பயிற்சி கல்வி; பெண்கள் கல்வி; பொது தேர்வு ஆகிய பரிந்துரைகள் சார்லஸ் உட் அறிக்கையின் முக்கிய அம்சங்களாகும். இவை கல்வியின் முழு வளர்ச்சிக்கு வித்திட்டன.

1882 ஆம் ஆண்டு ஹண்டர் கல்விக்குழுவின் பரிந்துரைகள் கல்வியின் மேம்பாட்டை மேலும் உயர்த்தியது. தொழிற் கல்வி; உதவி தொகை; மக்கள் கல்வி; ஆசிரியர் பயிற்சி கல்வி; அரசு பள்ளிகள் ஆகியவை இக்குழுவின் முக்கிய பரிந்துரைகளாகும். 1902 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பல்கலைக்கழககுழு (சர் தாமஸ் ராலே) பல்கலைக்கழகக் கல்வியின் மேம்பாட்டிற்கு வழி வகுத்தது.

1917 சாட்லர் கல்வி குழு உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தையும், கணிதத்தையும் தவிர மற்றப் பாடங்களைத் தாய் மொழியில் கற்பிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. ஹர்டாக் (Hartog) குழு, இந்திய கல்வியின் கழிவு நிலையை (Wastage) ஆராய்ந்து அவை நீக்குவதற்கும், உயர்நிலை, தொடக்கநிலை பெண் கல்வி ஆகியவைகள் உயரவும் வழி வகுத்தது. 1937 ஆபாட்– உட் குழு தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி வளர வழிவகுத்தது. காந்தி அடிகளின் ஆதாரக் கல்வி கொள்கை “14 வயதுள்ள அனைவருக்கும் கட்டாய கல்வி, தாய்மொழி வழிக் கல்வி, கைத்தொழில் மையக் கல்வி, ஆகிய சிறப்புத் தன்மைகளை உள்ளடக்கியதாக திகழ்ந்தது.

சுதந்திர இந்தியாவில் அமைக்கப்பட்ட இராதாகிருஷ்ணன் பல்கலைக்கழகக் குழு (1948–49) பல்கலைக் கழக கல்வியை உயர்த்தியது. 1952/53 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட **செகண்டரி கல்விக் குழு** பள்ளிக் கல்வியை உயர்த்தியது. பள்ளிகளில் 5+3+4 முறை; பல்முனைபள்ளிகள்; தொழில் பள்ளிகள்; வாழ்உறை பள்ளிகள்; பார்வையற்றோர்; காது கேளாதோர் பள்ளிகள்; தேர்வு முறைகள் ஆகியவற்றை பரிந்துரைத்து பள்ளிக் கல்வியை வளர்ச்சி அடைய செய்தது.

1964–66 கோத்தாரி குழு, 1986 தேசிய கல்வி கொள்கை ஆகியவற்றின் பரிந்துரைகள் கல்வி முன்னேற்றத்தில் விரும்பத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. **கோத்தாரி குழு** பள்ளிக் கல்வி, உயர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, வேளாண்மைக் கல்வி, வயதுவந்தோர் கல்வி, அறிவியல் கல்வியும் ஆராய்ச்சியும், ஆசிரியர் பயிற்சி, மாணவர் நலன், கற்பிக்கும் முறை, மனிதவளம், கல்வி நிருவாகம், நிதி ஆகிய 12 வகையான கல்வித்துறைகள் உயர பரிந்துரைத்தது. பெண் கல்வி, பிற்பட்டோர் கல்வி, பள்ளிக்கூடம், பள்ளி சமுதாய உறவு, புள்ளியியல், பள்ளி முன்பருவக் கல்வி, பாடத்திட்டம் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தியது.

**1986 தேசிய கல்வி கொள்கை**, தேசிய கல்வி, தாழ்த்தப்பட்டோர் கல்வி, கல்வியும் சமத்துவமும் பெண்கல்வி, வயது வந்தோர் கல்வி, முறைசாராக் கல்வி தொழிற்கல்வி, தொழில் நுட்பம்; வேளாண்மைக்கல்வி; ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றை மேம்படுத்த வழிவகுத்தது.

மேலும் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) அகில இந்தியத் தொழில் நுட்பக்கழகம் (AICTE) தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழுமம் (NCERT) தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) தேசிய மதிப்பீடு மற்றும் தர குழுமம் (NAAC) மாநில உயர்கல்வி குழுமம் ஆகியவை தரமானகல்வி மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றன.

### 1.1.8 சமூக சிந்தனையாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்களிப்பு

சமூக சிந்தனையாளர்களும் கல்வியாளர்களும் கல்வியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார்கள். இராசாராம் மோகன்ராய், ஈஸ்வர்சந்திர வித்யாசாகர், சுவாமி தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர், இரவீந்திரநாத் தாகூர், அரவிந்தர் போன்ற சமுதாய சிந்தனையாளர்கள் கல்வி வளர்ச்சிக்கு வழிகோலினார்கள். கிறித்துவ மிஷனரிகள் பல்வேறு இடங்களில் பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கி, கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார்கள். முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மை நிறுவனங்களும் கல்வி வளர்ச்சியைப் பங்களித்தன.

பண்டையக் காலந்தொட்டே நிகழ்ந்த பல்வேறு கல்வித் தொடர்பான நிகழ்வுகள் தொடக்க கல்வி, உயர்க் கல்வி, தொழிற்கல்வி, மருத்துவக்கல்வி, விவசாயக் கல்வி, பெண் கல்வி, ஆசிரியர் கல்வி, தொழில் நுட்பக்கல்வி என்ற பல்வேறு பரிமாணங்களை உடைய கல்வித்துறையாக வளர்ச்சிப் பெற்று கல்வியை மேம்படுத்தியது.

***செயல்***

*இந்திய சமூக சீர்திருத்த வாதிகளில் எவரேனும் இருவர் பங்கு பற்றி இணையதளம் மூலம் ஒப்படைப்பு தயாரிக்க.*

## 1.2 மனித வாழ்வின் சமூக வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

### 1.2.1 வரலாற்றிற்கு முற்பட்டக் காலம்

- மனித குல வளர்ச்சியின் தொடக்க நிலையே வரலாற்றிற்கு முற்பட்ட காலமாகும். அவர்கள் பயன்படுத்திய கருவிகள், ஆயுதங்கள் அடிப்படையில் வரலாற்றிற்கு முற்பட்டக் காலம், கற்காலம், உலோகக்காலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- நாக வழிப்பாடு, தண்ணீர் வழிப்பாடு, மலர், கனி வகைகள் படைத்து இறைவழிப்படும் முறை, திருமணங்களில் மஞ்சள் செந்நிறத்தூள் பயன்படுத்தும் வழக்கம் ஆகியவை வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் இன்றுவரை வழக்கத்தில் உள்ளது.

### 1.2.2 ஹரப்பா நாகரீகம்

- ஹரப்பா நாகரீகத்தில் ஆண் பெண் இருபாலரும் கீழாடை, மேலாடை என்ற இரண்டு வித ஆடை அணிந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
- வளையல்கள், காப்புகள், ஒட்டியாணம், சிலம்பு, காதணி, மோதிரம், மூக்குத்தி போன்ற ஆபரணங்களை பெண்கள் அணிந்தனர். இவை தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களால் தயாரிக்கப்பட்டிருந்தது.

- அரிய வகை கல் ஆபரணங்கள், மட்பாண்டங்கள், கற்கள், ஓடுகள், தந்தம் மற்றும் உலோகங்களாலான பாத்திரங்கள் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டன.
- முகம்பார்க்கும் கண்ணாடி, தந்தச் சீப்புகள், உதட்டுச் சாயம், முகப்பவுடர் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
- ஊசிகள், தூண்டில் முட்கள், கத்திகள்
- கோலிகள், பந்துகள், தாயம் போன்ற விளையாட்டுப் பொருட்கள் கிடைத்துள்ளன.
- வேட்டையாடுதல், எருது சண்டை இவை பொழுதுபோக்காக இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

மேற்கூறிய ஆதாரங்களின் அடிப்படையில், ஹராப்பா சமூகத்தினர் கீழாடை, மேலாடை அணிதல், ஆபரணங்கள் அணிதல், அலங்கரிக்கும் பொருட்களைப் பயன்படுத்துதல், ஆடைப்பின்னல் முறை பயன்படுத்துதல், பாத்திரங்கள் உபயோகப்படுத்துதல், உள்ளரங்கு விளையாட்டுகள் வெளியரங்கு பொழுதுபோக்குகளில் ஈடுபடல் ஆகியவற்றை அறிந்திருந்தனர் என்பது தெளிவாகிறது. இவை இந்திய சமூகப் பண்பாட்டின் தொன்மையை மேம்படுத்துகிறது.

## 1.2.3 வேதக்காலம், இதிகாசக்காலம் ஆகியவற்றின் தாக்கங்கள்

**குடும்பம் மற்றும் தந்தை வழிமரபு**

வேதக்காலம் மற்றும் இதிகாசக் காலங்களில் ‘‘குடும்பம்’’ சமூக வாழ்க்கையின் அடிப்படை ஆதாரமாக விளங்கியது. தந்தைவழி மரபு பின்பற்றப்பட்டது. குடும்பத் தலைவர் ‘கிரகபதி’ என அழைக்கப்பட்டார். சமூகத்தில் ‘‘ஒரு தாரமணம் கடைப்பிடிக்கப்பட்டது’’. சில அரசகுடும்பங்களில் பலதார மணம் செய்து கொள்ளப்பட்டது. தர்மசாத்திரங்கள் பலதார மணத்தை வன்மையாக கண்டிக்கின்றன.

திருமணம், அறம், பொருள், காமம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட இல்லற வாழ்க்கை; பெண்கள் தங்களின் கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுயவரம் உரிமை ஆகியவை இக்காலச் சமுதாயத்தின் சிறப்புத் தன்மைகளாகும்.

**சடங்குகள்**

வேத இதிகாசக் காலத்தில் பலவகை சடங்குகள் கடைப்பிடிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக கர்பதானம், பும்சவனம் (ஆண்மகவு வேண்டி செய்யும் சடங்கு) நாமகர்ணம் (பெயர் சூட்டுதல்), அன்னம் பிரசனம் (அன்னம் ஊட்டுதல்), சதுகர்மம் (காது குத்தல்) போன்ற பலவகை சடங்குகள் நடத்தப்பட்டன.

**சாதி அமைப்பு**

- முன் வேதகாலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலவகைத் தொழில்களைச் செய்து வந்தனர். ‘‘நான் கவிஞனாகவும், என் தந்தை மருத்துவராகவும், என்தாய் தானியம்

அரைப்பவராகவும் இருக்கின்றோம்'' என்ற ரிக் வேத வரிகள் ''சாதி நிலை இல்லாத சமுதாயத்தையும், விருப்பத்தின் அடிப்படையில் தொழில் செய்யலாம் என்ற உணர்வினையும் பிரதிபலிக்கின்றன.

- பின்வேதகாலத்தில் தொழில் அடிப்படையில், சாதிமுறை வலியுறுத்தப்பட்டன. பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற நான்கு பிரிவுகள் தோன்றின.
- பிராமணர்கள் குலகுருக்களாகவும், ஆசிரியர்களாகவும் செயலாற்றினர். சத்திரியர்கள் அரசர்களாகவும், போர் வீரர்களாகவும் விளங்கினர். வைசியர்கள் வணிகர்களாகவும், கைவினைஞர்களாகவும் விவசாயிகளாகவும் பணியாற்றினர். மூன்று பிரிவினர்களுக்கும் பணிவிடைச் செய்தவர்கள் சூத்திரர்களாகக் கருதப்பட்டனர். இவர்களுக்கு கல்வி பெறும் உரிமை மறுக்கப்பட்டன. ஏற்றத்தாழ்வான சமுதாயத்திற்கு சாதிமுறைகள் பெரும் காரணமாக இருந்தன.
- **ஆசிரம நிலைகள்:** தனிமனிதனின் வாழ்க்கை நான்கு ஆசிரம நிலைகளாக பிரிக்கப்பட்டன அவையாவன ''பிரம்மச்சரியம்'' அல்லது மாணவப்பருவம், ''கிருகஸ்தம்'' அல்லது இல்லற வாழ்க்கை, வனப்பிரஸ்தம் அல்லது துறவு நிலை, சன்னியாசம் அல்லது முற்றும் துறந்த நிலை ஆகும்.
- **பெண்களின் நிலை:** மனைவியுடன் இணைந்து சமயச் சடங்குகள், இல்லறத் தொடர்புடைய நிகழ்வுகளை நடத்தினர்.
- முன்வேதக் காலத்தில் உயர் மதிப்புடன் நடத்தப்பட்ட பெண்கள், பின் வேதக்காலத்தில் தாழ்த்தப்பட்டனர். பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது.
- உயர்குடிப் பெண்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டது. லோப முத்திரா, விஸ்வாரா, கோஷா, சிகாதா, நிவாவளி, அபலா போன்ற பெண்கள் முன் வேதக் காலத்திலும், கார்க்கி, மைத்ரேயி (யக்ன வாக்கியர் மனைவி) போன்றோர் பின்வேதக் காலத்திலும் கல்வியில் சிறந்த பெண்மணிகளாக விளங்கினார்கள்.
- **கற்புநிலை:** புனிதமாக கருதப்பட்டது. கணவர் இறந்தபின்னும் கணவரை நினைத்து வாழ்ந்தனர். மறுமணம் பெண்களுக்கு மறுக்கப்பட்டது. ஆண்களுக்கு அடுத்த நிலையிலேயே பெண்கள் நிறுத்தப்பட்டனர்.

''குடும்பம்'', ஒருதார மணமுறை, இல்லறப் புனிதத் தன்மை, கற்புநிலை ஆகியவைகள் வேத – இதிகாசக்கால சமூக அமைப்பின் சிறப்பு தன்மைகளாக திகழ்ந்து இந்திய சமூக பண்பாட்டின் தனித்தன்மையை நிலை நிறுத்துகின்றன.

வேத – இதிகாசக் காலங்களிலேயே தோன்றிய சாதிமுறைகள், பல்வேறு சடங்குகள், பெண்களின் தாழ்நிலை போன்றவை இன்றளவும் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகின்றன. சட்டத்தினால் சமநிலை கொடுக்கப்பட்ட இன்றைய சமூகத்தில் ''பெண்களின் உயர்வு'' மாபெரும் சாவாலாக உள்ளது.

### 1.2.4 மௌரியப்பேரரசு காலம்

- மௌரிய ஆட்சியின் முற்பகுதியில் சமண சமய வளர்ச்சியும் பிற்பகுதியில் புத்த சமயம் பரவுதலும் நிகழ்ந்தன.
- மௌரியப்பேரரசு காலத்தில் புத்த சமயம் வளர்ச்சியடைந்தது.
- தாய் தந்தையர்க்கு பணிசெய்தல், அஹிம்சையைக் கடைப்பிடித்தல், உண்மையை நேசித்தல், ஆசிரியர்களைப் போற்றுதல் ஆகியன சிறப்பாக கருதப்பட்டது.
- விலங்குகள் பலியிடுதல் தடைசெய்யப்பட்டது. பொருட்செலவு மிக்க சடங்குமுறைகள் தவிர்க்கப்பட்டது.
- மனித நேயம் கடைபிடிக்க வலியுறுத்தப்பட்டது.
- அனைத்து சமயப்பிரிவினரும் சகிப்புத்தன்மையுடன் இருந்தனர்.

மௌரியப்பேரரசு காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அஹிம்சை, உண்மை, மனித நேயம், சமயசகிப்புத் தன்மை போன்ற சிறப்பியல்புகள் இன்றளவும் விரும்பதக்க சமுதாய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### 1.2.5 சங்க காலம்

- சங்க காலத்தில் நிலம் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும்.
- நில அமைப்பிற்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை, தொழில் ஆகியவை அமைந்திருந்தன.
- மகளிர் நிலை உயர்வாகக் கருதப்பட்டது.
- பெண்பாற் புலவர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.
- காதல் திருமணம் வழக்கத்திலிருந்தது.
- ஓணம் (ஆவணிமாதத் திருவிழா) கார்த்திகை, பொங்கல், பங்குனி விழா போன்ற விழாக்கள் நடைப்பெற்றன.
- மணல் வீடு கட்டுதல், கழங்காடுதல், கால் பந்தாடுதல் ஆகியவை விளையாட்டுகளாக இருந்தன.
- வலம்புரி போன்ற நகையணிகள், தோல்வளைகள், மேகலை, சிலம்புகள், குண்டலம் முக்கிய அணிகலன்களாக இருந்தன.

ஐந்துவகை நிலங்கள்; அவற்றை சார்ந்த வாழ்க்கை, மகளிர் உயர்நிலை, அணிகலன்கள், விழாக்கள் ஆகியவற்றின் தாக்கம் இன்றைய சமூகத்திலும் இடம் பெற்றுள்ளன.

### 1.2.6 குப்தப்பேரரசு காலம்

- குப்தர் கால பேரரசில் சாதிமுறை கடுமையாகப் பின்பற்றப்பட்டது.
- பால்ய விவாக முறையே பெரும்பாலும் வழக்கிலிருந்தது.
- பலதார மணமும் காணப்பட்டது.


- ஆட்சியாளர்களும், செல்வந்தர்களும் ஏராளமாக கொடைகளை வாரி வழங்கினர்.
- தீண்டாமை இக்காலத்தில் மெல்ல பரவத் தொடங்கியது.
- அடிமை முறை காணப்பட்டது.
- குப்தர் காலத்தில் பிராமணர் சமயமே செல்வாக்கு பெற்று விளங்கியது.
- பெண் கல்வியின் தேவையினையும் உணர்ந்து பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- சிறுபான்மையினரே (சதி) – கணவன் இறந்தவுடன் உடன் கட்டையேறும் பழக்கத்தை கொண்டிருந்தனர்.
- உஜ்ஜயினியில் உள்ள மாகாளன் என்னும் ஆலயத்தில் காளிதாசர் காலத்தில் தேவதாசிகள் இருந்ததாக குறிப்புகள் கிடைக்கின்றன.

இத்தகைய சமுதாய சீர்கேடுகள் குப்தர் காலம் தொட்டே பரவி, இந்திய சமுதாயத்தின் ஏற்றதாழ்விற்கு பெரும் சாவாலாக இருந்தன.

## 1.2.7 ஹர்ஷர் ஆட்சிக்காலம்

- சமூக ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. சாதிப்பிரிவுகள் வழக்கத்தில் இருந்தன.
- சலுகை பெற்ற பிராமணர்க்கு அரசர்கள் நிலங்களை மான்யமாக வழங்கினர்.
- வரதட்சணைமுறை பின்பற்றப்பட்டது.
- ஹோலி பண்டிகை, கும்பமேளா, இந்திரன் விழா கொண்டாடப்பட்டன.

ஹர்ஷர் ஆட்சிக்காலத்தில் நடைப்பெற்ற ஹோலி பண்டிகை இன்றைய நிலையிலும் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.



**ஹர்ஷர் ஆட்சி – கும்ப மேளா**

**பல்லவ ஆட்சி காலம்**

- சாதி முறை கடுமையாகப் பின்பற்றப்பட்டது.
- பிராமணர் உயர் சமூகத்தில் இருந்தனர்.
- பிராமணர்கள் நிலங்களை மானியங்களாக பெற்றனர். இவர்களுக்கு கோவில்களைப் பராமரிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது.
- பல்லவர் காலத்தில் சைவமும், வைணவமும் தழைத்தன. மாறாக புத்த சமயமும், சமண சமயமும் வீழ்ச்சியடைந்தன.
- நாயன்மார்கள், ஆழ்வார்கள் சமய வளர்ச்சிக்கு உதவினர்.

## 1.2.8 சோழப்பேரரசு காலம்

- சோழர் காலத்தில் சாதிமுறை பரவலாகப் பின்பற்றப்பட்டது.
- வலங்கை, இடங்கை சாதிப்பிரிவுகள் தோன்றின.
- தேவதாசி முறை சோழர் காலத்தில் தென்னிந்தியாவில் தோன்றியது.
- ஏராளமான கோவில்கள் கட்டப்பட்டன.
- நெசவுத்தொழில் வளர்ச்சியில் காஞ்சிபுரம் பெயர்பெற்றது.

கட்டிடக்கலை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, பல்லவ, சோழ காலக்கட்டதின் சிறந்த தாக்கமாகும்.


## 1.2.9 டெல்லி சுல்தானிய ஆட்சி

- டெல்லி சுல்தானிய ஆட்சியில் இந்து சமுதாய அமைப்பில் மாறுதல்கள் காணப்பட்டன.
- சமுதாயத்தில் பிராமணர்களை உயர்வாகக் கொண்ட பரம்பரை சாதிமுறை வழக்கத்திலிருந்தது.
- மகளிர் அடிமையாகவே நடத்தப்பட்டனர்.
- சதி வழக்கம் நடைமுறையிலிருந்தது.
- அராபியரும், துருக்கியரும் பர்தா முறையை அறிமுகப்படுத்தினர்.
- எல்லா சமய உயர்குல பெண்களிடம் பர்தா அணியும் வழக்கம் இருந்தது.
- கீழ் சாதியில் இருந்து முஸ்லீம்களாக மாறியவர்கள் சம அந்தஸ்துடன் நடத்தப்படவில்லை.
- பிராமணர்கள் தவிர பிற இந்துக்கள் மீது ஜிசியா வரி கட்டாயமாக்கப்பட்டது.

## 1.2.10 விஜயநகர, பாமினி அரசுகள் காலம்

- நான்கு வகை ஜாதிப்பிரிவுகள் இருந்தன.
- வானளாவிய கட்டிடங்கள் மற்றும் ஆடம்பர சமூக வாழ்க்கை இருந்தது.
- மக்கள் பட்டு, பருத்தி, வாசனைப் பொருட்கள், மலர்கள் மற்றும் அணிகலன்களைப் பயன்படுத்தினர்.
- அடிமைகள் இருந்தனர். பணிப்பெண்கள் இருந்தனர்.

- அரசர்கள் பிற சமயங்கள் மீது சகிப்புத்தன்மையுடன் இருந்தனர்.
- சமய சுதந்திரம் இருந்தது.
- பெண்கள் அரண்மனைகளில் பணிப்பெண்களாகவும், நாட்டிய மகளிராகவும், பல்லக்கு சுமப்பவர்களாகவும் இருந்தனர். தேவதாசி முறையும் இருந்தது.
- அரச குடும்பங்களில் பலதார மணம் வழக்கத்திலிருந்தது.
- சதி வழக்கம் பெருமையாகக் கருதப்பட்டது.



ஹம்பி

## 1.2.11 முகலாயப் பேரரசின் காலம்

- முகலாயர் காலத்தில் பல ஐரோப்பிய பயணிகளும், வணிகர்களும் இந்தியாவிற்கு வந்தனர்.
- உயர்குடியினர் பல சலுகைகள் பெற்று வாழ்ந்தனர்.
- அக்பர் காலத்தில் இந்துக்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்பட்டன.
- செல்வந்தர்கள் செல்வ சீமான்களாகவும், ஏழைகள் போதுமான உணவு, உடை, இன்றியும் வாழ்ந்தனர்.
- அரிசி, திணை, பருப்பு வகைகள் போன்றவை சாதாரண மக்களின் உணவாகும்.
- நெய், எண்ணெய், விலை மலிவாகவும், உப்பு, சர்க்கரை விலை அதிகமாகவும் இருந்தன.

டெல்லி சுல்தானியர், முகலாயர்கள் காலக்கட்டத்தின் கலை, கட்டிடக்கலை வளர்ச்சி, வணிக வளர்ச்சி இன்றைய சமூகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

## 1.2.12 மராட்டிய பேரரசின் காலம்

- நிலங்கள் தர வாரியாகப் பிரித்து வரி வசூல் செய்யப்பட்டது.
- சௌத், மற்றும் சர்தேஷ்முகி வரிகள் மராட்டிய பகுதியில் வசூலிக்கப்படவில்லை. முகலாயர் மற்றும் தக்காண சுல்தான் பகுதியில் வசூலிக்கப்பட்டன.
- இந்து மதம் வளர்ச்சியடைந்தது.

### 1.2.13 ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியா

- ஆங்கிலேயர் ஆட்சியில் கல்வி வளர்ச்சி அடைந்தது.
- பெண்களின் நிலையை மேம்படுத்த சில சட்டங்கள் இயற்றப்பட்டன.
- பல்வேறு சமூக சீர்திருத்த வாதிகள் தோன்றி, தாழ்த்தப்பட்ட மற்றும் பெண்களின் நலனுக்காக போராடினர்.
- அனைத்து மக்களுக்கும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.
- ஆங்கிலேயரை எதிர்த்து ஆங்காங்கே சிற்றரசர்கள், பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர்.
- இந்தியாவில் தேசியம் தோன்றி வளர்ச்சியடைந்தது.
- பல்வேறு பகுதிகளும், அரசியல் அடிப்படையிலும், ஆட்சியடிப்படையிலும் முதன் முறையாக ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

பிரம்ம சமாஜம் 1828 – இராஜா ராம் மோகன்ராய் தொடங்கினார். பிரம்ம சமாஜம் சாதிமுறை, தீண்டாமை, சதி, உருவவழிப்பாடு ஆகியவற்றைக் கண்டித்தது. 1829 இல் வில்லியம் பெண்டிங் சதி ஒழிப்பு சட்டம் கொண்டு வந்தார்.

பிரம்ம சமாஜத்தின் தலைவர்களில் ஒருவரான கேசவ சந்திர சென்னின் முயற்சியில் 1872 ஆம் ஆண்டு சட்டத்தின் படி குழந்தை திருமணம், பலதார மணம் தடைச் செய்யப்பட்டன.

1875 ஆம் ஆண்டு ஆரிய சமாஜத்தை சுவாமி தயானந்த சரஸ்வதி தொடங்கினார். "வேதங்களை நோக்கிச் செல்" என்பது அவரது முழக்கமாகும். "சுத்தி இயக்கம்" வழியாக – ஏராளமானவர்கள் திரும்பவும் இந்து சமயத்தைப் பின்பற்ற ஆரம்பித்தனர். ஆரிய சமாஜம் வழியாக பெண்கல்வி, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம், சமபந்தி உணவு உண்ணல், தயானந்தர் ஆங்கில வேதப்பள்ளி ஆகியவை வளர்ச்சியடைந்தன.

1893 ஆம் ஆண்டு அன்னிபெசன்ட் தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பித்தார். இவ்வியக்கம் கல்விப்பணி, சமுதாயப்பணியை மேற்கொண்டு, இந்திய தேச விடுதலை இயக்கத்திலும் பங்கேற்றது.

இராமகிருஷ்ண இயக்கம்:– 1897 ஆம் ஆண்டு விவேகானந்தர் இராம கிருஷ்ண மடத்தை கொல்கத்தாவில் பேலூரில் நிறுவினார். மனித இனத்திற்கு சேவை செய்தல் மற்றும் பலகல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், தொழில்நுட்ப நிறுவனங்கள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றையும் நிறுவி சமுதாய மேம்பாட்டு பணியை செய்து கொண்டு வருகிறது.

முஸ்லிம் இயக்கங்கள் – சையது அகமது கான் அலிகார் இயக்கத்தை 1875 இல் தொடங்கினார். முகமதியர் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி நிறுவப்பட்டது. அது வளர்ந்து அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகமாயிற்று. இவ்வியக்கங்கள் பர்தாமுறை எதிர்ப்பு, பெண்கல்வி ஆகியவற்றிற்காக அரும்பாட்டு வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

#### முடிவுரை

நவீன காலம், கடந்த கால வரலாற்றின் வெற்றியில் அமைந்துள்ளது. கேட்டு அறியும் உணர்வு, அதனால் விளைந்த அறிவியல் கண்டு பிடிப்புகள், கல்வி பெற்றதால் ஏற்பட்ட கடந்த கால

அனுபங்கள், இவை அனைத்தும் மனித வாழ்வில் பல்வேறு மாற்றங்களை உருவாக்கியுள்ளது. எப்பொழுது சமூகம் கடந்த கால அனுபவங்களை உணர்கிறதோ அப்பொழுதுதான் எதிர்கால வாழ்க்கையைச் சிறப்பாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

## 1.3 மனித வாழ்வின் அரசியல் வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

*செயல்*

*இந்திய சுதந்திர போராட்ட முக்கிய நிகழ்வுகள் குறிக்கும் காலக்கோடு தயார் செய்க.*

### 1.3.1 சிந்து சமவெளி ஹரப்பா நாகரீகம்

- நகர வாழ்க்கை வாழ்ந்தனர்.
- மேடான பகுதிகளில் கோட்டைகள் கட்டினர், கோட்டையின் கீழ்பகுதியில் மக்கள் குடிவாழும் வீடுகள் கட்டியிருந்தனர்.

### 1.3.2 வேதகாலம்

- குலம் அல்லது குடும்பம் – ரிக் வேத அரசியலுக்கு அடிப்படை.
- பல குடும்பங்கள் இணைந்து கிராமம் ஆயிற்று.
- கிராமத்தின் தலைவர் கிராமணி.
- ரிக் வேத காலத்தில் பரதர்கள், மத்சயர்கள், யதுக்கள், புருக்கள் போன்ற பல அரசுகள் இருந்தனர். அரசின் தலைவர் ராஜன்.
- ரிக் வேத காலம் முடியாட்சி காலம்.
- நிர்வாகத்தில் அரசனுக்கு உதவி புரிய புரோகிதர், சேனானி (படைத்தளபதி) ஆகியோர் இருந்தனர்.
- சபா, சமிதி என்ற அவைகள் இருந்தன. இதில் சபா என்பது ஊர் பெரியோர் அடங்கிய அவை. சமிதி பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அவை.
- அரசர் தனது வலிமையைப் பெருக்க சடங்குகள், வேள்விகள், யாகங்கள் செய்தார்.
- கருவூல அதிகாரி, வரி அதிகாரி, அரசுத் தூதர் என பல அதிகாரிகள் இருந்தனர்.
- கிராம சபைகள் உள்ளாட்சி அமைப்புகளாக இருந்தது.

  கிராம நிர்வாகம், சபா, சமிதி ஆகியவை வேதக்கால தாக்கத்தின் முக்கிய கூறுகளாகும்.

### 1.3.3 மகத அரசு காலம்

- 6ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் மகாஜனபதங்கள் எனப்படும் 16 பெரும் அரசுகள் இருந்தன.
- அவற்றுள் சில முடியாட்சிகள், சில குடியாட்சிகள்.
- காலப்போக்கில் சிற்றரசுகள் வலிமையான அரசுக்குப் பணிந்தன.
- இதில் மகதம் எழுச்சிப் பெற்றது.

### 1.3.4 மௌரியப் பேரரசு காலம்

- மௌரிய ஆட்சியை நிறுவியர் சந்திர குப்த மௌரியர்.
- இவருக்குப்பின் பிம்பிசாரரும், அசோகரும் ஆட்சி செய்தனர்.
- கலிங்கப் போருக்குப்பின் அசோகர் புத்த சமயத்தைத் தழுவினார்.
- மௌரிய ஆட்சி முடியாட்சி முறையாக இருந்தது.
- மந்திரி, பரிஷத் என்ற அமைச்சரவை இருந்தன. இதில் புரோகிதர், மகாமந்திரி, சேனாபதி, யுவராஜன் ஆகியோர் இருந்தனர்.
- விளைச்சலில் ஆறில் ஒருபகுதி நிலவரியாக வசூலிக்கப்பட்டது.
- மௌரிய இராணுவத்திற்கு சேனாபதி தலைவராவார்.
- நீதிமன்றத்தில் உரிமையியல், குற்றவியல் என இரு பிரிவுகள் இருந்தன.
- மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது.
- மாகாணத் தலைவர் ஆளுநர் ஆவார்.
- பாடலிபுத்திர நகர அமைப்பை **6** குழுக்களாக பிரித்தனர். ஒவ்வொரு குழுவையும் **5** அங்கத்தினர்கள் நிர்வகித்தனர்.

முடியாட்சி முறை, மந்திரி பரிஷத், இராணுவம், நீதிமன்றங்கள், நகர நிர்வாகம் ஆளுநர் ஆட்சிக்கு உட்பட்ட மாகாண நிர்வாகம் ஆகியவை மௌரிய பேரரசின் அரசியல் தாக்கங்களாகும்.

### 1.3.5 சங்க காலம்

- சங்ககால தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மரபுகள் ஆட்சி புரிந்தனர்.
- சேர அரசர்களில் சிறந்தவர் சேரன் செங்குட்டுவன்.
- சோழ அரசர்களில் சிறந்தவர் கரிகாலன். இவர் **11** குறுநில மன்னர்களை வெண்ணிப்போரில் தோற்கடித்தார். கல்லணையை கட்டினார்.
- பாண்டிய பேரரசில் சிறந்தவர் தலையாளங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். இவர் தலையாளங்கானத்துப் போரில் எதிரிகளை வென்றார்.
- சங்க காலத்தில் பாரி, காரி, ஓரி, நல்லி, பேகன், ஆய், அதியமான் என்ற கடையேழு வள்ளல்கள் இருந்தனர்.

முடியாட்சி முறையில் அரசு நடைபெற்றது.

### 1.3.6 குப்தப் பேரரசு

- குப்தப் பேரரசை தோற்றுவித்தவர் ஸ்ரீகுப்தர்.
- முதலாம் சந்திரகுப்தருக்குப் பின் இரண்டாம் சந்திரகுப்தர், சமுத்திர குப்தர் ஆட்சி செய்தனர்.
- இரண்டாம் சந்திர குப்தர் ஆட்சி காலத்தில் பாகியான் என்ற சீனப் பயணி வருகை புரிந்தார்.

- குப்த பேரரசர்கள் விருது பெயர்களைச் சூட்டிக் கொண்டனர்.
- மாகாணங்கள் 'புக்திகள்' எனப்பட்டது. ஆளுநர்கள் உபரிகர்சர் எனப்பட்டனர்.

## 1.3.7 ஹர்சப் பேரரசு

- தானேஸ்வரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் ஹர்சர்.
- ஹர்சரை புலிகேசி தோற்கடித்ததை ஐஹோலே கல்வெட்டு கூறுகிறது.
- கலிங்கத்தின் மீது போர் தொடுத்து ஹர்சர் வெற்றி பெற்றார். இதுவே ஹர்சரின் இறுதிப்போராகும்.
- ஹர்சர் ஆட்சியில் குற்றங்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டது.
- ஹர்சர் ஆட்சியில் அரசு ஆவணங்கள் பாதுகாப்பாக இருந்தன.
- ஆவணக்காப்பகங்கள் நிலோபிது என்று அழைக்கப்பட்டது.
- ஹர்சர் ஆட்சியில் கல்வி சிறப்பாக வளர்ச்சி அடைந்தது.

## 1.3.8 பல்லவர் காலம்

- பல்லவர்கள் பிராகிருத மொழியிலும், வட மொழியிலும் பட்டயங்கள் வெளியிட்டனர்.
- பல்லவ அரசர்களில் சிறப்புப் பெற்றோர், சிவஸ்கந்தவர்மன், விஜயஸ்கந்தவர்மன், விஷ்ணு கோபன், சிம்ம விஷ்ணு.
- சிம்ம விஷ்ணு, களப்பிரர்களையும், சோழர்களையும் வெற்றி பெற்றார்.
- பிற்காலப் பல்லவர்களில் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் குறிப்பிடத்தக்கவர்கள்.
- கோவில்கள், ஓவியம், இசை, கல்வி வளர்ச்சியடைந்தன.
- பல்லவ ஆட்சி நன்கு சீரமைக்கப்பட்ட ஆட்சி முறை ஆகும்.
- பல்லவ அரசு பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.
- அரசு அதிகாரிகள் கோட்டத்தை நிர்வாகம் செய்தனர்.
- அரசருக்கு உதவ திறமை மிக்க அமைச்சர்கள் இருந்தனர்.
- அரசர் நீதியின் ஊற்று ஆவார்.
- ஆலயங்களுக்கு அரசர் அளித்த நிலக் கொடை "தேவதானம்" எனப்பட்டது.
- பிராமணர்களுக்கு அரசர் அளித்த நிலக் கொடை "பிரம்மதேயம்" எனப்பட்டது.
- ஏரிகள் வெட்டப்பட்டு விவசாயம் சிறப்பாக நடந்தது.

சீரமைக்கப்பட்ட ஆட்சி, நீதித்துறை, கட்டிடக்கலை வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, கொடையளிப்பு ஆகியவை பல்லவர் அரசியலின் சிறப்புத் தன்மைகளாகும்.

## 1.3.9 சோழப் பேரரசு

- சோழர் கால அரசியலை அறிந்து கொள்ள கல்வெட்டுகள் உதவுகின்றன.
- பிற்காலச் சோழ மரபைத் தோற்றுவித்தவர் விஜயாலய சோழன்.

- முதலாம் பராந்தக சோழன் முற்காலச் சோழ அரசர்களில் குறிப்பிடத்தக்கவர்.
- முதலாம் ராஜராஜன், அவரது புதல்வர் ராஜேந்திரன் ஆட்சி காலங்களில் சோழப்பேரரசு புகழின் உச்சியை அடைந்தது.
- முதலாம் குலோத்துங்கன் 72 வணிகர் அடங்கிய தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.
- சோழர்களின் சிறப்பு அவர்களது ஆட்சி முறை ஆகும்.
- ஆட்சிக்கு பேரரசர் தலைமை வகித்தார்.
- தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் போன்ற பிரமாண்டமான தலைநகரங்கள் உருவாக்கப்பட்டன.
- பெருந்தனம், சிறுதனம் என்று அழைக்கப்பட்ட அதிகார வர்க்கம் ஆட்சிக்கு பொறுப்பு வகித்தனர்.
- சோழப் பேரரசு மண்டலங்களாகவும், மண்டலம் பல வளநாடுகளாகவும், வளநாடு பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.
- நாடு என்ற பகுதியில் பல தன்னாட்சிபெற்ற கிராமங்கள் இருந்தன.
- மண்டலங்களின் நிர்வாகத்தை அரச குலத்தை சேர்ந்த ஆளுநர்கள் கவனித்தனர்.
- வளநாட்டை பெரிய நாட்டாரும், நாடு பகுதியை நாட்டாரும் நிர்வகித்தனர்.
- நகர நிர்வாகத்தை நகரத்தார் என்ற அவை நிர்வகித்தது.
- சோழர் ஆட்சியின் சிறப்பு சபைகளும், சபைக் குழுக்களும் கொண்ட தன்னாட்சி முறை ஆகும்.
- உத்திரமேரூர் கல்வெட்டு கிராம சபைகளின் நடவடிக்கையை விவரிக்கின்றது.
- கிராம சபை உறுப்பினராகத் தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.
- குடவோலை முறை மூலம் தேர்தல் நடைபெற்றது.
- 30 பேர் கொண்ட கிராம நிர்வாகச் சபை ஆறு குழுக்களாகப் பிரிந்து செயல்பட்டது.
- வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், கிராமத்திற்கு கிராமம் மாறுபட்டிருந்தது.

ஆட்சிமுறை, பெருந்தனம், சிறுதனம் அடங்கிய அதிகாரவர்க்கம், மண்டலங்கள், வளநாடுகள், நாடுகள் உள்ளடக்கிய ஆட்சி அரசமைப்புகள், கிராம நிர்வாகம், குடவோலை முறை வணிக வளர்ச்சியை பெருக்க இலங்கைக்கு அனுப்பப்பட்ட தூதுக்குழு போன்ற சிறப்பியல்புகள் சோழ பேரரசின் அரசியல் பங்களிப்பாகும்.

## 1.3.10 டெல்லி சுல்தானியம்

- கி.பி. 1206 முதல் 1526 வரை அடிமை, கில்ஜி, துக்ளக், சையது, லோடி என ஐந்து வெவ்வேறு வம்சங்கள் வட இந்தியாவை ஆட்சி செய்தன.
- கோரி முகமதுவிடம் அடிமையாக இருந்து வட இந்திய பகுதிகளுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டவர் குத்புதீன் ஐபக் ஆவார்.

- சிறந்த ஆட்சியாளாரான இல்துமிஷ் 1229ம் ஐபக்கிடம் இருந்து அனுமதிப் பத்திரம் பெற்று அரசர் ஆனார்.
- பரம்பரை அரசியலை தொடங்கி வைத்தவர் இல்துமிஷ்.
- வலிமை வாய்ந்த நாற்பது படைத் தலைவர்கள் கொண்ட நாற்பதின்மர் குழு உருவாக்கப்பட்டது.
- இல்துமிஷ் புதல்வி ரசியா ஆணுடை தரித்து அரசவையில் அமர்ந்தார்.
- 1266ல் நசிருதின் முகமது வாரிசு ஏதுமின்றி இறந்துவிடவே பால்பன் அரசரானார்.
- பால்பன் தன்னை இறைவனது நிழல் என்றும், இறைவனால் பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டவர் என்றும் பெருமைபடுத்திக் கொண்டார்.
- உயர் குடியினரின் நடவடிக்கைகளை கண்காணிக்க ஒற்றர்கள் நியமிக்கப்பட்டனர்.
- பால்பன் குடிமக்களுக்கு இடையூறு செய்த ஆளுநர்களைத் தண்டித்தார்.
- இந்தியாவில் முஸ்லிம் பேரரசு உச்சத்தைத் தொட்டது கில்ஜிகளின் ஆட்சிக்காலத்தில்தான்.
- உயர்குடியினரின் நடவடிக்கைகள் ஒழுங்குப் படுத்தப்பட்டன.
- மது விற்பது, போதை மருந்துகள் முதலியன தடை செய்யப்பட்டது.
- அனுமதியின்றி, கேளிக்கைகளும், விழாக்களும் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டது. எனவே கிளர்ச்சிகள் தவிர்க்கப்பட்டன.
- அலாவுதின் கில்ஜி நிலையான பெரும்படை வைத்திருந்தார்.
- குதிரைகளுக்கு ‘தாக்’ எனப்படும் சூடுபோடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- அங்காடி சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.
- அங்காடி சீர்திருத்தம் அலாவுதின் கில்ஜி காலத்தில் உருவாக்கப்பட்டது.
- தானியங்கள் அங்காடிகளில் கிடைக்க, அரசு தானிய கிடங்குகளில் போதுமான அளவு தானியங்கள் இருப்பு வைக்கப்பட்டது.
- அனைத்து வகைப்பொருட்களுக்கும், விலை நிர்ணயம் செய்யப்பட்டது.
- அங்காடி விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.
- நில அளவையை முதன்முதலாக ஏற்படுத்தியவர் அலாவுதின் கில்ஜி ஆவார்.
- நிலவருவாய் சீர்திருத்தங்களுக்கு முன்னோடி கில்ஜி ஆவார்.
- முகமது பின் துக்ளக் குறிப்பாக நாணய மாற்றம், தலைநகர் மாற்றம் தோ–ஆப்–பகுதி வரிவிதிப்பு, குடியானவர்களுக்கு தக்காவி எனும் வேளாண்கடன்கள் வழங்கல் ஆகியவற்றை செய்தார்.
- திவானி கோஹி என்ற வேளாண் துறை உருவாக்கப்பட்டது. எழுபது லட்ச ரூபாயில், 64 சதுர மைல் பரப்பில் மாதிரிப்பண்ணை உருவாக்கப்பட்டது.
- உயர் குடியினரின் சொத்துக்கள், பரம்பரை வாரிசுகளுக்கு வழங்க உத்தரவிட்டவர் பிரோஸ் துக்ளக் ஆவார்.

- சுல்தான் பிரோஸ் துக்ளக் முதன்முதலாக நீர்பாசன வரி விதித்தார்.
- நீர்பாசனத்துக்காக சட்லஜ் முதல் வாரனாசி வரை 200 கி.மீ. தூரத்திற்கு கால்வாய் அமைக்கப்பட்டது.
- யமுனா முதல் ஹிஸ்ஸா வரை மற்றொரு கால்வாய் வெட்டப்பட்டது.
- இஸ்லாம் சட்டத்தில் இடம் பெறாத 28 பொருட்கள் மீது வரி ரத்து செய்யப்பட்டது.
- அடிமைகள் இருந்தனர்.
- முந்நூறுக்கு மேற்பட்ட புதிய நகரங்கள் நிறுவப்பட்டன.
- அனாதைகள், கைம்பெண்கள் நலனுக்காக திவானி சைரத் என்ற துறை உருவாக்கப்பட்டது.
- இலவச மருத்துவமனைகள், முஸ்லீம்களுக்கு திருமண ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- இந்துக்கள் மீது ஜிஸியா வரி கட்டாயமாக்கப்பட்டது.
- லோடி வம்சத்து சிறந்த அரசர் சிக்கந்தர் லோடி.
- சாலைகள் பழுது பார்க்கப்பட்டன. நீர்பாசன வசதி மேம்படுத்தப்பட்டது.
- சுல்தானுக்கு உதவியாக நாயப் என்ற பதவி இருந்தது.
- திவானி விசாரத் என்ற நிதித்துறை பொறுப்பாளர் இருந்தனர்.
- ராணுவத்துறை அதிகாரி திவானி அர்ஸ் எனப்பட்டார்.
- திவானி ரிசாலத் என்பது சமய விவகாரங்கள் துறை. அதன் அதிகாரி சதர் எனப்பட்டார்.
- நீதித்துறையின் தலைவராக தலைமை காஸி இருந்தார்.
- உரிமையியல் குறித்த வழக்குகளில் ஷாரியா என்னும் இஸ்லாமிய தனிச்சட்டம் இருந்தது.
- இந்துக்களுக்கு தனிச்சட்டம் இருந்தது. பெரும்பாலும் கிராம பஞ்சாயத்துக்கள் தீர்ப்பு கூறின.
- திவாஸி இன்ஷா எனப்படுவது போக்குவரத்துத்துறை.
- டெல்லி சுல்தானிடத்தில் மாகாணங்கள் இக்தாக்கள் என்றும் மாவட்டங்கள் ஷிக்தா என்றும் ஷிக்தா பல பர்கானாக்களாகவும், பர்கானாக்கள் பல கிராமங்களாகவும் இருந்தன.
- கிராமத்தின் தலைவர் அமில், ஆட்சியின் அடிப்படை அலகு கிராமம், கிராம கணக்கர் பட்வாரி ஆவார்.

இல்துமிஷ் உருவாக்கிய நாற்பதின்மர் குழு, முதல்பெண்ணரசி ரசியா பதிவியேற்பு, அலாவுதின் கில்ஜியின் அங்காடிச் சீர்திருத்தம், முகமது துக்ளக் கொண்டு வந்த தக்காவி எனும் வேளாண் கடன்கள் திவானிகோஹி என்ற வேளாண்துறை, பெரோஸ்ஷா துக்ளக்கின் நீர்பாசனத் திட்டங்கள், புதியதாக நிறுவப்பட்ட நகரங்கள் போன்றவை டெல்லி சுல்தானிய ஆட்சியின் குறிப்பிடத்தகுந்த தாக்கங்களாகும்.

## 1.3.11 விஜயநகர பாமினி அரசுகள்

- சங்க மரபைச் சேர்ந்த ஹரிஹரரும், புக்கரும் 1336ம் ஆண்டு விஜயநகரை நிறுவினர்.
- விஜய நகரத்தின் மிகச் சிறந்த பேரரசர் கிருஷ்ணதேவராயர் ஆவார்.

- பேரரசு மண்டலங்களாகவும், மண்டலம் பல நாடுகளாகவும், நாடு பல ஸ்தலங்களாவும், ஸ்தலம் பல கிராமங்களைக் கொண்டும் இருந்தது.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.
- ராணுவத்தில் உள்ள அதிகாரிகள் நாயக் அல்லது பாளையக்காரர் எனப்பட்டார். அவருக்கு வழங்கப்பட்ட நிலம் 'அமரம்' எனப்பட்டது.

## 1.3.12 முகலாயப் பேரரசு

- மொகலாயப் பேரரசை நிறுவியர் பாபர்
- 1526 முதல் பானிபட் போர் பாபருக்கும் இப்ராகிம் லோடிக்கும் இடையே நடைபெற்றது. இதன் விளைவாக இந்தியாவில் முகலாயர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.
- பாபருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றவர் ஹீமாயூன்.
- ஹீமாயூன் 15 ஆண்டுகள் ஆட்சியிழந்து, நாடிழந்து இந்திய நாட்டிற்கு வெளியே வாழ்ந்தார்.
- இடைப்பட்ட காலத்தில் சூர் மரபினர் ஆட்சி நடைபெற்றது.
- ஷெர்ஷா ஆட்சியில் அரசருக்கு உதவ நான்கு முக்கிய பிரிவினர் இருந்தனர்.
- ஷெர்ஷாவின் பேரரசு 47 சர்கார்களாகப் பிரிக்கப்பட்டது.
- ஒவ்வொரு சர்கார்களிலும் முதன்மை ஷிக்தார் (சட்டம், ஒழுங்கு) முதன்மை முன்சீப் (நீதி வழங்குதல்) என்ற இரண்டு அதிகாரிகள் இருந்தனர்.
- பேரரசில் இக்தா எனும் நிர்வாகப் பிரிவு இருந்தது.
- விளைநிலங்கள் நல்லவை, நடுத்தரமானவை, மோசமானவை என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன.
- 'தாம்' என்ற வெள்ளிப்பணம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சாலைகள் சிறப்பு பெற்றன.
- போக்குவரத்து சீரமைக்கப்பட்டது.
- நான்கு புறவழிச்சாலைகள் அமைத்து சாலை வசதி மேம்படுத்தப்பட்டது.
- மொகலாயப் பேரரசில் தலைசிறந்தவர் பேரரசர் அக்பர்.
- அக்பரின் ராஜபுத்திரக் கொள்கை சிறப்பு வாய்ந்தது.
- மத சகிப்புக் கொள்கை அவருக்கு வரலாற்றில் சிறப்பிடத்தைத் தந்தது.
- பத்தாண்டு கால விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு நிலவருவாய் நான்கு வகைப்படுத்தப்பட்டது.
- மன்சப்தாரி முறை சிறப்பாக இருந்தது.
- அக்பருக்குபின் ஜஹாங்கீர், நூர்ஜஹானின் கட்டுப்பாட்டில் ஆட்சி செய்தார்.
- ஷாஜகானுக்குப் பின் வாரிசுப்போட்டியில் அவுரங்கசீப் வெற்றி பெற்றார்.
- அவுரங்கசீப் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். இந்துக்கள் மீது மீண்டும் ஜிசியா வரி விதிக்கப்பட்டது. இஸ்லாம் சமயம் வளர்ச்சியடைந்தது.

கட்டிடக்கலை, ஆட்சிப்பிரிவுகள், நான்கு முறைச்சாலைகள் அமைத்து சாலை மேம்பாடு, தரம் அடிப்படையில் நிலப்பிரிவுகள், மன்சப்தாரி முறைகள் போன்றவை முகலாயர்கள் ஆட்சியின் சிறப்பியல்புகளாகும்.

### 1.3.13 மராட்டிய அரசு

- மாராட்டிய பேரரசை உருவாக்கி திறம்பட நடத்தியவர் சிவாஜி ஆவார்.
- கொரில்லாப் போர் முறையில் சிறப்பாக வெற்றி பெற்றார்.
- சிவாஜிக்கு நிர்வாகத்தில் உதவ எட்டு அமைச்சர்கள் கொண்ட அஷ்ட பிரதான் இருந்தது.
- மொகலாயப்பேரரசுக்கு எதிராக மராட்டிய அரசு செயல்பட்டது.

### 1.3.14 ஆங்கிலேயர் ஆட்சி

- வியாபாரத்திற்காக வந்த ஆங்கிலேயர்கள் படிப்படியாக இந்தியாவை ஆட்சி செய்தனர்.
- ஆங்கிலேயர் ஆட்சியில் இரட்டை ஆட்சி கொண்டுவரப்பட்டது.
- வியாபரத்திற்காக சென்னை, கொல்கத்தா ஆகிய நரங்கள் உருவாக்கப்பட்டு பின் மாகாண நிலைக்கு உயர்த்தப்பட்டன.
- மாவட்ட அமைப்பிற்கு மாவட்ட ஆட்சியர்கள் நியமிக்கப்பட்டனர்.
- வரிவசூல் செய்ய ஜமீன்தாரி முறை உருவாக்கப்பட்டது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரின் (Collector) கீழ் உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் செயல்பட வகை செய்தனர்.
- 1773ல் வரிவசூலை சீரமைக்க ஒழுங்கு முறை சட்டம் இயற்றப்பட்டது.
- 1784ல் ஒழுங்குமுறை சட்டம் சீர்திருத்தம் பெற்று "பிட் இந்திய சட்டமாக" உருவாகியது.
- காரன்வாலிஸ் பிரபு தகுதியின் அடிப்படையில் அரசு வேலைக்கு ஆட்களை நியமனங்கள் செய்தார்.
- ஆங்கிலேயருக்கு உதவ இந்திய அரசர்களிடம் துணைப்படைத்திட்டம் வெல்லஸ்லி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிலவரி வசூலிக்க ரயத்துவாரி முறை, மகல்வாரி முறைகளைச் செயல்படுத்தினர்.
- நாடுகளை இணைப்பதற்காக வாரிசு இழக்கும் கொள்கையை செயல்படுத்தினார் டல்ஹவுசி பிரபு.
- டல்ஹவுசி புதிய மாகாணங்களைச் செம்மைப்படுத்தி நவீன அரசாக உருவாக்கினார்.
- டல்ஹவுசி காலத்தில் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன.
- டல்ஹவுசி காலத்தில் தகவல் தொடர்பில் மாற்றங்கள் ஏற்பட்டது. தந்தி அனுப்பும் முறை வளர்ச்சியடைந்தது.
- பாளையம் என்று அழைக்கப்பட்ட ஒரு சில கிராமங்களை உள்ளடக்கிய நிலப்பகுதிகளுக்கு உரிமையாளர் பாளையக்காரர். இந்தியாவில் விஜயநகர ஆட்சி காலத்தில் இது ஏற்படுத்தப்பட்டது.

- நிலையான நிலவரி ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கி இன்றளவும் நடைமுறையில் உள்ளது.
- ஆங்கிலேயரின் தொழில் கொள்கையால் சிறுதொழில்கள் நசிந்தன. சாலைகள் மேம்படுத்தப்பட்டன.

பல்வேறு சிற்றரசுகளாக பிரிந்து கிடந்த நாட்டை இந்தியா என்ற பெயரில் ஒருங்கிணைத்த பெருமை ஆங்கிலேயரைச் சாரும். ஆங்கில ஆட்சியின் விளைவாக இந்தியர் என்ற உணர்வு ஏற்பட்டது. தேசப்பற்று, தேச ஒற்றுமை என்ற உணர்வு ஏற்பட்டது. குடிசைத் தொழில்கள் நலிவடைந்தாலும், தொழில்துறையின் வளர்ச்சிக்கு ஆங்கில ஆட்சி காரணமாகும். ஆட்சி அமைப்பு முறை, சட்டங்கள், நீதிமன்றங்கள், கருவூல அமைப்பு முறை, வருவாய், இரயில்வே, தபால்துறை போன்ற பொது நிறுவனங்கள் நிர்வாக முறைகள் எல்லாமே ஆங்கிலேயர் ஆட்சி முறையின் தாக்கமே. கடந்த கால அனுபவங்களின் வளர்ச்சியே மனித சமுதாய வளர்ச்சி ஆகும்.

***செயல்***

*தமிழகத்தில் உள்ள முக்கிய வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் ஒன்றுக்கு களப்பயணம் செய்து அறிக்கைத் தயாரிக்க.*

## 1.4 மனித வாழ்வின் பொருளாதார வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

## அறிமுகம்

வரலாறு மனிதனை மையமாக் கொண்ட பாடம் ஆகும். மனித வாழ்க்கையின் அனுபவம் மட்டுமன்றி சமூக உணர்வு, மனித வளர்ச்சி, பொருளாதாரம் மதம் மற்றும் பண்பாடு பற்றி வரலாறு விளக்குகிறது. பண்டைக் காலம், இடைக்காலம், நவீன காலம் என்ற பாகுபாடுகளில் பொருளாதாரத்தின் பங்கினை காண்போம்.

### 1.4.1 பண்டைக்காலம்

- கற்காலம் பழைய, புதிய கற்காலம் என இருவகைப்படும். பழைய கற்காலத்தில் உணவு தேடி இடம் பெயர்ந்த மனிதன் புதிய கற்காலத்தில் நிலையாக வாழ முற்பட்டான். குகைகளில் வாழ்ந்த மனிதன் சமவெளிப் பகுதிகளில் பயிர்த் தொழிலை மேற்கொண்டான். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், விலங்குகள் வளர்த்தல் போன்றவற்றின் வளர்ச்சிகள் தற்காலத்தில் நவீனபடுத்தப்பட்டுள்ளது.
- உலோக காலத்தில் தயாரிக்கப்பட்ட வெண்கலம், தற்காலத்திலும் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டுவருகிறது. தற்போது மிகுதியாக பயன்படும் இரும்பு தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்டு உள்ளது.

### 1.4.2 சிந்து சமவெளி நாகரிகம்

- இந்நாகரிகம் சிந்து நதியில் உள்ள மொகஞ்சதோரா மற்றும் ஹரப்பா நகரங்களை உள்ளடக்கியுள்ளது.

- முக்கியத் தொழில் விவசாயம். மத்திய ஆசியா, பாரசீகம், மெசபடோபியா போன்ற நாடுகளுடன் வணிக உறவு கொண்டிருந்தனர். பொருள்கள் விற்பனைக்கு எடைகற்களை அக்காலத்திலும் பயன்படுத்தியுள்ளனர்.
- இவர்கள் காலம் செம்புக்காலம் எனப்படுகிறது. இவர்களுக்கு இரும்பு உபயோகம் தெரியவில்லை. சிந்துசமவெளி நாகரித்தில் வணிகமரபினர் இருந்தனர் என்பதற்கு போதிய ஆதாரங்கள் கலிபங்கனில் உள்ளது.

### 1.4.3 வேதகால நாகரிகம்

- மத்திய ஆசியாவிலிருந்து கைபர், போலன் கணவாய்கள் வழியாக பஞ்சாபில் குடியேறியவர்கள் ஆரியர்கள் எனப்பட்டனர்.
- வாணிபம் பண்ட மாற்று முறையில் நடைபெற்றது. புதிய உழவுக் கருவிகள், உரங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தல் போன்றவை நவீன காலத்தின் முன்னேற்றத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தன எனலாம்.

### 1.4.4 மௌரியப் பேரரசு

- முக்கியத் தொழில் விவசாயம் ஆகும். குடிசைத்தொழில்கள் வளர்ச்சி அடைந்தன. வாணிபத்தில் தடைகள் அகற்றப்பட்டிருந்தன. நிலவரி, சுங்கம், தொழில், அபராதம், நன்கொடை, சுரங்கம், காடுகள் போன்றவை அரசுக்கு வருவாய் தந்தன.
- மௌரிய பேரரசு பொருளாதார செழிப்பிற்கு நகர நிர்வாகமே முக்கியக் காரணமாகும்.

### 1.4.5 குப்த பேரரசு கி.பி. 320 – கி.பி. 550

- இந்தியாவில் குப்தர் காலம் பொற்காலம் எனப்படுகிறது. குப்தர்களின் முக்கிய வருவாய் நிலவரி ஆகும். கௌரிஸ் என்ற வெள்ளி நாணயங்களும், தினாரா என்ற தங்க நாணயங்களும் அரசர்கள் வெளியிட்டனர். மக்கள் செல்வ செழிப்புடன் இருந்தனர் என பாகியான் குறிப்பிடுகிறார்.
- சீனா, இலங்கை, கிழக்கு இந்தியா, ரோம் போன்ற அயல் நாடுகளுக்கு வாணிகம் செழிப்புற காம்போ, சோப்ரா, புரோச் துறைமுகங்கள் இருந்தன.
- உலோக சாமான்கள், பட்டு, பேரீட்சை, குதிரைகள் அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்தனர். வாணிகம் செழிக்க ஏற்றுமதிப் பொருள்களை மிகுதியாக உற்பத்தி செய்தனர்.

### 1.4.6 சங்ககாலம்

- சங்ககால மக்கள் சீனா, மேற்கு ஆசியா, எகிப்து, ரோம் நாடுகளுடன் வாணிபம் செய்தனர். முசிறி, தொண்டி, கொற்கை புகார் போன்றவை துறைமுகப் பட்டினங்களாகும்.
- தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் பயன்படுத்தினார்கள் ரோமானிய மற்றும் சீன நாணயங்கள் கிடைத்துள்ளமை இரு நாடுகளுக்கிடையே நிலவிய வணிக உறவை புலப்படுத்துகிறது.

- கரிகாலன் கட்டிய கல்லணை மூலம் இன்றும் பயிர்த்தொழில் மேம்பட்டு வருகின்றது. வறட்சியின் போது நிலவரி ரத்து செய்யப்பட்டது. இது நிலவரி கடன் தள்ளுபடி, வறட்சி நிவாரணம் ஆகியவற்றை நினைவூட்டுகிறது.

### 1.4.7 இடைக்காலம் – பல்லவர்கள்

- கிராமங்கள் தன்னிறைவு பெற்றிருந்தன. நிலங்கள் தற்போதைய முறையை வலுப்படுத்துவற்காக, வேளாண்மை செய்யும் நிலங்கள், பயிரிடப்படாத தரிசு நிலங்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தது.
- கல் அறுத்தல், தச்சு தொழில், தந்த வேலை, பொன் நகை செய்தல் ஆகியவை சிறப்புற்றிருந்தன. காஞ்சி பட்டுத் துணிக்கு பெயர் பெற்று இன்றளவும் தக்க வைத்துள்ளது.
- தற்போதைய வணிக சங்கம் போல் மணிகிராம வணிக சங்கம் இருந்தது. சீனா, எகிப்து, ஜாவா, சுமத்திரா, பர்மாவுடன் வணிக உறவு கொண்டிருந்தனர்.
- தங்கம் வெள்ளி நாணயம் வெளியிட்டனர்.
- உழவு, பட்டிகா, கலப்பை, கடுநாழி, விடேல், உழக்கு, கழஞ்சு மஞ்சாடி போன்ற எடைகளைப் பயன்படுத்தினர். இவை தற்கால கிலோகிராம் எடையைப் பயன்படுத்துவது போன்றதாகும்.

### 1.4.8 சோழப்பேரரசு

- சோழப் பேரரசின் முக்கிய வருவாய் நிலவரி ஆகும். இதனைப் பணமாகவோ பொருளாகவோ பெற்றனர். நிலங்களில் வரி செலுத்துபவை, வரிசெலுத்தாதவை என பாகுபாடு இருந்தது.
- பொற்காசு, செம்பு, வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.
- நெசவாளர், பொற்கொல்லர், வணிகர் போன்ற பல்வகை வர்த்தகர்களால் வர்த்தக சங்கம் அமைக்கப்பட்டு தற்போதைய தொழிலாளர் சங்கம் போல் உழைப்பாளர்க்கு முக்கியத்துவம் தந்தது.
- அயல்நாடுகளுடன் வணிக உறவு கொண்டிருந்தனர்.

### 1.4.9 பாண்டியர்கள்

- மன்னர்கள் தமது பட்டம், பெயர் தாங்கிய தங்க நாணயங்களை வெளியிட்டனர்.
- முத்துக்குளிக்கும் தொழில், மிகுந்த வருவாயை அரசுக்கு தந்தது. காயல் முக்கிய துறைமுகமாகும். நாட்டில் பொருளாதாரம் செழித்திருந்தது என மார்க்கோபோலோ என்கின்ற வெனிஸ் நகர பயணி குறிப்பிடுகிறார். தூத்துக்குடி முத்து எடுக்கும் நகரமாக தற்காலத்தில் ஒளிவீசுகிறது.

### 1.4.10 டெல்லி சுல்தான்கள் ஆட்சி

- இந்தியாவின் பொருளாதார வளம் அயலவர் கண்ணைக் கவர்ந்தது. கஜினி முகமது 17 முறை படையெடுத்து தன் நாட்டிற்கு இந்திய பொருளாதாரத்தைக் கவர்ந்து சென்றார்.
- அளவுக்கு அதிகமான வரிச்சுமை மக்கள் மீது அலாவுதின் கில்ஜி காலத்தில் திணிக்கப்பட்டிருந்தது.
- அலாவுதீன் விலைக்கட்டுப்பாட்டு முறையை அமுல்படுத்தியவர் ஆவார். வருவாய்துறையை சீரமைத்த முதல் டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜி ஆவார்.
- முகமது பின்துக்ளக் அடையாள நாணயங்கள் வெளியிட்டார். விவசாயிக்கு கடன் உதவி அளித்தார்.
- பிராஷ்ஷா துக்ளக் உழவுத்துறையை ஏற்படுத்தினார்.
- குஜராத், மலபார், வங்காளம் துறைமுகம் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டது.
- உணவு பொருள், பணப் பயிர்கள் பயிரிடப்பட்டன.
- இந்தியா பாரசீக வளைகுடா வழியாக மெசபடோமியாவிற்கும் செங்கடல் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவிற்கும் வாணிகம் செய்தது. இது தற்கால பன்னாட்டு வாணிப உறவை வெளிப்படுத்துகிறது.

### 1.4.11 விஜயநகரப் பேரரசு

- கிராமிய தொழில்களான எண்ணெய் எடுத்தல், வெல்லம் காய்ச்சுதல், மீன்பிடித்தல், மண்பாண்டம் செய்தல் போன்ற தொழில்கள் வளர்ச்சி பெற்றிருந்தன. தற்காலத்திலும் இத்தொழில்கள் கிராமங்களில் எதிரொளிக்கின்றன.
- பொன், வெள்ளி, தங்கம் மூலம் மிகுதி வருவாய் பெற்றனர். தச்சுத் தொழில், மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் தொழில் வளர்ச்சி தற்காலத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.
- பொன் நாணயங்கள் வழக்கிலிருந்தன. பல்வேறு எடைகள், அளவுகள் வழக்கிலிருந்தன.

### 1.4.12 நாயக்கர் காலம்

- முக்கிய தொழில் விவசாயம். எண்ணெய் தயாரித்தல், சர்க்கரை மற்றும் உப்பு தயாரித்தல், மட்பாண்டம் செய்தல், நூல் நூற்றல், ஆடை நெய்தல் யாவும் தற்கால தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- உலோக பொருட்கள் இறக்குமதி செய்து ஏற்றுமதிக்கு அரிசி, சர்க்கரை, சோளம் வாசனை பொருட்கள், பட்டு, பருத்தி துணிகள் அனுப்பி மிகுந்த வருவாய் பெற்றனர்.

## 1.4.13 முகலாயர்கள்

- ஷெர்ஷா செம்பு நாணயம் மற்றும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். சுங்கவரி நீக்கப்பட்டது. விற்பனை இடத்தில் மட்டும் வரி விதிக்கப்பட்டது. நிலத்தின் தரத்தின் அடிப்படையில் நிலவரி விதிக்கப்பட்டது.
- அக்பர் காலத்தில் ராஜா தோடர்மாலின் பத்து ஆண்டு நிலவருவாய் ஒப்பந்தம் மூலம் வறட்சி பணி செப்பனிடப்பட்டது. 'தக்காவி' முறை மூலம் கடன் அளிக்கப்பட்டு மக்கள் துயர் துடைக்கப்பட்டது.
- லாகூர், ஆக்ரா, பதேப்பூர், அலகாபாத் போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன.

## 1.4.14 மராத்தியர்கள்

- இப்பேரரசு காடுகள் மிகுதியாக சூழ்ந்த பகுதியாகும். எனவே விளை நிலங்கள் குறைவு. முக்கிய தொழில் விவசாயம். உற்பத்தியில் ஐந்தில் இரண்டு பங்கு நிலவரியாகும். எல்லைப் பகுதிகளில் சௌத், சர்தேஷ்முகி என்ற இரு நிலவரிகள் வசூலிக்கப்பட்டன.

## 1.4.15 நவீனகாலம்

**ஆங்கிலேயர் ஆட்சியில் பொருளாதார நிலை**

- கி.பி. 1600ல் ஜஹாங்கீர் ஆட்சி காலத்தில் வில்லியம் ஹாக்கின்ஸ் என்பவர் இங்கிலாந்து அரசு அனுமதியுடன் இந்தியாவிற்கு வந்தார். 1858ம் ஆண்டு விக்டோரிய பேரரசியாரின் பிரகடனப் படி இந்தியா ஆங்கிலேயர்களின் நேரடி ஆட்சிக்கு கீழ் செயல்பட தொடங்கியது.
- இந்தியாவின் பரம்பரை கிராமிய பொருளாதாரம் சிதைந்து குடியேற்ற நாட்டு பொருளாதாரமாக மாறியது.
- கைவினைப் பொருள்கள் விரைவில் அழியவே கைவினைஞர்கள் துன்பம் அடைந்தனர்.

**ஆங்கிலேயர் காலத்தில் தொழில் வளர்ச்சி**

- 1850ல் பருத்தி, சணல், நிலக்கரி சுரங்கம் தொடங்கப்பட்டது. 1852ல் பம்பாயில் பருத்தியும் வங்காளத்தில் சணல் தொழிலும் 1913 ல் எஃகு உற்பத்தியும் 1930 ல் சிமெண்ட், காகிதம், தீக்குச்சி, சர்க்கரை, கண்ணாடி தொழில் வளர்ச்சி பெற்றது.

**தமிழகத்தில் பொருளாதாரத்தின் பங்கு**

- இந்தியா பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற ஐந்தாண்டு திட்டங்களைத் தீட்டி வருகிறது. இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு முதலிடம் தந்தது.

## தொழிற்சாலையும் இடங்களும்

- 1. பருத்தி – கோயம்புத்தூர், அம்பா சமுத்திரம்
- 2. சர்க்கரை – திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், விழுப்புரம்

- 3. காகிதம் – சிவகங்கை, தேனி, திருநெல்வேலி, புகலூர்
- 4. சிமெண்ட் – தாழையூத்து, செட்டிநாடு, டால்மியாபுரம்
- 5. இரசாயணம் – தூத்துகுடி, ராணிப்பேட்டை, திருவள்ளூர்
- 6. உலோகம் – சென்னை, சேலம், தஞ்சாவூர், காரைக்குடி.
- 7. சிறுதொழில் – சிவகாசி,திருச்சி, காரைக்குடி, சென்னை.
- 8. மின்சாரம் – குந்தா, மேட்டூர், பாபநாசம் (நீர் மின்சாரம்) எண்ணூர், நெய்வேலி (அனல் மின்சாரம்) கல்பாக்கம் (அணு மின்சாரம்)
- ஏற்றுமதி இறக்குமதி பொருள்கள் மிகுதிப் பெறவே வாணிபம் தழைத்தது.
- அரசுடமை வங்கிகள் மூலம் தொழில் வளர்ச்சிக்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது.
- உலக வங்கி மற்றும் நபார்ட் (NABORD) நிதி உதவி மூலம் சாலை வசதி மேம்படுத்தப் படுகின்றது.
- தமிழக உணவு உற்பத்தி வளர்ச்சி 1960ம் ஆண்டில் தன்னிறைவு பெற்றது.
- 1965ல் சாகுபடி முறையில் பல அறிவியல் நுட்பங்களை புகுத்தி பசுமை புரட்சியையும், கால்நடை வளர்ச்சியில் வெண்மைப் புரட்சியினையும், மீன் வளர்ச்சி திட்டத்தில் நீலப்புரட்சியிலும் சாதனை படைத்துள்ளது.
- பவானி, வைகை, மேட்டூர், சாத்தனூர், ஆழியாறு, அமராவதி, கிருஷ்ணகிரி, பரம்பிகுளம் போன்ற நீர்பாசன திட்டங்கள் மூலம் தமிழகம் உணவு உற்பத்தியில் முன்னேறி வருகின்றது.

## 1.5 மனித வாழ்வின் சமய வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

- இந்தியா பல்வேறு சமயங்களைத் தன்னகத்தே கொண்ட நாடாகும். இந்தியர்கள் அனைவரும் சமய உணர்ச்சி மிக்கவர்கள். ஆன்மீக செல்வத்துக்கோர் கருவூலம் இந்தியா எனலாம். உபநிடங்கள், பகவத் கீதை, தர்மசாஸ்திரங்கள், ராமாயணம், மகாபாரம் போன்ற இதிகாசங்கள் யாவும் இந்துக்களின் புனித நூல்களாகும். இஸ்லாம், கிருஸ்தவம், சௌராஸ்டிரியம், புத்தம், சமணம், சீக்கிய மதம் போன்ற பல சமயத்தவர்கள் இந்தியாவில் வாழ்கின்றார்கள். எனவே இந்திய நாகரிகத்தை பற்றி நாம் அறிய முற்படின் பல்வேறு சமயங்களின் அறிவை பெறுவது அவசியம்.

### 1.5.1 பண்டைக் காலம் சிந்து வெளி மக்களின் சமயநிலை

- சிந்து சமவெளியினரால் கி.மு. 3250 – 2750 வழிபடபட்ட சக்தி என்ற பெண் தெய்வம் மற்றும் பசுபதி என்ற ஆண் தெய்வம் இன்று வழிபாட்டு கடவுளாக இருப்பது வியக்கத்தக்கது. சிவனுக்கு பசுபதி என்ற பெயர் உண்டு. எருதுகள், பசு, பாம்புகள், மரங்கள் வழிப்பட்டதை இன்றைய இந்துக்களும் பின்பற்றுகின்றனர். சக்கரம், சுவஸ்திகா உருவ முத்திரை, சூரிய வழிபாட்டை குறிப்பிடுகிறது. சூரிய நமஸ்காரம் தற்போதும் வழக்கில் உள்ளது.

### 1.5.2 வேதகாலத்தில் சமயம்

- இயற்கை சக்திகளை வழிபட்டனர். (உ.தா) அக்னி, வருணன், சூரியன், உஷா, வாயு, சாவித்திரி.
- வழிபாட்டுமுறைகள் திறந்த வெளியிலும் இயற்கை சூழலிலும் நடைபெற்றன. இம்முறைகளை இந்துக்கள் இன்றும் பின்பற்றி வருகின்றனர்.
- பின் வேதகாலத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன் உயர் இடம் பெற்றனர். சடங்குகளும் வேள்விகளும் பெருகின. பிராமணன் மனிதரில் உயர்ந்த வகையாகக் கருதப்பட்டான்.
- துறவு நிலையை போற்றினர்.

இயற்கையை வழிப்படுதல், வேள்விகள் கர்மாதத்துவம், தவம், மறுப்பிறவி, முக்தி அடைதல் ஆகியவற்றில் நம்பிக்கை போன்றவை வேதக்காலத்தின் முக்கிய கூறுகளாகும்.

### 1.5.3 புத்தமதமும் சமண மதமும்

- புத்தமதமும் சமண மதமும் இந்தியாவில் தோன்றினாலும் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்படவில்லை.
- மகாவீரர் சமண மதத்தில் 24 வது தீர்த்தங்கரர் ஆவார். நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை என்பது மூன்று ரத்தினங்கள் ஆகும். இதன் முக்கிய கொள்கை அஹிம்சையாகும்.
- சமண மதம் சுவேதாம்பரர், திகம்பரர் என்ற இரண்டு பிரிவாக பிரிந்தது.
- கௌதம புத்தர் புத்த மதத்தை தோற்றுவித்தார். இவர் நான்கு உண்மைகளையும் எண் வகை கொள்கையையும் கூறினார். நான்கு உண்மைகள் என்பது நோய் (பிணி, மூப்பு, சாக்காடு போன்ற துன்பங்கள்), நோய்க்காரணம் உணர்தல், நோய் நீக்கும் வாய் (ஆசையை அடக்குதல்), நோய் தீர்க்கும் வழி முதலியன ஆகும். எண் வழிகள் என்பது நல்ல நம்பிக்கை; நல்ல பேச்சு; நல்லெண்ணம்; நல்செயல்; நல் வாழ்க்கை; நல் முயற்சி; நல் விழிப்பு; நல்ல தியானம் ஆகியனவாகும். இவையே நோய் தீர்க்கும் எண்வழிகள் ஆகும்.
- கௌதம புத்தர் அஹிம்சையை கடைபிடித்தார்.
- விநயபீடகம், தர்ம பீடகம், சுத்த பீடகம் ஆகியவை பௌத்த சமய நூல்களாகும்.
- கனிஷ்கர் காலத்தில் புத்தமதம் மகாயாணம், ஹீனயானம் என்ற இருபிரிவாகப் பிரிந்தது.

### 1.5.4 மௌரிய பேரரசு – அசோகர்

- கலிங்கப் போர் அசோகரின் மனமாற்றத்திற்கு வழி செய்தது.
- அசோகர் மத சகிப்புத்தன்மை உடையவர். தர்ம மகாமாத்திரர்களை நியமித்து அறநெறிகளை மக்களிடம் பரவச் செய்தார்.

- புத்த சமய மாநாட்டினை பாடலிபுத்திரத்தில் கூட்டினார். புத்தமத போதனைகளைக் கற்தூண்களிலும் கல்வெட்டுகளிலும் செதுக்கினார்.
- மகள் சங்கமித்திரையை இலங்கைக்கு அனுப்பி புத்தமதம் இலங்கையில் பரவ வழி செய்தார்.

### 1.5.5 குப்த பேரரசு

- விஷ்ணுவின் அவதாரமாக குப்தர்கள் கருதப்பட்டனர். இது இந்துமதத்தின் அவதார கொள்கைக்கு வித்திட்டது.
- சமய சகிப்பு தன்மை உடையவர்களாக இருந்தனர். எனவே புத்த மதம் தழைத்திருந்தது.

### 1.5.6 சங்ககாலம்

- ஐந்து திணை மக்களும் ஐந்து கடவுள்களை வழிபட்டனர். நிலத்திற்கேற்ப இறைவழிபாடு செய்தனர். குறிஞ்சி (முருகன்) முல்லை (விஷ்ணு) மருதம் (இந்திரன்) நெய்தல் (வருணன்) பாலை (கொற்றவை) ஆகும்.
- நடுகல் வழிபாடு வழிபட்டனர். பத்தினிக் கடவுள் வழிபாடு சேரன் செங்குட்டுவனால் நடத்தப்பட்டது என சிலப்பதிகாரம் கூறுகிறது.
- சூரியன், சந்திரன், நதி, மலைகள், நட்சத்திரம், ஆலமரம், கொன்றை, கடம்பமரம் பாம்பு, எருது, யானை போன்ற இயற்கை மற்றும் விலங்குகளை வழிபாடு செய்தனர். இவ்வழிபாடு தற்கால இந்துச் சமயத்திலும் நடைமுறையிலுள்ளது.

### 1.5.7 இடைக்காலம் – பல்லவர்களின் காலமும் இந்து மத வளர்ச்சியும்

- இந்து சமயம் மீண்டும் புத்துயிர் பெற்றது. வைணவம், சைவம் செல்வாக்கு பெற்றது. சிவனடியைச் சேரும்போது எல்லையற்ற இன்பம் பெறப்படுகிறது என்கிறது சைவ சித்தாந்தம். தேவாரம், நாலாயிரதிவ்ய பிரபந்தம் பல்லவர்களின் இலக்கியமாகும். பல்லவர்கள் சிவன் விஷ்ணுவை வழிபட்டனர்.
- பல்லவர்கள் காலத்தில் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற அடியார்கள் வாழ்ந்து வந்தனர். நாயன்மார்கள் அறுபத்து மூவர் ஆவர்.
- ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் வைணவத்தை செழிக்க செய்தனர்.
- பிற்காலத்தில் வைணவம் வடகலை, தென்கலை எனவும் சைவர்கள் ஆதி சைவர், வீரசைவர் எனவும் பிரிவுகள் தோன்றின.
- இந்தியாவில் பக்தி இயக்கம் பரப்பியவர்கள் சங்கராச்சாரியார், இராமானுஜர் மற்றும் மத்வாச்சாரியார் ஆவர். சங்கராச்சாரியார் கோட்பாடு அத்வைதம் எனப்படும். இராமானுஜர் கோட்பாடு துவைதம் எனப்படும். மத்வாச்சாரியார் கோட்பாடு விசிஸ்டாத்வைதம் எனப்படும். ஸ்ரீரங்கம் வைணவ வழிபாட்டு தலமாகும். இந்த 3 வகையான சிறப்பு தத்துவங்கள் இந்து மதத்தில் காணப்படுகிறன.

- இந்து மதத்தில் சைவம், வைணவம், கௌமாரம், கைபாத்யம் சக்தம் என்ற 5 உட்பிரிவுகள் உள்ளன. இருப்பினும் அத்தனை உட் பிரிவுகளிடையேயும் ஒரே சக்தி, ஒரே இறைவன் என்ற தத்துவம் நிலவுகின்றன.
- தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு கொள்கைகளிலும் இந்துக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். வீடுபேறடைவது, இந்துக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் கருத்தாகும்.

## 1.5.8 சோழப்பேரரசு

- சோழப் பேரரசர்கள் சைவர்கள். மதசகிப்பு தன்மை உள்ளவர்கள். எனவே புத்தமடங்கள் கட்டப்பட்டன. வைணவமும், சைவமும் தழைத்திருந்தன. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கை கொண்ட சோழபுர சிவன் கோவில், தஞ்சையில் புனித நந்தி குறிப்பிடத்தக்கது. முதலாம் பராந்தக சோழன் சிதம்பரத்தில் நடராஜர் கோவிலுக்கு தங்ககூரை வேய்ந்தார். சைவ இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன. தஞ்சை கோவில் சிவனும் நந்தியும் இந்துக்கள் இன்றும் வழிபடும் சிவதலங்களாக உள்ளன.

## 1.5.9 பாண்டியர்கள்

- ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதர் ஆலயம், மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம், திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம், ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாய் ஆலயம், அம்பிகை சிவாலயம், நாங்குநேரி விஜய நாராயணன் ஆலயம் போன்ற ஆலயங்கள் பாண்டியரால் கட்டப்பட்டு சைவ வைணவ மையங்களாகத் திகழ்ந்து வருகின்றன.
- பெரியாழ்வார் இயற்றிய திருப்பல்லாண்டும், ஆண்டாள் இயற்றிய திருப்பாவையும் புகழ்பெற்ற வைணவ இலக்கியங்களாகும். மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை பாடுவது மரபாக நிகழ்ந்து வருகிறது.

## 1.5.10 டெல்லி சுல்தானியர்கள்

- சுல்தானியர்கள் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவர்கள்.
- "இடைக்கால துறவிகள்" முஸ்லிம் – இந்து ஒற்றுமைக்கு பாடுபட்டவர்கள். மனித இனம் ஒன்றே, இறைவன் ஒருவனே என்பது இவர்கள் கொள்கையாகும்.
- இஸ்லாம் பக்தி இயக்கத்திற்கு சூஃபி இயக்கம் என்பர். அன்பே கடவுள் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருந்தனர். வல்லவாச்சாரியார், இராமானந்தர், சைதன்யர் பக்தி இலக்கியத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். குருநானக் சீக்கிய மதத்தலைவர் ஆவார். இவர் கோட்பாட்டு நூல் ஆதிக்கிரந்தம் ஆகும்.

## 1.5.11 விஜய நகர பேரரசு

- விஜய நகர பேரரசர்கள் இந்து மதத்தை பின்பற்றியவர்கள் ஆவார்கள். திருப்பதி, மதுரை, திருவண்ணாமலை, சிதம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம் கோவில்களை புதுப்பித்து சைவ

தொண்டு புரிந்துள்ளனர். இன்றும் இக்கோவில்கள் சீர்குலையாது, விஜயநகர பேரரசர் தொண்டினை, பறை சாற்றுகின்றன. சமயம் சார்ந்த நாணயங்கள் வெளியிடப்பட்டன. சைவம் மற்றும் வைணவம் தழைத்திருந்தன.

### 1.5.12 நாயக்கர்கள்

- நாயக்கர்கள் சைவ சமயத்தை சார்ந்தவர்கள். இவர்கள் லிங்க வழிபாடு செய்தனர். விஸ்வநாத நாயக்கர், கிருஷ்ணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், வையப்ப நாயக்கர் போன்றவர்கள் செய்த கோவில் திருப்பணி சைவ சமய வளர்ச்சிக்கு இன்றும் புகழ் சேர்க்கின்றன.
- இராணிமங்கம்மாள் முஸ்லிம் தர்க்காவிற்கு பணஉதவி அளித்துள்ளார். இவை நாயக்கர்கள் சமயப்பொறையுடன் திகழ்ந்துள்ளனர் என்பதை தெளிவாக்குகிறது.

### 1.5.13 முகலாயர்களின் காலம்

- முகலாயர்கள் இஸ்லாமிய சமயத்தை சார்ந்தவர்கள்.
- அக்பர் இந்துக்கள் மீது இருந்த ஜிஸியா சமயவரியை நீக்கினார்.
- அக்பர் சமய பொறையாளர் ஆவார். 1582ல் ‘தீன் இலாஹி’ என்ற புதிய சமயத்தை தேசிய சமயமாக்கினார்.
- தீன் இலாஹி மதம் சார்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது அல்லாஹி அக்பர் என கூற வேண்டும். இறைவன் ஒருவனே. விரும்பினால் சூரியன், நெருப்பு தெய்வங்களை வழிபடலாம் என்றார். பல்வேறு மதத்தின் ஏற்க வேண்டிய நல்ல கொள்கைகளின் கூட்டு கலவையே தீன் இலாஹி ஆகும்.
- ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் சன்னி வகுப்பை சார்ந்தவர்கள். 1679ல் மீண்டும் ஜிசியா வரி இந்துக்கள் மீது விதிக்கப்பட்டது.

### 1.5.14 மராட்டியர்கள்

- மராட்டியர்கள் இந்து சமயத்தை சார்ந்தவர்கள். சிவாஜி சமயபொறை உணர்வு மிக்கவர். சிவாஜி இளமையிலேயே இதிகாசத்தின் மீது பற்று உள்ளவர். சமயபற்று மிக்க மராட்டியர்களால் “சமய மக்கள் மன்றம்” உருவாக்கப்பட்டது. ஞானதேவர், ஏக்ராம், துக்காராம் போன்ற இந்து சமய பெரியோர்களால் கவரப்பட்டவர் சிவாஜி. சுவாமி இராமதாசர் சிவாஜியின் ஞான ஆன்மிக குரு ஆவார். மராட்டிய எழுச்சிக்கு, சமயம் ஒரு காரணமாக இருந்தது. கணேசர் மற்றும் வித்யநாத சாமி கோவில்கள் தஞ்சாவூரில் மராட்டியர்களால் கட்டப்பட்டன.

### 1.5.15 கிறித்துவ சமயம்

- உலகில் பெரும்பாண்மை மக்களால் பின்பற்றப்பட்டு வரும் ஒரு மதம். இந்தியாவில் மிகப்பெரிய சமயங்களில் ஒன்று. இம்மதத்தை தோற்றுவித்தவர் இயேசுநாதர். புனிததோமா பாதிரியார் இங்கு வந்து கிறித்துவ சமயத்தை பரப்பினார்.

- இந்தியாவில் கிறித்துவத்தை உபதேசித்தவர்கள் போர்த்துகீசியர் ஆவார். 16ம் நூற்றாண்டில் தமிழகத்தின் பல பகுதிகளில் பரவியது.
- கிறித்துவ சமயத்தை கிறித்துவ பாதிரியார்கள் பரப்பினர்.
- கல்வி வளர்ச்சிப் பணி, அறநிலையப் பணி, மருத்துவப் பணி, அனாதை இல்லம், வறுமை நீக்கம், வேலை வாய்ப்பு போன்ற சமூக பணிகளை செய்தனர்.

### 1.5.16 இஸ்லாமிய சமயம்

- இந்தியாவில் அதிகமாக பரவியுள்ள சமயங்களில் இஸ்லாமும் ஒன்று. உருது, இந்துஸ்தானி, பாரசீகம் மொழி பேசுகின்றனர். தமிழகத்தில் லப்பைகள் தமிழையே தாய்மொழியாக கொண்டுள்ளனர்.
- இஸ்லாம் மதத்தில் ஷியா, சன்னி உட்பிரிவுகள் முக்கியமானது. ஒரே இறைவன் அல்லா ஆகும். தினமும் ஐந்து முறை தொழுகின்றனர். உருவ வழிபாட்டை வெறுக்கின்றனர்.
- இம்மதத்தை தோற்றுவித்தவர் முகமது நபிகள், ஆவார். இஸ்லாம் என்பது இறைவன் திருவடியைச் சரண் அடைதல் என்பது பொருளாகும். இம்மதத்தின் புனித நூல் திருக்குரான் ஆகும்.

### 1.5.17 சீக்கிய சமயம்

- குருநானக் சீக்கிய சமயத்தை தோற்றுவித்தார். ஆதி கிரந்தம் சீக்கிரியன் வேத நூலாகும். இறைவன் ஒருவனே என்று கூறினார். உருவவழிபாட்டை கண்டித்தார். சீக்கிய சமயத்தின் கடைசி குரு குரு கோவிந்த் சிங் ஆவார்.
- இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் அனைத்து மதத்தவர்களுக்கும் மதிப்பு தந்து சமய பொறையுடமை நாடாக திகழ்ந்து வருகிறது. இந்திய அரசு அனைத்து மதங்களையும் சமமாகவே கருதும் சமயசார்பற்ற நாடாகும்.

## 1.6 மனித வாழ்க்கையின் கலாச்சார பண்பாட்டு வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

இந்தியாவின் உயர்ந்த பண்பாட்டு மரபுகள் மனித வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களை காண்பாம்.

### 1.6.1 சிந்துசமவெளி நாகரிகம் (அ) பண்டைக்காலம்

- சிந்துசமவெளி நாகரிகம் நகரநாகரிகம்: பெரியகுளம் அமைப்பு, குளியல் அறைகள், நீர் வெளியேற்ற வசதி, திட்டமிட்ட நகர் அமைப்பு, தெருக்கள் மையத்தின் வழியே கழிவு நீர் வெளியேற்றம், சுகாதார அமைப்பு, தானியகிடங்கு, உலோக வேலைப்பாடு யாவும் சிந்து சமவெளி நாகரிகத்தின் வெளிப்படாகும்.

### 1.6.2 வேதக்காலம் – இதிகாசக்காலம்

- வேத – இதிகாச காலங்களில் கிராமிய நாகரிகம் அடிப்படையாக திகழ்ந்தன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உன்னத வாழ்க்கை வாழ்ந்தனர்.
- ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள், பிராமணங்கள் உபநிடதங்கள், ஸ்மிருதிகள், சூத்திரங்கள், ஆரண்யங்கள், உபவேதங்கள், வேதாந்தங்கள், இதிகாசங்கள் முதலிய இலக்கியங்கள் இந்திய கலாச்சாரம், பண்பாட்டு வளர்ச்சியினையும் தத்துவ வளர்ச்சி, வானவியல், மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சியினையும் எடுத்துரைக்கின்றன. தத்துவ நெறிகள், தர்ம நெறிகள், கர்ம வினைகள், மாயையிலிருந்து மீட்சி பெறுதல் போன்றவை இந்திய பண்பாட்டின் முக்கியக் கூறுகளாகும்.

### 1.6.3 மௌரியபேரரசு

- மௌரிய பேரரசில் மூத்தவருக்கு மதிப்பளித்தனர். உயிர்களிடம் அன்பு, உண்மை பேசுதல் போன்ற உயர்ந்த நன்னெறி வாழ்க்கை மேற்கொண்டனர்.
- பாடலிபுத்திரம் நகராட்சி பண்பாட்டிற்கு, பறை சாற்றுகிறது. நகராட்சி அமைப்பு **6** குழுக்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு குழுவிலும் **5** அங்கத்தினர் இருந்தனர். இவர்களுக்கு வாரியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாகம் செயல்பட்டது.
- அசோகர் புத்த மதம் பரப்புவதற்கு தர்ம விஜயம் மேற்கொண்டார்.

### 1.6.4 குப்தபேரரசு

- இந்திய வியாபாரிகள், பிட்சுகள், இளவரசர்கள் மூலம் இந்தியக் கலாச்சாரம் சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு பரப்பட்டது.
- குப்த அரசர்கள் இந்துமத கலாச்சாரத்தின் காவலராக திகழ்ந்தனர்.
- குப்தர்கால பண்பாட்டு வளர்ச்சி மையம் குமார குப்தரால் நிறுவப்பட்ட நாளந்தா பல்கலைக்கழகமாகும்.
- இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில் **9** புலவர்களில் காளிதாசர் என்பவர் தலைமை புலவராவார்.
- குப்தர் காலத்தில் பிற சமயத்தையும் போற்றும் மனப்பான்மை, இந்து பண்பாடு அயல்நாடுகளுக்கு பரப்பியதால் நமது கலாச்சாரம் அண்டை நாடுகளில் போற்றத்தக்க தாயிருந்தது.

### 1.6.5 சங்ககாலம்

- பண்டைத் தமிழர்கள் நாகரிகமிக்கவர்கள். விருந்தோம்பல், சுற்றத்தாருடன் கூடிவாழ்தல், பகிர்ந்து உண்பது, ஈகை, நட்புணர்வு வானவியல் ஈடுபாடு போன்றவற்றில் வல்லவர்கள். ஐந்து வகை நிலங்களில் வாழ்ந்தவர்கள். கடல் வாணிபத்தில் சிறப்பு பெற்றிருந்தனர்.
- ரோமுடன் வாணிக தொடர்பு மற்றும் பண்பாட்டு தொடர்பும் கொண்டிருந்தனர். விற்பனை பொருட்கள் மலைபோல் குவிக்கப்பட்டிருந்தாலும் பிறர் பொருளை எவரும் களவாட நினைக்கமாட்டார்கள் என பட்டினபாலையில் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகிறார்.


- பெண்கள் ஆண்களுக்கு சமமாக கருதப்பட்டனர். பெண்டிர் கல்வி, கவிதை, இசை, நடனம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.
- சங்ககால பண்பாட்டினை குறிப்பிடும் நூல்களாக, தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் திகழ்கின்றன.

### 1.6.6 பல்லவர்கள்

- பல்லவர்கள் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும். காஞ்சிபுரம் பண்பாட்டு மையமாக திகழ்ந்திருந்தது. இலக்கியம், கலை, சிற்பம், நுண்கலைகள் போற்றி வளர்க்கப்பட்டன.
- பல்லவர்கள் காலத்தில் வடமொழி மற்றும் தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன. காவியதரிசனம், பாரதவெண்பா, திவ்யபிரபந்தம், நந்திக்கலம்பகம் போன்றவை குறிப்பிடத்தகுந்த நூல்களாகும்.
- கட்டிடக்கலையில் தேர்ந்த இவர்கள் பாறை கட்டிட கலையை தமிழகத்திற்கு அறிமுகம் செய்தனர். இன்றும் இவர்கள் கட்டிட வளர்ச்சியை மாமல்லபுரத்தில் காண்கிறோம்.
- குடிமியான்மலை இசைக்கல்வெட்டு, சித்தன்ன வாசல் ஓவியம், பல்லவர் பண்பாட்டுக்கு சான்று பகர்வனவாக இன்றும் காணப்படுகின்றன.

### 1.6.7 சோழப் பேரரசு

- சோழப் பேரரசில் குடவோலை முறைப்படி கிராம சபையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வாரிய பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். குடவோலை முறை இன்றைய உள்ளாட்சி தேர்தல் முறைக்கு முன்னோடியாக திகழ்ந்தது எனலாம்.
- கிராம சபை கிராம மக்களின் முழுப் பொறுப்பில் இருக்கிறது. மையஅரசு தலையீடு இல்லை.
- சோழர் கால மக்களில் பல்வேறு சாதிகளிடையே ஒற்றுமை இருந்தது.
- உடன் கட்டை ஏறும் வழக்கம் இல்லை. சமயபொறையுடைமை இருந்தது.
- கோவில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் யாவும் மக்கள் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாக உள்ளன.
- தென்னிந்திய கலாச்சாரம் வெளிநாடுகளிலும் பரவியதற்கு சான்றாக கம்போடியாவில் உள்ள அங்கோவார்ட் கோவிலைக் கூறலாம்.



**அங்கோவார்ட் கோவில் – கம்போடியா**

### 1.6.8 பிற்கால பாண்டியர்கள்

- உடன்கட்டை ஏறுதல், தேவதாசி பிரிவு, அடிமைமுறை ஆகியவைகள் இருந்தன.
- பசுவை புனிதமாக கருதினர். புலால் உண்பதை வெறுத்தனர். அரசர் முதல் பெருங்குடி வரை தரை மீது அமரும் வழக்கம் இருந்தது. கொல்லாமை போற்றப்பட்டது. கோவில்கள் பண்பாட்டின் அச்சாணியாக இருந்தன. இன்றும் பசு இந்துக்களின் புனிதமாக கருதப்படுகிறது.

### 1.6.9 டெல்லி சுல்தானியர்கள்

- குடும்பத்தில் கௌரவம் இன்று போலவே முக்கியமானதாக கருதப்பட்டிருந்தது. இளவயது மணம் வழக்கில் இருந்தது.
- உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. பெண்கள் சமமாக நடத்தப்படவில்லை.
- முஸ்லிம்களிடையே பர்தா என்ற முகத்திரை அணியும் வழக்கம் கடைபிடிக்கப்பட்டது. பலதாரமணம் வழக்கில் இருந்தது.
- இந்திய இஸ்லாமிய கட்டிடக்கலை மரபுகள் இணைந்து இந்தோ இஸ்லாம் கட்டிடகலை உருவானது.
- போலோகுதிரை விளையாட்டு, மல்யுத்தம், அம்பு எய்துதல், சதுரங்கம், சீட்டு விளையாடல் போன்றவை பொழுது போக்காகும்.

### 1.6.10 விஜயநகர பேரரசு

- கிருஷ்ணதேவராயர் காலத்தில் ஓவியம், இசை, நாடகம், நாட்டியம் ஆகிய துறைகள் வளர்ச்சி பெற்றிருந்தன. வடமொழியும் தெலுங்கு மொழியும் வளர்ந்தன. அமுக்தமால்யதா (தெலுங்கு), உஷா பரிணயம் (வடமொழி) சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.
- **அஷ்டதிக்கஜங்கள்** என்ற 8 புலவர்கள் இவர் அவையை அலங்கரித்தனர். மக்கள் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டன. இந்துக்களின் பண்பாட்டு காப்பகமாக விஜயநகர பேரரசு திகழ்ந்தது.
- ஹசாரா இராமசாமி கோவில், விட்டலசாமி கோவில், திருப்பதி, விருபாக்ஷாகோவில் சிறந்த பண்பாட்டு கட்டிடங்கள் ஆகும்.

### 1.6.11 நாயக்கர்கள்

- நாயக்கர்கள் கோவில்களுக்கும் அந்தணர்களுக்கும் நன்கொடைகள் வழங்கியதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவர்களின் நினைவுச் சின்னங்கள், கோட்டைகள், கோவில் திருப்பணிகள் யாவும் நாயக்கர்களின் கலாச்சாரத்தை இன்றும் பிரபதிலிக்கின்றன. நன்கொடைகள் வழங்கும் மரபு இன்றும் நடைமுறையிலுள்ளது.
- ஜாதிமுறை கடுமையாக இருந்தது. வலங்கை, இடங்கை பிரிவு என பிரிந்திருந்தனர். கொத்தடிமைமுறை வழக்கில் இருந்தது.

- லிங்க வழிபாடு முறையைப் பின்பற்றி சைவ சமயத்தை ஆதரித்தனர். தெப்பத் திருவிழா, தேர் திருவிழா, சித்திரைத் திருவிழாக்கள் நடத்தினர்; லிங்க வழிபாடு இந்துக்களால் இன்றுவரையும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. விழாக்கள், கோவில் சடங்குகள் யாகமுறையாகவும் பண்டைய முறைதழுவியே தற்போதைய இந்துக்கள் செய்து வருகின்றனர்.
- சைவ மடங்கள், சமய இலக்கிய வளர்ச்சிக்கு தொண்டாற்றின. எனவே காஞ்சி கலம்பகம், சிதம்பர வெண்பா, சங்கீத சுதா போன்ற நூல்கள் உருவாயின.

### 1.6.12 முகலாயர்களின் பண்பாட்டு தாக்கம்

- இந்துக்கள் நேர்மை, ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினர்.
- முகலாயர்கள் ஓவியம் பாரசீக மங்கோலிய ஓவியமாகும். இராஜபுத்திர வகை ஓவியமும், பஹாரி வகை ஓவியமும் இன்றும் ஓவியத்தில் பிரதிபலிக்கிறது.

### 1.6.13 மராட்டியர்கள்

- மராட்டிய நாடு புவியியல் சூழலில் குன்றுகள் நிறைந்த கோட்டை பகுதியாகும். தன்னம்பிக்கை, விடாமுயற்சி உடையவர்கள். இவர்களின் சமயம், மொழி, இலக்கியம் யாவும் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவதாகும்.
- மராட்டியர்கள் சமயபொறை மிக்கவர்கள். அனைவரும் சமம் என்ற உன்னத தத்துவத்தை பின்பற்றியவர்கள். அஷ்டபிரதான் என்ற அமைச்சரவை இருந்தது. போர் செய்வதில் கொரில்லா அல்லது பதுங்கி தாக்கும் முறையை கையாண்டனர்.

### 1.6.14 நவீன காலம்

- ஆங்கில ஆதிக்கத்தில் இந்தியர்கள் அனைவரும் ஒரே தேசத்தில் வாழ்பவர்கள் என்ற எண்ணம் மேலிட்டது.
- மெக்காலே பிரபு ஆங்கிலமொழியை பயிற்றுமொழியாகவும் செய்தார்.
- சதி நீக்கம், பால்ய திருமணதடை, விதவை மணம் ஆதரிப்பு, தொடர் வண்டி அறிமுகம், தபால் தந்தி முறை யாவும் இந்தியாவிற்கு ஆங்கிலேயர் செய்த அறிய பண்பாட்டு செயல்களாகும்.
- இந்துக்களிடம் இருந்த மூட பழக்கம், நம்பிக்கைகளை அகற்ற வில்லியம் பெண்டிங் பிரபு பெண்சிசுக் கொலை தடுப்புச் சட்டம் கொண்டு வந்தார்.
- வறுமை காரணமாக இந்திய ஏழைக் குழந்தைகள் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யும் கொடிய பழக்கம் தடை செய்யப்பட்டது.
- ஆங்கிலேயர் ஆட்சியின்போது சில இந்தியர்கள் ஆங்கில நடை, உடை, பாவனை, பழக்கவழக்கம் போன்றவற்றை மாற்றிக்கொண்டு மேலைநாட்டு பழக்கவழக்கங்களை பின்பற்றத் தொடங்கினார்கள்.

- இந்தியா சுதந்திரம் பெற்றதும் உலக மக்கள் ஒற்றுமைக்கும் உலக அமைதிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் தன் முழு ஆதரவினை வழங்குகிறது. இந்தியாவின் கூட்டுக் கலாச்சாரம் மிகப்பெரிய ஒற்றுமைச் சக்தியை உருவாக்குகிறது.
- இந்தியாவில் பரவியுள்ள மிகுதியான புனித தலங்களை தரிசிக்க அனைவரும் வருகை புரிவதால் பல மாநில மக்கள் பண்பாட்டு தொடர்பிற்கு வித்திடுகிறது.

## 1.7 மனித வாழ்க்கையின் கலை – கட்டிடக்கலை வளர்ச்சியில் வரலாற்றின் தாக்கம்

இந்தியா பெருமை பொருந்திய இசை, நடனம், ஓவியம், சிற்பம் மற்றும் கட்டிடக் கலைகளின் கவின்மிகு பொக்கிஷமாகும். இந்தியக் கலைகளின் வளர்ச்சியோடு உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து இந்தியாவிற்கு வந்து சென்ற பல இன மக்களும் தங்களது கலைப்பாங்கினை விட்டுச் சென்றுள்ளனர். இந்தியக் கலையின் வரலாறு உணர்ச்சிமிக்க இந்தியப் பாரம்பரியம், பண்பாட்டினைப் பின்னணியாகக் கொண்டது.

### 1.7.1 கற்காலம்

கற்காலத்தில் குகைகளில் வாழ்ந்த மக்கள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் மற்றும் அன்றாடப் பழக்க வழக்கங்களை பொழுது போக்காக குகைச் சுவர்களில் ஓவியங்களாக வரைந்தனர். அவையே அவர்கள் காலத்திற்கான வரலாற்றுச் சான்றுகளாகும்.

செயல்: படங்கள் சேகரித்தல், சிறு நாடகங்கள் இயற்றி நடித்தல்.

### 1.7.2 ஹரப்பா கலை

ஹரப்பா, மொகஞ்சதாரோ காலத்தில் வாழ்ந்தவர்கள் சிறந்த கலை மற்றும் கட்டிடக் கலை வல்லுநர்கள். வீடுகள், நகரக் கட்டிடங்கள், தானியக் களஞ்சியம், பொது நீச்சல் குளம், நடனமாடும் மாது, சக்கரம், களிமண் முத்திரைகள் முதலானவை சில எடுத்துக் காட்டுகளாகும். திட்டமிட்டு கட்டப்பட்ட நகரங்களில் மக்கள் வாழ்ந்தனர்.

### 1.7.3 புத்த, சமண சமயக் காலங்கள்


ஸ்தூபிகள், தூண்கள், மரம் மற்றும் களிமண் வேலிகள், சித்திர வேலைப் பாடுகள், அரைக்கோள் வடிவ சைத்தன்யங்கள், விகாரங்கள், புத்தர், மகாவீரர், போதி சத்வர்களின் சிலைகள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகியன உண்மையாக நேரில் காண்பன போன்று அமைக்கப்பட்டன.

### 1.7.4 மௌரியர் காலம்


சந்திரகுப்தரின் அரண்மனை, மரநுணுக்க வேலைப்பாடுகள், சாரநாத் கற்றூண், சாஞ்சியின் புகழ்பெற்ற ஸ்தூபி, அதன் வாயில்கள், அவற்றில் சிற்ப வேலைப்பாடுகளை புத்தரின் ஜாதகக் கதைகள் பூ, மரம், விலங்குகள், ஆடவர், பெண்டிர் உருவங்கள், இந்திய – கிரேக்கக்

கலையை உள்ளடக்கிய காந்தாரக் கலையில் புத்தரின் அழகிய, அமைதியான உருவம், பமராணி, அஸ்த நகர், சதரா, தேரி, ஹட்டா, தட்சசீலத்தில் காணப்படும் சிற்பங்கள் இந்தியக் கலைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

இந்தியக் கலைப்பிரிவுகளான மதுரா, அமராவதி கலைகள் பின்னணியில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மௌரியர் கால நாணயங்கள் அவர்களது கலை மற்றும் அன்றாட வாழ்க்கை நிலைகளையும் எடுத்துரைக்கின்றன.



அசோகர் கல்தூண்



சாஞ்சி ஸ்தூபி

## 1.7.5 சுங்கர்களின் காலம்

புத்த ஸ்தூபிகளில், கற்களிலான வாயில் பாதைகளை அமைத்து, கட்டிடக்கலையில் ஒரு திருப்புமுனையை சுங்கர்கள் தோற்றுவித்தனர். பூனாவிற்கு அருகில் உள்ள பாஜாவின் விகாரம், சைத்தியம், அஜாந்தாவின் (9ம் எண்) சைத்தியம், அமராவதி ஸ்தூபி, பர்ஹித்தில் உள்ள விருக்ஷதேவதை கருடன்தூண், புத்தகயாவில் உள்ள வேலிச்சுவர், சங்கிராமா, நாசிக் சைத்தியங்கள் சுங்கர்களின் கலைச்சிறப்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

## 1.7.6 குப்தர் காலம்

குப்தர்களின் கட்டிடக்கலையைக் கோயிற்கலை, குகைக்கலை என இருவகையாகப் பிரிக்கலாம்.

**1. கோயிற்கலை:** திகாவாவிலுள்ள விஷ்ணு கோயில் நஞ்சீன குதாரவில் உள்ள பார்வதி கோயில் காஞ்சி, புத்தகயாவில் உள்ள புத்தவிஹாரங்கள் தியோகாரில் உள்ள தசாவதாரக் கோயில்


போன்றவை கோயிற்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சிந்துவில் உள்ள மீர்புர்காஸ்தூபி, சாரநாத்திலுள்ள தர்மஸ்தூபி போன்றவை முக்கிய ஸ்தூபிகளாகும்.

**2. குகைக்கலை:** அஜந்தா, எல்லோரா, அவுரங்காபாத் குகைகளில் உள்ள அழகுமிக்க தூண்கள், மொகல்ராஜ் புரம், உந்தவல்லி, அக்கண்ண மாடண்ணா – குகைக்கோயில், பாக்குசை ஓவியங்கள் – அஜாந்தாவில் 16வது குகையில் உள்ள இறக்கும் இளவரசி, 17 வது குகையில் காணப்படும் புத்தர் பிறப்பு வாழ்க்கை முதலியன குப்தர் காலக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

அழகிய வேலைப்பாடுகள் உள்ள குப்தர் நாணயங்கள், இசை மற்றும் சமய ஆர்வத்தை விளக்கக் கூடிய நாணயங்கள் அவர்களது கலைக்கு உன்னத எடுத்துக்காட்டாகும்.



அஜந்தா குகை ஓவியங்கள்



கார்லே குகை

## 1.7.7 குஷானர் காலம்

குஷானர்கள் காலத்தில் கிரேக்க பாணியும் இந்திய பாணியும் இணைந்த காந்தாரக்கலை வடமேற்கு இந்தியாவில் வளர்ந்தது.

சாளுக்கியர்களின் கட்டடக்கலையினை ‘‘இந்தியக் கோவில் கட்டிடக் கலையின் தொட்டில்’’ என அழைக்கின்றனர். ஐகோலேயில் உள்ள லட்கான், துர்கை, குச்சி மல்லி குடிகோவில்கள் ஆகியவற்றில் திராவிடக் கட்டிடக் கலையினையும், கல்தகடுகளால் சாய்வாக அமைக்கப்பட்ட கூரை அமைப்புகளையும் காணலாம். இரண்டாவது விக்கரமாதித்தனின் மனைவி லோகமகா தேவியினால் கட்டப்பட்ட விருப்பாக்ஷர் ஆலயத்தின் முக்கியப்பகுதி 150 அடி நீளம் உள்ளது. ஆலயத்தின் புறப்பகுதியில் ஆள் உயரச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 50 சதுர அடி உள்ள தூண்களால் ஆன மண்டபம் உள்ளது. அம்மண்டபத்தின் மேற்கூரை ஒரேகல்லி உருவான 16 தூண்களால் தாங்கப்பட்டுள்ளது.

## 1.7.8 இராட்டிரகூடர்களின் கலைப்பணி

எல்லோராவில் அமைக்கப்பட்டுள்ள கைலாசநாதர் கோவில் ஒரே பாறையைக் குடைந்து அற்புதமாக உருவாக்கப்பட்ட அரிய படைப்பாகும். இவற்றில் உள்ள தசாவதார வடிவங்கள், கைலாசத்தை அசைக்கும் இராவணன், நடனமாடும் சிவன், திருமால், திருமால் இசை கேட்கும் முதலியவை காண்பவரை ஈர்க்கவல்லது ஆகும். எலிபெண்டா குகை கோயில்களில் உள்ள நடராசர், சதாசிவர் வடிவங்கள் கலைநுணுக்கம் மிக்கவையாகும்.

## 1.7.9 பல்லவர்

பல்லவர் காலத்தில் மாமல்லபுரம், வல்லம், பல்லாவரம், நாமக்கல், தளவானூர், திருச்சி ஆகியவற்றில் மகேந்திரவர்மன் கால சிற்பக் கலைகள் மற்றும் குடைவரைக் கோவில்கள் நேர்த்தியாக அமைக்கப்பட்டது. மலையில் காணும் சிங்கத்துடன் போரிடும் துர்கை, பாம்பின் மேல் உறங்கும் விஷ்ணு, கிருஷ்ணன் தாங்கும் கோவர்த்தன மலை, தயிர்க்கூடை சுமக்கும் பெண் சிறந்த உதாரணங்கள் ஆகும். பஞ்ச பாண்டவர் ரதங்கள் சிற்பக் கலைக்கு சிறந்த உதாரணம் ஆகும். சித்தண்ணவாசல் குகைக்கோயில்கள் ஓவியம், சிற்பம், இசை முதலிய கலைகளை தெளிவாக உணர்த்தும் கலைக்கூடமாகத் திகழ்கிறது.



**கைலாசநாதர் கோயில் – காஞ்சிபுரம்**

**செயல்**

1. *வட்டாரக் கிராமியக் கலைகள் பற்றிய செய்தி தொகுப்பு தயாரிக்க.*
2. *இசை, நடனப் பள்ளிகளுக்கு களப்பயணம் மேற்கொண்டு அறிக்கைத் தயாரிக்க.*

## 1.7.10 இந்திய – இஸ்லாமியக் கலை

குதுப் மசூதிகள் டெல்லிக் கட்டிடக் கலைப் பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. அவற்றுள் புகழ் பெற்றிருப்பது குதுப்மினார் ஆகும். அது தனிநலைக் கோபுரங்களும், அழகிய கல்வெட்டு எழுத்துகளும், தூபிகளைத் தாங்கும் தூண்களும் கொண்டுள்ளது. மேலும் ஜமாத்கானாமசூதி அலாய் தர்வாஸா ஆகியவை முக்கியமானக் கட்டிடங்களாகும்.

ஜான்பூர்: மாபெருஞ்சரிவான சுவர்கள், சதுரத்தூண்கள், மாடத் தொகுதிகள் போன்ற இந்து கலை அமைப்புடன் ஜான்பூரில் கட்டிடங்கள் கட்டப்பட்டது. இப்ராகிமினால் கட்டிமுடிக்கப்பட்ட அடாலா மசூதி, ஜான்பூர் பணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். வங்காளத்தில் உள்ள பாண்டுவாவில் ஆதினா மசூதி, குஜராத்தில் சாம்பானீர் நகரத்து அழகிய கட்டிடங்கள் தென்னிந்தியாவில் தௌலதாபாத்தில் உள்ள சாந்த்மினார், பீடாரில் உள்ள மகமத்கவானின் கல்லூரி, பீஜப்பூரில் அடில் ஷாஜிரிகள் கட்டிடங்கள் ஆகியவை இந்திய – இஸ்லாமியக் கட்டிடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

விஜயநகர பேரரசு, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றில் தனிப்பட்ட பாணியை உருவாக்கியிருந்தது. கிருஷ்ண தேவராயரின் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட ஹஸாரா கோயிலும் பின்னர் கட்டப்பட்ட விட்டலசுவாமி கோயிலும் விஜயநகர கட்டிடக் கலைக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### 1.7.11 முகலாயர் காலம்

பாபர் – சாம்பாவிலுள்ள ஜமாமசூதி, பானிபட்டிலுள்ள காபூல்பாக் மசூதி சிறப்பு பெற்றவையாகும்.


ஷெர்ஷா – சசாராமிலுள்ள கல்லறை, புராணகிலா என்ற பழைய கோட்டை இந்து –முஸ்லிம் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்றது.

அக்பர் – ஆக்ராகோட்டை, ஃபதேபூர்சிக்ரி கோட்டை கட்டிடங்கள் ஹுமாயூன் கல்லறை, ஜமாமசூதி, புலந்தர் வாசா, அலகாபாத்திலுள்ள நாற்பது தூண்கள் உள்ள அரண்மனைகள் ஆகியன அக்பர் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆகும்.

ஜஹாங்கீர் – அக்பர் கல்லறை– நூர்ஜஹானால் கட்டப்பட்ட இதிமதுத் தௌலாவின் கல்லறை (ஆக்ரா).

ஷாஜஹான் – கட்டிடக்கலை உச்சநிலையை அடைந்தது. ஆடம்பர வண்ணப்பகட்டிலும், வளமான திறமையான அலங்கரிப்பிலும் உயர்ந்து நிற்கின்றன. ஆக்ரா, டெல்லி, லாகூர், காபூல், காஷ்மீர், காந்தாரம், ஆஜ்மீர், அஹமதாபாத் போன்ற பல இடங்களில் அரண்மனைகள் கட்டப்பட்டன.

திவானிகாஸ், திவானிஆம் போன்றவை அலங்கார ஆபரண அமைப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். “மண்ணுலகில் சுவர்க்கத்தைக் காணமுடியுமானால் அது இதுதான், அது இதுதான், அது இதுதான்” என்ற திவானிகாஸ்ஸில் உள்ள கல்வெட்டு இவற்றின் கலைநயத்தை எடுத்துரைக்கின்றது. மேலும் ஆக்ராவிலுள்ள மோதி மசூதி ஜாமிமசூதி ஓர் உயர்ந்த கலையின் வடிவமாகும். மும்தாஜ் மஹாலின் கல்லறைமீது எழுப்பப்பெற்ற தாஜ்மஹால் உலக அற்புதமாக திகழ்கிறது. மற்றொரு புகழ்பெற்ற கலைப்பொருள் மயில் சிம்மாசனமாகும்.



**தாஜ்மகால்**

### 1.7.12 இசை

1. ரிக்வேத காலம் – வேதங்கள் இசையில் இசைக்கப்பட்டன. பரதர் – நாட்டிய சாஸ்திரம், கருவிகள், குழல், யாழ், நரம்பு, காற்று தாள வாத்தியங்கள்.
2. குடுமியான் மலை இசைக் கல்வெட்டு.
3. நாயன்மார்கள், ஆழ்வார்கள், பக்திப் பாடல்கள்.
4. தியாகராஜ சுவாமிகள், முத்துசாமி, தீட்சிதர், சியாமா சாஸ்திரிகளின் இசை அமைப்புகள் அமர காவியங்களாகும்.
5. கர்நாடக, இந்துஸ்தானி இசை ஆகியன சிறந்த எடுத்துக்காட்டுகள்.

### நடனம்

பரதநாட்டியம், கதகளி, கதக், ஒரியா, பாஸ்ரா நடனங்கள் மற்றும் கிராமிய நடனக் கலைகளும் இந்திய நாட்டியக் கலைக்கு சான்றுகளாகும்.

**செயல்**

*மனித இன முன்னேற்றத்தில் வரலாற்றின் பங்கு பற்றிக் கலந்துரையாடுக.*

## 1.8 முடிவுரை

வரலாறும், புவியியலும் நாகரிகத்தின் இரண்டு கண்கள் ஆகும். மனிதன் தோன்றியது முதல் இன்றுவரை பல்வேறு வளர்ச்சிகள் பெற்றுள்ளான். வளர்ச்சி என்பது கடந்த கால மனித வாழ்வில் கடைபிடித்த பழக்கவழக்கங்கள், அரசியல், பண்பாடு, கலை, கல்வி அனைத்தும் இன்றும் நம் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே இந்த தாக்கங்கள் நம் எதிர்கால வாழ்க்கைக்கும் ஒரு படிகல்லாக அமையும் என்பது உறுதியாகும்.

## 1.9 பார்வை நூல்கள்


1. Aggarwal J.C & Aggarwal S.P - Educational planning in India, Vol. I - concept publishing company - New Delhi, 1992.
2. Basham A.L., The wonder that has India, Rupa and Co, New Delhi - 1997.
3. Naik J.P. & Syed Nurullah, A Student History of Education in India (1800 - 1973), Macmillan co. of Indian Ltd., New Delhi, 1974.
4. Majumdar, R.C., Raychandhuri, H.C.R., Datta. K., An advanced History of India, Macmillan India Ltd., 1985.
5. Mahajan. V.D., “Ancient India” - S.Chand & Co. Ltd. New Delhi (1990).
6. Subramanian. N. Social, Cultural, History of Tamil Nadu (1336 - 1984), Ennes pub. (2007).

## அலகு – II

# இந்திய அரசியலமைப்பு

# (INDIAN CONSTITUTION)

### அறிமுகம்

இந்திய மக்கள் எண்ணில்லாத் தியாகங்களைச் செய்து, அரும்பாடுபட்டு, 1947 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15 ஆம் நாள் சுதந்திரத்தைப் பெற்றனர்.

*"எங்கு பயமில்லாத மனங்கள் உள்ளதோ*
*எங்கு ஒவ்வொரு மனிதனின் தலையும்*
*நிமிர்த்தப்படுகின்றதோ / அங்கு மனிதனின்*
*தேவைகளை நிறைவு செய்யும்*
*வளமான சமுதாயம் அமையும்"*

(கவிஞர். இரவீந்திரநாத் தாகூர்)

இக்கால கட்டத்தில், தேசியத் தலைவர்கள் ஒவ்வொருவர் மனதிலும், இந்தியக் குடிமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய சமதர்மச் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உறுதி மேலோங்கி நின்றது. இச்சூழலில் இந்திய அரசியலமைப்பை உருவாக்குதலும், சுதேச அரசுகளை ஒன்றிணைத்து, இந்திய ஒன்றியத்தைப் படைத்தலும், இன்றியமையாத முதன்மை பணிகளாக இருந்தன. இன்றுவரை நாம் பின்பற்றிவரும் அரசியலமைப்பின் உருவாக்கத்தையும், அதன் முக்கிய அம்சங்களையும் அறிந்து கொள்வது அவசியமாகிறது.

### அலகுக்கூறுகள்

2.1 அரசியலமைப்பு
- 2.1.1 சுதந்திரத்திற்கு முன் அரசியலமைப்பு உருவான முறை
- 2.1.2 அரசியலமைப்பு சூழல் ஆராய பல்வேறு குழுக்கள் அமைத்தல்
- 2.1.3 அரசியலமைப்பு உருவாக்குவதற்கான ஆதாரங்கள்

2.2 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 'முகப்புரை'
- 2.2.1 முகப்பு அறிவிக்கும் தத்துவ நோக்கங்கள்
- 2.2.2 சிறப்பியல்புகள், குறிக்கோள்கள், நோக்கங்கள்

2.3 இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

- 2.3.1 ஒப்புயர்வற்ற அரசியலமைப்பு
- 2.3.2 நெகிழா மற்றும் நெகிழும் அமைப்பு
- 2.3.3 வலிமையான மைய அரசினைக் கொண்ட மாநிலங்களின் ஒன்றியம்
- 2.3.4 பாராளுமன்றம்
- 2.3.5 வயதுற்றோர் வாக்குரிமை மற்றும் ஒற்றைக்குடியுரிமை
- 2.3.6 முழு இறைமை பெற்ற மக்களாட்சி / மதச்சார்பற்ற சமதர்ம குடியரசு

2.4 அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்

- 2.4.1 மக்கள் நலனை அடைய அரசு பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்
- 2.4.2 காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் அறநெறிக் கோட்பாடுகள்
- 2.4.3 பன்னாட்டு அமைதி ஏற்பட வழிமுறைகள்
- 2.4.4 அறநெறிக் கோட்பாட்டின் தாக்கம்

2.5 அடிப்படை உரிமைகளும் கடமைகளும்

- 2.5.1 அடிப்படை உரிமைகள்
  - 2.5.1.1 சமத்துவ உரிமை
  - 2.5.1.2 சுதந்திர உரிமை
  - 2.5.1.3 சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை
  - 2.5.1.4 மதச்சுதந்திர உரிமை
  - 2.5.1.5 பண்பாடு மற்றும்
  - 2.5.1.6 சொத்துரிமை
- 2.5.2 அடிப்படை கடமைகள்

2.6 குடியுரிமை

- 2.6.1 குடிமகனின் / குடிமகளின் உரிமைகளும் கடமைகளும்
- 2.6.2 அரசியலமைப்புச் சட்டத்தின் கூறுகள்
- 2.6.3 அலகுக்கூறுகள்
- 2.6.4 மக்களாட்சியில் குடிமக்களின் பங்கு
- 2.6.5 மக்களாட்சியின் வெற்றிக்கு முக்கியத்தேவை
- 2.6.6 குடியுரிமை, வயதுற்றோர் வாக்குரிமை

2.7 இந்திய அரசியமைப்புச் சட்டம் – மகளிர் சிறார் மற்றும் இயலாதோர் நலன் மற்றும் கல்வி தொடர்புடைய சரத்துக்கள்

- 2.7.1 மகளிர் நலன் தொடர்புடைய சரத்துக்கள்
- 2.7.2 சிறார்கள் நலன் தொடர்புடைய சரத்துக்கள்
- 2.7.3 கல்வி தொடர்புடைய சரத்துக்கள்
- 2.7.4 இயலாதோர் நலன் தொடர்புடைய சரத்துக்கள்

2.8 இந்தியாவில் கட்சிமுறை

2.8.1 அரசியல் கட்சியின் பெருமை

2.8.2 அரசியல் கட்சிகளில் பங்கும் பணிகளும்

2.8.3 அரசியல் கட்சிகளின் குறைகள்

2.8.4 கட்சி முறைகளின் வகைகள்

2.9 முடிவுரை

2.10 பார்வை நூல்கள்

**கற்றல் செயல்கள்**

| வ. எண். | அலகுக் கூறுகள் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | அரசியலமைப்புச் சட்டம் முகப்புரை | கலந்துரையாடல் | அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை நகல் | – | நூலகப் புத்தகங்கள் |
| 2. | அரசியலமைப்புச் சட்ட தனித்தன்மை, அடிப்படை உரிமைகள், கடமைகள், பெண்கள், குழந்தைகள் | வினாவிடை | அரசியலமைப்புச் சட்ட நூல் | – | நூலக உதவியுடன் அரசியலமைப்புச் சட்ட தொகுப்பிலிருந்து வினா விடை தயாரிக்க. |
| 3. | இயலாக் குழந்தைகளுக்கு அரசு சிறப்புத் திட்டங்கள் | சொற்பொழிவு | சொற்பொழிவு நிகழத்த தகுந்த தகவல்கள் / அரசுத் திட்டங்கள் | – | நூலகப் புத்தகங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் அளிக்கும் அறிக்கைகள் |

## 2.1 அரசியலமைப்பு

அரசியலமைப்பு என்பது அரசின் அங்கமாகிய சட்டங்களை இயற்றும் சட்டத்துறை, செயல்படுத்தும் செயல்துறை, சட்டங்களை நிலைநாட்டும் நீதித்துறை ஆகியவற்றின் அமைப்பு, குடிமக்களின் உரிமைகள், கடமைகள்; குடிமக்கள், அரசு – அரசின் அங்கங்கள் ஆகியவற்றிற்கு இடையே நிலவும் தொடர்புகள்; அவற்றை ஒழுங்குபடுத்தும் கொள்கைகள் ஆகியவற்றின் தொகுப்பே ஆகும். அரசியலமைப்புச் சட்டங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் இன்றியமையாதது ஆகும். இவை அனைத்துச் சட்டங்களையும்விட மேலாண்மை பொருந்திய முதன்மைச் சட்டங்களாகும்.

### 2.1.1 சுதந்திரத்திற்குமுன் அரசியலமைப்பு உருவான முறை

பூரணசுயராச்சியம், மக்களாட்சி முறை, வயதுவந்தோர் வாக்குரிமை, அடிப்படை உரிமைகள், கடமைகள் ஆகியவை தேசியக் காங்கிரசு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. சுயராச்சிய கட்சியினரும், தேசியக் காங்கிரசும் 1934 ஆம் ஆண்டு முதல் இந்தியப் பிரதிநிதிகள் அடங்கிய பேரவையையும், இந்திய அரசியலமைப்பு ஒன்றையும் அமைத்து, இந்திய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்று தொடர்ந்து ஆங்கில அரசினை வலியுறுத்தி வந்தனர். கிரிப்ஸ் தூதுக்குழு (1942) (சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், பொதிக் லாரன்ஸ் மற்றும் A.V. அலெக்ஸாண்டர்) காபினட் தூதுக்குழு, இந்திய அரசியலமைப்பின் அவசியத்தை ஏற்றுச் செயல்பட்டன. இவற்றின் விளைவாக, இந்தியப் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்டது. அச்சபை, தனது பணியினை 1946 டிசம்பர் 9 ஆம் நாள் தொடங்கியது. டாக்டர் சச்சிதானந்தா சின்கா தலைமையேற்று நடத்தினார். டிசம்பர் 11ஆம் நாள் டாக்டர் இராசேந்திரபிரசாத், அரசியலமைப்புப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய விடுதலைக்குப் பின் அரசியலமைப்பு நிர்ணயசபை இறையாண்மை கொண்ட அமைப்பாகியது. இச்சபையின் ஒரு முக்கிய உறுப்பினராக ஜவஹர்லால் நேரு செயல்பட்டார்.

### ஜவஹர்லால் நேருவின் “நோக்கத்தீர்மானம்” (OBJECTIVE RESOLUTION)

இந்திய அரசியலமைப்புப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில், 1946 டிசம்பர் 13 ஆம் நாள், நோக்கத் தீர்மானத்தை, ஜவஹர்லால் நேரு முன் மொழிந்தார். இத்தீர்மானம் சில மாறுதல்களுடன் அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையாக அமைக்கப்பட்டது. 1949 அக்டோபர் 17 ஆம் நாள் சிறப்பு வாக்கெடுப்பின் வழியாக அரசியலமைப்புச் சட்டத்தின் அங்கமாகியது.

### 2.1.2 அரசியலமைப்புச் சூழல் ஆராய பல்வேறு குழுக்கள் அமைத்தல்

அரசின் அமைப்பு, ஒன்றிய அரசு, மாநில அரசு இவற்றின் இடையே நிலவக்கூடிய உறவு, அதிகாரப் பங்கீடு, அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர் நலம், பழங்குடியினர் நலம், நீதிமன்றம் மற்றும் அரசின் பல்வேறு பரிமாணங்களை ஆய்வதற்குப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்திய அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களே இப்பல்வேறு குழுக்களிலும் இடம் பெற்றிருந்தனர்.

### சுதந்திரத்திற்குப்பின் வரைவுக்குழு

1947 ஆகஸ்ட் 27 ஆம் நாள், டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் தலைமையில், அரசியலமைப்பு வரைவுக் குழு அமைக்கப்பட்டது. என். கோபாலசாமி ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கே.எம். முன்ஷி, சையது முகமது சாதுல்லா, என்.மாதவராவ் ஆகியோர் வரைவுக்குழுவின் உறுப்பினர்களாவர்.

### 2.1.3 அரசியலமைப்பு உருவாக்குவதற்கான ஆதாரங்கள்

இந்திய தேசியக் காங்கிரசு மாநாட்டின் தீர்மானங்கள், கொள்கைகள், 1935 இந்தியச் சட்டம், உலக நாடுகளின் அரசியலமைப்பின் ஏற்புடைய சிறப்புப் பண்புகள், குழுக்களின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், இந்திய அரசியலமைப்பு அமைக்கப்பட்டது. அரசியலமைப்பு உருவாக்குவதற்கான ஆதாரங்களில் சில கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**இந்திய அரசியலமைப்பின் ஆதாரங்கள்**

| | | |
|---|---|---|
| 1918 | – | பம்பாய் காங்கிரசு மாநாடு – அடிப்படை உரிமைத் தீர்மானம் |
| 1928 | – | மோதிலால் நேரு அறிக்கை – அடிப்படை உரிமைகள் – இவற்றில் பத்து உரிமைகள் இன்றைய அடிப்படை உரிமைகளாக உள்ளன. பாராளுமன்ற முறை – சிறுபான்மையினர் நலம் |
| 1931 | – | கராச்சி மாநாடு – அடிப்படைக் கடமைகள் (42 ஆவது அரசியலமைப்புத் திருத்தம்) |
| 1935 | – | இந்தியச் சட்டம் – இந்திய அரசியலமைப்பில் 60 சதவிகிதப் பகுதி இச்சட்டத்திலிருந்து பெறப்பட்டுள்ளது – ஆளுநர், அவசர காலப் பிரகடனம், மத்திய – மாநில அரசு. |
| பிரிட்டிஷ் | – | பாராளுமன்ற முறை, ஒற்றைக் குடியுரிமை, சட்டம் இயற்றுதல். |
| அமெரிக்க அரசியலமைப்பு | – | குடியரசுத் தலைவர், நீதித்துறை சுதந்திரம், நீதிப்புணராய்வு. அரசியலமைப்பு முகவுரை தொடக்கம், அடிப்படை உரிமைகள். |
| ஜெர்மனி ரீக் | – | குடியரசுத்தலைவரின் அவசர காலப் பிரகடனம் |
| அயர்லாந்து (காந்தியக் கொள்கை) | – | அரசுநெறிக் கோட்பாடுகள் |

இந்திய அரசியலமைப்புப் பேரவை, நீண்ட விளக்க விவாதத்திற்குப் பின்னர், 1949 நவம்பர் 26 ஆம் நாள், அரசியலமைப்பினை ஏற்றுக்கொண்டு, 1950 ஜனவரி 26 ஆம் நாள், இந்திய அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தின. டாக்டர் இராஜேந்திர பிரசாத் முதல் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றார். இந்நாளைப் போற்றும் வண்ணம் ஜனவரி 26ஆம் நாளைக் குடியரசு தினமாகக் கொண்டாடுகின்றோம்.

## 2.2 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் "முகப்புரை" (PREAMBLE)

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள், தலைமுறை தலைமுறையாக வழிகாட்டும் என்று கருதிய தத்துவக் கொள்கைகள், மதிப்புகள், எதிர்காலத் தலைமுறையினரிடம் வளர்க்க வேண்டிய உயர்ந்த பண்புகள், நோக்கங்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்டு முகப்புரையாகப் படைத்துள்ளார்கள்.

### இந்திய மக்களாகிய நாம்

இந்தியாவை ஒரு இறையாண்மை வாய்ந்த சோஷலிச நெறியைச் சார்ந்த, மதச்சார்பற்ற மக்களாட்சி குடியரசாக நிறுவ உளமார உறுதி கூறுகின்றோம். சமூக, பொருளாதார அரசியல் நீதியையும் சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில் பற்றார்வத்தில், வழிபாட்டில் முழு உரிமையையும், வாழ்க்கை நிலையிலும், வாய்ப்புகளிலும், சமத்துவத்தையும், தனிமனித உயர் தகுதிக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், உறுதுணையாக இருக்கவும், சகோதரத்துவத்தை வளர்க்கவும் – உளமார உறுதிபூண்டு அரசியலமைப்புச் சட்டத்தை நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம் என்று முகப்புரை தொடங்குகின்றது.

1976 ஆம் ஆண்டு, 42 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் சோஷலிசம், மதச்சார்பற்ற, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு என்ற கொள்கைச் சொற்கள் சேர்க்கப்பட்டன.

### 2.2.1 முகப்பு அறிவிக்கும் தத்துவ நோக்கங்கள்

இறையாண்மை
சோஷலிசம்
மதச்சார்பின்மை
மக்களாட்சி
குடியரசு
நீதி
சுதந்திரம்
சமத்துவம்
சகோதரத்துவம்
தனிநபர் கண்ணியம்
நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு

### 2.2.2 சிறப்பியல்புகள், குறிக்கோள்கள், நோக்கங்கள்

இந்திய மக்களின் இறையாண்மை, மதச்சார்பற்ற சோஷலிச மக்களாட்சி குடியரசு என்ற தத்துவக் கொள்கைச் சொற்கள், இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கின்றன.

சமூகப் பொருளாதார நீதிகளையும், எண்ணம், கருத்து, வெளிப்பாடு, நம்பிக்கை, வழிபாட்டு உரிமைகள் போன்றவற்றை உள்ளடக்கிய சுதந்திரத்தினையும், வாய்ப்பு – வாழும் நிலைக்கான சமத்துவத்தையும், தனி நபர் கண்ணியம், நாட்டின் ஒற்றுமை, ஒருமைப் பாட்டிற்கான சகோதரத்துவத்தையும் பேணிக்காத்தலையும், அவற்றை அனைத்துக் குடிமக்களும் பெறும்படி செய்தலையும் அரசின் குறிக்கோள்கள் என்பதை முகப்புரை தெளிவாக்குகிறது.

சமூக நலன், பொருளாதார மேம்பாடு, தனிமனித வாழ்க்கை மேம்பாடுகள் இந்திய அரசியலின் நோக்கமாக முகப்புரை எடுத்துரைக்கின்றது. இந்நோக்கங்களை அடைவதற்கான ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகியவற்றைப் பேணிக்காத்தல் குடிமக்களின் கடமைகள் என முகப்புரை சுட்டிக் காட்டுகிறது.

அடிப்படை உரிமைகள், அறநெறிக் கோட்பாடுகள் தனிமனித மதிப்பினைப் பாதுகாத்து மனிதவாழ்க்கைக்கு வழிகோலுகிறது. நாடாளுமன்ற முறை, வயதுற்றோர் வாக்குரிமை தற்சார்ந்த நீதித்துறை, ஒற்றைக்குடிமை, ஒன்றிய – மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப் பங்கீடு ஆகிய அனைத்துப் பண்புகளுக்கும் முகவுரை முன்னுரையைப் படைக்கின்றது. முகவுரை இந்திய அரசியலமைப்பின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. முகவுரையில் குறிப்பிட்டுள்ள தத்துவங்களின் விளக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**இறைமை:** முழு இறைமை பெற்ற மக்களாட்சி குடியரசு இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்பாகும். லிங்கன் வாக்கிற்கு ஏற்ப, மக்களால், மக்களுக்காக, மக்களே உருவாக்கிய குடியரசே இந்தியா ஆகும். பொதுத்தேர்தல் வழியே, வயதுற்றோர் வாக்குரிமையினால், மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். பெரும்பான்மை பெற்ற கட்சிகள் மத்திய – மாநில அரசுகளை அமைக்கின்றன. முழு நிர்வாக அதிகாரம் முழுமையும், பாராளுமன்றத்திற்குப் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் குழுவிடம் உள்ளது. எனவே இப்பாராளுமன்ற முறையில் உயர்ந்த தலையாய “இறைமை” அதிகாரம் மக்களிடமே உள்ளது.

**சோஷிலிசம் – சமதர்மம்:** மக்களிடையே சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் சமவாய்ப்பையும், சம நிலையையும் செயல்படுத்துவது, தகுதி வாய்ப்புகள், வாழ்க்கைத் தரத்தில் ஏற்றத் தாழ்வுகளை முடிவுக்குக் கொண்டு வருவது ஆகியன சோஷிலிச கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட இந்திய அரசின் முக்கியக் கடமையாகும்.

**மதச்சார்பின்மை:** எந்த மதத்தையும் சாராமல், அனைத்து மக்களுக்கும் முழுச் சுதந்திரம் கொடுத்து, எவ்வித இடையூறுகள் நேரா வண்ணம் மக்களின் மதச் சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் சிறப்பு நோக்குடைய கொள்கைகளே மதச்சார்பின்மையாகும்.

**மக்களாட்சி:** “டெமோஸ்” (Demos) என்ற சொல் மக்களையும் “கிராட்ஸ்” (Kratos) என்ற சொல் அரசு அல்லது ஆட்சியினையும் குறிக்கின்றது. மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய

சட்டமன்றங்கள், சட்டங்கள் இயற்றி நிர்வாகத்துறையின் வழியாக நாட்டை நிர்வகிக்கின்றன. 326 ஆவது விதியின் படி 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாக்குரிமையைப் பெறுகின்றனர். இது திரு. இராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருக்கும்போது கொண்டு வரப்பட்டது.

**குடியரசு:** இந்தியா ஒரு பாராளுமன்றக் குடியரசாகும். ஆட்சித்துறைக்குத் தலைவர் 'குடியரசுத் தலைவர்' ஆவார். பாராளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்கள், மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய தேர்வாளர் குழுவின் மூலம் மக்கள் தொகை விகிதாச்சார முறையில், ஒற்றை மாற்று வாக்குப்படி, குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இந்தியக் குடியரசில் அனைத்துக் குடிமக்களும் சட்டத்திற்கு முன் சமமாகக் கருதப்படுகிறார்கள்.

**நீதி – சமூகப் பொருளாதார அரசியல் நீதி:** அடிப்படை உரிமைகள், அரசின் அறநெறிக் கோட்பாடுகள் சமூக நீதியை நிலைநாட்டுகின்றன. (பிரிவு 14 – 18 படி) அனைத்து மக்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதுதான் சமூக நீதியாகும். (பிரிவு 39 படி) வாழ்க்கைக்குத் தேவையான வருவாய் பெறுதல், பொதுநலனுக்கு உதவுமாறு பங்கிடுதல், சமமான வேலைக்குச் சமமான ஊதியம், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் பொருளாதார நீதியை நிலைநாட்டுகின்றன. வயதுற்றோர் அனைருக்கும் வாக்குரிமை, குற்றத்தண்டனைகள் பற்றிய பாதுகாப்பு முறைகள், அரசமைப்புச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு பெறுதல் ஆகியவை அரசியல் நீதியைப் பாதுகாக்கின்றன.

**சுதந்திரம்:** சுதந்திரத்தைத் தேசிய, தனிநபர், அரசியல், பொருளாதாரச் சுதந்திரங்கள் என வகைப்படுத்தலாம். உயிர்வாழுதல், சுதந்திரமாக இருத்தல், பேச்சுரிமை, கருத்து வெளிப்பாடு, நம்பிக்கை, பற்றார்வம், வழிபாட்டு உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் மக்களின் அல்லது தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கின்றன. ஒவ்வொரு உரிமைக்கும் நிகராக ஒரு கடமையும் உண்டு.

**சமத்துவம்:** மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகிய அடிப்படைகளில் வித்தியாசம் பாராட்டுதலைத் தவிர்த்து அனைவரையும் சமமாக நடத்துதல், சமத்துவத்தின் அடிப்படைப் பண்பாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமம், சமமான பாதுகாப்பு, வேலைகளில் சமவாய்ப்பு, பின்தங்கிய சிறுபான்மையின குடிமக்களுக்கு அரசுப் பணிகளில் போதிய பிரதிநிதித்துவம் ஆகியன சமத்துவத்தை மேம்படுத்துகின்றன.

**சகோதரத்துவம்:** இந்தியர் அனைவரும் சகோதரர்கள்; அனைவரும் இந்தியர் என்ற உணர்வைச் சகோதரத்துவம் என்ற கொள்கையை உணர்த்துகிறது. சகோதரத்துவம் என்பது தனிநபர் கண்ணியத்தையும் நாட்டின் ஒற்றுமையையும் உறுதி செய்யும் நோக்கமுடையது. பல்வேறுபட்ட வேற்றுமைகளைக் களைந்து தேசிய ஒருமைப்பாட்டினை நிலைநாட்டக் கூடியது சகோதரத்துவம் ஆகும்.

**கண்ணியம்:** அடிப்படை உரிமைகள், அறநெறிக் கோட்பாடுகள், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் தனிமனிதனின் கண்ணியத்திற்கு வழி கோலுகிறது. தனிமனிதக் கண்ணியம், தனிமனித வளர்ச்சி சமுதாய முழுமைக்கான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

**ஒற்றுமையும் ஒருமைப்பாடும்:** சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கு வழி கோலுகின்றன. ஒத்தக் குடிமக்களின் கருத்துக்களை மதித்தல், மதித்து ஏற்றுக் கொள்ளுதல், பெரும்பான்மையினரின் கருத்தை ஏற்றுக் கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல், கூட்டுறவு நல்லிணக்கம், ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகிய மாண்புகள் மக்களாட்சிக்கு இன்றியமையாத பண்புகளாகும். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் தேசிய வளர்ச்சிக்கு வித்திடும் இன்றியமையாத குடிமைப் பண்புகளாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்திய அரசியலமைப்பின் உயிர்நாடியாக விளங்கும் தத்துவங்கள், அடிப்படை உரிமைகளாகவும், அறநெறிக் கோட்பாடுகளாகவும் மற்றும் உள்ள சட்ட சிறப்பியல்புகளாகவும் இந்திய அரசியலமைப்பு முழுவதுமாகப் பரவிக் காணப்படுகிறது. இவை அனைத்தும் போற்றுதலுக்குரிய தத்துவ நெறிகளாகும்.

## 2.3 இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் (SALIENT FEATURES)

### 2.3.1 ஒப்புயர்வற்ற அரசியலமைப்பு

இந்திய அரசியலமைப்பு பல்வேறு பரிமாணங்களில் தனித்தன்மை வாய்ந்ததாகத் திகழ்கிறது. மிகநீண்ட விளக்கமாக எழுதப்பட்ட அரசியலமைப்பாகும். 22 பகுதிகள் 395 சரத்துக்கள் 8 அட்டவணைகள் உள்ளடக்கிய அமைப்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய அரசியலமைப்பு தற்பொழுது 445 விதிகளுடன் 12 அட்டவணைகளை 24 பகுதிகள் உள்ளடக்கிய 94 அரசியலமைப்புத் திருத்தங்கள் செய்யப்பட்டு திகழ்கின்றன. எவ்வித முரண்பாடுகளும் எழக்கூடாது என்பதற்காக, அரசின் அனைத்துக் கூறுகளும் தெளிவாகவும் விளக்கமாவும் வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றையும் மீறி முரண்பாடுகள் ஏற்பட்டால், அவற்றைத் தீர்க்கும் பொறுப்பு நீதித் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் பாதுகாவலனாக, "நீதித்துறை" செயலாற்றுதல் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய அரசியலமைப்பின் சில அமைப்புகளில் மரபுகளும், வழக்காறுகளும் (Customs & Conventions) இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கவையாகும்.

### 2.3.2 நெகிழா மற்றும் நெகிழும் அமைப்பு

நெகிழா மற்றும் நெகிழும் தன்மை இந்திய அரசியலமைப்பின் சிறப்புத்தன்மையாகும். எடுத்துக்காட்டாக விதி 2, 3, 4 மற்றும் 169 மாநிலங்களின் இணைப்பு, அமைப்பு மற்றும் பெயர் மாற்றம் தொடர்பான விதிகளை, மைய அரசு சட்டசபைகளின் பெரும்பான்மை ஆதரவின் அடிப்படையில் மாற்றலாம். 368 ஆவது சரத்தினைச் சார்ந்த சட்டங்கள் நிறைவேற்ற இருசட்டசபைக்கு 2/3 உறுப்பினர்கள் முன்னிலையில் சிறப்பு பெரும்பான்மை அடிப்படையில்தான்

மாற்ற இயலும். எனவே நெகிழும் மற்றும் நெகிழா தன்மை இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகளாகும். 57 ஆண்டுகளில் 94 அரசியலமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டவை நெகிழும் தன்மையை வெளிப்படுத்துகிறது.

### 2.3.3 வலிமையான மைய அரசினைக் கொண்ட மாநிலங்களின் ஒன்றியம்

இந்திய அரசியலமைப்பின்படி கூட்டாட்சி அரசாங்க முறைக்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. மைய மாநில அரசுகளுக்கு இடையே அதிகாரங்கள் பகுக்கப்பட்டுள்ளன. கூட்டாட்சி முறையின் அடிப்படை அரசியலமைப்பு அம்சங்களாக எழுதப்பட்ட தனி அரசியலமைப்புத் திருத்தமுறை, சுதந்திரமான நீதித்துறை, மாநிலங்களின் ஒப்புதல் இன்றி, மாநில அரசைப் பாதிக்கக்கூடிய மைய – மாநில உறவு தொடர்பான அதிகாரத்தை மாற்ற இயலாமை முதலியன அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ளன.

ஒற்றையாட்சி அரசுக்கான பல்வேறு தன்மைகளும் மேலாண்மை செய்கின்றன. 1. எஞ்சிய அதிகாரங்கள் மைய அரசிடம் உள்ளன. அதிகாரப் பங்கீடும் மைய அரசுக்கே அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன. 2. ஒற்றைக் குடி உரிமை 3. 356 & 357 சரத்துக்களின்படி மாநிலங்களில் அரசியலமைப்பு நிறுவனங்கள், நிறுவனங்கள் செயல்பட முடியாத சூழ்நிலையில் நெருக்கடி நிலையைப் (State of Emergency) பிரகடனப்படுத்தும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளமை ஆகிய தன்மைகள் ஒற்றையாட்சி முறையின் சிறப்பினை வெளிப்படுத்துகின்றன.

வலிமையான மைய அரசினைக் கொண்ட மாநிலங்களின் ஒன்றியமாக இந்திய அரசியலமைப்பு திகழ்கின்றது. மதம், மொழி, இனம், பண்பாடு ஆகிய வேற்றுமைகளில், ஒற்றுமையான இந்திய ஒன்றியத்தைச் செயல்படுத்தும் நோக்கில் வலிமையான மைய அரசினைக் கொண்ட மாநிலங்களின் ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது.

### 2.3.4 பாராளுமன்றமுறை

பாராளுமன்ற மக்களாட்சி இந்திய அரசியலமைப்பின் மற்றொரு சிறப்பாகும். குடியரசுத் தலைவர் தலைமையில் ஆட்சித்துறை இயங்குகிறது. உண்மையான நிர்வாகப் பணிகளைப் பிரதம அமைச்சரும், அவரின் அமைச்சர் குழுவும் மேற்கொள்கின்றனர். மத்திய சட்டமன்றமாகிய பாராளுமன்றத்தில் "லோக்சபை", "இராச்சிய சபை" என்ற இரு அவைகள் உள்ளன. வயதுற்றோர் வாக்குரிமை வழியாக லோக்சபை (கீழ் அவை) உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேலவை நிரந்தர அங்கமாகும்.

அரசியலமைப்பின் சரத்துக்கள் 152 முதல் 237 வரை மாநில நிர்வாகம் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆளுநர் மாநில நிர்வாகத்தின் தலைவர் ஆவார். உண்மையான நிர்வாகப்

பணிகளை, முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவை நிறைவேற்றி வருகின்றன. சில மாநிலங்களில் இரண்டு அவைகள் உள்ளன. தமிழகத்தில் சட்டசபை மட்டுமே உள்ளது. ‘‘உறுதியான நிலைப்பாடும் பொறுப்பும் மிக்க பாராளுமன்ற முறையே மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன’’ என்று டாக்டர். அம்பேத்கர் கூறியுள்ளார்.

### 2.3.5 வயதுற்றோர் வாக்குரிமை மற்றும் ஒற்றைக் குடியுரிமை

இந்தியாவில் ‘‘இந்தியக் குடியுரிமை’’ மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்படுகிறது.

### 2.3.6 முழு இறைமை பெற்ற மக்களாட்சி, மதச்சார்பற்ற சமதர்மக் குடியரசு

இந்திய அரசியலமைப்பின் முகப்புரை முழுஇறைமை பெற்ற மக்களாட்சி, மதச்சார்பற்ற சமதர்மக் குடியரசு ஆகியவற்றினை வலியுறுத்துகிறது. மக்களிடையே சமவாய்ப்பையும், சமநிலையையும் பராமரிப்பது இந்திய அரசின் கடமையாகும் என்பது முகவுரையிலிருந்து தெளிவாகிறது.

## 2.4 அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்

## (Directive Principles of State Policy)

சட்டங்கள் இயற்றும்போதும் அவற்றை நடைமுறைப்படுத்தும்போதும் பின்பற்ற வேண்டிய கருத்துக்கள் கொண்ட தொகுப்பே ‘‘அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்’’ எனலாம். இந்திய அரசியலமைப்பு முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சமய, பொருளாதார, அரசியல், நீதி, சமத்துவம், சுதந்திரம், ஒற்றுமை, ஒருமைப்பாடு, சகோதரத்துவம், தனிமனித கண்ணியம் ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கு வழிகாட்டவல்ல கொள்கைகளாக அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் திகழ்கின்றன. இவை தார்மீகத் தன்மை பெற்றவையாகும். இந்திய அரசியலமைப்பின் நான்காம் பாகத்தில், அரசாங்கம் சட்டம் இயற்றும் பொழுது பின்பற்ற வேண்டிய அறநெறிக் கோட்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சுப் புரட்சியின் மானிட உரிமைப் பிரகடனம், அமெரிக்க விடுதலைப் பிரகடனம், அயர்லாந்து அரசியலமைப்பு, காந்தியக் கொள்கைகளின் தாக்கத்தினால் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் உருவாயின.

இந்திய அரசியலமைப்பில் நான்காவது பகுதியில் ‘‘36 முதல் 51 விதிகள்’’ வரை உள்ள பகுதியில் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் இடம் பெற்றுள்ளன. அடிப்படை உரிமைகளுக்கு நீதிமன்ற உத்தரவாதம் இருக்கும்போது, அறநெறிக் கோட்பாடுகளுக்குத் தார்மீக உத்தரவாதம் மட்டுமே உள்ளன. இன்றைய நிலையில் அறநெறிக் கோட்பாடுகள் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

### 2.4.1 மக்கள் நலனை அடைய அரசு பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்

சரத்து 38 – சமூகப் பொருளாதார அரசியல் நீதி, தேசிய வாழ்வின் அனைத்து அமைப்புகளிலும் இருக்கும்படி சமுதாய அமைப்பை உருவாக்கி மக்கள் நலனைப் பேண வேண்டும். வருவாய் ஏற்றத் தாழ்வை நீக்க வேண்டும்.

சரத்து 39 – அனைவருக்கும் வாழ்க்கைத் தேவைகளைப் பரவலாய் அளித்தல், சமுதாயப் பொருள் வளங்களைப் பொது நலனுக்காக நியாயமான முறையில் பங்கிடுதல்.

மக்களின் பொது நலனுக்குக் கேடு விளையும் வண்ணம் வளங்களும், உற்பத்தியும் ஓரிடத்தில் மட்டும் குவிவதைத் தடுத்துப் பொருளியலைச் சீரமைத்தல்.

ஆண், பெண்களுக்கு, சமவேலைக்குச் சம ஊதியம், உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்காத வேலை வாய்ப்புகளை ஆண், பெண் குழந்தைகளுக்கு அளித்தல்.

குழந்தைகளையும், இளைஞர்களையும் சுரண்டலிலிருந்தும் ஒழுக்கக் கேடுகளிலிருந்தும் பாதுகாத்தல்.

சரத்து 39 A – சமநீதியும் இலவசச் சட்ட உதவியும் அளித்தல்.

சரத்து 41 – அனைவருக்கும் உழைப்பதற்கான உரிமையையும் கல்வி பெறும் உரிமையையும் பாதுகாப்பதுடன், வேலையற்றோர் முதியோர், பிணியாளர், உடல் ஊனமுற்றோர் ஆகியோர்க்கு அரசு உதவி அளித்தல்.

சரத்து 42 – பணிபுரிவதற்குத் தேவையான நியாயமும், மனிதாபிமானமும் அமைந்த பணிச்சூழல்களை அமைத்தல் மற்றும் மகளிருக்கு மகப்பேறு உதவி அளித்தல்.

சரத்து 43 – தொழில்களின் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கேற்புக்கு வழி வகுத்தல்.

சரத்து 44 – குடிமக்களுக்கு ஒரே மாதிரியான குடிமையியல் (சிவில்) சட்டம்.

சரத்து 45 – பத்தாண்டுக் காலத்திற்குள் 14 வயது வரை இலவசக் கட்டாயக் கல்வி அளித்தல்.

சரத்து 48 – வேளாண்மை – கால்நடைவளர்ப்பு – நவீன அறிவியல் முறையில் வளர்த்தல்.

சரத்து 48A – சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துதல் மற்றும் காடுகளையும் வன விலங்குகளையும் காத்தல்.

சரத்து 49. – தேசிய நினைவுச் சின்னங்கள், இடங்கள், பொருட்களைப் பாதுகாத்தல்.

சரத்து 50 – நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறையை தனிப்படுத்துதல்.

### 2.4.2 காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் அறநெறிக் கோட்பாடுகள்

சரத்து 40 – கிராமப் பஞ்சாயத்துக்களை உருவாக்கி அவை தன்னாட்சி அமைப்புகளாகச் செயல்படச் செய்தல்.

சரத்து 43 – வேளாண்மை – தொழிற்சாலை – உழைப்பாளர்கள் வாழ்வதற்கான ஊதியம் – பணிச்சூழல்கள் – சமூக – பண்பாட்டிற்கு முழுமையான வாய்ப்புகள் ஏற்படுத்துதல் – குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் தனிநபர் – கூட்டுறவு அடிப்படையில் குடிசைத் தொழில்களை வளர்த்தல், கல்வி பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் – பழங்குடியினர் – நலிவுற்ற பிரிவினர் – நலன் பேணுதல் – சமூக அநீதி – சுரண்டலிலிருந்து பாதுகாத்தல்.

சரத்து 47 – ஊட்டச்சத்து தரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துதல்; மது மற்றும் ஊறு விளைவிக்கும் மருந்துகளையும் தடை செய்தல்.

சரத்து 48 – கால்நடை வளர்ப்பு மேம்படுத்தல் – அவற்றைக் கொல்லுவதைத் தடுத்தல்.

### 2.4.3 பன்னாட்டு அமைதி ஏற்பட வழிமுறைகள்

பிரிவு 51 – சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு – சமூக உறவு.

சர்வதேசச் சட்டத்தை மதித்தல் – பிரச்சனைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதை ஊக்குவித்தல்.

### 2.4.4 அறநெறிக் கோட்பாட்டின் தாக்கம்

ஜமீன்தாரி முறை ஒழிப்பு
மன்னர் மானியம் ஒழிப்பு
தொழில்களைத் தேசிய மயமாக்கல்
ஐந்தாண்டுத் திட்டங்கள் – பல்வேறு திட்டங்கள் – வேலை வாய்ப்பு
வாழ்க்கைத்தரம் உயர்த்தல்
கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தல்.

## 2.5 அடிப்படை உரிமைகளும் கடமைகளும்

## (Fundamental Rights and Duties)

மக்களுக்குச் சொத்துரிமை, பேச்சுரிமை போன்ற அடிப்படை உரிமைகளை இந்திய அரசியலமைப்பின் III ஆம் பகுதி தெளிவாகக் குறிப்பிடுகின்றது. இவ்வுரிமைகள் பறிக்கப்பட்டால்

நீதிமன்றத்தை அணுகி, அடிப்படை உரிமைகளைப் பெறலாம். உரிமைகளைப் பெறுவது போன்றே கடமையை ஆற்றுவது அவசியமாகும். அரசியலமைப்புச் சட்டங்கள், தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை மதித்தல், நாட்டைப் பாதுகாத்தல் போன்ற பதினோரு அடிப்படைக் கடமைகளை வலியுறுத்துகின்றன. இவை 86 ஆவது திருத்தத்தின் வழியாக விதிக்கப்பட்டுள்ளன.

## 2.5.1 அடிப்படை உரிமைகள்

இந்திய அரசியலமைப்பு, குடிமக்கள் சுதந்திரமாக வாழ்வதற்குத் தேவையான உரிமைகளை "அடிப்படை உரிமைகளாகக்" கொடுத்துள்ளது. தனிமனிதன், தன் சொந்த நலத்துடன், சமுதாய நலத்தையும் பேணிப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட நெறிமுறையே "அடிப்படை உரிமைகளாகும்."

சமத்துவ உரிமை, சுதந்திர உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகள், தனிமனிதனின் கல்வி, அறிவு ஆளுமை வளர்ச்சிக்கு வழிவகுத்து, தனிமனிதனை மேம்படுத்தி அவற்றின் வழியாகச் சமுதாய மற்றும் தேசத்தின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளது. அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றபொழுது, நீதிமன்றங்களில் முறையீடு செய்து நீதிப் பெறலாம்.

"உரிமைகள் இன்றி மனிதனால் நல்ல வாழ்க்கை வாழ இயலாது" என்பது லாஸ்கியின் கருத்தாகும். "மானிட உரிமைப்பிரகடனம்" முதன் முதலில் பிரஞ்சு புரட்சியின்போது வெளியிடப்பட்டது. "உரிமை மசோதா (Bill of Rights) பேரறிக்கை"யை அமெரிக்கர்கள் 1791 இல் திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பில் இணைத்தனர். ஐக்கிய நாட்டுச் சபை மனித உரிமைகளை வலியுறுத்தி வருகின்றன.

இந்தியாவில் அடிப்படை உரிமைகள், அரசியல் மற்றும் சட்டரீதியான சமத்துவத்துடன், சமுதாயச் சமத்துவத்தையும் அடையும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட காரணத்தினால், இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் தனித்தன்மை பெற்றதாக விளங்குகிறது.

இந்திய அரசியலமைப்பில் மூன்றாவது பகுதியில் ஏழு வகையான அடிப்படை உரிமைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை 12 முதல் 35 வரையில் உள்ள சரத்துக்களில் அடங்கியுள்ளன.

### 2.5.1.1 சமத்துவ உரிமை

சரத்து 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம் – சமத்துவத்திற்கு சட்ட ரீதியான பாதுகாப்பு.

சரத்து 5 – சமயம், சாதி, பால், இனம், நிறம் அடிப்படையில் யாரையும் வேறுபடுத்தக் கூடாது.

சரத்து 16 – பொதுப்பணி மற்றும் வேலை வாய்ப்பில் சம வாய்ப்பு.

சரத்து 17 – தீண்டாமை ஒழிப்பு. வன்கொடுமை தடுப்புச் சட்டம் அதிக அதிகாரமும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பும் வழங்குகிறது. நிவாரணம் வழங்குவது குறிப்பிடப்பட்டுள்ளது.

சரத்து 18 – அரசு அனுமதியின்றிப் பெறும் பட்டங்களைத் தடை செய்தல். சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கும் பழங்குடியினர்க்கும் – சிறப்புச் சலுகை – இட ஒதுக்கீடு, வழங்குவது தடை செய்யாமை.

## 2.5.1.2 சுதந்திர உரிமை

சரத்து 19 – பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடும் உரிமை.

1. ஆயுதமின்றிக் கூட்டங்கள் நடத்தும் உரிமை.
2. பேச்சு மற்றும் கருத்துகளை வெளியிடும் உரிமை.
3. நாட்டின் பாதுகாப்பிற்குச் சங்கங்கள், கழகங்கள் ஏற்படுத்தும் உரிமை.
4. இந்தியாவில் எந்தப் பகுதியிலும் வாழும் உரிமை மற்றும் இந்தியாவிலிருந்து எங்கும் செல்லும் உரிமை.
5. சொத்துக்கள் வாங்குதல் – வைத்துக் கொள்ளுதல் – விற்றல்.
6. சட்டம் அனுமதிக்கக்கூடிய விரும்பும் தொழில் செய்யும் உரிமை.
7. நாட்டின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிப்பதாகவோ வெளிநாட்டு உறவு பாதிப்பதாகவோ பொது ஒழுங்கு ஆகியவை அழிக்கக் கூடியதாகவோ இருக்கக் கூடாது.

சரத்து 20 – குற்றங்களுக்குத் தண்டனை அளிப்பது பற்றிய பாதுகாப்பு.

சரத்து 21 – உயிர் மற்றும் தனிநபர் சுதந்திரப் பாதுகாப்பு

## 2.5.1.3 சுரண்டலிலிருந்து பாதுகாக்கும் உரிமை

சரத்து 23 – மனித வியாபாரத்தையும், கட்டாயப்படுத்தும் வேலைவாய்ப்பையும் தடை செய்தல்.

சரத்து 24 – தொழிற்சாலை மற்றும் சுரங்கப் பணிகளில் 14 வயதிற்குக் கீழ் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் பணிசெய்வதைத் தடை செய்தல்.

## 2.5.1.4 மதச்சுதந்திர உரிமை

மதத்தைப் பின்பற்றிப் பரப்புவதற்கான சுதந்திரம் – அரசுக் கல்வி நிறுவனங்களில் மதபோதனை நிகழ்த்தக் கூடாது.

## 2.5.1.5 பண்பாடு மற்றும் கல்வி உரிமை

சரத்து 29 – சிறுபான்மையினர் மொழிப் பண்பாட்டைப் பாதுகாத்தல், சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் உரிமை.

சரத்து 30 – சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை விரிவு செய்தல் மற்றும் நிர்வகிக்கும் உரிமை.

### 2.5.1.6 சொத்துரிமை

சரத்து 31 – தனிப்பட்டவர் அல்லது நிறுவனம் சொத்துக்களை உடைமையாக்கவும் நிர்வகிக்கவும் உரிமை.

சரத்து 31 A – அரசுப் பொது நலனுக்காகத் தனியார் சொத்துக்களை எடுத்துக்கொண்டு இழப்பீடு அளிக்கலாம்.

சரத்து 31 B – ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது. 1979 –ல் 44 ஆவது திருத்தத்தின் படி சொத்துரிமை அடிப்படை உரிமைப் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டது.

சரத்து 32 – குடிமக்களின் சொத்துரிமை மகனுக்கும், மகளுக்கும் சமம். மேலும் இந்த உரிமை இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கிறது. அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால் குடி மக்கள் நீதிமன்றம் செல்லும் உரிமை.

(44–வது அரசியல் அமைப்பு திருத்தத்தின்படி அடிப்படை உரிமையிலிருந்து சொத்துரிமை நீக்கப்பட்டு விட்டது. ஆனால் 300 (அ) சரத்தின்படி அரசியல் அமைப்புத் திட்டத்தில் உரிமையாக அறிவிக்கப்பட்டுள்ளது).

***செயல்பாடு***

*இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிக் கலந்துரையாடுக.*

### 2.5.2 அடிப்படைக் கடமைகள்

உரிமைகளும் கடமைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். ஒரு உரிமைக்கும் இணையாக ஒரு கடமை உண்டு. ஒழுங்காக நிறைவேற்றப்பட்ட உரிமையிலிருந்து கடமைகள் எழுகின்றன. ஒவ்வொருவரும் தங்களின் கடமையை நிறைவேற்றினால் உரிமைகள் காக்கப்படும்.

உரிமைகள் பணிகளுக்குத் தொடர்பு கொண்டவை. ஆற்றப்பட வேண்டிய கடமைகளுக்குப் பதிலாகவே தரப்படுகின்றன என்று ஹெரால்டு லாங்கி கூறுகிறார்.

இந்திய அரசியல்சட்டம் பகுதி IV அ, பிரிவு 51 அ இதில் உள்ள 42 ஆவது அரசு சட்டத்திருத்தம் இந்தியக் குடிமக்களின் கடமைகளை வலியுறுத்துகிறது. அவைகளாவன;

1. அரசியல் சட்டதிட்டம், தேசியச் சின்னம், தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்திற்கு மதிப்பு அளித்தல்.
2. தேசிய சுதந்திரப் போராட்ட வீரர்களின் உன்னத உணர்வு நினைத்துப் பேணுதல்.
3. நமது நாட்டின் இறைமை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு நிலைநிறுத்துதலும் பாதுகாத்தலும்.
4. நாட்டின் பாதுகாப்பிற்காகச் செயலாற்றல், தேவை ஏற்பட்டால் பாதுகாப்புப் பணியில் ஈடுபடல்.

5. மதம், மொழி, இனம், வகுப்பு வேற்றுமைகளைத் துறந்து சகோதர உணர்வுடன் தேசிய ஒற்றுமை ஓங்கச் செய்தல்.

6. நம்முடைய பண்பாடு பன்முகப் பாரம்பரியக் கலாசாரத்தின் மேன்மையை மதித்தல் பாதுகாத்தல்.

7. காடு, ஏரி, குளம், ஆறு மற்றும் விலங்குகள் போன்ற இயற்கை வளங்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாத்தல் – மேம்படுத்துதல்.

8. அறிவியல் மனப்பான்மை மனிதநேயம், ஆய்வு மனப்பான்மை, சீர்திருத்தம், சிந்தனை ஆகியவற்றை மேம்படுத்தல்.

9. நாட்டின் பொதுச் சொத்துக்களை அக்கறையுடன் பாதுகாத்தல், வன்முறையைக் கைவிடல்.

10. நாடு தன்னுடைய முயற்சியிலும், சாதனைகளிலும் தொடர்ந்து முன்னேறும் வகையில் அனைத்துத் துறைகளிலும் தனிமனித மற்றும் கூட்டு நடவடிக்கைகளில் மேன்மைக்குப் பாடுபடுதல்.

11. பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள், 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் கல்வி பெறுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இக்கடமை 2002 ஆம் ஆண்டு 86 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது ஆகும்.

*செயல்பாடு*

*இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் பற்றிய கருத்துக்களைச் சேகரித்து கட்டுரை எழுதுக.*

## 2.6 குடியுரிமை
## (CITIZENSHIP)

“குடிமகன் / குடிமகள்” எனப் பொருள்படும் “சிட்டிசன்” என்ற ஆங்கிலச் சொல் “சிவிஸ்” என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். City / States கிரேக்க நகர நாட்டில் வாழ்ந்தவர்களை குறித்த அச்சொல், இன்றும் குடிமக்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு நாட்டில் வாழும் மனிதன், அந்த நாட்டின் குடிமகன் / குடிமகள் ஆவார். நாட்டு நிர்வாகச் செயல்களில், யார் ஒருவர் பங்கு கொள்கின்றாரோ, அவர் அந்த நாட்டின் குடிமகன் / குடிமகள் என அரிஸ்டாட்டில் கூறுகிறார்.

ஒரு நாட்டிற்கும், தனி நபருக்கும் இடையிலான சட்டரீதியான உறவே குடிமை எனக் குறிப்பிடலாம். இதன்படி தனிநபர் நாட்டிற்குக் கடமைப்படுகிறார். நாடு அவருக்குப் பாதுகாப்பளிக்க முன் வருகிறது. இந்த உறவு தேசியச் சட்டங்களினால் நெறிப்படுத்தப்படுகின்றது; சர்வதேசச் சட்டங்களால் ஆங்கீகரிக்கப்படுகிறது.

### 2.6.1 குடிமகனின் / குடிமகளின் உரிமைகளும், கடமைகளும்

(1) நாட்டைக் காக்க குடிமகன் / குடிமகள் பயன்படுத்தும் குடிமை மற்றும் அரசியல் உரிமைகள்

(2) நாட்டிற்காகக் குடிமகன் / குடிமகள் ஆற்றும் பொதுநலம் பேணுவது உள்ளிட்டக் கடமைகள்

(3) குடிமகன் / குடிமகள் நாட்டுப் பற்றுடன் இருத்தல்.

போன்றவை குடிமகனின் / குடிமகளின் உரிமைகளும் கடமைகளும் ஆகும்.

### 2.6.2 அரசியலமைப்புச் சட்டத்தின் குடிமையுரிமைகள்

அரசியலமைப்புச் சட்டத்தின் 5 முதல் 8 வரையிலான பிரிவுகள் குடியுரிமையைக் குடிமகனுக்கு / குடிமகளுக்கு அளிக்கின்றன.

1. இந்தியாவில் பிறந்து இந்தியாவிலேயே வசிப்பவர்கள்.
2. இந்தியாவில் பிறக்காமல் இந்தியாவில் வாழ்பவர்கள் பெற்றோர்களில் ஒருவர் இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும்.
3. இந்தியாவில் பிறக்காமல் பொதுவாக இந்தியாவில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்கள்.
4. இந்தியாவில் வசித்து 1947 மார்ச் முதல் தேதிக்குப் பின்னர் பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்து, பின்னர் குடியேற்ற அனுமதிமூலம் மீண்டும் இந்தியாவுக்கே திரும்பியவர்கள்.
5. பாகிஸ்தானில் வசித்து 1947 ஜுலை 19 ஆம் தேதிக்குப் பின்னர் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தவர்கள் அல்லது அந்தத் தேதிக்கு முன்னர் இந்தியாவுக்கு வந்து இங்கே ஆறு மாதங்களுக்கு மேல் வசித்து முறைப்படி பதிவு செய்து கொண்டவர்கள்.
6. இந்தியாவிற்கு வெளியே வசிக்கின்றவர்கள் – அவர்களே இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும் அல்லது அவர்களின் பெற்றோர்களில் ஒருவரோ அல்லது பாட்டியர் பாட்டன்மார்களில் ஒருவரோ இந்தியாவில் பிறந்திருக்க வேண்டும். மேற்குறிப்பிட்டவர்கள் இந்தியக் குடியுரிமை பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

### 2.6.3 குடியுரிமைச் சட்டம் 1955

1. 1950 ஜனவரி 26 ஆம் தேதிக்குப் பின்னர் இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியக் குடிமக்களாவர்.
2. 1950 ஜனவரி 26 ஆம் தேதிக்குப் பின்னர் இந்தியாவின் வெளியே பிறக்கின்றவரின் தந்தை பிறப்பின்போது இந்தியக் குடிமகனாக இருந்தால் – சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அப்படி பிறந்தவர்களும் இந்தியக் குடிமக்களாவார்கள்.
3. சில நிபந்தனைக்குட்பட்டு குறிப்பிட்ட முறையில் பதிவு செய்து கொள்பவர்களுக்குக் குடியுரிமை அளிக்கப்படும்.
4. சில நிபந்தனைக்குட்பட்டு, இயல்பாக்கத்திற்கு முறைப்படி விண்ணப்பிப்பதன் மூலம் வெளிநாட்டினரும் இந்தியக் குடியுரிமை பெறலாம்.
5. குடியுரிமையைத் துறப்பதின் மூலமும், சிலகாரணங்களால் பறிப்பதன் மூலமும் இந்தியக் குடியுரிமையை இழக்க வேண்டி வரும்.

மேற்குறிப்பிட்டவை “குடியுரிமைச் சட்டம் 1955 அம்சங்களாகும்.”

### 2.6.4 மக்களாட்சியில் குடிமக்களின் பங்கு

மக்களாட்சியில் குடி மக்களின் பங்கு மகத்தானதாகும். ஆள்பவரும் ஆளப்படுவர்களும் மக்களே:, சட்டங்களும் அரசமைப்புச் சட்டங்களும் மட்டுமே ஒரு நாட்டை உன்னதம் ஆக்க முடியாது. குடிமக்களின் இடையுறா முயற்சியும், ஆர்வமும், ஆற்றலும், நாட்டை உன்னதம் ஆக்குகின்றன என நேரு குறிப்பிட்டுள்ளார்.


சட்டப்படி நடத்தல், வரிசெலுத்துதல் மற்றும் சமுதாயத்திற்குரிய தேவைகளோடு, மக்களாட்சியில் அரசியல் முனைப்போடு பங்கேற்றல், அரசு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு ஏற்றல் ஆகியவையும் மக்களாட்சியில் குடிமக்களின் பங்கு ஆகும். அடிப்படை உரிமைகள், அரசின் நெறிப்படுத்தும் கோட்பாடுகள், அடிப்படைக் கடமைகள் குடிமைக்கு மாண்புகளைச் சேர்க்கின்றன. குடிமக்களின் கடமைகளும் மக்களாட்சியும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன.

### 2.6.5 மக்களாட்சியின் வெற்றிக்கு முக்கியத் தேவைகள்

அரசியல் விழிப்புணர்வும், அறிவுத் திறனும் கொண்ட குடிமக்களின் ஒத்துழைப்பும் – நாட்டு நடப்புகளில் ஈடுபாடும் பங்கேற்பும், உரிமை கடமைகளைப் பாதுகாத்து வாழ்தல், ஒத்த குடிமக்களின் குடிமை மற்றும் பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்தல், ஒற்றுமை – ஒருமைப்பாட்டைப் பேணிக் காத்தல் ஆகியவை மக்களாட்சி வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத தேவைகளாகும்.

### 2.6.6 குடியுரிமை, வயதுற்றோர் வாக்குரிமை

இந்தியக் குடிமக்களுக்கு ஒற்றைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர். தேர்தல் ஆணையம் வாக்காளர் அடையாள அட்டையை வழங்குகிறது. இரகசிய வாக்கெடுப்பின்மூலம் தேர்தல்கள் நடைபெறுகின்றன.



*செயல்பாடு*

*இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் குடியுரிமைப் பற்றி ஆய்வு செய்க.*

## 2.7 இந்திய அரசியலமைப்புச் சட்டம் – மகளிர், சிறார் மற்றும் இயலாதோர் நலன் & கல்வி தொடர்புடைய சரத்துக்கள்

### 2.7.1 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மகளிர் நலன் தொடர்புடைய சரத்துக்கள்

சரத்து 14 – சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்.

சரத்து 15 – மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் எவ்விதப் பாகுபாடும் செய்யக் கூடாது.

சரத்து 15 (3) – மகளிர் மற்றும் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்கு அரசு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ள எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது.

இந்தச் சரத்தினை நிலை நாட்டும் வண்ணம் நீதிமன்றத் தீர்ப்புகளும் வெளியாகியுள்ளன. இந்தச் சரத்தின் அடிப்படையில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

உள்ளாட்சித் துறையில் மூன்றில் ஒரு பங்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சரத்து 21 – வாழ்க்கை வாழ்வதற்கும், தனிமனிதச் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு அளித்தல்.

இந்தச் சரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்புகள், பெண்களுக்கு இழைக்கப்படும் பாலினக் கொடுமைகளை எதிர்த்துப் பெண்களின் உரிமைகளைக் காக்க வழி செய்துள்ளன. மேலும்,

விபச்சாரத்தில் ஈடுப்பட்ட பெண்களை, அதிலிருந்து மீட்டு, அவர்களின் மறுவாழ்விற்கும், அவர்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிக்கும் வழி அமைக்கப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றன.

பணிபுரியும் இடங்களில் எவ்விதப் பாலினக் கொடுமைகள் நேரிடக்கூடாது என்பதற்காகத் தலைமை நீதி மன்றம் நெறி முறைகளை வகுத்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

சரத்து 23 – கொத்தடிமை, பிச்சையெடுப்பது, கட்டாயத்தால் பணியில் ஈடுபடச்செய்வது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன.

சரத்து 42 – மனிதநேய அடிப்படையில் பெண்களுக்கு மகப்பேறு உதவிகள், பணிபுரியும் பெண்களுக்கு மகப்பேறு விடுப்புகள் அளிக்கப்படுகின்றன.

சரத்து 51 அ (3) – ஒற்றுமை சகோதரத்துவம் நிலைநாட்டுதல், பெண்களின் மதிப்பிற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எவ்விதச் செயலிலும் ஈடுபடுவது வன்மையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சரத்து 300 (அ) – சொத்துரிமை தொடர்புடையது. வழி வழியாகத் தன்முன்னோர்கள் அனுபவித்த சொத்திலும் பங்கு பிரிக்கப்பட்டதன் மூலமோ, பராமரிப்பின் காரணமாகவோ, பரிசளிப்பின் மூலமோ பெற்ற சொத்துக்களின் மீதும், தன் சொந்த முயற்சியின் மூலமும் சொத்து சம்பாதிக்கவும், வாங்கவும் அவற்றை அனுபவிக்கவும் பெண்களுக்கு உரிமை உண்டு. பெண்கள் சீதனமாகப் பெற்றவையும் பெண்களுக்குரிய சொத்துகளாகும். இந்தியச் சொத்துரிமை திருத்தச்சட்டம் முதன் முதலில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கியது. 1982 இல் மேலும் சில பிரிவுகள் சேர்க்கப்பட்டன. இதன்படி விதவை மருமகளுக்கும் மற்றும் பேரக் குழந்தைகளுக்கும் குடும்பச் சொத்தில் பங்கு உண்டு என்பது வலியுறுத்தப்பட்டது.

சரத்து 494 – பெண், தன்னுடைய கணவனைச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு காரணத்தினால் விவாகரத்து செய்தபின், மறுமணம் செய்யும் உரிமை உண்டு.

மகளிர் மேம்பாட்டிற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

1954 – சிறப்புத் திருமணச்சட்டம்

1955 – இந்து திருமணச்சட்டம்

1955 – இந்து வாரிசு உரிமைச்சட்டம்

1956 – இந்து மைனர்கள் மற்றும் கார்டியன்ஷிப் சட்டம்

1956 – பெண்கள் மற்றும் சிறுமியர் மீதான ஒழுக்கமில்லா வியாபாரத் தடைச்சட்டம்.

1961 – இந்து தத்தெடுத்தல் மற்றும் ஜீவனாம்சம் சட்டம்

1972 – மருத்துவக் கருச்சிதைப்புச் சட்டம்.

## 2.7.2 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சிறார்கள் நலன் தொடர்புடைய சரத்துகள்

சரத்து 23 – கொத்தடிமை, பிச்சையெடுப்பது மற்றும் கட்டாயத்தால் பணியில் ஈடுபடச் செய்வது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன.

சரத்து 24 – தொழிலகங்கள் முதலியவற்றில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தல். பதினான்கு வயதிற்குக்குறைந்த எந்தக் குழந்தையையும் தொழிலகம் அல்லது சுரங்கத்தில் பணிக்கு அமர்த்தக் கூடாது. எவ்விதக் கடுமையான பணி செய்வதற்கும் சிறார்களைப் பயன்படுத்தக் கூடாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சரத்துக்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன – தொழிற்சாலைகள் சட்டம் (1948) சுரங்கங்கள் சட்டம் (1952) மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் (1951) வியாபாரி கப்பல் போக்குவரத்துச் சட்டம் (1958) பீடி – சிகரெட் தொழிலாளர் (பணிச்சூழல்) சட்டம் (1966) குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் (1986).

**அரசு நெறிமுறைக் கோட்பாடு**

சரத்து 39 (அ) – ஆண் – பெண் – தொழிலாளர் உடல் நலம் ; குழந்தைகளின் இளம்பிராயம் பாதிக்கப்படாமல் வயதிற்கும் வலிமைக்கும் ஒவ்வாத பணிகளை மேற்கொள்ளுமாறு கட்டாயப் படுத்தலுக்கு தடைவிதித்தல்

சரத்து 39 (ஊ) – குழந்தை பருவமும், இளமையும் சுரண்டலிலிருந்து பாதுகாக்கப்படுதல்.

சரத்து 45 – பதினான்கு வயது வரை அனைத்துச் சிறார்களுக்கும் இலவசக் கல்வி வசதி

சரத்து 51 அ (K) – 6 முதல் 14 வயது வரையில் குழந்தைகள் கல்விபெறச் சூழ்நிலையை ஏற்படுத்துவது பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கடமையாகும்.

1960 இல் குழந்தைகளைச் சுரண்டலிலிருந்து பாதுகாக்கவும் நல்ல ஆரோக்கியமான சூழலில் குழந்தைகளின் அறிவை வளர்க்கவும், குழந்தை காப்பகங்கள் ஏற்படுத்தி அவற்றில் இளம் குற்றவாளிகளையும், புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளையும் தங்க வைத்தல் பொருட்டும் ‘‘குழந்தைகள் நலச் சட்டம்’’ இயற்றப்பட்டது. 1979 ஆம் ஆண்டு, சர்வதேசக் குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். 1986 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ‘‘இளம் குற்றவாளிகள் நீதிச்சட்டம்’’, பிச்சையெடுப்பதில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகள், வீடற்ற அனாதைக் குழந்தைகள், பெற்றோர்கள் இருந்தும் அவர்களது பராமரிப்பிலிருந்து விடுபட்டு குற்றவாளிகளாக மாறிய குழந்தைகள், நடத்தை கெட்ட வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள குழந்தைகள், விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகள் ஆகியோரை இனம்கண்டு, அவர்களின் நலன் பாதுகாக்க வழி செய்துள்ளது. இச்சட்டம் ‘‘இளம் குற்றவாளிகள் நலக்கழகம்’’ என்ற அமைப்பை ஒவ்வொரு மாநில அளவிலும் ஏற்படுத்தி, புறக்கணிக்கப்பட்ட இளம் குற்றவாளிகளை முறைப்படுத்த வகைசெய்துள்ளது. குற்றம் செய்யப்பட்ட 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களும் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளும் இளம் குற்றவாளிகளாக வரையறுக்கப்படுகிறார்கள். இளம் குற்றவாளிகள் காப்பகம், சிறப்பு விடுதிகள், கண்காணிக்கும் விடுதிகள், இளம் குற்றவாளிகளைச் சீர்படுத்தி பின் கண்காணிக்கும் விடுதிகள் ஆகியவற்றை நிர்வகிக்க இச்சட்டம் வழி கோலியது.

### 2.7.3 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கல்வி தொடர்புடைய சரத்துக்கள்

சரத்து 21 A – கல்வி உரிமை – சட்ட ரீதியாக இலவச மற்றும் கட்டாயக் கல்வியை 6 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு மாநில அரசு வழங்கலாம்.

சரத்து 15 (5) – சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய பிரிவினர், தாழ்த்தப்பட்ட பிரிவினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பயிலுவதற்கு மாநில அரசு சிறப்பு ஏற்பாடுகள் செய்யத் தடையேதும் இல்லை.

பகுதி III சரத்து 29 – ஒவ்வொரு குடிமகனுக்கும் குடிமகளுக்கும் அவர்கள் விரும்பும் பண்பாட்டு மற்றும் கல்வி உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது.

சரத்து 30 – மதம், மொழி அடிப்படையில் உள்ள சிறுபான்மையினர் தங்களின் விருப்பத்தின்படி, கல்வி நிறுவனங்களை உருவாக்கி, நிர்வகிக்கும் உரிமை வழங்கப்படுகிறது.

சரத்து 45 – பதினான்கு வயதுவரை அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி வசதி செய்தல் வேண்டும்.

சரத்து 46 – தாழ்த்தப்பட்ட பிரிவினர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் கல்வி மற்றும் பொருளாதார நலனை மேம்படுத்துதல்.

சரத்து 338 – தேசிய தாழ்த்தப்பட்ட பிரிவினர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்.

சரத்து 340 – சமூக மற்றும் கல்வி நிலையில் பின்தங்கிய வகுப்பினரின் வாழ்க்கையை ஆய்ந்து, தரத்தை மேம்படுத்தும் பரிந்துரைகள் செய்யுமாறு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையத்தை நியமிக்கும் அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது.

சரத்து 350 A – மொழிசார்ந்த சிறு பான்மையினர் குழந்தைகளின் நலன் காப்பதும், குறைந்தது தொடக்கக் கல்வியினையாவது அவர்களின் தாய்மொழியில் பெறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் பொறுப்பும், அரசிற்கு அளிக்கப்பட்டுள்ளது.

***செயல்பாடு***

சமூக அறிவியல் மன்றத்தின் உதவியுடன் அரசியலமைப்புச் சட்டம் பற்றிக் கருத்தரங்கம் நடத்துக.

## 2.7.4 இயலாதோர் நலன் தொடர்பான சரத்துக்கள்

சரத்து 41 – அரசுக்குத் தன்னுடைய பொருளாதார நிலைக்கு ஏற்ப வேலையற்றவர்களுக்கு, வயதானவர்கள், உடல்நலம் குன்றியவர்கள், நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், இயலாதோர்கள் ஆகியோர்க்குப் பணியாற்றுவதற்கும் கல்வி பெறுவதற்கும் மற்றும் பொதுவான உதவி பெறுவதற்கும் ஏற்பாடு செய்யும் உரிமை அளிக்கப்படுகிறது.

உடல், மன இயக்கத்தில் குறைபாடுடையோர், இயலாதோர் ஆவார்கள். குறிப்பாக கண், வாய், உடல் மற்றும் மூளைக்குறைபாடுகள் உள்ள இயலாதோர்க்கு, அரசு, நலத்திட்டங்கள் வழியே அவர்களின் வளர்ச்சிக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கோத்தாரி கல்விக்குழு (1966) கல்வியை இயலாதோருக்கு, பயனளிக்கும் வகையில் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. 1986 மற்றும் 1992 தேசியக் கல்விக் கொள்கைகளில் “இயலாதோர்களுக்கான சிறப்புக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன.

1956 ஆம் ஆண்டு, சமூக நலத்துறை, இயலாதோர் சிறப்புக் கல்விப் பொறுப்பை மேற்கொண்டது. 1971 இல் இயலாதோர் ஒருங்கிணைப்புக் கல்வித் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியது. 1987 ஆம் ஆண்டு, இதனைக் கல்வித் துறைக்கு மாற்றி அமைத்தனர். அரசுடன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணைந்து செயல்படுகின்றன.

***செயல்பாடு***

1. *இயலாக் குழந்தைகளுக்கு அரசுச் சிறப்புத் திட்டங்கள் பற்றி வட்டார வளர்ச்சி அலுவரைக் கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தச் செய்க.*
2. *அரசியலமைப்புச் சட்டம் பற்றி நூலக உதவியுடன் ஒரு கட்டுரை உருவாக்குக.*

## 2.8 இந்தியாவில் கட்சிமுறை

அரசியல் கட்சிகள் குடியாட்சியில் முக்கிய அம்சமாக விளங்குகிறது. பிரதிநிதித்துவ மக்களாட்சியில் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதற்கும், அரசாங்கத்திற்கும் குடிமக்களுக்கும் இடையே விரும்பத்தக்க தொடர்பினை ஏற்படுத்துவதற்கும், அரசாங்கம் முழுமையாகச் செயல்படுவதற்கும் அரசியல் கட்சி முறை இன்றியமையாததாகும்.

### 2.8.1 அரசியல் கட்சியின் பெருமை

“ஏற்றுக் கொண்ட சில கொள்கைகளின் அடிப்படையில் கூட்டு முயற்சியால் தேசிய நலனை முன்னேற்றுவதற்காக அமைக்கப்படும் மக்களின் குழுவே அரசியல் கட்சியாகும்” என்பது பர்க்கின் கூற்றாகும்.

“அரசியல் கட்சிகள் என்பது சில கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அமைப்பாகும். இத்தகைய அமைப்புகள், அரசாங்கத்தை அமைக்க முற்படுகின்றன” என்று மேக் ஐவர் தனது கருத்தினைத் தெரிவித்தார்.

### 2.8.2 அரசியல் கட்சிகளின் பங்கும் பணிகளும்

அரசியல் கட்சிகள் திட்டங்களையும் கொள்கைகளையும் வாக்குறுதிகளாக, மேடை, செய்தித்தாள்கள், மக்கள் தொடர்புச் சாதனங்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றின் வழியாக வாக்காளர்களுக்கு அறிவிக்கின்றன. மக்களின் ஆதரவினைத் திரட்டுகின்றன. வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்துத் தேர்தலில் போட்டியிடுகின்றன. தேர்தலில் பெரும்பான்மை தொகுதிகளில் வெற்றி பெற்ற அரசியல் கட்சி அரசாங்கத்தை அமைக்கிறது. வாக்குறுதிகளை நிறைவேற்ற நீண்ட காலத்

திட்டங்களையும், குறுகிய காலத் திட்டங்களையும் வகுத்து அரசாங்கத்தை நடத்துகிறார்கள். எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தில் நிகழும் குறைகளைச் சுட்டிக்காட்டி மக்களை விழிப்படைய செய்கின்றனர். ஆளும் கட்சியினர் தங்கள் தவறுகளைத் திருத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆளும் கட்சியினர் பெரும்பான்மையினரது ஆதரவு குறையாமல் கவனத்துடன் செயல்படுகின்றனர். பெரும்பான்மையை இழக்கும்போது பதவியிலிருந்து விலகி மாற்றுக் கட்சிக்கு இடம் அளிக்கின்றனர். கட்சி முறையினால் மட்டுமே புரட்சியின்றி அமைதியான முறையில் அரசாங்கத்தை மாற்றியமைக்க இயலும்.

### 2.8.3 அரசியல் கட்சிகளின் குறைகள்

ஒவ்வொரு கட்சியும் தங்களின் கோட்பாட்டினைப் புகழ்ந்தும், மற்றக்கட்சியை இகழ்ந்தும் பேசி, பொதுமக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவது கட்சிமுறையின் மாபெரும் குறையாகும். கொள்கையை முன்வைத்து மக்களின் சிந்தனையைத் தூண்டுவதற்குப் பதிலாக மக்களின் மனவெழுச்சி தூண்டப்படுகிறது.

எதிர்க்கட்சிகள், எப்பொழுதும் எதிர்ப்பதைக் கொள்கைகளாகவும், கண்டனத் தீர்மானங்களைக் கொண்டு வருவதில் முனைப்பாகவும் உள்ளன. இச்சூழலில் பயனுள்ள சட்டங்களும் முக்கியமான அவசரமான சட்டங்களும் நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்படுகிறது. கட்சிப்பற்று, தலைவர்கள் மீது பற்று ஏற்பட்டு, தேசப்பற்று மறந்து, ஒற்றுமை ஒருமைப்பாடு குறைந்து, பிளவு மனப்பான்மை தோன்றும் சூழலும் ஏற்படுகிறது. இவையாவும் கட்சிமுறையின் குறைகளாகும்.

### குறைகள் தீர்க்கும் வழிகள்

பொதுக்கல்வி வளர்ச்சி. சார்பும், அச்சமும் இல்லாத நடுநிலையான செய்தித் தாட்கள், மக்கள் தொடர்புச் சாதனங்கள், தேசப்பற்றுமிக்க கட்சித் தலைவர்கள், பொதுமக்கள் கருத்து முறையாக உருவாக்கப்படுதல், குடிமக்களின் ஆளுமை வளர்ச்சி, முறையான விழிப்புணர்வு ஆகியவைகளினால் கட்சி முறைகளின் குறைபாடுகளை நீக்க முடியும்.

### 2.8.4 கட்சிமுறைகளின் வகைகள்

ஒருகட்சிமுறை, இருகட்சி முறை, பலகட்சி முறை என்பது கட்சி முறைகளின் வகைகளாகும்.

**ஒரு கட்சி முறை:** சீனா, இரஷ்யா போன்ற நாடுகளில் ஒரேகட்சி செயல்படுகிறது. பொதுவுடமை நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே செயல்படுகிறது.

**இருகட்சி முறை:** அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி ஆளும் கட்சியாகவும் தோல்வியுற்ற கட்சி எதிர்க்கட்சியாகவும் செயல்படுகிறது. அமெரிக்காவில் ஜனநாயகக்கட்சி, குடியரசுக் கட்சி என்ற இரண்டு கட்சிகள் உள்ளன.

**பலகட்சி முறை:** இந்தியாவில் பலகட்சி முறை உள்ளது. பல்வேறு கட்சிகள் இருக்கின்றன. பலகட்சி முறையினால் பல்வேறு வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். சிறந்த

வேட்பாளரைத் தெரிவு செய்யும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவையே பலகட்சி முறையின் தனித்தன்மையாகும். கூட்டணி அரசாங்கம் அமைக்கவும் பலகட்சி முறையில் வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

## 2.9 முடிவுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அவசர கோலத்தில் அள்ளித் தெளித்த கோலம் அல்ல. 1934ல் ஆரம்பித்து 1949 வரை உலக நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களை ஆய்ந்து உருவாக்கப்பட்ட ஒன்று. தனிமனித மாண்பு சிறப்பிற்கு இச்சட்டத்தை மதித்து வாழ்வோம். குறைகளற்ற பெருமைமிகு இந்தியாவை உருவாக்குவோம்.

## 2.10 பார்வை நூல்கள்


1. Agarwal, R.C. - Contitutional History of India and National Movement, New Delhi, 1981.
2. Bakshi, P.M. - The constitution of India Universal Law Publishing, New Delhi (2000).
3. Basu. D.D. - Introduction to the constitution of India, 18th Edition, New Delhi (1996).
4. Basu D.D. - Commentary on the contitution of India, 7th Edition, (1993).
5. Keshyap Subhash. C - Our Contitution - An introduction to India’s constiution and constitutional Law”, New Delhi, 2004.
6. Keshya Subhash. C, Citizen and the constitution, pub. div. I&B Min. GOI pub. New Delhi, 1997.
7. Natarajan. A.S, - இந்திய அரசியல் சாசனம், 1997, பாலாஜி பப்ளிகேசன்ஸ் – சென்னை 14.
8. Shukla V.N., - Contitution of India, 8th Edition, Lucknow (1990).

# அலகு – III

# மத்திய – மாநில – உள்ளாட்சி அரசமைப்புகள்

## அறிமுகம்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் “சட்டங்களின் சட்டமாக” உள்ளது. இதுவே முதன்மையான, அடிப்படையான ஆவணம் ஆகும். இது தேசத்தின் விருப்பாற்றலைப் (The will of the Nation) பிரதிபலிக்கிறது. இந்திய நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் நீதி பற்றிய கொள்கைகள் இதில் இடம் பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் இந்திய ஆட்சி முறை மூன்றடுக்கு ஆட்சி அமைப்பைக் கொண்டுள்ளது. அவை

1. மத்திய அரசு (Central Government)
2. மாநில அரசு (State Government)
3. உள்ளாட்சி நிர்வாகம் (Local Self Government)

## அலகுக்கூறுகள்


3.1 மத்திய அரசு
- 3.1.1 குடியரசுத் தலைவராகத் தகுதிகள்
- 3.1.2 குடியரசுத் தலைவரின் அதிகாரங்களும் பணிகளும்
- 3.1.3 இந்திய பிரதமர்
- 3.1.4 நாடாளுமன்றம்
- 3.1.5 உச்சநீதிமன்றம்

3.2 மாநில சட்டமன்றம்
- 3.2.1 மாநில சட்டமன்றத்தின் பணிகள்
- 3.2.2 ஆளுநரின் அதிகாரங்கள்
- 3.2.3 முதலமைச்சர்
- 3.2.4 மாநில நீதித்துறை

3.3 உள்ளாட்சி அமைப்புகள்
- 3.3.1 பஞ்சாயத்து ராஜ் சட்டம்
- 3.3.2 தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் – 1994
- 3.3.3 கிராம ஊராட்சி
- 3.3.4 ஊராட்சி ஒன்றியம்
- 3.3.5 மாவட்ட ஊராட்சி
- 3.3.6 மாநிலத் தேர்தல் ஆணையம்
- 3.3.7 பஞ்சாயத்து நிதிக் கமிஷன்
- 3.3.8 மாவட்ட திட்டக்குழு
- 3.3.9 நகர்புற உள்ளாட்சி அமைப்புகள்

3.4 முடிவுரை

3.5 பார்வை நூல்கள்

## கற்றல் செயல்கள்

| வ. எண். | அலகுக் கூறுகள் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | பாராளுமன்றம் | மாதிரிப் பாராளுமன்றம் | பாராளுமன்றம் செயல்படும் விதம் | வகுப்பறையில் பாராளுமன்றம் செயல்படும் விதத்தில் செயல்படுதல், நடித்தல். | – |
| 2. | பாராளுமன்றம் சட்டமன்றம் | அறிக்கை சமர்பித்தல் / ஆய்வு செய்தல் | பாராளுமன்றம்/ சட்டமன்றக் கூட்டம் நடைபெறும் காலங்களில் தொலைக்காட்சி பார்த்து செயல்படுதல் | – | நிறுவனங்களில் தொலைக்காட்சி பார்த்து அறிக்கை தயாரித்தல் / ஆய்வு செய்தல் |
| 3. | ஊராட்சி மன்றம், நகராட்சி, மாநகராட்சி | நேரடிப் பார்வையிடுதல் தனிஆள் அறிக்கை தயாரித்தல் | உன் பகுதியில் உள்ள ஊராட்சி மன்றம் / நகராட்சி / மாநகராட்சி கூட்டம் நடைபெறும் போது அவை செயல்படும் விதத்தைப் பார்வையிடுதல் | – | நிறுவனம் சார்ந்த பகுதியில் உள்ள ஊராட்சி மன்றம் / நகராட்சி / மாநகராட்சி |
| 4. | மைய அரசு மாநில அரசு அதிகாரப் பகிர்வு | ஒப்பாய்வு தயார் செய்தல் | நூலகம் | – | நூலகத்தில் செய்தித்தாள் மற்றும் புத்தகங்கள் படித்து மைய, மாநில அரசு அதிகாரம் பகிர்வுகள் ஒப்பாய்வு தயார் செய்தல். |

## 3.1 மத்திய அரசு

இந்தியா உலக அளவிலேயே நீண்ட அரசியலமைப்புக் கொண்ட, மதச்சார்பற்ற, குடியரசு நாடு ஆகும். குடியரசுத்தலைவர் இதன் பெயரளவிலான (Nominal) ஆட்சித் தலைவர். பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆணைப்படியே செயல்படுகிறார். எனவே குடியரசுத் தலைவர் பெயரளவிலான அதிகாரத்தையும் (Golden Zero), பிரதம அமைச்சர் உண்மையான அதிகாரத்தையும் கொண்டுள்ளார்.

### 3.1.1 குடியரசுத் தலைவர்க்குரிய தகுதிகள்

1. இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
2. 35 வயது நிறைந்தவராக இருக்க வேண்டும்.
3. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், மாநிலச் சட்டமன்ற அவைகளிலும் உறுப்பினராக இருக்கக் கூடாது.
4. மத்திய, மாநில அரசுப் பணியில் இருக்கக் கூடாது.

### தேர்தல்

குடியரசுத் தலைவரைத் தேர்வாளர் குழு மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கிறது. இத்தேர்வாளர் குழுவில் நாடாளுமன்ற இரு அவைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், மாநிலச் சட்ட பேரவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையைப் (Single Transferable Vote) பின்பற்றிக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி குடியரசுத் தலைவருக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கின்றார்.

### குடியரசுத் தலைவரின் பதவிக்காலம்

குடியரசுத் தலைவர் பதவி ஏற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டு காலத்துக்குப் பதவி வகிப்பார். பதவிக் காலம் முடிந்த பின்னரும் அடுத்த குடியரசுத் தலைவர் பொறுப்பேற்கும் வரை பதவியில் நீடிப்பார். இவர் பதவி விலக விரும்பினால் ராஜினாமா கடிதத்தைத் துணை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். இவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். இவரைக் குற்ற விசாரணை (Impeachment) மூலமாக மட்டுமே பதவி நீக்கம் செய்ய முடியும்.

### 3.1.2 குடியரசுத் தலைவரின் அதிகாரங்களும் பணிகளும்

இந்தியக் குடியரசுத் தலைவருக்கு ஏராளமான அதிகாரங்கள் உள்ளன. பெரும்பான்மையானவை, பெயரளவிலான அதிகாரங்களாகும். வழக்கமாக குடியரசுத் தலைவர் பிரதம அமைச்சரின் ஆலோசனைப்படியே ஆட்சி செய்ய வேண்டும். அசாதாரணமான சூழலில் குடியரசுத் தலைவர் தன் விருப்புரிமை (Discretion) அதிகாரத்தைப் பயன்படுத்துவார்.

### அ) ஆட்சி அதிகாரங்கள் (Executive powers)

குடியரசுத் தலைவர் இந்திய நாட்டின் தலைவர். எனவே ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் இவரிடம் உள்ளது. இவரது ஆட்சி அதிகாரங்கள் நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் வரை

உள்ளது. அரசாங்கம் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளும், ஆட்சி அதிகாரங்களும் இவருக்கு உட்பட்டவை. நாட்டின் தலைவர் என்ற நிலையில் மத்திய அரசாங்கச் சட்டங்களை நடைமுறைப்படுத்த மாநிலங்களுக்கு உத்தரவிடும் அதிகாரமும் குடியரசுத் தலைவருக்கு உண்டு.

## ஆ) நிர்வாக அதிகாரங்கள் (Administrative Powers)

இந்திய நாட்டின் அனைத்து நிர்வாக நியமனங்களும், உத்தரவுகளும், அறிவுறுத்தல்களும் குடியரசுத் தலைவர் பெயரிலேயே வெளியிடப்படுகின்றன. பிரதமர், அமைச்சர்கள், அட்டர்னி ஜெனரல், தணிக்கைத் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மாநில ஆளுநர்கள், அனைவரும் குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகின்றனர். இதைப்போலவே மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில், மத்திய தேர்வாணையம், நிதிக் கமிஷன் போன்ற நிர்வாக ஆணையங்களை நியமிக்கும் அதிகாரமும் குடியரசுத் தலைவருக்கு உள்ளது. அமைச்சரவைக் குழு எடுக்கும் அனைத்து முடிவுகளையும் பிரதம அமைச்சர் குடியரசுத் தவைவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

## இ) சட்டமன்ற அதிகாரங்கள் (Legislative Powers)

குடியரசுத் தலைவரின் பதவி நாடாளுமன்றத்துடன் இணைந்த ஒன்றாகும். இவர் நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை. எனினும் நாடாளுமன்றம் பற்றி முழுமையான அதிகாரம் இவருக்கு உண்டு. குடியரசுத் தலைவருக்கு நாடாளுமன்றக் கூட்டத்தைக் கூட்டவோ, நீட்டிக்கவோ, ஒத்திபோடவோ, அல்லது கலைக்கவோ அதிகாரம் உள்ளது. மேலவை, கீழவை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தை தலைமையேற்று நடத்த இவருக்கு அதிகாரமுண்டு. ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் அரசாங்கத்தின் கொள்கைகள், திட்டங்கள் பற்றி ஒப்புதல் பெற்ற பிறகே சட்டமாகும். நிதி மசோதாக்கள் இவரது ஒப்புதல் பெற்ற பின்னரே நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்படும். நாடாளுமன்றத்திற்குத் தேவைப்படின் செய்திகள் அனுப்ப உரிமையுண்டு. நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கிடையே ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க இவர் கூட்டத்தைக் கூட்டலாம். நாடாளுமன்றம் கூட்டத் தொடரில் இல்லாதபோது குடியரசுத் தலைவர் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கலாம்.

## ஈ) நீதித்துறை அதிகாரங்கள்

உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கவோ, நீக்கவோ இவருக்கு அதிகாரமுண்டு. இவர் நீதியின் தலையூற்று (Fountain - Head of Justice) . எனவே இவருக்குக் குற்ற மன்னிப்பு, தண்டனைக் குறைப்பு, தண்டனை ஒத்திவைப்பு பற்றிய அதிகாரம் உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் சட்ட ஆலோசனை பெறலாம். குடியரசுத் தலைவருக்கு எதிராக வழக்கு தொடரவோ, இழப்பீடு வேண்டவோ முடியாது.

## உ) நிதித்துறை அதிகாரங்கள் (Financial powers)

ஆண்டு வரவு செலவு கணக்கு இவரது சார்பாக நாடாளுமன்றத்தில் அளிக்கப்படுகிறது. இவரது பரிந்துரையின்றி எந்த நிதி மசோதாவும் அறிமுகப்படுத்த முடியாது. அனைத்து நிதி

மசோதாக்களும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே சட்டமாகும். நிதிக்கமிஷன் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறது. குடியரசுத் தலைவர்தான் நாட்டின் நிதிநிலை உறுதியாக உள்ளதா எனத் தீர்மானிக்கிறார்.

### ஊ) இராணுவ அதிகாரங்கள் (Military Powers)

குடியரசுத் தலைவர் நாட்டின் முப்படைகளுக்கும் (தரைப்படை – கடற்படை – விமானப்படை) தலைவர் ஆவார். முப்படைகளின் தலைவரையும் இவரே நியமிக்கிறார். அமைதிக் காலத்திலும், போர்க் காலங்களிலும், நெருக்கடி நேரத்திலும் முப்படைகளும் இவரது கட்டளைக்குக் கட்டுப்பட்டவை. போர்களைத் தொடங்கவோ, நிறுத்தவோ உடன்படிக்கை செய்து கொள்ளவோ குடியரசுத் தலைவரின் ஆணைத் தேவைப்படுகிறது. உள்நாட்டுக் கிளர்ச்சியையோ, வெளிநாட்டு படையெடுப்புகளையோ முறியடிக்க இராணுவத்தைப் பயன்படுத்தும் முழு அதிகாரம் இவருக்கு உண்டு.

### எ) நெருக்கடி நிலை அதிகாரங்கள் (Emergency Power)

நெருக்கடி நிலை 3 வகைப்படும். அவை,

1. வெளி நெருக்கடி நிலை
2. உள் நெருக்கடி நிலை
3. நிதி நெருக்கடி நிலை

### 1. வெளி நெருக்கடி நிலை

இந்தியாவின் மீது பிற நாடுகள் போர் தொடுக்கவோ, அல்லது ஆக்கிரமிக்கவோ ஆபத்து ஏற்பட்டாலோ குடியரசுத் தலைவர் வெளி நெருக்கடி நிலை பிரகடனம் செய்யலாம்.

### 2. உள்நெருக்கடி நிலை

தேச விரோத, சமூக விரோத மற்றும் ஆயுதக் கிளர்ச்சியால் நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்தால் குடியரசுத் தலைவர் நாடு முழுவதுமோ அல்லது பாதிக்கப்பட்ட பகுதிக்கோ உள் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யலாம்.

### 3. நிதி நெருக்கடி நிலை

இந்தியாவின் நிதி பாதுகாப்புக்கோ, அல்லது அதன் நிதி நாணயத்துக்கோ பாதிப்பு ஏற்பட்டால் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலை பிரகடனம் செய்யலாம்.

## 3.1.3 இந்தியப் பிரதமர் (The Prime Minister of India)

குடியரசுத் தலைவர் பிரதமரை நியமிக்கிறார். பிரதமர் அமைச்சர்களை நியமிக்கிறார். அமைச்சர்கள் 3 வகைப்படுவர்.

**1. அமைச்சர் குழு அல்லது காபினெட் அமைச்சர்கள்**

ஒவ்வொரு காபினெட் அமைச்சரும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இலாக்காக்களுக்குப் பொறுப்பானவர்கள்.

**2. இராஜாங்க அமைச்சர்கள்**

இவர்கள் இரண்டாம் முக்கியத்துவம் வாய்ந்த இலாக்காக்களுக்குப் பொறுப்பானவர்கள்.

**3. துணை அமைச்சர்கள்**

அமைச்சர்களுக்கு உதவி செய்பவர்.

3 வகை அமைச்சர்களையும் உள்ளடக்கியதே அமைச்சரவை ஆகும்.

**அமைச்சர்களின் முக்கியப் பணிகள்**

1. நிர்வாகப் பணி
2. சட்டமன்றப் பணி
3. நிதிப்பணி
4. நெருக்கடி காலப் பணி

## பிரதமர்

இந்திய நாடாளுமன்றத்தில் இவர்தான் ஆட்சித்தலைவர். இவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். அரசாங்கத்தின் உண்மையான அதிகாரங்களின் உறைவிடம் இவரே.

நடைமுறையில் பிரதமர், நாடாளுமன்ற மக்களவையில் அறுதிப் பெரும்பான்மையும் நம்பிக்கையும் பெற்றுள்ள கட்சி, அல்லது கூட்டணிக் கட்சிகளின் தலைவராக இருப்பார்.

**பிரதமரின் அதிகாரங்களும் பணிகளும்**

**1. அமைச்சர்கள் நியமனம்**

அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பது பிரதமரின் தனிச் சிறப்புரிமை ஆகும். இதில் பிரதமருக்கு முழுச் சுதந்திரம் உண்டு. இவரது ஆலோசனைப்படியே குடியரசுத் தலைவர் அமைச்சர்களை நியமிக்கிறார். அமைச்சரைவையை மாற்றி அமைக்கவோ, புதிய அமைச்சரைச் சேர்க்கவோ, அமைச்சர்களை விலக்கவோ அல்லது அமைச்சரவையைக் கலைக்கவோ பிரதமருக்கு முழு அதிகாரம் உண்டு.

**2. அமைச்சரவை தலைவர்**

பிரதமர் அமைச்சரவைகளின் தலைவர். அதேபோன்று இவர் அமைச்சர் குழு அல்லது காபினெட்டின் தலைவருமாவார். இக்கூட்டங்களுக்கு இவர் தலைமை தாங்குகிறார். ஒவ்வொரு கொள்கை முடிவும் அமைச்சர்கள் குழுவில்தான் தீர்மானிக்கப்படுகிறது. பிரதமரின் திறமையான, தொலைநோக்குடைய, தனித்தன்மையே அமைச்சரவையை ஓரணியாகச் செயல்பட வைக்கிறது.

**3. பிரதமரும், குடியரசுத் தலைவரும்**

பிரதமர் அரசாங்கத்தின் தலைவர்; குடியரசுத் தலைவர் நாட்டின் அதிபர்; அமைச்சர் குழு எடுக்கும் முடிவுகளை உடனுக்குடன் குடியரசுத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டியது பிரதமரின் கடமையாகும். குடியசுரத் தலைவர் கேட்கும் தகவல்களைக் கொடுக்க பிரதமர் கடமைப்பட்டுள்ளார். பிரதமர், அரசாங்கத்திற்கும், குடியரசுத் தலைவருக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகிறார். பிரதமர், குடியரசுத் தலைவர் இருவரும் அரசியலமைப்புச் சட்டத்தின் இரு கண்களாவர்.

### பிரதமரும் நாடாளுமன்றமும்

பெரும்பான்மை பலமுடைய கட்சி அல்லது கூட்டணிக் கட்சியின் தலைவர் என்ற முறையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பிரதமரின் பணி குறிப்பிடத்தக்கது. அனைத்து அரசாங்கத் தீர்மானங்களும், மசோதாக்களும், பிரதமரின் அனுமதியுடன் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படுகிறது. பிரதமர் அரசாங்க கொள்கைகளை அவையில் அறிவிக்கிறார். அவையின் அமைதியையும், கட்டுப்பாட்டையும், காக்க பிரதமர் சபாநாயருக்குத் துணையாக உள்ளார்.

### மக்களவைத்தலைவர்

பிரதமர் ‘மக்களவை சபாநாயகருக்குக்’ கீழ் வரும் மக்களவைத் தலைவர். இவர் மக்களவை உறுப்பினராக இல்லாவிடில் தனது கட்சியைச் சார்ந்த மூத்தவர் ஒருவரை சபாநாயகராக நியமிக்கிறார். பிரதமர் கட்சி வேறுபாடு இன்றி அவையிலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் பொறுப்பானவர் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. நாடாளுமன்றக் கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும், கலைக்கவும் பிரதமர் முடிவு செய்கிறார். அமைச்சர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்கிறார். நாடாளுமன்றக் கூட்டங்களில் முடிவெடுக்க இயலாத நிலையில் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கச் செய்கிறார். அரசாங்கக் கொள்கைகளையும், கட்சித் திட்டங்களையும் ஒருங்கிணைக்கிறார். பிரதமருக்குக் கடமைகளைவிட பொறுப்புகள் அதிகம். இவர் நாடாளுமன்ற அரசாங்க முறையின் குவி மையமாக உள்ளார்.

### பன்னாட்டு அரசியலில் பிரதமர் பங்கு

சர்வதேச அரசியலில் பிரதமர் முக்கிய பங்காற்றுகிறார். உலக நாடுகளுடன் நட்புணர்வை வளர்ப்பதே பிரதமரின் முக்கிய கடமையாகும். பிரதமர் சர்வதேச பிரச்சனைகள் பற்றிய இந்தியாவின் நிலையை உலக அரங்குகளில் விளக்கிப் பேசுகிறார்.

## 3.1.4 நாடாளுமன்றம் (Parliament)

குடியரசுத் தலைவரையும் இரு அவைகளையும் சேர்ந்ததே நாடாளுமன்றம் ஆகும். இந்திய நாடாளுமன்றம் ஈரவை மன்ற முறையைச் சார்ந்தது.

1. ராஜ்ய சபை (Rajya Sabha) அல்லது நாடாளுமன்ற மேலவை
2. மக்களவை (Lok Sabha) அல்லது நாடாளுமன்றக் கீழவை



பாராளுமன்றம்

### 1. மாநிலங்களவை (Rajya Sabha)

மாநிலங்களவை உறுப்பினர்கள் 3 வகைப்படுவர்.

1. மாநிலங்கள் பிரதிநிதிகள்
2. யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள்
3. நியமனப் பிரதிநிதிகள்

### 1. மாநிலங்களின் பிரதிநிதிகள்

ஒவ்வொரு மாநிலமும் அதன் மக்கள் தொகைக்கேற்ப உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவர். இவர்கள் மாநிலச் சட்டப் பேரவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கு மாற்றக் கூடிய ஒற்றை வாக்குச் சீட்டு விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படுகிறது.

### 2. யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகள்

மாநிலப் பிரதிநிதிகள் போன்றே இவர்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### 3. நியமனப் பிரதிநிதிகள்

இலக்கியம், கலை, அறிவியல், சமூகச் சேவை ஆகிய துறைகளில் சிறப்பு அறிவும், நடைமுறை அனுபவமுடைய 12 பேரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

### மாநிலங்களவை உறுப்பினர்க்குரியத் தகுதிகள்

1. இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
2. 30 வயது முடிந்திருக்க வேண்டும்.
3. நாடாளுமன்றத் தொகுதியில் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. மத்திய, மாநில அரசு ஊழியராக இருக்கக் கூடாது.

5. மாநிலங்களவை உறுப்பினராவதற்கு நீதிமன்றம் தடை விதித்திருக்கக் கூடாது.

6. மனவளர்ச்சி குறைந்தவராக இருக்கக் கூடாது.

7. மக்களவை உறுப்பினராக இருக்கக் கூடாது.

**பதவிக்காலம்**

மாநிலங்களவை உறுப்பினரின் பதவிக் காலம் 6 ஆண்டுகள். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுவர். இவ்வாறு காலியாகும் பதவிகளுக்குப் புதிய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். மாநிலங்களவை நிரந்தரமானது. மாநிலங்களவை உறுப்பினர் எண்ணிக்கை 250. தமிழ்நாட்டின் மாநிலங்களவை உறுப்பினர் எண்ணிக்கை 18.

**மாநிலங்களவைத் தலைவர்**

குடியரசுத் துணைத் தலைவர் பதவியிலுள்ளவர் மாநிலங்களவைத் தலைவர் ஆவார். இவர் மாநிலங்களவை உறுப்பினர் அல்ல. எனவே இவருக்கு அவையில் வாக்களிக்கும் உரிமை இல்லை. எனினும் வாக்குகள் சமமாகப் பிரிந்தால் ‘‘முடிவு செய் வாக்கை’’ (Casting Vote) அளித்துச் சிக்கலுக்குத் தீர்வு காண்பார். கூட்ட நடவடிக்கைகளை அமைதியுடன் ஒழுங்காகவும், மரபமைதிக் காத்தும் நடத்திச் செல்வார். இவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயின் அது பற்றிய தீர்மானம் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு, மக்களவையில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

**மாநிலங்களவையின் அதிகாரங்களும் பணிகளும்**

மாநிலங்களவை அதிகாரங்கள் மக்களவையின் அதிகாரங்களுக்கு இணையானவை. ஆனால் ‘பண மசோதாக்கள்’ (Money Bills) மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த வேண்டும். மாநிலங்களவை அமைச்சர்கள் சமர்ப்பிக்கும் அரசாங்கக் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றை உறுப்பினர்கள் விமர்சனம் செய்வர். சட்டத் திருத்தங்கள் செய்ய மாநிலங்களவையின் ஒப்புதல் கட்டாயம் தேவை. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கெதிராகத் தீர்மானம் நிறைவேற்றி மக்களவையில் ஒப்புதல் பெற்றுப் பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தைக் கொண்டு வரும் அதிரம் மாநிலங்களவைக்கு மட்டுமே உரியது. நாடு நெருக்கடி நிலைக்கு உட்படும்போது மாநிலங்களவை தொடர்ந்து செயல்பட்டு ஆட்சி நடவடிக்கைகளை அக்கறையோடு கண்காணிக்கும்.

## 2. மக்களவை (Lok Sabha)

நாடாளுமன்றத்தின் கீழவை ‘‘லோக்சபா’’ அல்லது ‘‘மக்களவை’’ என அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநில மக்கள் தொகை எண்ணிக்கை அடிப்படையில் உறுப்பினர்கள் எண்ணிக்கை அமைந்துள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் 5 லட்சத்துக்குக் குறையாமலும் 7.5 லட்சத்துக்கு மிகாமலும் உள்ள வாக்காளர்களால்

தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவை தவிர இரண்டு ஆங்கிலோ இந்தியரையும், ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் உறுப்பினராகக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். தற்போது உள்ள மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 545. தமிழ்நாட்டிலிருந்து 39 மக்களவை உறுப்பினரும் பாண்டிச்சேரியிலிருந்து ஓர் உறுப்பினரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

'வயது வந்தோருக்கு வாக்குரிமை' என்ற அடிப்படையில் 18 வயது நிரம்பிய ஆண் / பெண் வாக்காளர்கள் மக்களவைக்கு வாக்களிக்கின்றனர்.

### மக்களவை உறுப்பினர்க்குரிய தகுதிகள்

1. இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
2. 25 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
3. போட்டியிடும் தொகுதியில் குறிப்பிட்ட ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும்.
4. மத்திய மாநில அரசுப் பணியில் ஊதியம் பெறும் பதவியில் இருக்கக் கூடாது.
5. மக்களவை உறுப்பினராவதற்கு நீதிமன்றம் தடை விதித்திருக்கக் கூடாது.
6. மன வளர்ச்சிக் குறைந்தோரும், திவாலானவர்களும் போட்டியிடத் தகுதி இல்லை.

### பதவிக்காலம்

மக்களவை உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

பதவியேற்கையில் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விசுவாசமாக இருப்பதாகவும், நாட்டின் ஒற்றுமையைப் போற்றிக் காப்பதாகவும் உறுதி அளிக்க வேண்டும்.

## மக்களவையின் அதிகாரங்கள், பணிகள்

### 1. சட்டமியற்றும் அதிகாரம்

மக்களவை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால் மாநிலங்களைவை உறுப்பினர்களைவிட இவர்களுக்கு அதிகாரங்கள் அதிகமுள்ளது. இவர்கள் மக்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையவர்கள். பண மசோதாக்கள் மக்களவையில் மட்டுமே கொண்டு வர முடியும். இது குறித்து முழு அதிகாரம் மக்களவைக்கு உண்டு. சட்டமியற்றலிலும் மக்களவையின் பங்கு பெரியது. சட்டத்திருத்தத்தில் இரு அவைகளுக்கும் சம அதிகாரம் உள்ளது.

### 2. நிர்வாக அதிகாரங்கள்

பிரதமரும் அவரது அமைச்சர்களும் மக்களவைக்குப் பொறுப்பானவர்கள். பிரதமர் அமைச்சரவைக்கும், அமைச்சர்கள் அவர்கள் சார்ந்த துறைக்கும் பதில் சொல்லக் கடமையுண்டு. அரசின் கொள்கைகளும், திட்டங்களும், செயல்பாடுகளும் அவையில் உறுப்பினர்களால் கடுமையாக விமர்சிக்கப்படும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்தின் தவறுகளையும், பலவீனங்களையும் ஊழல்களையும், சுட்டிக்காட்ட முடியும். அத்தீர்மானம் நிறைவேறினால் அரசு பதவி விலக வேண்டும்.

### 3. நீதித்துறை அதிகாரங்கள்

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நீக்குவது குறித்த தீர்மானத்தை விவாதிக்கும்போது மக்களவை, நீதிமன்றம்போல் செயல்படுகிறது. இதற்கு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் மக்களவையின் ஒப்புதல் தேவை. நெருக்கடி நிலைப் பிரகடனம் மக்களவையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். சர்வதேச உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மக்களவைக்கு உண்டு.

### மக்களவை சபாநாயகர்

சபாநாயகர் மக்களவைத் தலைவர் ஆவார். மக்களவையின் மூத்த உறுப்பினர் மக்களவை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள். இவரது பதவிக்காலம் முடியுமுன்னர் மக்களவை கலைக்கப்பட்டால், புதிய அவை அமைக்கப்படும் வரை இவரே பதவியில் நீடிப்பார். சபாநாயகர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். அவையின் பெருமை, இவற்றிற்குக் கேடு விளைவித்தால், அக்குற்றத்திற்காகப் பதவிநீக்கம் செய்யப்படலாம். சபாநாயகரை அவமதிப்பது அரசுச் சட்டத்தை அவமதிப்பதாகும்.

### மக்களவை சபாநாயகரின் அதிகாரங்களும் பணிகளும்

சபாநாயகருக்கு விரிவான அதிகாரங்கள் உண்டு. அவை,

1. அவை நடவடிக்கைகளைக் கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் முறையாக நடத்துதல்.
2. சுயக் கட்டுப்பாடின்றி விதிகளை மீறி நடந்து கொள்ளும் உறுப்பினர் மீது தக்க நடவடிக்கை, எச்சரித்தல், கண்டித்தல், வெளியேற்றுதல் போன்றவற்றை மேற்கொள்ளல்.
3. எந்த உறுப்பினர் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.
4. விவாதங்களில் கால எல்லையை நிர்ணயித்தல்.
5. அவை நடக்கும்போது பார்வையாளர்களுக்கு அனுமதி அளித்தல்.
6. அவை நடவடிக்கைகளைச் சரியாகப் பதிவு செய்தல், தடைசெய்யப்பட்ட பேச்சுக்களைக் குறிப்பினின்று நீக்குதல்.
7. உறுப்பினர்களின் அதிகாரங்கள், சலுகைகள் மறறும் காப்புரிமைகளைப் பாதுகாத்தல்.
8. மசோதாக்கள், பணமசோதாக்கள் போன்றவற்றிற்குச் சான்றளித்தல்.
9. இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல்,.
10. கேள்வி நேரத்தின்போது கேட்கப்பட வேண்டிய கேள்விகளையும் அவற்றின் வரிசையையும் முடிவு செய்தல்.
11. மக்களவைக் குழுக்களின் தலைவர்களையும், உறுப்பினர்களையும் நியமித்தல்.
12. மக்களவைக்கும் குடியரசுத் தலைவருக்கும் இடையே தகவல் தொடர்புப் பாலமாக இருத்தல்.

13. அவையின் எந்த உறுப்பினரும் கைது செய்யப்படாமல் பாதுகாத்தல்.

14. உறுப்பினர்களின் வழக்குகளில் சாட்சி சொல்ல அனுமதித்தல்

15. உறுப்பினர்களின் பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக் கொள்ளுதல்.

16. மக்களவைச் செயலகத்தின் தலைவராகச் செயல்படுதல்.

## 3.1.5 உச்சநீதிமன்றம் (The Supreme Court)

உச்சநீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும், நாடாளுமன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் எண்ணிக்கை கொண்ட நீதிபதிகளையும் கொண்டது. தேவை ஏற்படின் குடியரசுத் தலைவர் தற்காலிக நீதிபதிகளை நியமனம் செய்யலாம். உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியைப் பணிமூப்பு அடிப்படையில் நியமிப்பது மரபு. நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்வதற்குச் சிக்கல் மிகுந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் தற்போதைய எண்ணிக்கை 26 ஆகும்.

### உச்சநீதிமன்ற அதிகாரங்கள்

உச்சநீதிமன்றம் நீதிமன்ற ஆவணங்களைப் பத்திரமாகப் பாதுகாக்கின்றது. உச்ச நீதிமன்ற அதிகாரங்கள் மூன்று வகைப்படும். அவை,

### 1. முதல் விசாரணை அதிகாரம் (Original jurisdiction)

அ) மத்திய அரசுக்கும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் இடையிலான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தல்.

ஆ) மாநிலங்களுக்கிடையே வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தல்.

இ) மத்திய அரசும் மாநில அரசும் ஒருபுறமும், மாநிலங்கள் மறுபுறமும் இருந்து தொடரும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தல்.

### 2. மேல்முறையீட்டு விசாரணை அதிகாரம் (Appellate)

மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றத் தீர்ப்புகளை எதிர்த்து வரும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தல்.

### 3. ஆலோசனை அதிகாரம் (Advisiory)

குடியரசுத் தலைவருக்குத் தேவையான நேரங்களில் சட்ட ஆலோசனை வழங்குகிறது. தக்க காரணங்களுக்கு ஆலோசனை கூற மறுப்பது.

### பிற அதிகாரங்கள் (Miscellaneous powers)

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம். நீதிமன்ற அவமதிப்புக்காகச் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விசாரித்துத் தண்டிக்கலாம். தக்க காரணங்களுக்காக எவர் மீதும் நீதி ஆணைகளைப் (Writes) பிறப்பிக்கலாம்.

உச்சநீதிமன்றத் தீர்ப்புகள், கீழ் நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும். உச்ச நீதி மன்றம் மட்டுமே நீதிப்புனராய்வு (Judicial Review) செய்ய முடியும். பொது நல வழக்குகளை (Public Interest Petitions) விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்.

*செயல்பாடு*

*மாதிரி பாராளுமன்றம் அமைத்து நடிக்கச் செய்தல்.*

## 3.2 மாநிலச் சட்டமன்றம்

மைய அரசு அமைப்பைப் போலவே மாநில அரசு அமைப்பு காணப்படுகிறது. இந்திய அரசு கூட்டாட்சி அரசு முறையைப் பின்பற்றுகிறது. இந்தியாவில் 28 மாநிலங்களும் 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் அரசுத் தலைவர் கவர்னர் / ஆளுநர் இருக்கின்றார். யூனியன் பிரதேசத்திற்கு உதவி ஆளுநர் தலைமை வகிக்கின்றார். சட்டத்துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை போன்ற மூன்று முக்கியத் துறைகள் அரசிடம் காணப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலத்திலும் சட்டமன்றம் உள்ளது. சட்டமன்றத்தின் இரு அவைகளாவன.

1. சட்டப் பேரவை (கீழ் அவை)
2. சட்ட மேலவை (மேல் அவை)

சில மாநிலங்களில் கீழ் அவை மட்டுமே செயல்படுகிறது. தமிழ்நாட்டில் கீழ் அவை மட்டுமே செயல்படுகிறது.

**1. சட்டப் பேரவை:** உறுப்பினர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். சட்டப்பேரவையின் குறைந்தபட்ச உறுப்பினர்கள் 60, உயர்ந்தபட்ச உறுப்பினர்கள் 500 ஆகும். சட்டப்பேரவையின் உண்மையான அங்கத்தினர்களின் எண்ணிக்கை மாநிலத்தின் மக்கட் தொகையைப் பொருத்தது. தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 234, நியமன (ஆங்கில இந்தியர்) உறுப்பினர்கள் மொத்தம் 235 உறுப்பினர்கள் உள்ளனர். சட்டப் பேரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் சபாநாயகர் ஆவார். இவர்கள் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

**2. சட்ட மேலவை (விதான்பிரசாத்):** சட்டமேலவை அங்கத்தினர்கள் பொதுமக்ளால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. சட்டப் பேரவை அங்கத்தினர்களிள் 3இல் 1 பகுதிக்கு மேலில்லாத எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்கள் 30 வயது உள்ளவர்கள் சட்டமேலவை உறுப்பினர் ஆகலாம். இவர்கள் பதவிக்காலம் 6 ஆண்டுகள். இது நிரந்தரமான அவை ஆகும். சட்டமேலவைக் கூட்டத்திற்கு அவைத்தலைவர் தலைமை வகிக்கிறார்.

### 3.2.1 மாநிலச் சட்டமன்றத்தின் பணிகள்

மாநிலச் சட்டமன்றம், மாநிலப் பட்டியலிலிருந்தும் பொதுப்பட்டியலிலிருந்தும் சட்டமியற்றுகிறது. மூன்றுமுறை சட்ட வரைவு வாசிக்கப்பட்ட பின்னரே ஒப்புதல் அளிக்கப்படும். பின்னர் ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமாக்கப்படும். மாநிலத்தின் நிதிசார்ந்த செயல்களில்

சட்டமன்றம் கட்டுப்படுத்துகிறது. சட்டப் பேரவையின் செயல்களுக்கு அமைச்சரவை பொறுப்பு வகிக்கிறது. ஆகையால் சட்டசபை நிர்வாகச் சபையைக் கட்டுப்படுத்துகிறது. சட்ட மேலவையை விட சட்டப்பேரவை அதிகாரமிக்கது.

*செயல்பாடுகள்*

*களப்பணி : சட்டப் பேரவை பார்வையிட்டு, உற்றுநோக்கி அறிக்கை தயாரிக்கவும்.*

*தொடர்பணி : இந்திய மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் பெயர்களைத் தொகுக்கவும்.*

**மாநில செயலாட்சி (அ) நிர்வாகத்துறை**

**ஆளுநர் :** மாநிலச் செயலாட்சித் துறையின் தலைமைப் பொறுப்பினை வகிப்பவர் ஆளுநர் ஆவார். மைய அரசின் ஆலோசனைப்படி 5 ஆண்டுகளுக்குக் குடியரசுத் தலைவரால் ஆளுநர் நியமிக்கப்படுகிறார். 35 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் / குடிமகள் ஆளுநர் நியமனத்திற்குத் தகுதியானவர் ஆவார்.

## 3.2.2 ஆளுநரின் அதிகாரங்கள்

சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, நிதித்துறை போன்றவற்றின்மீது ஆளுநர் அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றார். சரத்து 154 இன் படி மாநிலத்தின் செயலாட்சித்துறை அதிகாரங்கள் யாவும் அரசியலமைப்புச் செயல்படி ஆளுநரிடம் உள்ளது

**1. நிர்வாக அதிகாரம்:** மாநில அரசின் அனைத்து நிர்வாக முடிவுகள் மற்றும் செயல்கள் அனைத்திற்கும் ஒப்புதல் அளிப்பவர் ஆளுநர் ஆவார். ஆளுநர் முதல் அமைச்சரையும் மற்றும் முதல் அமைச்சரின் ஆலோசனைப்படி பிற அமைச்சர்களையும் மற்றும் அரசின் தலைமை வழக்கறிஞரையும், அரசுப் பணியாளர் தேர்வுக்குழு உறுப்பினர்களையும் நியமனம் செய்கிறார்.

**2. சட்ட நிர்வாகம்:** சட்டமன்றம் கூட்ட அழைப்பு விடுத்தல், சட்டசபை ஒத்திவைத்தல், மற்றும் சட்டபையைக் கலைத்தல் போன்ற அதிகாரங்களை ஆளுநர் பெற்றுள்ளார். எல்லாச் சட்டங்களும் இவருடைய ஒப்புதலைப் பெற வேண்டும். சட்டப்பேரவை, செயலில் இல்லாதபோது அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க அதிகாரமுண்டு. மேலவை உறுப்பினர்கள் சிலரையும் இவர் நியமனம் செய்கிறார்.

**3. நிதி அதிகாரம்:** நிதித் தொடர்புடைய சட்ட வரைவை அறிமுகப்படுத்துவதற்கு முன் ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பின்பே சட்டப் பேரவையில் வைக்கப்பட வேண்டும்.

**4. நீதி அதிகாரம்:** தலைமை நீதிபதி மற்றும் நீதிதுறையின் உயர் அலுவலர்களை நியமனம் செய்தல், மாறுதல் செய்தல் அல்லது பதவி உயர்வளித்தல் போன்ற அதிகாரங்களை ஆளுநர் பெற்றிருக்கின்றார். அவசரக்காலங்களில் ஆட்சிப் பொறுப்பைக் குடியரசுத் தலைவரே ஏற்க, ஆலோசனை சொல்ல உரிமை உண்டு. மாநில அரசு கலைந்து போனால் ஆளுநரே உண்மையான அதிகாரம் பெறுகின்றார்.

### 3.2.3 முதலமைச்சர்

தேர்தலில் வெற்றி பெற்ற / பெரும்பான்மை பெற்ற கட்சித் தலைவரை ஆளுநர் அழைப்பார். மாநில நிர்வாகம் ஏற்கவும் பிற அமைச்சர்களைப் பட்டியலிடவும் அறிவிப்பார். பெரும்பான்மை பெற்ற கட்சித் தலைவரையே மாநில முதலமைச்சராக நியமிப்பார்.

**அமைச்சரவை:** மாநிலத்தின் உண்மை நிர்வாகம் அமைச்சர் அவையிடம் உள்ளது. முதலமைச்சர் தன் அமைச்சர் குழு உறுப்பினர்கள் பட்டியலை ஆளுநர் ஒப்புதல் பெற்று அறிவிப்பார். அமைச்சர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.

**அதிகாரங்கள்:** அமைச்சர் அவை மாநிலச் சட்டமன்றத்திற்குப் பொறுப்பு வாய்ந்தது. சட்டமன்றத்தில் அமைச்சர்கள் பங்கேற்றுக் கலந்துரையாடலாம். பின்னரே அரசு மசோதா மற்றும் நிதி மசோதா சட்டமாக்கப்படும். எனவே நெருங்கிய உறவு, அமைச்சர் அவைக்கும், மாநில சட்டமன்றத்திற்கும் உண்டு.

***செயல்பாடுகள்***

*மைய மாநில அரசின் நிர்வாக அதிகாரங்களை ஒப்புமை செய்க.*

*கி.பி. 1947 முதல் தமிழ்நாட்டில் ஆட்சி செய்த முதலமைச்சர்களின் பெயர்ப் பட்டியல் தயார் செய்க.*

### 3.2.4 மாநில நீதித்துறை

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் நீதித்துறை உள்ளது. இங்குத் தலைமை நீதிபதி மற்றும் பிற நீதிபதிகளும் உள்ளனர். குடியரசுத் தலைவரால் தலைமை நீதிபதி நியமிக்கப்படுகிறார்.

**தகுதிகள்:** தலைமை நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். நீதிமன்றத்தில் நீதிபதியாக, குறைந்தது 10 ஆண்டுகள் அல்லது தலைமை நீதிமன்றத்தில் வழக்குரைஞராக 10 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும். இவர் 62 வயது முடிவில் ஓய்வு பெறுவார்.

**அதிகாரங்கள் மற்றும் பணிகள்:** மாநிலத்தின் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் உயர்ந்த நீதிமன்றம் இதுவே ஆகும். மாவட்ட நீதி மன்றத்திலிருந்து வரும் வழக்குகளை விசாரிக்கும் மேல்முறையீடு மன்றமாக மாநில உயர்நீதிமன்றம் திகழ்கிறது. இது கீழ் நீதிமன்றங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் சட்ட வரைவுகளை அளிக்கிறது.

**கீழ்நீதிமன்றங்கள்:** ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நீதிமன்றம் உள்ளது. மாவட்டத்தின் உரிமையியல் குற்றவியல் விசாரிக்கும் உயர் நீதி மன்றம் இதுவே ஆகும். மாவட்ட நீதிபதியை மாநில ஆளுநர் நியமனம் செய்கிறார். இதன் கீழ் மாஜிஸ்டிரேட்டு குற்றவியல் நீதிமன்றமும், முன்சீப் உரிமையியல் நீதி மன்றமும் உள்ளன.

**வருவாய்த்துறை நீதிமன்றம்:** இதன்கீழ் மாவட்டநீதிமன்றம் அமையும். இதில் மாவட்ட ஆட்சியர், தாசில்தார் ஆகியோர் செயல்படுவர். மாவட்ட ஆட்சியர் மாவட்டத்தில் வருவாய் அலுவலர் ஆவார். மாவட்ட ஆட்சியரிடம் மேல் முறையீடு செய்யலாம்.

*செயல்பாடு*

*நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றம் கூட்ட தொடர் காலங்களில் தொலைகாட்சி உதவியுடன் கண்டுணர்ந்து அறிக்கை சமர்பித்தல்.*

**லோக்அதாலத்**

நாட்டின் பல மாவட்டங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடித்துவைக்கும் பணியைச் செய்கிறது. உரிமையியல் நீதிமன்றத்திற்குச் சமமாக இம்மன்றம் கருதப்படுகிறது.

**குடும்பநீதிமன்றம்: 1984** ஆம் ஆண்டு குடும்பநீதி மன்றச் சட்டப்படி இந்நீதி மன்ற நோக்கம், சமாதானப்படுத்துதல், விரைந்து வழக்குகளை முடித்துவைத்தல் போன்ற பணிகளைக் குடும்பம் மற்றும் திருமண விவகாரத்தில் செய்கிறது.

*செயல்பாடுகள்*

*உயர் நீதிமன்றத்தின்அதிகாரங்களும் பணிகளும் பற்றிக் கட்டுரை வரைக.*

*களப்பணி: நகரத்தில் உள்ள நீதிமன்றங்களைப் பார்வையிட்டு, உற்றுநோக்கிப் பணிகளை பதிவு செய்தல்.*

## 3.3 உள்ளாட்சி அமைப்புகள்

இந்திய நாடு மூன்றடுக்கு ஆட்சியமைப்பைக் கொண்டுள்ளது. அவையாவன

1. மைய அரசு அல்லது நடுவண் அரசு
2. மாநில அரசு
3. உள்ளாட்சி அமைப்புகள்
   - நகர் பாலிகா, 11–வது அட்டவணை
   - கிராம ஊராட்சி, 12–வது அட்டவணை

சோழர் ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாகச் செயல்பட்டன. குடவோலை முறை மூலம் உள்ளாட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என உத்திரமேரூர் கல்வெட்டு தெளிவாகக் குறிப்பிடுகிறது. மேலும் இக்கல்வெட்டு கிராமச் சபைகள் பற்றியும், வாரியங்கள் அமைத்துப் பொது அலுவல்களைக் கவனித்தது பற்றியும் குறிப்பிடுகிறது. விஜயநகர அரசிலும் கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சியில் வைசிராய் ரிப்பன் பிரபு காலத்தில் 1884இல் "தல சுய ஆட்சித் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி ஜில்லா போர்டுகளும், தாலுகா போர்டுகளும் ஏற்படுத்தப்பட்டன.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு தாலுகா, ஜில்லா போர்டுகள் ஒழிக்கப்பட்டன. கிராமப் பஞ்சாயத்து யூனியன், நகராட்சிகள், மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டன. பல்வேறு காரணங்களால் உள்ளாட்சி அமைப்புகள் நலிவடைந்தன. பல உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்டன. பல்வேறு அரசியல் காரணங்களால் உள்ளாட்சி அமைப்புகள் தேர்தல் நடைபெறவில்லை. எனினும் அவை அனைத்தும் தனி அதிகாரிகளின் கீழ் செயல்பட்டன.

### 3.3.1 பஞ்சாயத்து ராஜ் சட்டம்

இந்தியாவின் உயிர் நாடியாகிய கிராமங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் புத்துயிர் ஊட்டி அவைகளுக்கான தேர்தல் நடைபெற முன்னாள் பிரதமர் திரு ராஜிவ்காந்தி அவர்களால் உருவாக்கப்பட்டதே பஞ்சாயத்துராஜ் சட்டம் ஆகும். இந்திய அரசியலமைப்பின் 73 ஆவது மற்றும் 74 ஆவது திருத்தங்களால் பஞ்சாயத்துராஜ் சட்டமும், நகர் பாலிகா சட்டமும் நிறைவேற்றப்பட்டன. மாநில அரசுகள் தத்தம் மாநிலத்தில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப தனியான சட்டங்களை உருவாக்க இது வழி வகைசெய்தது.

### பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் சிறப்புகள்

1. இச்சட்டத்தின் மூலம் கிராமம், பஞ்சாயத்து, ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் அதிகாரப் பரவல் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் தேவைகளையும் வளர்ச்சியையும் தாங்களாகவே திட்டமிட்டு நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பை அளித்துள்ளது.

2. மத்திய மாநில அரசுகளுக்கு இணையான அங்கீகாரத்தை இச்சட்டம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளை அனைத்து மாநிலங்களிலும் கண்டிப்பாக அமுல்படுத்த இச்சட்டம் உறுதிசெய்தது. காலம் தாழ்ந்தபோதும் உள்ளாட்சி அமைப்பின் உருவாக்கத்தையோ செயல்பாட்டையோ தவிர்த்திட முடியாது.

3. நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுவதுபோல், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெற இச்சட்டம் வலியுறுத்துகிறது. உள்ளாட்சி அமைப்புகளை மாநில அரசு கலைத்தால் உடனே 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

4. உள்ளாட்சித் தேர்தலை நடத்த மாநில அளவில் உயர்நீதிபதி தகுதி கொண்ட மாநிலத் தேர்தல் கமிஷன் ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. பஞ்சாயத்து ராஜ் அமைப்பு கிராமம், ஒன்றியம், மாவட்டம் என்ற மூன்றடுக்கு கொண்டது. இதைப்போன்று நகர்பாலிகா பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளைக் கொண்டது. இவை தனித்த உள்ளாட்சி மன்றங்கள் ஆகும்.

6. தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினருக்கு அப்பகுதி மக்கள் தொகையில் அவர்களிருக்கும் சதவீதத்திற்கு ஏற்ப இட ஒதுக்கீடு செய்யப்படும். அனைத்துப் பதவிகளிலும் (மேயர், பஞ்சாயத்துத் தலைவர், ஒன்றியத்தலைவர், மாவட்டத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்) மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

7. விவசாயம், நிலமேம்பாடு, கால்நடை, மீன்வளம், நீர்ப்பாசனம், சமூகக் காடுகள், சாலைகள், சாலை விளக்குகள், கல்வி, வறுமை ஒழிப்பு, நூலகங்கள், சுகாதாரம், குடும்ப நலம், பொது விநியோகமுறை போன்ற 29 வகையான கடமைகளை ஆற்றுவதற்குப் பஞ்சாயத்து அமைப்புகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

8. மாநில அளவில் பஞ்சாயத்து நிதிக்கமிஷன் ஒன்று நிதிஒதுக்கீட்டிற்கு ஆலோசனை கூற உருவாக்கப்பட்டுள்ளது.

9. மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மாவட்டத் திட்டக்குழு அமைத்து வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவர்.

### 3.3.2 தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் – 1994

தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் அமைப்பு மூன்றடுக்குளைக் கொண்டது.

1. கிராம ஊராட்சி
2. ஊராட்சி ஒன்றியம்
3. மாவட்டப் பஞ்சாயத்து

கிராம ஊராட்சியில் மக்கள்தொகை 500க்குக் குறையாமல் இருப்பர். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 5க்குக் குறையாமலும் 15 க்கு மிகாமலும் உறுப்பினர்கள் இருப்பர். இதன் உறுப்பினர்களை வாக்காளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பர்.

### தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்ட திருத்தம் – 2006

1994, தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டப்படி உள்ளாட்சி அமைப்பில் மாநகராட்சி மேயர், நகராட்சித் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வீண் செலவுகளையும், கால விரயத்தையும் தவிர்ப்பதற்காக, 2006 தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டத் திருத்தப்படி மாநகராட்சி மேயர், நகராட்சித் தலைவர், கிராம ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் போன்ற பதவிகளை வார்டு உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.

### 3.3.3 கிராம ஊராட்சி

மக்கள் தொகை 500க்குக் குறையாமல் உள்ள கிராமங்களில் கிராம ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 12,618 ஊராட்சி மன்றங்கள் உள்ளன. ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் தங்களுக்குள் தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பர். கிராம ஊராட்சியில் உள்ள எல்லா வாக்காளர்களும் கிராமச் சபையில் உறுப்பினர் ஆவர். ஆண்டுக்கு 3 முறை கிராமச் சபை கண்டிப்பாகக் கூட்டப்படவேண்டும்; ஊராட்சி மன்றத் தலைவர் கிராமச் சபையின் தலைவருமாவார்.

6 மாதங்களுக்கு ஒரு முறை கிராமச்சபை கட்டாயம் கூட்டப்பட வேண்டும். ஊராட்சிகளின் ஆண்டுத் திட்டங்களை அங்கீகரித்தல், வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல், ஊராட்சியின் பணிகளைக் கண்காணித்தல், இவை கிராம ஊராட்சிகளின் பணிகள். ஊராட்சி மன்றத் தலைவரே கிராமச்சபை, மற்றும் ஊராட்சிமன்றக் கூட்டங்களைக் கூட்டுவார். அனைத்திற்கும் இவரே தலைமை வகிப்பார்.

### 3.3.4 ஊராட்சி ஒன்றியம்

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பின் இரண்டாவது நிலை ஊராட்சி ஒன்றியம் ஆகும். இது ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் அமைக்கப்படும். தமிழ்நாட்டில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஒன்றிய உறுப்பினர்களைக் கட்சி அடிப்படையில் வாக்காளர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 1/5 பங்கு எண்ணிக்கைக்குச் சமமான உறுப்பினர்களை ஊராட்சி மன்றத் தலைவர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுப்பர். ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் அனைவரும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களாக இருப்பர். இவ்வாறு இது ஐவகை உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக இருக்கும். ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரையும், துணைத் தலைவரையும் தேர்ந்தெடுப்பர். தலைவர் சேர்மன் என அழைக்கப்படுவார்.

#### தலைவரின் கடமைகள்

- ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தைக் கூட்டுதல்.
- புதிய சட்டப்படி கடமைகளைச் செய்தல், அதிகாரம் செலுத்துதல்,
- ஆவணங்களைக் கையாளுதல்
- அரசுக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் இடையே பாலம் போல் செயல்படுதல்.

### 3.3.5 மாவட்ட ஊராட்சி

ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி செயல்படும் 20,000 மக்கள் தொகை தொகுதிகளாக மாவட்ட பஞ்சாயத்து பிரிக்கப்படும். வாக்காளர்கள் மாவட்ட ஊராட்சிக்கு ஒரு உறுப்பினரைக் கட்சி அடிப்படையில் தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு ஈடாக 1/5 பங்கு உறுப்பினர்களை ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்ந்தெடுப்பர். அந்த வருவாய் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மற்றும் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களாகச் செயல்படுவர். இவ்வாறு இது ஐவகை உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக இருக்கும்.

#### மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவரின் பணிகள்

- மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டுதல்.
- பஞ்சாயத்து ராஜ் அளிக்கும் உரிமைகளையும் கடமைகளையும் அதிகாரத்தையும் செயல்படுத்துதல்.
- மாவட்ட ஊராட்சி ஆவணங்களைக் கையாளுதல்.
- அரசுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் இடையே இனிய நல்லுறவை ஏற்படுத்துதல்.

### வாக்குரிமை

உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாக்காளர்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 3 வாக்குகளை (மாவட்ட ஊராட்சி உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர், ஊராட்சி மன்ற உறுப்பினர்) பதிவு செய்வர். நகர, மாநகர வாக்காளர்கள் (நகர உறுப்பினர் / மாநகர உறுப்பினர்) உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கினைப் பதிவு செய்வர்.

### இட ஒதுக்கீடு

பஞ்சாயத்துகளில் எல்லா நிலைகளிலும் உள்ள எல்லாப்பதவிகளிலும் 1/3 பங்கு பதவிகள் பெண்களுக்குச் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு அந்தந்த ஊராட்சி அமைப்பில் அவர்கள் இருக்கும் விகிதாசாரத்திற்கு ஏற்ப இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

### பதவிக்காலம்

பஞ்சாயத்து அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள். மாநிலஅரசு உரிய காரணத்திற்காக அமைப்பைக் கலைக்கும் பட்சத்தில் 6 மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். 5 ஆண்டுக் காலம் முடிவதற்கு 6 மாதங்கள் முன்னரே அடுத்த 5 ஆண்டுகளுக்கான தேர்தல் நடைபெறும். முதல் கூட்டத்திலிருந்து 5 ஆண்டுகள் கணக்கிடப்படும். இந்த முதல் கூட்டத்தின் தேதியை மாவட்டத் தேர்தல் ஆணையர் நியமிப்பார். மாநில அரசைக் கலந்து கொண்டு தேர்தல் ஆணையர் தேர்தலை நடத்துவார்.

## 3.3.6 மாநிலத் தேர்தல் ஆணையம்

பஞ்சாயத்து அமைப்புகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களை நடத்த, தேர்தல் ஆணையம் ஒன்றை ஏற்படுத்த, சட்டம் இடம் தருகிறது. மாநிலத் தேர்தல் ஆணையர் மாநில அரசுப் பரிந்துரைப்படி ஆளுநரால் நியமிக்கப்படுவார். இவர் அரசுச் செயலர் நிலையில் உள்ளவராக இருக்க வேண்டும். இவரது பதவிக்காலம் இரண்டாண்டுகள். இருமுறை இவருடைய பதவிக்காலம் நீட்டிக்கப்படலாம். ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஒருவரே தொடர்ந்து ஆணையராக இருக்க முடியாது. 62 வயது நிறைவடைந்ததும் இவர் பதவிக்காலம் முடிந்து விடும். உயர் நீதிமன்ற நீதிபதிக்கு உரிய பணிப்பாதுகாப்பு இவருக்கு உண்டு. இவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமானால் சட்டமன்றத்தின் 2/3 உறுப்பினர்களின் சம்மதத்துடன் தீர்மானம் இயற்றப்பட வேண்டும். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநில உள்ளாட்சித் தேர்தலை அரசுடன் கலந்து கொண்டு இவர் நடத்துவார். தேர்தல் அறிவிப்பு முதல் தேர்தல் முடிவு அறிவிப்பு வரை அனைத்திற்கும் இவரே பொறுப்பாவார். தேர்தல் முடிந்தவுடன் உள்ளாட்சி அமைப்புகளின் முதல் கூட்டத் தேதியை நிர்ணயிப்பவரும் இவரே.

### 3.3.7 பஞ்சாயத்து நிதிக் கமிஷன்

ஆளுநர், அரசு ஆலோசனைப்படி, தலைவர் ஒருவரையும் 4 உறுப்பினர்களையும் கொண்ட பஞ்சாயத்து நிதிக் கமிஷன் ஒன்றை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நியமிப்பார். இந்த அமைப்பு அரசு பஞ்சாயத்து அமைப்புகளுக்குப் பிரித்து வழங்கப்பட வேண்டிய நிதிக்கொள்கை மற்றும் பஞ்சாயத்து அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள ஆலோசனைகள் குறித்து மாநில ஆளுநருக்குப் பரிந்துரை செய்யும். இதை ஆளுநர் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைப்பார்.

**நிர்வாக அதிகாரிகள்**

★ கிராம ஊராட்சி மன்றம் – ஊராட்சி மன்றத் தலைவர்.

★ ஊராட்சி ஒன்றியங்கள் – ஆணையர் – (B.D.O)
(வட்டார வளர்ச்சி அலுவலர்)

★ மாவட்டப் பஞ்சாயத்து – செயல் அலுவலர்.

★ நகரப் பஞ்சாயத்து – செயல் அலுவலர்.

★ நகராட்சிகள் – நகராட்சி ஆணையர்,

★ மாநகராட்சிகள் – மாநகராட்சி ஆணையர்

### 3.3.8 மாவட்டத் திட்டக் குழு

மாவட்ட அளவில் பஞ்சாயத்து அமைப்புகளுக்குத் திட்டமிடும் பணிக்காக ஒரு மாவட்டத் திட்டக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வாளர்**

பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் அவற்றை நெறிப்படுத்தவும் மாவட்ட ஆட்சியாளரே ஆய்வாளராகப் பணிபுரிவார். பஞ்சாயத்து அமைப்புகள் நிறைவேற்றும் தீர்மானங்கள் சட்ட விரோதமாக இருந்தாலும், பொது மக்கள் நலனுக்கு உகந்ததாக இல்லாவிட்டாலும் அவற்றை ரத்து செய்யும் அதிகாரம் இவருக்குண்டு. பஞ்சாயத்து அமைப்புகளின் வரவு செலவுத் திட்டத்தில் தேவைப்பட்ட மாறுதல்கள் செய்யும் அதிகாரமும் இவருக்குண்டு. பஞ்சாயத்து அமைப்புகள் அவசரக் காலங்களில் செய்யத் தவறும் பணிகளை நேரடியாகச் செய்யும் உரிமை இவருக்குண்டு. பஞ்சாயத்து அமைப்பு உறுப்பினர்களில் 2/3 உறுப்பினர் ஆதரவின் பேரில் பஞ்சாயத்து அமைப்புகளில் தலைவர்களை நீக்கக் கோரினால், நீக்கும் அதிகாரமும் இவருக்குண்டு. இத்தகையத் தீர்மானம் இல்லாதபோதும் தலைவர்களைப் பதவி நீக்கம் செய்யும் உரிமை இவருக்குண்டு.

பஞ்சாயத்து அமைப்பின் வட்டார வளர்ச்சி அலுவலர், விரிவாக்க அலுவலர், கிராம அலுவலர்கள், ஆசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், பஞ்சாயத்துச் செயல் அலுவலர்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருப்பர்.

### 3.3.9 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்

நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களின் தேவைகளும் வசதிகளும் பெருகி வருகின்றன. பெருகிவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை: பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி.

#### பேரூராட்சி

தமிழ்நாட்டில் மொத்தம் **561** பேரூராட்சிகள் உள்ளன. பேரூராட்சி உறுப்பினர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பேரூராட்சிச் தலைவரை மறைமுகமாகத் தேர்ந்தெடுப்பர்.

***செயல்***

*தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் பெயர்களைப் பட்டியலிடுக.*

#### நகராட்சி

தமிழ்நாட்டில் மொத்தம் **150** நகராட்சிகள் உள்ளன. நகராட்சி வார்டு உறுப்பினர்களை மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். நகராட்சி வார்டு உறுப்பினர்கள் நகராட்சித் தலைவரை மறைமுகமாகக் கட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள். இதன் தலைவர் 'நகராட்சித் தந்தை' என்று அழைக்கப்படுவார்.

#### மாநகராட்சி

தமிழ்நாட்டில் மொத்தம் **8** மாநகராட்சிகள் உள்ளன. வார்டு உறுப்பினர்கள் மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர்களைக் கவுன்சிலர் என்று அழைப்பர். கட்சி அடிப்படையில் மாநகராட்சி தலைவரை கவுன்சிலர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். மாநகராட்சியின் தலைவர் 'மேயர்' என்று அழைக்கப்படுகிறார்.

#### நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள்

மக்களுக்குத் தேவையான சாலைவசதி, பூங்காக்கள், கல்வி, சுகாதாரம், குடிநீர், பாதாளச்சாக்கடை, துப்புரவுப் பணி, மின்விளக்குகள் ஆகிய பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செய்கின்றன.

#### நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய்

- ★ மத்திய மாநில அரசு அளிக்கும் நிதி உதவி.
- ★ வீட்டுவரி, கேளிக்கை வரி, தொழில் வரி, சொத்துவரி, குடிநீர் வரி, விளம்பர வரி போன்ற வரி விதிப்புகள் மூலம் கிடைக்கும் வருவாய்.

## 3.4 முடிவுரை

இந்தியா வளரும் நாடுகளின் வரிசையில் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவின் வளர்ச்சியை உலக நாடுகள் உற்று நோக்கி வருகின்றன. இந்திய வளர்ச்சிக்கு அதன் சட்டங்களும், ஆட்சியாளர்களும் காரணமாகின்றனர். நிலையான, மக்கள் மீது கரிசனையும், அக்கறையும் கொண்ட அரசு அமையும் போது தான் நாடு முன்னேற்றம் அடையும். நமது நாட்டின் மைய – மாநில – உள்ளாட்சி அரசமைப்புகள் மக்களாட்சியைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதால், இவை மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது. இத்தகைய அரசமைப்புகள், மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள சமமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இத்தகைய அரசமைப்பு சமத்துவம் மற்றும் உரிமைக் கோட்பாடுகளின் அடிப்படையில், அனைவரது நலன்களையும் பாதுகாக்கின்றது. இதனால் 'மண்ணின் மைந்தன்' கொள்கை மறக்கப்பட்டு, நாட்டுப்பற்று வளர்க்கப்படுகின்றது. இந்த தேசிய உணர்வு, மக்களிடையே உள்ள வேற்றுமைகளை களைந்து ஒற்றுமையுடன் வாழ வழிவகை செய்கின்றது. எனவே வளமான, வலுவான, இந்தியா உருவாக இந்தியர் அனைவரும் இணைந்து செயல்படுவோம்.

## 3.5 பார்வை நூல்கள்


1. Agarwal. R.C., Constitutional history of India and National Movement, New Delhi, 1981.
2. Keshyap Subhash. C, Our parliament, New Delhi, 3rd Edition, 1995.
3. Majumbar, R.C, An advanced History of India, Macmillan India Ltd. 1985.
4. Mahajan. V.D. Constitutional Law of India, 7th Edition, Lucknow, (1991).
5. Shukla, V.N. Constitution of India 8th edn. M.P. Singh, Lucknow, 1990.

# அலகு – IV

# பேரண்டம் – அண்டம் – சூரிய மண்டலம்

## அறிமுகம்

நாம் புவியின் மேற்பரப்பில் வாழ்கிறோம். புவியின் கூறுகளான நிலம், நீர், காற்று ஆகிய யாவும் புவியின் மேற்பரப்பிலேயே காணப்படுகின்றன. நாம் இருக்குமிடத்திலிருந்து வானைப் பார்க்கும்போது எண்ணற்ற நட்சத்திரக் கூட்டங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். நம் பார்வைக்கு அப்பாலும் நட்சத்திரக் கூட்டங்கள் உள்ளன. மில்லியன் கணக்கான நட்சத்திரக் கூட்டங்கள் அடங்கிய மிகப்பெரிய விண்பரப்பை நாம் பேரண்டம் என்கிறோம்.

பேரண்டத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டத்திற்கு அண்டம் என்று பெயர். எண்ணற்ற அண்டங்களில் ஓர் அண்டம் **'பால்வழி அண்டம்'** என அழைக்கப்படுகிறது. பால்வழி அண்டத்தில் பல்லாயிரக் கணக்கான சூரிய மண்டலங்கள் உள்ளன. அதில் ஒரு சூரிய மண்டலமே நாம் காணும் சூரியனும், சூரியனைச் சுற்றியுள்ள ஒன்பது கோள்களும் ஆகும். ஒன்பது கோள்களுள் ஒன்று 'புவி' என்பது நாம் அறிந்ததே. புவியில் உயிரினங்கள் வாழத் தகுந்த வெப்பநிலை, நீர், நிலம், காற்று போன்ற அடிப்படை வளங்கள் அமைந்துள்ளதால் மற்ற கோள்களைக் காட்டிலும் சிறப்பானதொரு கோளாகக் கருதப்படுகிறது. புவியில் நாம் வாழ்வதாலும் புவியில் நம் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வளங்கள் அமைந்துள்ளதாலும் புவியில் உள்ள வள அமைப்பே நம் வாழ்க்கை முறைகளையும் நிர்ணயிப்பதாலும், புவியின் இயல்பு பற்றியும், அதன் கூறுகள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்வதும், பள்ளி மாணாக்கர்க்கு எடுத்துரைப்பதும் அவசியம்.

## அலகுக்கூறுகள்

4.1 பேரண்டம்

4.2 அண்டம்


4.3 சூரிய மண்டலம்

4.4 புவி

- 4.4.1 புவியின் வடிவம்
- 4.4.2 புவியின் சுழற்சி
- 4.4.3 புவியின் அளவு
- 4.4.4 புவி சூரியனை வலம் வருதல்
- 4.4.5 புவியும் உயிரினமும்

## 4.1 பேரண்டம் (Universe)

பேரண்டம் என்பது பரந்து விரிந்த விண்வெளி மண்டலம் ஆகும். இம்மண்டலம் சிறிய விண்வெளிப் பொருட்களிலிருந்து மிகப்பெரிய அளவிலான பால்வழி அண்டம் வரை உள்ளடக்கியது. அளவினைப் பொறுத்தவரை பெரியது என்று யாராலும் யூகிக்க இயலாது. விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து பேரண்டத்தைப் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொண்டு வருகிறார்கள். பேரண்டத்தின் அளவினை அறிவதற்கு ஸ்பெக்ட்ரோஸ்கோப் (Spectroscope) என்ற கருவியினைப் பயன்படுத்தி, விண்ணிலுள்ள பொருட்கள் புவியிலிருந்து தூரத்தில் இயங்கக்கூடியது என்றும், புவியை நோக்கி வந்து அருகில் இயங்கக் கூடியது என்றும் கூற இயலும் என்று கருதுகின்றனர். இதன் அடிப்படையில் வெளிப்படும் செய்திகளைக் கொண்டு, பேரண்டம் அனைத்துத் திசையிலும் வெளிப்புறத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.




**பேரண்டம் தோன்றக் காரணம்:** சுமார் 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன், சக்தி வாய்ந்த வெடிப்பு நிகழ்ந்திருக்கக் கூடும் என்று அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இந்த நிகழ்வினை 'பிங்பாங்' கோட்பாடு என்று பெயரிட்டனர். பிங்பாங் கோட்பாட்டின்படி நடந்த சக்தி வாய்ந்த வெடிப்பே பேரண்டம் உருவாவதற்கும், இயங்குவதற்கும் காரணம். ஆனால் இந்த இயக்கம் நின்று விடும் என்றோ, திசையினை மாற்றிக் கொள்ளும் என்றோ அல்லது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் என்றோ உறுதி கூற இயலாது என்று அறிவியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால் பிங்பாங் நிகழ்விற்குப் பின் பேரண்டம் விரிந்து இன்றைய நிலையில் உள்ளது. இப்பேரண்டத்தில் எண்ணற்ற நட்சத்திரத் தொகுதிகளும், மில்லியன் கணக்கில் அண்டங்களும் உள்ளன.

## 4.2 அண்டம் (Galaxy)

பல நட்சத்திரங்களின் தொகுப்புக் கூட்டம் அண்டம் என்றழைக்கப்படுகிறது. அண்டங்களில் காணப்படும் நட்சத்திரத் தொகுதிகள் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்பு விசையால் கூட்டாகப் பிணைக்கப்பட்டுள்ளன. அண்டம் எண்ணற்ற நட்சத்திரங்கள், வாயுக்கள், தூசுக்கள் உள்ளடக்கியது ஆகும். ஓர் அண்டத்தில் மில்லியன் அல்லது பில்லியன் கணக்கில் நட்சத்திரங்கள் உள்ளன. பல பில்லியன் அண்டங்கள் தொகுப்பே பேரண்டம் (Universe) என்கிறோம். நட்சத்திரங்களில் முக்கியமானது சூரியன். சூரியக் குடும்பத்தையும், சூரிய குடும்பம் உள்ள அண்டத்தினையும் 'பால்வழி அண்டம்' என்று கூறுவர். இது 'சுருள்' வடிவத்தினைக் கொண்டது.

அண்டங்கள் அதன் வடிவத்தினைக் கொண்டு பெயரிடப்படுகிறது. நாம் வாழும் அண்டத்திற்குப் 'பால்வழி அண்டம்' (Milky way galaxy) என்று பெயர். அது சுருள் வடிவத்தினைக் கொண்டது. சில அண்டங்கள் நீள் வட்ட வடிவத்தினைக் கொண்டதாக உள்ளன. சில அண்டங்கள் ஒழுங்கற்றவையாக' உள்ளன. ஏனெனில் அவை எந்த ஒரு வடிவத்தினையும் ஒத்திருக்கவில்லை என்று கருதப்படுகிறது. தற்பொழுது புதிய வகை பேரண்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்பேரண்டத்திற்கு 'நட்சத்திரச் சிதறல் (Star Burst) என்று பெயர். இந்த அண்டத்தில் அதிகப் பளுவினால் புதிய நட்சத்திரங்கள் திடீரெனத் தோன்றுவதற்கு வழிகள் இருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. பேரண்டத்தில் கிட்டத்தட்ட 100 மில்லியனுக்கு மேலான அண்டங்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது. பெரும்பான்மையான அண்டங்கள் அமைப்பின்படி (hierarchy) தொகுப்புகள் எனவும், மிகப்பெரிய கூட்டத்தினை சூப்பர் தொகுப்புகள் எனவும் அழைக்கிறார்கள்.

## 4.3 சூரிய மண்டலம்

***செயல்***

*சூரியக்குடும்பம் பற்றிய மாதிரியைத் தானே கற்றல் கருவியாகப் பயன்படுத்தும்படி தயாரிக்க.*

நாம் வாழும் புவியானது நம்மைச் சுற்றியுள்ள பேரண்டத்தில் ஒரு பகுதியாகும். சூரிய மண்டலத்தில் சூரியன், ஒன்பது கோள்கள், துணைக் கோள்கள் ஆயிரக் கணக்கான கோள் சிதறல்கள் (Asteroids), மில்லியன் கணக்கான வால் நட்சத்திரங்கள், பெருங்குழுக்களான விண்கற்கள் முதலியன அடங்கும். சூரியக் குடும்பத்தின் மையப்பொருள் சூரியன் ஆகும். சூரியனின் மைய ஈர்ப்பு விசையால் சூரியக் குடும்பத்தின் அமைப்பு யாவும் தத்தம் பாதையில் பிறழாது, நகர்கின்றன. சூரியனிடமிருந்து வெவ்வேறு தொலைவில் அவை சூரியனைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன. சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்கள் அனைத்தும் நீள் வட்டப் பாதைகளில் சூரியனைச் சுற்றி வருகின்றன. கோள்களுக்குத் தனி ஒளி கிடையாது. அவை சூரிய ஒளியைப் பிரதிபலிக்கின்றன.

**சூரியன் (Sun):** சூரியன் எனும் விண்மீனானது எரிவாயுக்களால் ஆன அமைப்பாகும். இதிலிருந்து தொடர்ந்து தீப்பிழம்புகள் வெப்பத்தை வெளியிட்டுக் கொண்டேயிருக்கின்றன. புவியில் வாழும் தாவரங்கள், பிராணிகள், ஏனைய உயிரினங்கள் அனைத்திற்கும் ஆதாரமான சக்தி சூரியனிடமிருந்தே கிடைக்கின்றது. சூரியனில் 92% ஹைட்ரஜன், 7.8% ஹீலியம், 0.2% இதர வாயுக்கள் உள்ளன. ஒரு வினாடிக்கு 700 பில்லியன் டன் ஹைட்ரஜன் எரிந்து ஹீலியமாக மாற்றப்படுகிறது. சூரியனின் மேற்பரப்பு வெப்ப நிலையானது ஏறத்தாழ $6000^{0}C$. சூரியனின்

உட்புறத்தின் மையப்பகுதியில் ஒரு கோடி டிகிரி செல்சியஸ் வெப்பம் நிலவுகிறது. ஆனால் பெரு வெடிப்பின் போது 10 ஆயிரம் கோடி டிகிரி செல்சியஸ் வெப்பம் வெளிப்பட்டது என்றால் கற்பனை செய்து பாருங்கள்! எனவே சூரியனின் அருகில் செல்லும் எப்பொருளும் உடனே எரியுற்றுக் கருகி விடும்.

**கோள்கள் (Planets):** சூரியக் குடும்பத்தில் ஒன்பது கோள்கள் உள்ளன. அவை புதன், வெள்ளி, புவி, செவ்வாய். வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் மற்றும் புளூட்டோ ஆகும். கோள்களை அவற்றின் அமைப்பைக் கொண்டு பாறைக்கோள்கள், வாயுக் கோள்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். புதன், வெள்ளி, புவி, செவ்வாய் ஆகிய கோள்கள் சிறிய உருவத்துடன், பெருமளவு பாறைகளையும், சிறிதளவு வாயுக்களையும் கொண்டுள்ளன. எனவே இவை பாறைக்கோள்கள் என அழைக்கப்படுகின்றன. வியாழன், சனி, யுரேனஸ், நெப்ட்யூன் ஆகிய கோள்கள் பெரிய உருவத்துடன் பெருமளவு வாயுக்களையும் சிறிதளவு பாறைகளையும் கொண்டுள்ளன. எனவே இவை வாயுக்கோள்கள் என அழைக்கப்படுகின்றன. புளூட்டோவில் வாயுக்களும் மிகக் குளிர்ந்த நிலையில் திடமாக மாதிரி உள்ளதால் இதனை மட்டும் ‘பனிப்பந்து’ என்று அழைக்கின்றனர்.

**துணைக் கோள்கள் (Satellite)**: சாடிலைட் என்னும் சொல்லுக்குப் பின்பற்றுபவன் என்று பொருள். குறிப்பிட்ட கோள்களைச் சுற்றிச் சில துணைக் கோள்கள் சுற்றுகின்றன. கோள்களோடு சார்ந்த அவை சூரியனையும் சுற்றி வருகின்றன. புவியின் துணைக்கோள் சந்திரன். அதனைப் போன்று மேலும் முப்பது துணைக்கோள்கள் சூரியக் குடும்பத்தில் உள்ளன. கோள்களைப் போன்றே துணைக்கோள்களுக்கும் சுய ஒளி கிடையாது. சூரியக்குடும்பத்தில் சில கோள்களுக்கு மட்டுமே துணைக்கோள்கள் உண்டு.

**சந்திரன் (Moon):** இது புவியின் துணைக்கோள். இது புவியின் அளவில் 1/80 பங்கு மட்டுமேயாகும். இது புவியிலிருந்து 384,000 கி.மீ தொலைவில் உள்ளது. சந்திரனின் விட்டம் 3480 கி.மீ. சந்திரன் தன் அச்சில் சுழன்று புவியையும் 27.3 நாட்களில் சுற்றி வருகின்றது. சந்திரனுக்குச் சுய ஒளி கிடையாது. அதன் ஒளியும், ஒளிர்வும் சூரியனிடமிருந்து பிரதிபலிக்கப்படுவதே ஆகும். புவியைச் சுற்றி வரும்போது அதன் ஒரு பகுதியில் மட்டுமே சூரிய ஒளி படும். புவியிலிருந்து பார்க்கும்போது ஒளிவிடும் அப்பகுதி மட்டுமே புலப்படும். அமாவாசைக்குப் பிறகு ஒளிவிழும் பகுதியின் அளவு அதிகரித்துக் கொண்டே போகும். பௌர்ணமியன்று முழுச் சந்திரனும் புவியிலிருந்து காணும்போது ஒளியோடு தெரியும், பௌர்ணமிக்குப் பிறகு, சந்திரனின் ஒளிமிக்க பகுதியின் அளவு படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லும். அடுத்த அமாவாசையில் மீண்டும் சந்திரன் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அமாவாசை முதல் பௌர்ணமி வரையிலான காலம் வளர்பிறை. பௌர்ணமி முதல் அமாவாசை வரையிலான காலம் தேய்பிறையாகும்.

**வால்நட்சத்திரங்கள் (Comets):** கோமாவுடன் தூசுக்களால் ஆன நீண்ட வாலுடன் கூடிய தோற்றமே வால் நட்சத்திரம். இவற்றிற்கு நீண்ட குறுகிய வால்பகுதி உண்டு. நீள்வட்டப் பாதையில் நகர்கின்றன. இவை திடீரென ஓர் ஒளிக் கீற்றாக ஒரு சில வினாடிகளுக்கு மட்டும் நீடிக்கின்றன. சூரியனுக்கு அருகில் செல்லும்போது அவை புலப்படும். வால் நட்சத்திரங்கள் இரு வகைப்பட்டவை.

## ஹேலி வால் நட்சத்திரம்



- எட்மண்ட்ஹேலி என்பவர் 1682–ல் பார்த்த வால் நட்சத்திரம்
- 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும் என ஹேலி கருதினார்
- 1986 ஆம் ஆண்டு மீண்டும் இந்நட்சத்திரம் விண்ணில் தென்பட்டது.
- எதிர்காலத்தில் 2062–ம் ஆண்டு தென்படும் எனக் கருதப்படுகிறது.



**ஹேலி வால் நட்சத்திரம்** **எட்மண்ட் ஹேலி**

1. குறிப்பிட்ட இடைவெளியில் மீண்டும் மீண்டும் அமைபவை. ஹாலியின் வால்நட்சத்திரம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
2. குறிப்பிட்ட இடைவெளியின்றி எப்போதேனும் அமைபவை.

ஹேலியின் வால் நட்சத்திரம் என்பது வால் நட்சத்திரங்களுக்குள் புகழ்வாய்ந்தது ஆகும். இது 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும்.

**எரி நட்சத்திரங்கள் (Meteors):** சில சமயங்களில் இரவுப் பொழுதில் வானில் சில ஒளிக்கற்றை போன்ற அமைப்புகள் காணப்படலாம். இவை குறுகிய நேரத்திற்கே புலப்படும். இவை எரி நட்சத்திரங்கள் எனப்படுகின்றன. சூரியக் குடும்பத்தில் சிறு சிறு துகள்கள் போன்று விண் பொருட்கள் ஒழுங்கற்ற முறையில் சிதறிக் கிடக்கின்றன. இவை தனித்தனிக் கொத்துக்களாக அமைந்துள்ளன. தன் அயன வீதியில் சுற்றி வரும்போது புவியானது சில சமயங்களில் இவற்றின் அருகில் வர நேரிடுகிறது. அப்போது அப்பொருட்களில் சில மிகுந்த வேகத்துடன் புவியின் வளிமண்டலத்தில் நுழைகின்றன. புவியின் காற்று மண்டலமானது அவை நுழைவதை எதிர்க்குமுகமாக உராய்வினை உண்டாக்கும். எனவே வெப்பம் உருவாகும். இவ்வெப்பத்தினால் அப்பொருட்கள் எரிந்து விடுகின்றன. அவை வானில் ஒளிக்கற்றைகளாகத் திடீரெனப் புலப்பட்டு, விரைவில் மறைந்து விடுகின்றன. ஒவ்வொரு நாளும் புவியின் வளிமண்டலத்திற்குள் மில்லியன் கணக்கான எரிநட்சத்திரங்கள் நுழைகின்றன. அவை புவிப்பரப்பை அடைந்தால் புவிக்கு பெருத்த சேதம் உண்டாகும். ஆனால் வளிமண்டலம் எரி நட்சத்திரங்களிடமிருந்து புவியைக் காப்பாற்றுகின்றது. வளிமண்டலத்தினுள் நுழைந்ததுமே அவை எரியுண்டு மறைந்து விடுகின்றன.

**விண்கற்கள் அல்லது எரிகற்கள் (Meteorites):** பெரிய எரி நட்சத்திரங்கள் வளிமண்டலத்திற்குள் நுழைந்து புதிய பரப்பை அடைகின்றன. அவை திடமான கற்களாகப் புவியின் மீது விழுகின்றன. இவை விண்கற்கள் எனப்படும்.

## 4.4 புவி

### 4.4.1 புவியின் வடிவம்:

*செயல்*

*சூரியக் குடும்பத்தில் புவி பற்றிய சிறப்பு அம்சங்களைப் பற்றிக் கலந்துரையாடுக.*

மிக நெடுங்காலமாக மக்கள் புவியானது தட்டையானது என நம்பிக் கொண்டிருந்தனர். பன்னூறு ஆண்டுகளாக உலகின் பல பகுதிகளில் நிலவும் நிலைகளைப் பார்த்ததும், அனுபவத்தால் அவர்கள் தம் அறிவைப் பெருக்கிக் கொண்ட போது, புவியானது தட்டையான பரப்பல்ல; கோள வடிவமானது என்பதை உணர்ந்தனர்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பிதாகரஸ் எனும் கிரேக்க அறிஞர் முதன் முதலாகப் புவியானது உருண்டை வடிவமானது என உரைத்தார். அரிஸ்டாட்டில், வராஹம்வரர், ஆர்யப்பட்டா, கோபர்னிகஸ் ஆகியோரும் இந்தக் கருத்தையே கொண்டிருந்தனர். பின்னர் புவியின் வடிவம் பற்றிய எண்ணத்தையே மக்கள் நீண்ட காலமாக மறந்து விட்டனர். கொலம்பஸ் காலத்தில்தான் அந்தக் கருத்து மீண்டும் அலசி ஆராயப்பட்டது. 1520 இல் மெகல்லன் வெற்றிகரமாக ஒரே திசையில் கப்பலில் பயணித்து உலகைச் சுற்றி வந்தார். அதன் பின் புவியின் வடிவம் பற்றிய கடைசி சந்தேகமும் தீர்ந்தது. புவியின் கோள வடிவத்தைப் புலனாக்கும் சான்றுகள் பல உள்ளன.

### 4.4.2 புவியின் சுழற்சி (Rotation of the Earth)

புவியின் இரண்டு முக்கிய சலனங்கள் – சுழலுதலும், சூரியனை வலம் வருதலும் ஆகும். புவியானது அதன் அச்சின்மீது தன்னில் தானே மேற்கிலிருந்து கிழக்காக கடிகார எதிர்ச் சுழற்சியில் சுழல்கின்றது. அது ஒரு முறை சுழலும் நேரம் ஒரு நாள் (24 மணி நேரம்) ஆகும். ஒரு நாளில் பகலும், இரவும் அமைகின்றன. மிகக் குறைந்த நீளமுடைய விட்டத்தின் மீது ஒரே சீராகப் புவி சுழன்று வருவதற்குச் சுழற்சி (rotation) என்று பெயர். வட, தென் துருவங்களை இணைக்கும் கோடு பூமியின் சுழற்சி அச்சு (axis of the rotation) எனப்படும்.

### 4.4.3 புவியின் அளவு (Size)

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஏரபோஸ்தனீஸ் என்ற அறிஞர் புவியின் அளவினை நிர்ணயிக்க முதன் முறையாக முயற்சிகள் மேற்கொண்டார். புவியானது கோள வடிவமானது. ஆனால் இது ஓர் உண்மையான கோளமல்ல. அது துருவப் பகுதிகளில் சிறிது தட்டையாகவும், பூமத்திய ரேகைப் பகுதியில் சிறிது புடைப்புடனும் காணப்படுகின்றது. இவ்வமைப்பை 'புவி வடிவம்' (Geoid) என்கிறோம். எனவே புவி 'புவி வடிவம்' கொண்டது.

புவியானது ஒரு நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றது. இந்த நீள்வட்டப் பாதையில் சுற்றுகையில் புவி சூரியனுக்கு மிக அருகில் அமையும்போது அது பெரிஹீலியன் (perihelion) எனப்படும். சூரியனிடமிருந்து அதிகத் தொலைவில் அமையும்போது அது அப்ஹீலியன் (Aphelion) எனப்படும். பெரிஹீலியன் நிலை ஜனவரி ஆரம்பத்தில் அமையும். அப்போது புவி

சூரியனிடமிருந்து **146.4** மில்லியன் கி.மீ தொலைவில் அமைகின்றது. அப்ஹீலியன் நிலை ஜூலை ஆரம்பத்தில் அமையும். அப்போது தொலைவு **151.2** மில்லியன் கி.மீ. ஆகும். இதே போன்று சந்திரன் புவியை ஒட்டி நீள்வட்டப் பாதையில் சுற்றிவரும்போது புவிக்கு அருகிலும் புவியை விட்டு அதிகத் தொலைவிலும் அமைவது முறையே பெரிஜீ (perigee) அப்போஜீ (Appogee) நிலைகளாகும்.

சூரியனிடமிருந்துதான் புவிக்கு ஒளி கிடைக்கிறது. புவி தன் அச்சில் சுழன்று **(24** மணி நேரத்தில்**)** ஒருமுறை தன்னில் தானே சுற்றி முடிக்கும்போது பகலும், இரவும் அடுத்தடுத்து மாறிவரும். புவி சுழலாதிருக்குமாயின், சூரியனுக்கு எதிரேயுள்ள பகுதிகள் தொடர்ந்து மேன்மேலும் வெப்பமடைந்து கொண்டே இருக்கும். அங்கு எப்போதும் பகலாகவே இருக்கும். மறுபக்கத்திலுள்ள பகுதிகளில் எப்போதும் இரவாகவே இருக்கும். அவை மென்மேலும் குளிர்ந்து கொண்டேயிருக்கும். புவியின் சுழற்சி காரணமாகவே பகலும், இரவும் மாறி மாறி ஏற்படுகின்றன.

புவியின் அச்சு நேரானதல்ல. அது கிடைத்தளத்தில் இருந்து **66 1/2**$^{0}$ யும் செங்குத்துத் தளத்திலிருந்து **23 1/2**$^{0}$ யும் சாய்ந்திருக்கிறது. புவியின் அச்சு இவ்வாறு சாய்ந்து இருப்பதால் சில விளைவுகள் ஏற்படுகின்றன. புவியின் அச்சு நேராக இருக்குமானால் புவியில் எல்லா இடங்களிலும் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு நாளும் மாறி மாறி **12** மணிநேரம் பகலாகவும், **12** மணி நேரம் இரவாகவும் இருக்கும். ஒவ்வொரு நாளும் சூரியன் ஒரே நேரத்தில் உதித்து ஒரே நேரத்தில் மறையும். ஆனால் அச்சு சாய்ந்திருப்பதனால், பகல், இரவு பொழுதுகளின் நீட்சியில் மாறுபாடுகள் அமைகின்றன. இந்தப் பகல், இரவு நீள மாறுபாடுகள் காரணமாகப் பருவக்காலங்கள் ஏற்படுகின்றன.

### 4.4.4 புவி சூரியனை வலம் வருதல் (Revolution)

***செயல்***

*புவி மாதிரி மற்றும் டார்ச் விளக்கை வைத்து இரவு பகல் ஏற்படுவதை செய்து கற்றல்.*

புவியானது தன்னுடைய நீள்வட்டப் பாதையில் அயன வீதியில், ஓராண்டு காலத்தில் **(365 1/4** நாட்களில்**)** ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது. இதன் விளைவாகப் பருவக் காலங்கள் ஏற்படுகின்றன. அதன் அச்சானது செங்குத்துத் தளத்திலிருந்து **23 1/2**$^{0}$ சாய்ந்தும் புவியின் பல்வேறு நிலைகளில் பல்வேறு அட்சரேகை சூரியனின் கதிர்களைப் பெறுகின்றன. எனவே ஒவ்வொரு பருவத்திலும் பகல் இரவு நீட்சி மாறுபடுகின்றன.

**பருவக்காலங்கள்:** பகல் இரவுப்பொழுதின் நீளம் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது. ஒரே இடத்தில் கூட பகல் இரவு நேரம் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாய் இல்லை. பருவத்திற்குப் பருவம் மாறுபடுகின்றது. ஓர் ஆண்டினை நான்கு பருவங்களாகப் பிரிக்கலாம்.

வசந்தகாலம் – (spring)

கோடைகாலம் – (summer)

இலையுதிர்காலம் – (Autumn)

குளிர்காலம் – (Winter)

புவி சூரியனைச் சுற்றி வரும்போது சில குறிப்பிட்ட மாதங்களில் வடஅரைக்கோளமானது சூரியனுக்கு எதிரே அமைந்து கோடைப்பருவத்தினை அனுபவிக்கும். குறிப்பிட்ட சில மாதங்களில் புவியின் தென்அரைக் கோளமானது சூரியனுக்கு எதிரே அமைந்து கோடையை அனுபவிக்கும்.

ஜுன் 21 – இல் வடதுருவம் சூரியனை நோக்கிச் சாய்ந்துள்ளது. தென் துருவம் சூரியனிடமிருந்து அதிகத் தொலைவில் அமைகின்றது. வடதுருவப் பகுதியில் தொடர்ந்து பகல் பொழுதும், தென் துருவப்பகுதியில் தொடர்ந்து இரவுப் பொழுதும் ஏற்படுகின்றன. சூரியனின் செங்குத்துக் கதிர்கள் 23 1/2$^0$ வடக்கு கடகரேகையில் விழுகின்றன. வடஅரைக்கோளத்தில் பெரும்பகுதி சூரியனை நோக்கி இருப்பதால் பகற்பொழுது நீண்டதாகவும், தென்அரைக் கோளத்தில் இரவுப்பொழுது நீண்டதாகவும் நிலவும். ஜுன் மாதத்தில் வடஅரைக்கோளத்தில் கோடைப்பருவமும், தென்அரைக் கோளத்தில் குளிர்ப்பருவமும் நிலவும்.

ஜுன் 21–க்குப் பிறகு சூரியன் தெற்கு நோக்கித் திரும்புவதுபோல் தோன்றும். தெற்காக நகரும் சூரியன் செப்டம்பர் 23 இல் பூமத்திய ரேகையைக் கடந்து தென்அரைக் கோளத்தில் நுழையும். மேலும் தெற்காகச் செல்லும் சூரியன் டிசம்பர் 22 இல் மகர ரேகையில் பிரகாசிக்கும். பின் வடக்காகத்திரும்பும். நகரும்போது மார்ச் 21 இல் மீண்டும் பூமத்திய ரேகையைக் கடக்கும். இவ்வாறு கடக ரேகைக்கும், மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதியில் பருவமாறுபாடுகள் உண்டாகின்றன. புவி தானும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றும்போது பல மாறுபட்ட நிலைகளில் அமைகிறது. அதனால் சூரியன் இடம் பெயர்வது போலத் தோன்றும்.

எனவே, பருவக்காலங்கள் அமைய புவியின் சாய்வான அச்சு, நீள்வட்டப் பாதையில் மாறாமல் புவி சூரியனை வலம் வருதல் ஆகியவை காரணமாக அமைகிறது. இவை சேர்ந்து செயற்பட்டு, புவியின் சீரான பருவமாறுதல்களை ஏற்படுத்துகின்றன.


சுருக்கமாக, ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் பகுதிகளில் அமைந்துள்ள நாடுகளில் நம் நாட்டிலுள்ள பருவகால வேறுபாடுகளைப் போல் காணப்படுவதில்லை. அன்றாடம் நிகழும், சமமான இரவு, பகலுக்குப் பதிலாக நீண்ட இரவும், குறுகிய கோடை காலமும் நிலவுகின்றன. கோடையிலும்கூட சூரியனின் சாய்வான கதிர்களே அப்பகுதியில் விழுவதால் அந்த இடங்களின் வெப்பநிலை மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. அங்கு கோடைகாலம், குளிர்காலம் ஆகிய இரு பருவங்கள் மட்டும் உண்டு.


***செயல்***

*கிரகணங்களின் போது புவி, சந்திரன் மற்றும் சூரியனின் இயக்கங்களையும், நிலைகளையும் அறிந்து கொள்ள மாணவர்களே வகுப்பறையில், தங்களையே மாதிரிகளாய் பயன்படுத்தி செய்து கற்றல் மூலம் புரிந்து கொள்ள வேண்டும்.*

**கிரகணங்கள்:** ‘கிரகணம்’ என்பது விண் வெளிசார்ந்த பொருள், இன்னொரு பொருளின் நிழலுக்குள் வரும்பொழுது புவியின் நிழலும் நிலவின் நிழலும் விண்வெளியில் விழுகின்றன. புவியின் சூழலில் நிலவு வரும்பொழுது அல்லது நிலவின் நிழலில் புவி வரும்பொழுது ஒளிமறைப்பு நிகழ்ச்சி ஏற்படுகிறது.

புவியானது சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடையில் வரும்பொழுது புவியின் நிழல் சந்திரனில் விழுவதால் சந்திரகிரகணம் ஏற்படுகிறது. முப்பது நிமிடங்களுக்குமேல் ஏற்படக் கூடியதாகும்.





**அக்டோபர் 3, 2005 சூரிய கிரகணம்**

**வளைய சூரிய ஒளிமறைப்பு**

**முழு சூரிய ஒளிமறைப்பு**

சந்திரன் புவிக்கும் சூரியனுக்கும் இடையில் வரும்பொழுது சந்திரனின் நிழல் புவியின் மீது சிறிது நேரம் படிவதால் சூரியகிரகணம் ஏற்படுகிறது. சந்திரனின் நிழல் 300 கி.மீ.க்கு மேல் புவிப்பரப்பின் மேல் விழுவதில்லை.

## 4.4.5 புவியும் உயிரினமும்

நீர், நிலம், காற்று ஆகியவற்றால் ஆனது நாம் வாழும் உலகம். முதன்முதலில் உலகம் தோன்றியபோது நீரும், நிலமும், காற்றும் இல்லை. புவிப்பந்து ஒரு நெருப்புக் கோளமாகச் சூரியனிடமிருந்து பிரிந்து சென்று, குறிப்பிட்ட தொலைவில் நிலைக்கொண்டு சூரியனைச் சுற்ற ஆரம்பித்தது. புவி மட்டுமல்ல, சூரியனைச் சுற்றும் எல்லாக் கோள்களும் தோன்றிய வரலாறு இதுதான்.

### புவி உருவான விதம்

அண்டவெளியில் இருந்த அனைத்துப் பொருள்களும் ஒரு மாபெரும் கோளமாக இருந்தது. திடீரென்று ஒரு பெரிய வெடிப்பு நிகழ்ந்தது. அப்போது 10 ஆயிரம் கோடி டிகிரி செல்சியஸ் வெப்பம் வெளிப்பட்டது. இது கற்பனைக்கும் எட்டாத அதிபயங்கரமான வெப்பமாகும். அந்த சமயத்தில் அண்டத்தில் இருந்தது ஒன்றே ஒன்றுதான். அது மாபெரும் ஒளியாகும்.

அண்டவெளி குளிர்ச்சி அடைந்தபோது புரோட்டான்கள், எலக்ட்ரான்கள், நியூட்ரான்கள் ஆகியவை தோன்றின. இவை ஒன்றிணைந்து முதல் அணுக்கள் உருவாகின. இவ்வணுக்கள் பெரும்பாலும் ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் அணுக்களாக இருந்தன. சில லித்தியம் அணுக்களும் இருந்தன.

ஈர்ப்பு விசை இந்த அணுக்களைப் பிரம்மாண்டமான வாயு மேகங்களாக ஆக்கியது. இவ்வாயு மேகங்கள் பின்னர் நட்சத்திர மண்டலங்களாயின. ஒவ்வொரு மண்டலத்தின் உள்ளேயும் ஈர்ப்பு விசை செய்யப்பட்டு அணுக்களை மேலும் நெருங்கச் செய்து சிறுசிறு வாயு மேகங்களை உருவாக்கியது. இவை, சுருங்கவும், சுழலவும், வெப்பமடையவும் தொடங்கின.

ஒரு வாயுமேகத்தின் மையப் பகுதியில் இருந்த ஹைட்ரஜன், திடீரென்று ஹீலியமாக மாறத் தொடங்கியது. இப்படி அப்பகுதி வெப்பம் மற்றும் ஒளி ஆற்றல் ஏற்பட்டு நெருப்புக் கோளமாக மாறியது. இவ்வாறு சூரியன் தோன்றியது.

சூரியனைச் சுற்றிவந்த வாயு மேகத்திலிருந்த அணுக்கள் ஒன்றிணைந்து சிறு கற்களாகின. அந்த சிறு கற்கள் ஒன்றிணைந்து சிறு பாறைகளாகின. அவை ஒன்றிணைந்து பெரும் பாறைகளாகின. அப்படி உருவான பெரும்பாறை தான் புவியாகும்.

ஆரம்பத்தில் தாய் நட்சத்திரமான சூரியனைப் போன்றே நெருப்புக் கோளமாக இருந்த புவி, கோடிக் கணக்கான ஆண்டுகளாக மெல்ல மெல்ல குளிர்ந்து, அதில் இருந்த வாயுக்கள் குளிர்ச்சி அடைந்து திரவமாகவும் (கடல்பகுதிகளாக), திடமாகவும் (நிலப்பகுதிகளாக), வாயுக்களாகவும் (வளிமண்டலப் பகுதிகளாக) மாறி இன்றிருக்கும், இந்த நிலையை அடைந்தது. மற்ற கோள்களைப் போல் அல்லாது சூரியனிலிருந்து குறிப்பிட்ட தூரத்தில் வந்து புவி நிலை பெற்றதால், இதன் புவியீர்ப்பு விசை அளவும், மற்ற இயற்கை சூழ்நிலைகளும், உயிரினங்கள் தோன்றி வாழ்வதற்கு உகந்த இடமாக இதனை மாற்றிவிட்டன.

புவியின் மேற்பரப்பு மூன்றில் இரண்டு பகுதி நீராலும், ஒரு பகுதி நிலத்தாலும் சூழப்பட்டுள்ளது. நீரிலும், நிலத்திலுமாக உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்தன. இரசாயன சேர்க்கையின் காரணமாகச் (சிறியதாக ஆரம்பித்த) கடலில் சில நுண்ணுயிரிகள் தோன்றின. அந்த நுண்ணுயிரிகள் காலப் போக்கில் (கோடிக் கணக்கான ஆண்டுகளில்) பரிணாம வளர்ச்சியடைந்து தாவரங்களாக, பறவைகளாக, விலங்குகளாக, மனிதர்களாக உருமாறின. இவை இயற்கை அறிவியல் அறிஞர் டார்வின் உயிரினங்களின் வரலாற்றை ஆராய்ந்ததன் பயனாகக் கிடைத்த அறிவியல் உண்மைகள் ஆகும். புவி தோன்றி சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகள் ஆகின்றன.

புவி என்பது பல தொகுதிகளை உள்ளடக்கியது. இதன் மேற்பரப்பில் கற்கோளமும், நீர்க் கோளமும், அவற்றைச் சுற்றி வாயுக்களாலான வளிக்கோளமும் காணப்படுகின்றன. கடல்பகுதியானது புவியின் பரப்பில் 71 சதவீதமும், கண்டப்பகுதியானது 29 சதவீதமும் பரந்து காணப்படுகின்றன.

மனிதன் பல வகைப்பட்ட தாவரங்கள், பிராணிகள் போன்ற உயிரினங்களுக்குப் புவியின் நிலப்பகுதியானது வாழ்விடமாக விளங்குகிறது. இப்பகுதியே கற்கோளம் எனப்படும். தென் அரைக் கோளத்தின் பெரும்பகுதி நீர்பகுதியாகும். வட அரைக்கோளத்தின் பெரும்பகுதி நிலப்பகுதியாகும்.

## 4.5 கண்ட நகர்வுக் கோட்பாடு / நிலவியல் பலகைகள்

புவியின் மேற்பரப்பில் தொடர்ந்து கண்டங்கள் வடக்கு நோக்கியும், கிடை மட்டமாகவும் நகர்ந்து கொண்டே இருக்கிறது என்ற கோட்பாட்டினை 1912 ஆம் ஆண்டே ஆல்பிரட் வெக்னர் (ஜெர்மனிய விஞ்ஞானி) உலகிற்கு எடுத்துரைத்தார். அவரது கூற்றுப்படி, 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உலகில் ஒரே ஒரு மாபெரும் கண்டம் இருந்தது என்றும் அக்கண்டத்திற்குப் ‘பாஞ்சியா’ என்றும் பெயரிடப்பட்டிருந்தது. பாஞ்சியாவைச் சுற்றியுள்ள உலகின் ஒரே பெருங்கடல் பகுதிக்குப் ‘பாந்தலாசா’ என்று பெயரிடப்பட்டது. பின்னர் ‘பாஞ்சியா’ என்ற ஒரே கண்டம் பல சிறிய


கண்டங்களாக உடைபடத் துவங்கி, அவ்விடத்தைவிட்டு நகர்ந்து தற்போதைய இருப்பிடத்தை அடைந்திருக்கலாம் என்று புவியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

புவியின் மேலோட்டுப் பகுதி, திடப் பாறைகளால் ஆனது. கடலடியும் பாறைகளால் ஆனதே. புவியின் மேலோடு புவியைச் சுற்றி போர்த்தப்பட்டுள்ள ஒரு போர்வையைப் போன்றது அல்ல; உடைந்த பாறைத் துண்டுகளை ஒன்று சேர்த்தது போன்ற அமைப்பினைக் கொண்டது. ஒவ்வொரு திடப்பாறைத் துண்டும் ஒரு தட்டு (plate) எனப்படுகிறது. துண்டுகள் சேருமிடம் தட்டுகளின் விளிம்பு (plate boundaries) எனப்படுகிறது. இத்தட்டுகள் நிலையானவை அல்ல. இடம் பெயர்ந்து கொண்டிருப்பவை (drift) அல்லது நகர்ந்து கொண்டே இருப்பவை. எனவே கண்டங்களும், கடலடிப் பாறைகளும் நகர்ந்து கொண்டே உள்ளன. எனவே கண்டப்போக்கு கோட்பாடு மற்றும் கடல்தரை விரிவாக்கம் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு புதிய கோட்பாடு ஒன்று வெளியிடப்பட்டது. அக்கோட்பாட்டிற்கு 'நிலவியல் பலகைக் கோட்பாடு' என்று பெயரிடப்பட்டது.

***செயல்***


*ஒளிஊடுருவும் தாள் இரண்டில் உலக புறவரிநிலவரைப் படத்தை வரைந்து, ஒன்றில் கண்டங்களையும், மற்றொன்றில் நிலவியல் பலகைகளையும் வரைந்து OHP–யின் மூலம் ஒன்றின் மேல் ஒன்றைப் பொருத்திப் பார். என்ன உணர்கிறோம் ?*

பெருந்தட்டுகளின் மேற்பரப்பில் கண்டங்களும் பெருங்கடல்களும் பரவியுள்ளன. சான்றாக இந்திய – ஆஸ்திரேலியப் பெருந்தட்டில் இந்தியத் துணைக் கண்டமும் ஆஸ்திரேலிய கண்டமும், இந்தியப் பெருங்கடலின் பெரும்பகுதியும் உள்ளன. இப்பெருந்தட்டுகள் நகர்ந்து இடம் பெயரும்போது அதில் அடங்கிய கண்டங்களும், கடல்களும் இடம் பெயர்கின்றன. இதையே கண்டங்களின் இடப்பெயர்ச்சி என்கிறோம். இத்தட்டுகள் ஒரே திசையில் நகர்வதில்லை. சுமார் 4 கோடி ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா தற்போதுள்ள இடத்திலிருந்து 2000 முதல் 4000 கி.மீ. தெற்கு, தென் மேற்கு திசையில் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.




**நிலவியல் பலகைகளும் அவற்றின் நகர்வுகளும்**

இதற்கான புவியியல் ஆதாரங்கள் நிறையவே உள்ளன. இப்போது இமயமலை உள்ள பகுதியில் டெத்திஸ் (Tethys) எனும் கடல் இருந்தது. அன்றைய இந்தியத்தட்டு வடக்கு, வடகிழக்கில் நகர்ந்து டெத்திஸ் கடலின் வடபுறமிருந்த ஆசியத்தட்டுடன் முட்டமுட்ட, டெத்திஸ் கடல் தூர்ந்து போய் அக்கடலடியில் உருவாகிய படிவுப் பாறைகள், தொடர்ந்து ஏற்பட்ட அழுத்தம் காரணமாக மடிப்புகளுக்கு உள்ளாகி மலையாக (இமயமலை) உயர்ந்தன. அன்றைக்குப் பெருங்கடலாக இருந்தது இன்று உலகின் மிகப் பெரிய மலைத் தொடராக உருவாகியுள்ளது. மறுக்கமுடியாத புவியியல் சான்றுகளால் (Geological evidence) இந்தப் புவியியல் வரலாறு உறுதி செய்யப்பட்டுள்ளது.




**கண்ட நகர்வினால் இந்தியாவின் தற்போதைய**

இதற்கு எதிர் மாறாக இன்று பல கிலோ மீட்டர்களுக்கு அப்பால் பிரிந்து கிடக்கும் தென் அமெரிக்காவும், ஆப்பிரிக்காவும் சில கோடி ஆண்டுகளுக்கு முன்னால் ஒட்டியிருந்தன. வரைபடத்தில் தென்அமெரிக்காவின் கிழக்குக் கரையையும், ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையையும் பொருத்திப் பார்த்தால் சான்று தெளிவுபடும்.

பிரிந்திருந்த கண்டங்கள் இணைவதும், (இந்தியா – ஆசியா) இணைந்திருந்த கண்டங்கள் பிரிவதும் (தென் அமெரிக்கா – ஆப்பிரிக்கா) கடல் பகுதி மலையாவதும் (டெத்திஸ் – இமயம்), நம் புவியின் வரலாற்றில் நிகழும் வியத்தகு நிகழ்ச்சிகள். ஆனால் இவை ஓரிரு நாட்களிலோ – ஆண்டுகளிலோ நிகழ்பவை அல்ல. சில கோடி ஆண்டுகளில் நிகழ்கின்றன.

உலகின் பெரும்பாலான நிலநடுக்கங்கள் நிலவியல் பலகைகள் மோதுகின்ற எல்லைப் பகுதிகளில் உருவாகின்றன. தட்டுகள் நகர்வது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பலகைகளின் கீழ்ப்பரப்பில் ஏற்படக் கூடிய வெப்ப நீரோட்டங்கள் பலகைகளைப் பல்வேறு திசைகளில் நகர்வதற்குக் காரணமாகின்றன. இரண்டு பலகைகள் நகர்வின்போது பலகைகள் ஒன்றுடன் ஒன்று மோதாமல் விலகிச் செல்லும்பொழுது பெருங்கடல் தரைவிரிக்கம் ஏற்படுகிறது. ஆப்பிரிக்கத்தட்டுகள் வடக்குப் புறமாக நகர்வதால், மத்திய தரைக்கடல் பகுதிக்குத் தரக்கூடிய அழுத்தத்தின் காரணமாக ஆல்ப்ஸ் மலையின் உயரம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. கிழக்காப்பிரிக்காவிலிருந்து செங்கடல், சாக்கடல் மற்றும் ஜோர்டான் நதி வரை உள்ள பகுதி எதிர் காலத்தில் ஒரு புதிய சமுத்திரமாக மாறும் வாய்ப்புள்ளது. பல மாற்றங்கள், நிகழ்ந்துகொண்டிருந்தாலும் இத்துறையில் இன்னமும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.6 புவி நிலத்தோற்றங்கள்

புவிப்பரப்பின் மீது காணப்படும் மேடுபள்ளங்களையே பொதுவாக நாம் நிலத்தோற்றங்கள் என்கிறோம். இப்புவிப்பரப்பில் நாம் வாழும் நிலப்பகுதி மேடாகவும், கடல்பகுதி பள்ளமாகவும் காட்சியளிப்பது கண்கூடு. நிலத் தோற்றத்தால் காணப்படும் வேற்றுமைகளைப் பொறுத்து நிலத்தோற்றங்களை மூன்று வகையாக வரிசைப்படுத்தலாம்.

1. முதல்நிலை நிலத்தோற்றங்கள் – கண்டங்கள், கடல்கள்.

2. இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் – மலைகள், பீடபூமிகள், சமவெளிகள்

3. மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் – குன்றுகள், பள்ளத்தாக்குகள்

மேற்கண்ட மூன்றினுள் ஏதேனும் ஒன்றில் நிலத்தோற்றங்கள் அமையும். ஆகையால் இவை மூன்றே மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் போன்ற உலகின் தலையாய நிலத்தோற்றங்கள் உள்ளடக்கிய ஒரு தொகுதி ஆகும்.

### 4.6.1 மலைகள்

புவிப்பரப்பின்மீது காணப்படும் பெரும் நிலத்தோற்றங்களில் "மலைகள்", அதிக உயரம் மிகுந்த நிலத்தோற்றங்கள் ஆகும். மலைகளின் சரிவு, உயரம், தோற்றங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மலைகள் வரையறுக்கப்படுகின்றன. நிலப்பரப்பில் மலைகளின் பரவல் 27 சதவீதம் ஆகும். காலநிலையைப் பெருமளவில் பாதிக்கும் நிலத்தோற்றம் இது. உலகிலுள்ள எல்லா முக்கிய மலை அமைப்புகளும் வில் போன்ற அமைப்பைக் கொண்டுள்ளன. மலைகளின் அமைப்பைப் பொறுத்து நான்கு முக்கியப் பிரிவுகளாக பிரிக்கலாம். அவை,

1. மடிப்பு மலைகள்
2. பிண்ட மலைகள்
3. எரிமலைகள்
4. எஞ்சிய மலைகள்

**மடிப்பு மலைகள்:** இமயமலை, ஆரவல்லீஸ், ஆல்ப்ஸ், ராக்கீஸ் முதலியவை மடிப்பு மலைத்தொடராகும். புவியின் கீழே காணப்படும் பாறையிடுக்குகளில் ஏற்படும் அழுத்தம் மற்றும் கிடை அசைவுகளின் காரணமாக மடிப்பு மலைகள் ஏற்படுகின்றன. மடிப்பு மலைகளின் பாறைகள் பொதுவாகப் படிவுப் பாறைகளாகும்.

***செயல்***

*இமயமலையின் முக்கியத்துவம் மற்றும் அதன் சிகரங்கள் / கோடை வாழிடங்கள் பற்றி ஒரு செய்தித்தொகுப்பு தயாரிக்க.*

**பிண்ட மலைகள்:** இந்தியாவின் விந்திய மலை, ஐரோப்பாவின் வஜஸ், பிளாக் ஃபரரஸ்ட் முதலிய மலைகள் பிண்ட மலைகள் ஆகும். இருதாழ் நிலங்களுக்கு இடையே உள்ள உயரமான ஓர் உயர்நிலப்பகுதியே பிண்டமலை எனப்படும். மலையின் உச்சிப் பகுதி சமமாகவே உள்ளது. புவியின் மேற்பரப்பில் சில பகுதிகளில் ஏற்படும் இழுவிசையால் நிலத்தில் கீறல் அல்லது வெடிப்பு ஏற்படுகிறது. இவ்வெடிப்பே பிளவாகும் (Fault) இணையாக அமைந்துள்ள இரு பிளவுகளுக்கு இடையே உள்ள நிலப்பகுதி நிலஅசைவுகளின் காரணமாக உயர்த்தப்படுவதால் பிண்டமலை தோன்றுகிறது. பிளவுகளுக்கு இடையே உள்ள பகுதி தாழ்ந்தால் பிளவு பள்ளத்தாக்கு ஏற்படும் (உ.ம்.) பிளாக் ஃபராஸ்ட் மலைக்கும் வஜஸ் மலைக்கும் இடையே இருக்கும் ரைன் பள்ளத்தாக்கு பிளவுபள்ளத்தாக்காகும்.

**எரிமலைகள்:** ஜப்பானின் புகழ்பெற்ற ஃபியூஜியமா, இத்தாலியன் வெசுவியஸ் ஆண்டிஸின் சிம்பராசோ, கோம்படா பாக்ஸி முதலியன எரிமலைகள் ஆகும். பொதுவாய்க் கூம்பு வடிவத்தைப் பெற்றிருக்கும். மடிப்பு மலைகள் அமைந்துள்ள பகுதியில் எரிமலைகள் மிகுதி.

புவியின் கீழே வெகுஆழத்தில் உள்ள பாறைகள் பாகுபோன்று கொதித்துக் கொண்டிருக்கும். இதற்குப் பாறைக் குழம்பு என்று பெயர். இக்குழம்பு புவியோட்டின் ஒரு சிறு துவாரம் அல்லது பிளவு வழியாய் மேலே வந்து உறைவதால் இம்மலைகள் தோன்றுகின்றன. எரிமலையின் வாய் பொதுவாக வட்ட வடிவத்தைப் பெற்றிருக்கும். எரிமலை வாய் கிரேடர் (crater) என்று அழைக்கப்படுகிறது.

**எஞ்சிய மலைகள்:** ஸ்காட்லாந்தின் உயர் நிலங்கள், ஸ்பெயினின் மத்திய மலைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேற்கு பீட பூமிகளில் காணப்படும் மலைகள் எஞ்சிய மலைகளாகும். ஆறு, காற்று, பனியாறு போன்ற பல இயற்கைச் செயல்களால் சுற்றுப்புறப்பகுதி அரித்துத் தாழ்த்தப்பட்ட பின்னர் பொது மட்டத்திற்கு மேலாக நின்று கொண்டிருக்கும் உயர் நிலப்பரப்பையே மலைகள் என்பர். கடினப் பாறையானதால், அரிப்பிற்கு உட்படாமல் நீடித்து நிற்கின்றன.

மலைகள் அவைகளின் அமைப்பு, அளவு, இவற்றைப் பொறுத்து மேலும் பல வகையாகப் பிரிக்கலாம்.

### 1. கார்டிலராக்கள்

ஒரு மலைப் பிரதேசத்தில் பலவித உயரங்களுடன் கூடிய மலைகளும், தொடர்களும் இருக்குமேயானால் அப்பிரதேசம் கார்டிலராக்கள் எனப்படும். (எகா.) வட அமெரிக்காவிலுள்ள ராக்கி மலை.

### 2. ஸிஸ்டம்

இவைகளில் பல மலைத் தொடர்கள் காணப்படும். பள்ளத்தாக்குகளும், தொடர்களும் ஒழுங்கான அமைப்பைப் பெற்றிருக்கும். இமயமலைத் தொடர் – ஆசியா.

### 3. சங்கிலி

மலைத் தொடர்கள் சங்கிலி போன்று வரிசையாகக் காணப்படும். (எகா.) பெனைன் சங்கிலித் தொடர் – ஐக்கியக் குடியரசு.

### 4. மலைத் தொடர்

மலைகள் நீள் வாக்கு அமைப்பைப் பெற்றிருக்கும். (எகா.) ஆண்டீஸ் மலைத்தொடர் – தென் அமெரிக்கா.

### 5. கூட்டம்

வட்டமாகவோ அல்லது கூட்டமாகவோ காணப்படும். (எகா.) பாமீர் முடிச்சு – ஆசியா.

### 6. தொடர்குன்று

மடிப்பு, பிளவு பாறைகளில் ஏற்படும்போது வில் போன்ற அமைப்பைப் பெற்றிருக்கும். (எகா.) ஆரவல்லிக் குன்றுகள் – இந்தியா.

### 7. சிகரம்

உயரமான ஊசிவடிவம் அல்லது மொட்டையான வடிவத்தைப் பெற்றிருக்கும். (எகா.) எவரெஸ்ட் – இமயமலைத்தொடர்.

## 4.6.2 பீடபூமிகள்

தக்காண பீடபூமி, ஆசியாவின் திபெத் பீடபூமி, தென் அமெரிக்காவின் ஈக்வெடார், பொலிவியா பீடபூமி முதலியன பீடபூமிகளில் சிலவாகும். மென் சரிவான விளிம்புகளுடன் அகன்ற பரப்புடன் கூடிய கடல் மட்டத்திலிருந்து உயர்ந்துள்ள நிலப்பகுதியைப் பீடபூமி என்பர். பீடபூமிகளின் எல்லாப் பகுதிகளும் கடல் மட்டத்திற்கு மேல் உயர்ந்துள்ளன. கடல் மட்டத்திலிருந்து சுமார் 600 மீட்டர்க்கு மேல் உயர்ந்துள்ளன.

உலகிலுள்ள பீடபூமிகளை மூன்று வகைப் படுத்தலாம்.

1. மலையிடைப் பீடபூமி,
2. மலையடிப் பீடபூமி
3. கண்ட பீடபூமி

1. பீடபூமியைச் சுற்றி மலைகள் அமையுமாயின் அது மலையிடைப் பீடபூமி ஆகும். இப்பீடபூமி உயரம் மிக்கதாக இருக்கும். (உம். ) திபெத் பீடபூமி.
2. மலைகளின் அடிவாரத்தில் ஆரம்பித்து அகன்று செல்லும் உயர்நிலப் பகுதியே மலையடி பீடபூமியாகும். ஒரு பக்கத்தில் மலையும் மறுபக்கத்தில் சமவெளி அல்லது கடலும் காணப்படுகிறது. (உம்.) படகோனியா பீடபூமி, கோயம்புத்தூர் பீடபூமி (நீலகிரி மலைக்கும், கிழக்குக் கற்கரை சமவெளிக்கும் இடையே அமைந்துள்ளது).
3. கண்டத்தின் பெரும் பரப்பில் விரிந்து கிடக்கும் பீடபூமியைக் கண்டபீடபூமி என்பர். ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி, அரேபியா, ஸ்பெயின், கிரீன்லாந்து முதலியன கண்டப் பீடபூமிகளாகும். தக்காண பீடபூமி லாவாவால் உண்டாக்கப்பட்ட கண்ட பீடபூமியாகும்.

## 4.6.3 சமவெளிகள்

கங்கைச் சமவெளிகள், இந்தியக் கடற்கரைச் சமவெளி, சைபீரியச்சமவெளி, அமேசான் சமவெளிகள், சீனச் சமவெளிகள், ஐரோப்பாவின் பெரும் தாழ் நிலங்கள் உலகின் முக்கியச் சமவெளிகள் ஆகும். தாழ்வானதும், ஏறக்குறைய ஒரே மட்டத்தில் உள்ளதும் பரந்து விரிந்து கிடப்பதுமான நிலமே சமவெளி எனப்படும். இந்தச் சமவெளிகளில் மக்கள் தொகை அடர்த்தி மிகுதி. நீர் வளமும், நிலவளமும் ஒருங்கிணைந்து காணப்படுவதால் வேளாண்மை செழித்து காணப்படுகிறது.

**சமவெளிகளின் வகைப்பாடு:** சமவெளிகள் அமைந்திருக்கும் இடம், காலநிலை, அந்நிலங்கள் தோன்றியவிதம் போன்ற பல கூறுகளைக் கொண்டு வகைப்படுத்தலாம்.


1. சில இடங்களில் கண்டத்திட்டு உயர்த்தப்படுவதால் கடற்கரைச் சமவெளிகள் அமைகின்றன. கடலை அடுத்து காணப்பெறும் சமவெளி கடற்கரைச் சமவெளி (Coastal plain) என்று பெயர். (உம்.) இந்தியா மற்றும் தென் அமெரிக்காவில் காணப்படும், கடற்கரைச் சமவெளி ஆகும்.
2. ஒரு காலத்தில் உயர்ந்திருந்த நிலங்கள் சிதைவதனாலும் நீரின் அரிப்பினாலும் உயரம் குறைந்த சமநிலங்களாக மாற்றப்படுகின்றன. இத்தகையச் சமவெளிகள் அரிப்பினால் ஏற்பட்ட சம நிலங்கள் அல்லது பெனிப்ளெயின்கள் (peneplains) எனப்படும். (உம்.) வடகிழக்கு சைபீரிய சமவெளி, பின்லாந்தின் தாழ்நிலம்.
3. சரிவு குறைந்த சமநிலப் பகுதி வழியாக ஓடிவரும் ஆறுகள் சுமந்து வரும் வண்டல்மண் ஆற்றுப்படுகையிலும், வெள்ளப் பெருக்கு காலத்திலும் இருகரைகளை ஒட்டியும், அடுத்தும் படிந்து சமவெளியாக உருவெடுக்கும். இச்சமவெளியை வண்டல்மண் சமவெளி என்பர். (உம்.) சிந்து கங்கைச் சமவளி, மிஸிசிபி சமவெளி, வடசீனச் சமவெளி; வண்டல் மண்ணால் அமைந்த சமவெளிகளைப் பலவாறாகப் பிரிக்கலாம்.

## அ) டெல்டா சமவெளி

இது ஆற்றின் தொடுவாய் பகுதியில் அமைகிறது. ஆறு கொண்டுவரும் வண்டல்மண் அப்பகுதியில் அடுக்கடுக்காகப் பதிந்து சம நிலமாகிறது. நைல், ரைன், சிந்து, கங்கை, காவிரி முதலிய ஆறுகளின் டெல்டாக்கள் இத்தகையச் சம வெளிகளே ஆகும்.

## ஆ) வெள்ளச் சமவெளி

ஆற்றில் வெள்ளம் ஏற்படும்போது ஆற்றின் நீர் கரைகடந்து இருபுறமும் பரவுகிறது. இது அடிக்கடி நிகழும்போது ஆற்றின் இருபுறமும் படிந்து சமவெளியாக உருவெடுக்கிறது. இதுவே வெள்ளச் சமவெளியாகும் (உம்.) கங்கைச் சமவெளி, ஹவாங்கோ சமவெளி.




டெல்டா சமவெளி



வெள்ளச் சமவெளி

### இ) மலையடிவண்டல் சமவெளி

மலையிலிருந்து ஓடிவரும் ஆறுகள் தாம் கொண்டு வந்த வண்டல்மண் பொருட்களை மலையடி வாரத்தில், சரிவு திடீரென்று குறைவதால் அங்குப் படியவைக்கும். இது தொடர்ந்து நிகழும்போது சமநிலம் ஒன்று உருவெடுக்கிறது. (எகா.) சிந்து – கங்கைச் சமவெளி.



**மலையடி வண்டல் சமவெளி**

### ஈ) பழைய வண்டல்மண் சமவெளி

வட இந்தியச் சமவெளி பழைய வண்டல்மண் பகுதி. வட சீனா சமவெளிகள், ஈராக் சமவெளிகள் முதலியன வண்டல் மண்ணால் ஆனவை. இவை ஒரு காலத்தில் மலையடிவண்டல்மண் சமவெளியாக இருந்திருக்கலாம்.

4. பனியாறுகளினாலும் படிதல் நிகழும். இப்படிதலினால் சமநிலம் தோன்றலாம். இதற்குப் பனியாற்றுச் சமவெளி என்று பெயர். இச்சமவெளிகளுக்குப் படிவுமொரைன்கள் என்று பெயர் (உம்.) வடஅமெரிக்காவின் வட பகுதி இவ்வகைச் சமவெளியைச் சேர்ந்ததே.

5. காற்றடி வண்டல் காற்றினால் படியவைக்கப்படும்போது லோயஸ் சமவெளிகள் ஏற்படுகின்றன. வடமேற்கு சீனாவில் லோயஸ் சமவெளி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

6. ஏரிகள் வழியாய் ஓடிவரும் ஆறுகள் அவை கொண்டு வரும் வண்டல் மண்ணால் அவ்வேரிகள் படிப்படியாக நிரப்பப்பட்டு ஏரி தூர்ந்து சமவெளியாக மாறும் (உம்.) கனடாவில் வின்னிபெர்க் நகருக்குத் தெற்க்கே உள்ள செழுமையான ரெட் (Red) ஆற்றின் வடிநிலம் அகாஸிஸ் ஏரி தூர்ந்து அமைந்த சமநிலமாகும்.


நிலப்பகுதியின் மொத்தப்பரப்பில் சுமார் 55% சமவெளிகளாகும். இந்தப் பகுதியில் மட்டும் உலக மக்கள் தொகையில் 90% வாழ்கிறார்கள்.

***செயல்***


*உனது மாவட்டத்தில் அமைந்துள்ள மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் போன்ற நிலத்தோற்றங்களை அறிந்து கொள்வதற்கு களப்பயணம் மேற்கொண்டு அறிக்கை தயாரிக்க.*

## 4.6.4 பாறைகள்

பாறைகள் என்பன பொருட்கள் பல ஒருங்கிணைந்து அமைந்த இறுக்கமான திடமான உயிரிலிக் கூட்டுப் பொருட்கள் ஆகும். இவை மூலகங்கள், அணுக்களாலானவை. சாதாரணமாகக்




தீப்பாறைகள்




கிரானைட் (Granite)

பியூமைஸ் (Pumice)



படிவுப்பாறைகள்




மணற்பாறை (Sandstone)

பல்கூட்டுப்பாறை (Conglomerate)



மாற்றுருப்பாறைகள்



சலவைக்கல் (Marble)

கடப்பைக்கல் (Slate)

கல்லின் பெரிய உருவத்தையே பாறை என்பர். ஆனால் நில அமைப்பு இயல்(Geology) படிகல், மணல், களிமண், மண், பெரும் பாறை போன்ற சிதவிலிருந்து, பெரும் பொருள் வரையிலான பொருட்கள் எல்லாவற்றையும், 'பாறைகள்' என்றே குறிப்பர். சில பாறைகள் பெரிதும் அல்லது முழுவதும் ஒரே கனிமத்தால் (Mine) ஆக்கப்பட்டுள்ளன. (உம்.) ஜிப்சம் பாறை. சில பாறைகள் இரண்டு அல்லது அதற்கு அதிகமான கனிமங்களைக் கொண்டிருக்கின்றன. (உம்.) கருங்கல்.

பாறைகள் அவற்றின் அமைப்பு, தோற்றம் முதலியவற்றின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை தீப்பாறைகள், படிவுப்பாறைகள் மற்றும் மாற்றுருப் பாறைகள் ஆகும்.

## 4.7 நிலநடுக்கம்

பொறுமைக்குப் புவியைத்தான் உதாரணம் சொல்வார்கள். அந்த புவியும் சில நேரம் பொறுமை இழந்து விடுகிறது என்பதை இயற்கைப் பேரழிவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

நிலநடுக்கம் எப்போது, எங்கே வரும் என்று முன்கூட்டியே அறிய இதுவரை கருவிகள் இல்லை. உடல் நடுக்கத்தை மருத்துவர் தடுத்து விடலாம். ஆனால் நில நடுக்கத்தை யாராலும் தடுக்க முடியாது. ஆனால் எங்கெல்லாம் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறதோ அதனை அனுபவத்தால் அறிந்து அதற்கேற்பச் சுற்றுச் சூழலையும் வாழும் கட்டிடங்களையும் அமைத்துக் கொள்வதுதான் சரியான வழி.

### 4.7.1 நிலநடுக்கம் – காரணங்கள்

புவியின் அதிர்வை நிலநடுக்கம் என்கிறோம். தட்டுகளின் நகர்வுகளினாலும், பாறைகளின் எடையினாலும் புவிக்குள் சில இடங்களில் அழுத்த அதிகரிப்பு ஏற்படுகிறது. அழுத்த அதிகரிப்பு, பாறைகளின் தாங்கும் சக்தியைவிட அதிகமாகும்போது பாறையில் விரிசல் ஏற்படுகிறது. அப்போது சேகரிக்கப்பட்ட அழுத்தம் பெரும் ஆற்றலாக வெளிப்பட்டு புவிஅதிர்வு ஏற்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தட்டின் ஓரப்பகுதிகள் உடைபடுகின்றன அல்லது கீழே தள்ளப்படுகின்றன அல்லது மேலே உயர்கின்றன. பிரிவு விளிம்புகளில் ஏற்படும் உந்து சக்தியாலும், பிளவுகளில் பாறைகள் சரியும்போது வெளிப்படும் ஆற்றலினாலும் உராயும் விளிம்புப் பகுதிகள் உராய்வின்போது வெளியிடும் ஆற்றலினாலும் நிலநடுக்கம் ஏற்படுகிறது.

இந்தியப் புவியியல் ஆய்வுத்துறைத் (Geological survey of India) தொடங்கிய சர் தாமஸ் ஓல்ட் ஹோம் (Sir Thomas Old Ham) 1869 ஆம் ஆண்டு நிலநடுக்கங்களைப் பற்றிய அறிவியல் பூர்வமான பணியைத் தொடங்கினார். நிலநடுக்கத்தின்போது ஏற்படும் 'பி' (P), எஸ் (S) மற்றும் மேற்பரப்பு அலைகளை முதலில் அறிந்து சொன்னவர் இவர்தான். இவரையே நில நடுக்க இயலின் தந்தை என்று கூறுவர்.

### 4.7.2 நிலநடுக்கம் – அறியும் கருவி


நிலநடுக்கத்தை முன்கூட்டியே அறிய இதுவரை கருவிகள் கண்டறியப்படவில்லை. ஆனால் நிலநடுக்கம் ஏற்பட்ட பிறகு அதன் அதிர்வைக் கண்டறியும் கருவிதான் சீஸ்மோ கிராஃப் (Seismo graph). இக்கருவியில் உருவாகும் வரைபடம் சீஸ்மோ கிராம் எனப்படும். நிலநடுக்கத்திற்கு மேல் நேரடியாக உள்ள புவியின் மேற்பரப்புப் பகுதியை நில அதிர்வு மையம் (Epicentre) என்று அழைக்கிறோம்.

**ரிக்டர் அளவுகோல்:** நில நடுக்க அளவை நிலைய வலைப்பின்னலில் உள்ள பல்வேறு நிலையங்களிலிருந்து பெறப்படும் விவரங்களின் அடிப்படையில் நிலநடுக்கத்தில் அளவு கணக்கிடப்படுகிறது. இம்முறைக்குப் பெயர்தான் ரிக்டர் அளவு கோல் ஆகும். நில நடுக்கங்கள், நிலநடுக்கப் கண்காணிப்பு மையங்கள் மூலமாகப் பதிவு செய்யப்படுகின்றன. நிலநடுக்கம் நிகழும் போது ஆற்றல், அலைகள் வடிவில் வெளிப்படும். இது எல்லா திசைகளிலும் பயணிக்கும். நில நடுக்க அசைவால் வெளிப்படும் வெவ்வேறு வகையான ஆற்றல் அலைகள் வெவ்வேறு வகையான வேகத்தில் பல்வேறு திசைகளில் பயணிக்கிறது. நில நடுக்க ஆற்றல் அலைகள் மூன்று வகைப்படும். நில நடுக்கத்தைக் கண்டறிந்தவுடன் நிலநடுக்க வரைபடத்தின் மூலம் அதனை உணர்ந்து கொள்ளலாம். அலைகளின் வேறுபாடுகள் நிலநடுக்க வரைபடத்தில் மூன்று வகையாகக் குறிக்கப்படுகின்றன.

'பி' அலைகள் ('p' waves) அதிகவேகமாகப் பயணித்து நிலநடுக்கக் கருவியை முதலில் வந்தடையும். இவை நீள உந்துதல் மூலம் பயணிக்கின்றன. முதலில் காணப்படும், வரை கோடுகள் "பி" அலைகளைக் காட்டுகின்றன.

நிலநடுக்கக் கருவியை இரண்டாவதாக வந்தடையும் அலைகள் "எஸ்" அலைகள் எனப்படுகின்றன. இவை மேல், கீழ் (அ) பக்கவாட்டு உந்துதல் மூலம் பாம்பினைப்போல் பயணிக்கின்றன.

வெளிப்பரப்பு அலைகள் (Surface waves) நிலநடுக்கக் குவிமையத்திலிருந்து பூமியின் மேற்பரப்பினை வந்தடைந்து, பிறகு மேல் பரப்பிலேயே பயணிக்கிறது. வரைபடத்தில் கடைசியில் காணப்படும் வரைகோடுகள் இந்த அலைகளின் பதிவு ஆகும்.




உலகின் நிலநடுக்க பகுதிகள்

*செயல்*

*உலகப் புறவரி நிலவரைப்படத்தில் உலகின் முக்கிய நிலநடுக்க மண்டலங்கள் மற்றும் அவற்றின் அமைந்துள்ள நாடுகளைக் குறிக்க.*

### 4.7.3 நிலநடுக்கம் – கண்காணிக்கும் துறை

இந்தியாவில் கீழ்க்காணும் நிலநடுக்கக் கண்காணிப்பு மையங்கள் நிலநடுக்கத்தைக் கண் காணித்து வருகின்றன.

அ) இந்திய வானிலை துறை (IMD)

ஆ) இந்தியப் புவியியல் துறை (GSI)

இ) தேசியப் புவியியல் ஆய்வு நிலையம் (NGRI)

பூகம்பத்தைப் பொறுத்தவரை நிலநடுக்கம், நில அதிர்வு என அழிவிற்கேற்ப அழைக்கப்படுகிறது. ரிக்டர் அளவு கோலில் 2 புள்ளிகள் வரை பதிவாகும் நில அதிர்வுகள் சாதாரணமாக மனிதர்களால் உணரப்படுகின்றன. 3–5 புள்ளிகள் அளவுள்ள அதிர்வுகளை நில

அதிர்வு எனக் கொள்ளலாம். இது ஓரளவு சேதத்தை ஏற்படுத்துகின்றன. இதுவே 7 புள்ளிகளுக்கு மேல் இருந்தால் சேதம் பலமாக இருக்கும். 8க்கு மேல் சென்றால் பேரழிவு ஏற்படும்.

### 4.7.4 நிலநடுக்கம் – பாதுகாப்பு

நிலநடுக்கம் என்பது ஒரு விபத்து போன்றதுதான். ஒரு நொடியில் அல்லது சில நொடிகளில் அல்லது ஒரு நிமிடத்தில் ஆட்டம் முடிந்து விடும். இந்த ஒரு சில வினாடிகளில் நாம் நிதானமாக யோசித்து தப்பிக்கத் திட்டமிடுதல் என்பது சாத்தியமில்லை. நல்லவேளை; இயற்கையிலேயே சில வினாடிகளில் மட்டுமே நிலநடுக்கம் முடிந்து விடுகிறது. அதற்குள்தான் இவ்வளவு பேரழிவு, உயிரிழப்பு. இந்தக் குறுகிய காலத்தில் என்னென்ன பாதுகாப்புகளை நாம் மேற்கொள்ளலாம் என்று பார்க்கலாம்.

- நிலநடுக்கம் ஏற்படும்போது வீட்டுக்குள் உறுதியான கட்டில், மேஜை இருந்தால் அதற்குக் கீழே சென்று அமர்ந்து கொள்ள வேண்டும்.
- சமையலறை, நெருப்பு பற்றக்கூடிய வாய்ப்புள்ள இடமாக இருப்பதால் அங்கிருந்து உடனடியாக வெளியேறி விட வேண்டும்.
- கட்டடங்களிலிருந்து வெளியே வந்தவர்கள் வெளி மைதானங்களுக்குச் சென்று விட வேண்டும். டிரான்ஸ்ஃபார்மர், மின்சாரத் தூண்கள், பிரமாண்ட தண்ணீர்த் தொட்டி, கட்டடங்கள், பாலங்கள் இவற்றுக்குக் கீழ் நிற்கக்கூடாது. மழை வந்தால் ஒதுங்கக்கூடிய இடங்களில் பூகம்பம் வந்தால் ஒதுங்கக் கூடாது.
- வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருந்தால் வாகனத்தைச் சாலை யோரமாக நிறுத்திவிட வேண்டும்.
- குறிப்பாகச் சொத்து ஆவணங்கள், நகை, பணம் இவற்றை எடுத்துக் கொண்டு தப்பிக்க கண்டிப்பாக முயற்சி செய்யக்கூடாது. சில வினாடிகளில் நடக்கும் இந்தப் பேரழிவிலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.
- நில அதிர்வை உணர்ந்தால் தொலைபேசி மூலம் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தகவல் தெரிவித்தல் நல்லது.
- தனியாகக் கட்டடத்தில் சிக்கிக்கொண்டால் சத்தம் எழுப்பி உதவி கேட்க வேண்டும்.
- மின்சாரம் தடைபட்டு விட்டால் வெளிச்சத்திற்காக நெருப்புக் குச்சியைப் பற்ற வைக்கக் கூடாது.

## 4.8 எரிமலைகள்

எரிமலைகள் புவியின் நிலத்தோற்றங்களில் ஒன்றாகும். புவியின் உட்புறத்திலிருந்து எரிமலைக் குழம்பு வெடித்துச் சிதறுவதின் மூலம் உருவாகின்றன. எரிமலைகள், மலைகள் போன்ற தோற்றத்தினைக் கொண்டவை. எரிமலைக்கு ரோமானிய மொழியில் 'தீக்கடவுள்' என்று பெயரிட்டுள்ளனர்.

புவியின் அடியில் தீப்பாறைகளில் அழுத்தம் ஏற்படும்பொழுது எரிமலைகள் வெடித்துச் சிதறும். புவிஓட்டில் உள்ள கீறல்களுக்கிடையே பாறைக் குழப்பு (மாக்மா) வழிந்தோடும் தன்மையைக் கொண்டது. புவியின் உட்புறத்தில் காணப்படும் பாறைக் குழம்பு 'மாக்மா' எனவும், புவியின் மேற்புரத்தில் காணப்படும் பாறைக் குழம்பிற்கு 'லாவா' என்றும் பெயராகும். லாவா பூமியின் மேற்புரத்தை அடைந்து குளிரத் தொடங்கிக் கடினமான பாறைகளாக மாறுகின்றன.


### 4.8.1 எரிமலை வகைகள்

எரிமலை அதன்செயல்படும் விதத்தினைக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன **செயல்படும் எரிமலை, உறங்கும் எரிமலை, செயலற்ற எரிமலையாகும்.**

**செயல்படும் எரிமலைகள்:** செயல்படும் எரிமலையின் – வெடிப்புச் செயல்கள் ஆண்டு முழுவதும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். உலகில் 1500க்கும் மேற்பட்ட செயல்படும் எரிமலைகள் காணப்படுகின்றன. மேலும் கடலுக்கு அடியில் 80க்கும் மேற்பட்ட செயல்படும் எரிமலைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. உலகிலேயே மிகப் பெரிய செயல்படும் எரிமலை ஹவாய் தீவில் உள்ள 'மானாலோவா' எரிமலையாகும். காப்பி உற்பத்திக்குப் பொருத்தமான இடமாக இருப்பதற்குக் காரணம் வளமாகக் காணப்படும் எரிமலை மண் ஆகும். இதன் உயரம் கடல்மட்டத்திற்கும் மேல் 13677 அடியாகும்.

**உறங்கும் எரிமலைகள்:** குறிப்பிட்ட காலத்தில் வெடித்தபின் பல ஆண்டுகளுக்குச் செயலற்ற நிலையில் காணப்படும். நீண்ட இடைவெளிக்குப் பின்னரோ அல்லது குறுகிய இடைவெளிக்குப் பின்னரோ மீண்டும் செயல்படத் தொடங்கும். இவ்வகையான எரிமலைகள் ஆபத்தானவை ஆகும்.

**செயலற்ற எரிமலைகள்:** எரிமலை வெடித்துச் சிதறியபின், அதன் செயல்பாடுகள் முழுவதுமாக நின்றுவிடும். தொடர்ந்து நிகழுவதில்லை.




**உலக எரிமலைப் பரவல்**

***செயல்***


*உலக புறவரி நிலவரைப்படத்தில் உலகின் முக்கிய எரிமலைப் பகுதிகளையும், முக்கிய எரிமலைகளின் பெயர்கள் மற்றும் அவை அமைந்துள்ள நாடுகளையும் குறிக்க.*

எரிமலைகள் வெடிக்கின்ற தன்மைகள் மற்றும் அவற்றின் வடிவ பண்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எரிமலைகளை மூன்று விதமாக வகைப்படுத்தலாம். அவை,


**1. கேடய எரிமலைகள்:** எரிமலையின் மத்தியிலுள்ள முகட்டு வாயிலிருந்து லாவா பெருமளவில் வழிந்து, விரிந்து பரவுகின்றபொழுது அந்த எரிமலை கும்மட்ட வடிவைப் பெறுகிறது. இதுவே கேடய எரிமலை என்று அழைக்கப்படுகிறது.

**2. கரி சிட்டக்கூம்பு எரிமலைகள்:** இவை உருவத்தில் மிகச் சிறியவை. சுமார் 100 மீ முதல் 400 மீட்டர் வரை உயரமுள்ளவை. இவ்வகை எரிமலைகள் பாறைத்துண்டுகளினால் ஆன முகட்டுவாய் கொண்டவை. இவ்வகை எரிமலைகள் அடுத்தடுத்துக் கூட்டமாக காணப்படும்.


**3. பல்சிட்டக்கூம்பு எரிமலைகள்:** இவை புவியின் மேல்பரப்பில் ஓவியம் போன்று கண்ணைக் கவருகின்ற தோற்றத்தைக் கொண்டு, தீவிரமாகச் செயல்படுகின்ற வகையைச் சார்ந்தவை. இவை லாவா மற்றும் பாறைகளினால் மாறி மாறி அமைக்கப்பட்ட அடுக்குகளை கொண்டவை. இவற்றின் உயரம் 100 மீ முதல் 3500 மீ வரைக் காணப்படும்.



**கேடய எரிமலை**



**கரிசிட்டக் கூம்பு எரிமலை**



**பல்சிட்டக் கூம்பு எரிமலை**

### 4.8.2 எரிமலை வெடிப்பு – விளைவுகள்

எரிமலை வெடிப்பு நிலப்பரப்பில் பல்வேறு மாற்றங்களையும், மக்களுக்குப் பல விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. எரிமலை வெடிப்பு காரணமாக,

- கட்டிடங்கள் சேதமடைகின்றன.
- மனித இனம் அழிகிறது.
- தாவரங்களுக்கு அழிவுகளை உண்டாக்குகிறது.
- எரிமலை வெடிப்பிற்குப் பின் – மேக மூட்டம், காற்றின் சுழற்சி காரணமாக மழை பெய்வதற்கான வாய்ப்பினையும் உண்டாக்குகிறது.
- எரிமலை சூழ்ந்துள்ள இடங்களில் வளமான, செழிப்பான மண் உருவாகுவதால் மக்கள் அப்பகுதியில் வாழ்க்கை நடத்துவதை விரும்புகின்றனர்.

### 4.8.3 எரிமலையும் காலநிலையும்

எரிமலை வெடிப்பானது காலநிலையில் பல மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. எரிமலையில் இருந்து வெளியேறும் வாயுக்களும், தூசுக்களும் புவிப்பரப்பை வெப்பமடையச் செய்யவும், அல்லது குளிர வைக்கவும் ஆற்றல் உடையதாக உள்ளது. இந்த மாற்றம் தூசுக்களின் அளவைப் பொறுத்தும், வளிமண்டலத்தை அடையும் நேரத்தைப் பொறுத்தும் அமைகின்றது.

எரிமலைகள் சிதறும்பொழுது அதிக அளவில் தண்ணீரையும், கார்பன் டை ஆக்ஸைடையும் வெளியிடுகின்றன. இவை வளிமண்டலத்தில் கலக்கும்பொழுது தற்காலிகமாக வெப்பநிலையை உயர்த்துகின்றன. தண்ணீரானது பதங்கமாதல் மூலம் மழையை ஏற்படுத்துகின்றன. சில சமயங்களில் கார்பன் – டை – ஆக்ஸைடு தாவரங்களால் கிரகிக்கப்படுகின்றது.

## 4.9 முடிவுரை

சூரியக் குடும்பத்தில் உள்ள புவியானது ஒரு தனிப்பெரும் கோள் என்பதை அறிந்தோம். இதன் சிறப்பே, அதில் உள்ள உயிரினங்களும், அவை வாழத் தகுந்த சுற்றுப்புறச் சூழலுமேயாகும். ஆனால் சுற்றுப்புறச் சூழல் தற்பொழுது வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும், அறிவியல் தொழில்நுட்பத்தினாலும் சீர்கேடு அடைந்து வருவதை நாம் அனைவருமே உணர்கின்றோம். மேலும் சில அரிய உயிரினங்கள் முற்றிலுமாக அழிந்தே விட்டன. பல அரிய உயிரினங்களும், இயற்கை சூழல்களும் அழிந்து கொண்டே வருகின்றன. மேலும் இந்நிலை நீடித்தால் நம் புவி மனிதன் உயிர்வாழ்வதற்கு சாத்தியமில்லாத கோளாக மாறிவிடும். எனவே சுற்றுப்புறச் சீர்கேடுகள் நிகழா வண்ணம் நாம், நம் செயல்களை செம்மையாக்கி, சீர்கேடுகளைத் தடுக்கும் வழிமுறைகளைப் பின்பற்றிச் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்தல் அவசியம். எனவே சிறப்புப் பெற்ற இந்தப் புவிக்கோளத்தை நாம் பேணிகாத்தல் மிக அவசியம். அப்பொழுதுதான் நாம் வாழும் இந்தப் புவியில் நம் வருங்கால சந்ததியினரையும் வாழ வைக்க முடியும்.

## 4.10 பார்வை நூல்கள்


1. Arthur. N. Strahler - Principles of Earth Science, Happer * Row pub. n - London (1976).
2. Balbir Singh Negi, Physical Geography, SJ Publication (1990).
3. Cain. H.R., Geography, Longman pvt. Ltd. Madras.
4. Das Gupta, A.R. Kapoor A.N - Principles of physical Geography S. Chand & Co.Ltd., New Delhi.
5. Nigam V.N. (1975), A complete course in certificate Geography, Pijamhar Publishing company Edu. publisher, New Delhi (1975).
6. Sindhu Basker, பூகம்பம், சுனாமி ஏன் ? எப்படி ?
7. Stamp, Dudley. L - The Earth's Crust - A new approach to physical Geography & Geology - George G. Harrap & co. Ltd.
8. உலகம் உருவான கதை – யுரேகா கல்வி இயக்கம், 34, இரத்தினம் தெரு, கோபாலபுரம், சென்னை – 86.

## *பகுதி ஆ – கற்பித்தல் முறைகள்*

## அலகு – I

# சமூக அறிவியல் கற்பித்தலின் பொருள், வரம்பு மற்றும் நோக்கங்கள்

## அறிமுகம்

நம்நாட்டு கல்வியாளர்களுக்கு நாம் வாழும் இக்காலம் ஒரு சவால் நிறைந்த காலமாகும். 21 ம் நூற்றாண்டில் கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சிக் காண விரும்புகின்றோம். அதற்காக பாடப் பொருள், மற்றும் கற்பித்தல் முறைகளில் புதிய அணுகுமுறைகளையும், உக்திகளையும் பயன்படுத்தி வருகின்றோம். சமூக அறிவியல் பாடத்திலும் புதுமையினையும், வலிமையும், பெருமையும் காண முயல்வோம்.

சமூக அறிவியல் என்பது நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட, திட்டமிடப்பட்ட, பல்வேறு துறைகளை உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த கல்வியாகும். அதாவது மானுடவியல், அகழ் ஆய்வியல், பொருளாதார இயல், நிலவியல், வரலாறு, சட்டம், தத்தவம், அரசியல், உளவியல், சமயம் மற்றும் சமூகவியல், இவற்றோடு கணிதம் மற்றும் அறிவியல் துறைகளில் தேர்ந்தெடுத்த பொருத்தமான கருத்துக்களையும் உள்ளடக்கியது ஆகும்.

– குழந்தைகளை தரவுகள் நிறைந்த அறிவார்ந்த முடிவுகளை எடுக்க வைப்பதும்,
– கற்றல், கற்பித்தலாகிய ஆசிரியர் மாணவர் உரையாடலின் செயல்பாடு, குழந்தைகளை சிறந்த குடிமகனுக்குரிய பண்பு நலன்களோடு, உயர்தளப்படுத்துகின்ற மிகச்சிறந்த பணியைச் செய்வதும்,
– சமூகப் புரிதலையும், சமூகத்தில் ஆற்றலையும், வாழ்க்கையில் அறிந்து பயன்படுத்துவதும் ஆகும்.

மாறிவரும் இக்காலச் சூழலில் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வது இன்றியமையாததாகும். இத்தகைய சிறப்பைக் கற்றுத் தருகின்ற சமூக அறிவியல் பாடத்தின் சிறப்பைப் படிப்போம்.

## அலகுக்கூறுகள்

1.1 சமூக அறிவியல் – பொருள்
1.2 சமூக அறிவியல் மற்றும் சமூக பாடம்
1.3 சமூக அறிவியல் பாடத்தை கற்பிப்பதன் நோக்கங்கள்
1.4 சமூக அறிவியல் கற்பித்தல் நிலைகள்
1.5 சமூக அறிவியலும் பொருளடக்கமும்
1.6 சமூக அறிவியலின் வரம்பு
1.7 தொடக்கக் கல்வி நிலைகளில் சமூக அறிவியல் கற்பித்தலின் நோக்கங்கள்.
1.8 மனித வளர்ச்சிக்கு சமூக அறிவியலின் பங்கு
1.9 பார்வை நூல்கள்

| வ. எண். | அலகுக் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | சமூக அறிவியல் கற்பிப்பதன் நோக்கம் | கலந்துரையாடல் அறிக்கை | சமூக அறிவியலில் கற்பித்தலின் நோக்கங்கள் – அறிவு வளர்ச்சி, சமூக வளர்ச்சி, அரசியல் வளர்ச்சி, தேசிய வளர்ச்சி | – | நூலகப் புத்தகங்கள் |
| 2. | மனித வளர்ச்சிக்கு சமூக அறிவியலின் பங்கு | விவாதம் – அறிக்கை | சமூக அறிவியல் பாடம் கற்றல் மனித வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை 3 முதல் 8 வகுப்பு வரை உள்ளப் பாடப்பகுதியிலிருந்து உதாரணங்கள் கூறி விவாதித்தல் | 3 முதல் 8 வகுப்பு வரை உள்ள சமூக அறிவியல் பாடப் புத்தகங்கள் | – |
| 3. | தேசிய வளர்ச்சியில் சமூக அறிவியலில் பங்கு | கலந்துரையாடல் – அறிக்கை | தேசிய வளர்ச்சியில் தனிமனிதனின் பங்கு, சமூகத்தின் பங்கு | – | நூலகப் புத்தகங்கள் |
| 4. | தேசிய வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு | சொற்பொழிவு / பேச்சுப்போட்டி | தேச முன்னேற்றத்தில் எனது பங்கு | – | நூலகப் புத்தகங்கள் |

## 1.1 சமூக அறிவியலின் பொருள்


சமூக அறிவியல் பற்றி பல்வகை மாறுபட்ட கருத்துக்கள், கல்வி குழுக்கள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் சமூக அறிஞர்கள் கூறுகின்றனர்.

மனிதன் சமுதாய குழுக்களிடையே ஓர் உறுப்பினன் ஆவான். மனிதனின் சமுதாய அமைப்பு மற்றும் வளர்ச்சியில் சமூக அறிவியல் பாடம் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளது என ஐக்கிய அமெரிக்க இடைநிலை கல்விக் குழு தன்னுடைய மறுசீர் அமைப்பு மதிப்பீட்டில் கூறுகிறது.

சமூக அறிவியல் பாடம் வரலாறு, புவியியல், அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், பொருளாதாரம், நடத்தை அறிவியல், சட்டம், மனோவியல், மன தத்துவ இயல் மற்றும் மனித தத்துவ சாஸ்திரத்துடன் தொடர்புகொண்டுள்ளது. மேலும் இது நடப்பு செய்திகள், உடல், சமூகம் மற்றும் பண்பாட்டு சூழலை விளக்குகிறது.

சமூக அறிஞர்கள், அறிவியல் பூர்வமான ஒழுக்கம் மற்றும் சமூக மதிப்புகள் யாவும், நடுநிலையான முறையில் கண்டிப்பாக சமூக பாடத்தில் குறிப்பிட வேண்டும் என்கின்றனர். எனவே நடத்தை அறிவியல் 1950 ல் ஒழுக்கத்துடன் இணைத்து சமூகபாடம் சமூக அறிவியல் பாடமாக முக்கியத்துவம் பெற்றது.

**குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு**




## 1.2 சமூக அறிவியல் மற்றும் சமூக பாடம்

சமூக அறிவியல் மற்றும் சமூகப் பாடம் இரண்டும் மனித உறவுகள் பற்றிய பாடமாகும். ஆனால் சமூக அறிவியல் என்பது ஆராய்ச்சி, ஆய்வு மற்றும் முறையாக மனித உறவுநிலைகளை பற்றி கற்கும் பாடமாகும். சமூக பாடம் எளிமையானது, சமூக அறிவியலின் மறு அமைப்பே சமூகப்பாடம் ஆகும். சமூக அறிவியல் மற்றும் சமூக பாடம் இரண்டும் பொது பாடத்தில் தொடர்புடையவை. சமூக அறிவியலில் மாணவன் கண்டறிந்தவற்றை சமூகப் பாடம் பொருந்த செய்கிறது.

### சமூக அறிவியல் மற்றும் சமூக பாடங்கள் வேறுபாடுகள்

### சமூகப்பாடம்

1. சமூக பாடத்தில் பாடச் சுருக்கம் உள்ளது.
2. குழந்தை மையக்கல்வியை அடிப்படையாகக் கொண்டது.
3. மனித செயல்களின் செயல்முறை பற்றியப் பாடமாகும்.
4. தொழில் சார்ந்த அறிவை வளர்க்கிறது.
5. சமூகப் பாடம் எளிமையானது. அதிக விபரங்களை உள்ளடக்கியது.

**சமூக அறிவியல்**

1. இது ஒரு நடைமுறை பாடம் பற்றியது.
2. இது குமர பருவக்கல்வியை அடிப்படையாகக் கொண்டது.
3. இது மனித செயல்கள் பற்றிய பாடம் ஆகும்.
4. மனித உறவு வேறுபாடுகளில் ஆய்வு சம்பந்தமானது.

## 1.3 சமூக அறிவியல் பாடத்தைக் கற்பிப்பதன் நோக்கம்


1. இந்தியாவின் உயர்ந்த பாரம்பரிய, கலாச்சார, பண்பாடுகளை அறிந்து கொள்ளுதல்.
2. சுமூகமாக இணைந்து வாழும் சமூகத்திறனை வளர்த்தல்.
3. மனித மாண்பை வளர்த்தல்.
4. நல்ல மனப்பான்மைகளை வளர்த்தல்.
5. ஆன்மீக, பொருளாதார, அரசியல் நெறிகளை அறிந்து கொள்ளுதல்.
6. விரும்பத்தக்க ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்.
7. எதிர்காலத்தைத் திட்டமிட உதவுதல்.
8. நாடு, சமூகம் தொடர்பான எண்ணங்களை வளர்த்தல்.
9. தன்னைச் சுற்றி உள்ள சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளுதல்.
10. ஓய்வு நேரங்களை முறையாகப் பயன்படுத்த உதவுதல்.
11. பொதுச் சொத்துகளைப் பாதுகாக்கும் எண்ணங்களை வளர்த்தல்.
12. தொலைநோக்குச் சிந்தனையை வளர்த்தல்.
13. தேசிய உணர்வினை வளர்த்தல்.
14. பன்னாட்டு உணர்வினை வளர்த்தல்.

## 1.4 சமூக அறிவியல் கற்பித்தல்நிலைகள்

1. சமூக அறிவியலின் முக்கியத்துவம்: மனிதன் தன்னுடைய அறிவுப் புலத்தில் நேரடியாக செயல்களை பயன்படுத்துவதற்கு உரிய பண்பாட்டு அறிவினை சமூக அறிவியல் தருகிறது.
2. மனித மனம் முதிர்வு பெறுவதற்கு மனித சமுதாயத்தின் நடைமுறை இயலாக உள்ளது.
3. மனித உறவுகளின் புதிய உண்மைகளைக் கண்டறியும் நோக்கம் கொண்டுள்ளது.

தன்னை சுற்றியுள்ள சமூக உடல் சார்ந்த பண்பாடுகள், மனித உறவுகள், மதிப்பு, நாட்டங்கள் மற்றும் திறன்கள் போன்றவற்றில் மாணவன் ஆழமாக புரிய செய்வதே சமூக அறிவியல் கற்பித்தலாகும்.

**குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் சமூக அறிவியல் பங்கு**




## 1.5 சமூக அறிவியலும் பொருளடக்கமும்

1. உறவுகள் பற்றிய பாடங்கள் உள்ளது. மனிதனுக்கும் வேறு மனிதனுக்கும், மனிதனுக்கும் நிறுவனத்திற்கும், மனிதனுக்கும் புவிக்கும், மனிதனுக்கும் பொருட்களுக்கும் உள்ள உறவுகள் நிலை பற்றியது.
2. இயற்கை அறிவியல் மற்றும் கலைப்பாடம் பற்றிய படிப்பாகும்.
3. சமுதாயத்தில் சமூக அமைப்பில் நடப்பு நிகழ்வு பற்றிய கல்விச் சிந்தனையாகும்.
4. சமூக நிறுவனங்களில் முழுமையாக பணிபுரிதல் சார்ந்த கல்வியாகும்.


## 1.6 சமூக அறிவியலின் வரம்பு

சமூக அறிவியலின் வரம்பு விரிவானது. பரந்து காணப்படுவது பரந்த உலகத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. எல்லை அற்றது. இதன் முடிவை அறிய முடியாது. எல்லைகளை நிர்ணயம் செய்ய இயலாது. எனவே பல்வகை ஒழுக்கம் சார்ந்த குறைந்த பட்ச அறிவு செயலுக்கு முன்நோக்கு வழங்குகிறது.

*செயல்*

*சமூக அறிவியல் கற்பித்தலின் நோக்கங்கள் பற்றி கலந்துரையாடி அறிக்கை தயாரிக்க.*

**சமூகவியல் பாடத்தின் பரந்த இடம்**




## 1.7 தொடக்கக் கல்வி நிலைகளில் சமூக அறிவியல் கற்பித்தலின் நோக்கங்கள்

1. தனது இல்லம், பள்ளி, தேசம், உலகம் அனைத்தையும் புரிந்து கொள்ளல்.
2. இனம், பால், மொழி, மதம் ஆகியவற்றில் அனைவரும் சமம் என்ற எண்ணம் வளர்த்தல்.
3. பல்வேறு இன மக்களால் அளிக்கப்பட்ட உயர்ந்த மேம்பட்ட கலாச்சாரத்தை மதித்து போற்றுதல்.
4. நன்னெறி மற்றும் மதிப்பு கோட்பாட்டிற்கு மதிப்பு அளித்தல்.
5. நமது பாரம்பரிய பண்பாட்டிற்கும் தேசிய உணர்வுக்கும் ஆதரவு தருதல்.
6. சுய அறிவை விரித்தல் மற்றும் உழைப்பின் தத்துவம் புரிந்து கொள்ளுதல்.
7. பிறர் கருத்துக்கு செவிசாய்த்தல், சமுதாய செயல்களை விரிவுபடுத்துதல் மற்றும் தான், நேர்க்கொண்ட நோக்கு உணர்வை வளர்த்தல்.

## 1.8 மனித வளர்ச்சிக்கு சமூக அறிவியலின் பங்கு

### 1.8.1 அறிமுகம்

"வரலாறு என்பது பல சமுதாயங்களில் வாழ்ந்த, வாழ்ந்துவரும் மக்கள் வாழ்க்கையின் பதிவேடு என்றும், அவை அந்தந்த கால கட்டங்களின் அரசியல் மற்றும் புவியியலை பின்னணியாகக் கொண்டது" என்றும் கூறுகின்றனர்.

மக்கள் வாழ்ந்த இடம், காலம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு, அதற்கு முன்பும் பின்பும் உள்ள வளர்ச்சி நிலைகளை அறிய சமூக அறிவியல் வாயிலாக மக்கள் சமுதாய வாழ்வில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அறிய முடிகின்றது. சமூக அறிவியல் என்பது மனித வளர்ச்சியின் முன்னேற்றம் ஆகும். மனிதன் தான் வாழ்ந்த அல்லது வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் பெற்ற அனுபவங்களும் தனது வளர்ச்சிக்காக மேற்கொண்ட அரசியல், சமூக, பொருளாதார, சமய, கலை, பண்பாடு மற்றும் அறிவியல் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களையும் அளிப்பது சமூக அறிவியல் ஆகும். மனிதன் வாழ்ந்த, வாழும் இடங்கள், அவற்றின் நிலவியல் அமைப்புகள், கடந்த கால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்கால சமுதாய அமைப்புகள், சீர்திருத்தங்கள் மற்றும் மனித வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொண்டுள்ள நிலையினையும் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஏற்றத்திற்காகவும், மக்கள் நல்வாழ்விற்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் இப்பாடத்தின் வாயிலாக அறிய முடிகிறது. "சமுதாயத்தில் செயல்படும் மனிதனின் வளர்ச்சி பற்றி கூறுவதே" வரலாற்றின் நோக்கம் என்று 'பென்ஹீம்' என்ற அறிஞர் கூறுகின்றார்.

பழங்கால மனிதன் நாடோடியாகத் திரிந்தான்; குகைகளில் வாழ்ந்தான்; வேட்டையாடினான்; பச்சைக் காய்கறிகள், மாமிசம் ஆகியவற்றை புசித்தான்; இடி, மின்னல், தீ, புயல், மழை முதலியவற்றை கண்டு அஞ்சினான்; அவற்றின் பயன்கருதி அவற்றை வணங்கினான்; பயிர் வளர்த்தான்; தூய்மையான நீர், இயற்கை காற்றுடன் சுகமாக வாழ்ந்தான்; நெருப்பைக் கண்டுபிடித்தான், அதன் பயன் அறிந்தான்; சக்கரம் சுற்றினான்; பானைகள் செய்தான்; சுவையான உணவு சமைத்தான்; குகையில் வாழ்ந்தான் ஆற்றங்கரையில் வசித்தான்; வளமானவன் மனிதன்; அவன் கூட்டமாக ஓரிடத்தில் வசித்தான். வீட்டிற்கு தலைவன்; அதனின்று நாட்டிற்கு தலைவனாகினான்; அரசியல் பிரிவுகள், சாதிகள், சமயங்கள் புதிய கண்டு பிடிப்புகள், கடல் கடந்த தொடர்பு மனித வாழ்க்கையில் மாறுதல்களைக் கொண்டு வந்தன. தொழிற் புரட்சி, விவசாயப் புரட்சிகள் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள் மலர்ந்தன தகவல் தொடர்பு, இயந்திரங்கள், வாகனங்கள், மின்சாரம் ஆகியவை மக்களின் சமுதாய வாழ்வில் மாற்றங்களை உண்டாக்கின. கண்டங்களும் கடல்களும் வெறும் மதிற்சுவர்களாக மாறி, உலகமே கிராமமாக இன்று மாறி விட்ட காட்சியை நாம் காண்கின்றோம். காலம் மக்களின் வளர்ச்சிக்கு அளித்த அனுபவத்தால் "இது முடியுமா ?" என்ற வினாவிற்கு "எதுவும் முடியும்", மனித முயற்சியினால் எவற்றையும் வெல்லமுடியும் என்ற எல்லையை நாம் அறிந்து கொள்ள சமூக அறவியல் துணை நிற்கின்றது. அரசியல் , பொருளாதார, தொழில் நுட்ப உதவிகளை அளிக்கின்றது. ஒவ்வொரு சமூகமும், மாற்றம், முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றை உலகளாவிய அளவில் பின்பற்றி வருகின்றது என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

*செயல்*

*சமூக அறிவியல் பாடம் கற்றல் மனித வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை வரலாறு, குடிமையியல், புவியியல் பாடப் பகுதிகளிலிருந்து உதாரணங்கள் கூறி விவாதம் செய்க.*

பல நாடுகளில் ஏற்பட்ட தேசிய இயக்கங்கள், சுதந்திரப் போராட்டங்கள், பகுத்தறிவு, விசாரணை உணர்வு, புதிய கண்டுபிடிப்புகள், உணவு, உடை, இருப்பிடத்திலிருந்து, மனித வாழ்க்கை மண்ணுக்கும் விண்ணுக்கும் தொடர்பு கொள்வது வரை மனித அறிவின் வளர்ச்சி, நவீனப் பொருட்களின் பயன்பாடு, புதிய ஆராய்ச்சிகள், ஆராய்வின் பலனாக முன்னேற்றப்பாதையில் வளமான வாழ்க்கை, காலம் மாறினாலும் மாறாதப் பண்பாடும் கலாச்சாரமும் கொண்ட இவை அனைத்தும் மனித வள வளர்ச்சியையும் மாட்சிமையையும் எடுத்துரைக்கின்றன.

## 1.8.2 மனித வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு

சமூக அறிவியல் தனிமனித வளர்ச்சிக்கு பின்வருமாறு உதவுகிறது.

- தன்னையும் தன்னைச்சார்ந்த சமூகத்தையும் அறிதல்.
- சுற்றுப்புறச் சூழலை அறிந்து கொள்ளுதல்.
- கடந்தகால, நிகழ்கால சமூகம் மற்றும் புவியியல் சூழலை அறிந்து கொள்ளுதல்.
- சமூகத்திறனை வளர்த்துக் கொள்ளுதல்.
- ஜனநாயக பண்பினை அறிதல்
- சமூகத்தோடு ஒன்றிணைதல்
- இந்திய பாரம்பரிய பண்பாட்டு கூறுகளைப் பின்பற்றுதல்.
- ஆன்மீகம், பொருளாதார, அரசியல் நெறிகளை அறிதல்.
- மனித உறவுகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- தான் வாழும் இடம், நாடு மீது தேசப்பற்று கொள்ளுதல்.
- முழு ஆளுமைப் பண்பினை அறிந்து கொள்ளுதல்.
- தேசிய மற்றும் பன்னாட்டு உணர்வுகளை வளர்த்தல்.
- வேற்றுமையில் ஒற்றுமை பேணுதல்.
- அரசுத் திட்டங்களுக்கு உறுதுணையாதல்.
- தேச வளங்களைப் பராமரித்தல்.

உரிமை அறிதல் மற்றும் கடமை அறிதல்.

## 1.8.3 அறிவு வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு

வரலாற்று நிகழ்ச்சிகள் வரலாற்று உண்மைகளை அறிந்துகொள்ளவும், சிந்தனைகளைத் தூண்டுவதற்கும், மேலும் சிந்திக்கும் பழக்கத்தை உண்டாக்கவும், காரணக் காரியத் தொடர்புகளை

அறியவும் உதவுகின்றன. மனப்பயிற்சி, நினைவாற்றல், என்ன, ஏன், எதற்கு, எப்படி, பகுத்தறிதல் தொகுத்தறிதல் பிரித்தறிதல் ஒப்பிடுக, காரணக் காரியத் தொடர்பறிதல் முடிவுகளை சீர்தூக்கிப்பார்த்தல், உண்மையறிதல், அலசி ஆராய்தல், வேற்றுமைகளை அறிதல், புதியனக் கண்டுபிடித்தல், கண்டுபிடித்ததை விரிவாக்கல், பயன்படுத்துதல், தவறுகளைக் களைதல், மீண்டும் ஆய்வு செய்தல், பழமையை அறிந்து, புதியன புரிதல், நெறிச் சார்ந்த விதிகளை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு உறுதுணை செய்கின்றன.

டாக்டர் ஜான்சன் என்பார் வரலாறு படிப்பது அதிமுக்கியமானது; அவ்வரலாறு, அறிவு வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றது என்று கூறுங்கால், சிந்தனை, நுண்ணறிவு ஆராய்தல், காரணமறிதல், வெற்றிகரமான அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமாக விளங்குதல், அறியாமை நீங்கி அறிவு பெறுதல் ஆகியன அறிவு உலகில் வரலாறு ஏற்படுத்தியப் புரட்சியாகும் என்கிறார். கணித வரலாறு, அறிவியல் வரலாறு, இலக்கியம், புவியியல், நாடு, மக்கள், சமயம், மரபுகள், கலை, பண்பாடு, ஆன்மீகம், சிந்தனைகள், தத்துவம், தர்க்கம், சூழ்நிலையியல், மருத்துவம், வானவியல் சோதிடவியல், பொருளாதாரம், அரசியல், சமூக அமைப்பு அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம் ஆகிய அனைத்துமே மனித அறிவு வளர்ச்சியின் வெளிப்பாடுகளாகும்.

### 1.8.4 சமூக வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு

மாறுதல், வளர்ச்சி என்பவற்றை உள்ளடக்கியதுதான் சமூக அறிவியலாகும். சமுதாயத்தின் வாழும் மக்களின் உணவு, உடை, பழக்க வழக்கங்கள், வாழுமிடம், தட்ப வெப்பநிலை, தாவரங்கள், பிராணிகள், விலங்குகள், நீர்நிலைகள், இயற்கை அமைப்புகள், சமய, சமூக, இலக்கிய, நுண்கலை வளர்ச்சிகள், சமுதாய சிந்தனையாளர்கள் சமூகஅமைப்புகள் ஆகியவற்றை முறையாக ஆராய்ந்து, அறிவியல் முறையில் காலம், இடம், தொடர்ச்சி, வளர்ச்சி ஆகியன அடிப்படையில் சமூக நிகழ்வுகளை எடுத்துக்கூறுகின்றது.

### 1.8.5 அரசியல் அறிவு வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு

ஒவ்வொரு நாட்டின் வரலாற்றையும் அறிய அந்த நாட்டின் அரசியலை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக இந்தியா மதச் சார்பற்ற அரசு எந்த மதத்தின் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளை உடையது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். இந்தியாவில் பிறந்த குடிமகன்கள்/குடிமகள்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கவும் அதை இழந்தால் நீதிமன்றம் மூலம் மீண்டும் பெறவும் வாய்ப்பு உண்டு. இது மக்களால், மக்களுக்காக, மக்களாலேயே உருவாக்கப்பட்ட சனநாயகக் குடியரசாகும். கிராமம், ஊராட்சி மன்றங்கள், நகராட்சி, மாநகராட்சி, பஞ்சாயத்துகள், பாராளுமன்றம், மாநில மன்றங்கள், செயல்முறைகள், அதிகாரங்கள், சோஷலிசக் கொள்கைகள் ஆகியவற்றை அறிந்து செயல்படுவதற்கு உதவுகிறது. வாக்குரிமை, தேர்தல், தேர்தல் குழுப் பணிகள், தேசியக் குறிக்கோள்கள், திட்டங்கள் ஆகியவற்றைப் புரிந்து செயல்பட உதவுகின்றது. சமுதாயப் பழக்கங்களில் மாறுதல்கள், சமுதாயச் சீரமைப்புக்கு ஒத்துழைப்பு, ஒற்றுமையுடன் வாழ்தல், விட்டுக் கொடுத்தல், சகிப்புத் தன்மை, நட்பு ஆகிய பண்புகள் வளர்வதற்கும் வழி செய்கின்றது.

### 1.8.6 பொருளாதார வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு

வாழ்விற்கான ஆதாரத்தை ஈட்டும் வழிகளை அறிவுறுத்துகின்றது. காரல் மார்க்ஸ் சமுதாயத்தின் முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றத்தை ஒட்டியுள்ளது என்று கூறுகிறார். நிலங்கள், வயல்கள், விவசாய முறைகள், தொழிற்சாலைகள், வாணிகம், பண்டப் பரிமாற்றம், தகவல் தொடர்பு, பணியாளர்களில் சூழல், வேலை பார்க்கும் இடம் இவை அனைத்துமே பொருளாதாரம் மிளிர காரணங்கள் ஆகும்.

***செயல்***

*சமூக, அரசியல், பொருளாதார, அறிவு மற்றும் தனிமனித வளர்ச்சிக்கு சமூக அறிவியலில் நாம் பெறும் விளக்கங்கள் யாவை? மாணவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரித்து, தலைப்புகளுக்கு உரிய படங்கள், வரிக்கோட்டுப் படங்கள், நிலப்படங்கள், மாதிரிகள் அட்டைப்பட விளக்கங்களுடன் விவாதித்து, ஒவ்வொரு குழுவும் தங்கள் கருத்துகளை பரிமாறி அவற்றை பதிவுசெய்ய வேண்டும்.*

இந்தியாவில் பஞ்சத்தைப் பற்றிக் கூறுகையில் எட்வர்ட் மற்றும் காரட் வல்லுனர்கள் “பஞ்சம் ஷாஜகான் காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைக்கு சாவுமணி அடித்துவிட்டது” என்கின்றனர்.

### 1.8.7 தேசிய வளர்ச்சியில் சமூக அறிவியலின் பங்கு

நாட்டைப் பற்றி அறிய சமூக அறிவியல் துணை செய்கின்றது. நாட்டின் அரசியல் பிரிவுகள், இயற்கைப் பிரிவுகள், எல்லைகள், நாட்டின் சிறப்பியல்புகள், அரசாங்க அமைப்பு, உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள், சமூக, அரசியல், பொருளாதாரத் திட்டங்கள், செயல்பாடுகள், அரசு அங்கங்களின் செயல்கள், நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், போக்குவரத்து, விளைபொருள்கள், தொழில்கள், பாராளுமன்றம், மாநில சட்ட சபையின் பணிகள், குடிமகனின் / குடிமகளின் அடிப்படை உரிமைகள், கடமைகள், நாட்டின் பாதுகாப்பு, இயற்கை வளங்கள் பாதுகாப்பு, சுற்று புறச் சூழ்நிலை பாதுகாப்பு, உடல்நலம் சுகாதாரம் காத்தல், தேசப் பக்தி, தேசப் பற்று, வேற்றுமையில் ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம், நாட்டை எதிர் நோக்கியுள்ள தேசிய சின்னங்களைப் பாதுகாத்தல், அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி, தகவல் தொடர்பு பயன்கள், திட்டங்கள் அறிதல், வேற்றுமைகளை மறந்து நாட்டைப் பாதுகாக்க முன்வருதல் சர்வதேச மனப்பான்மை வளர்த்தல் ஆகியவற்றினை அறிந்து உண்மையான குடிமகனாக / குடிமகளாக வாழ உதவி செய்கின்றது.

***செயல்***

*தேசிய வளர்ச்சியில் தனிமனிதன் மற்றும் சமூகத்தின் பங்கு யாது? கலந்துரையாடல் செய்க. உதாரணங்களையும், கருத்துகளையும் பட்டியலிட்டு பதிவு செய்க.*

நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாடு, கலைகள் ஆகியவையும், இந்தியாவின் பெருமை வாய்ந்த தேசியச் சின்னங்களும்,நினைவுச் சின்னங்களும், பொதுவான இயற்கை வளங்களும், தேசியப் பாடலும் மக்கள் அனைவரிடமும் “நாம் இந்தியர், நமது இந்திய நாட்டை காப்பது நம்கடமை” என்ற உணர்வையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கின்றன.

தகவல் தொடர்பு, அறிவியல் தொழில் நுட்பத்தில் இந்திய நாடு முன்னேறி வருகின்றது. இந்திய சாதனைகளில் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் / குடிமகளும் பங்கு பெற வேண்டும்.

நமது முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. A.P.J. அப்துல் கலாம் அவர்கள் "ஒவ்வொருவரும் கனவு காணுங்கள். ஒவ்வொரு நாளும் சாதனை புரிந்து கனவை நனவாக்கலாம்" என்று கூறியுள்ளார்.

தனிமனிதனுக்கு பிரச்சனைகள் இருப்பினும் உள்ளம் தடுமாறாமல் அவற்றை எதிர் கொண்டும், உள்ள உறுதிப்பாட்டை வளர்த்துக் கொண்டும், நம்மால் பிரச்சனைகளை நீக்கி சாதனைகள் புரிய இயலும் என்ற ஒன்றை குறிக்கோளாகக் கொண்டும், நெஞ்சுறுதியுடன் விழிப்புணர்வு கொண்டவர்களாக வாழ்ந்து வெற்றிகளைக் குவிக்க நமது முன்னோர்களின் வாழ்க்கை வரலாறே சான்றாகும். வாழ்க இந்தியா! வளர்க சாதனைகள்!

***செயல்***

*"தேச முன்னேற்றத்தில் எனது பங்கு" என்ற தலைப்பில் பேசுக, பதிவு செய்க.*

## 1.9 பார்வை நூல்கள்


1. Arthur. C. Winning - Teaching the Social Studies in Secondary Schools.
2. Chandhary K.P., Effective Teaching of History in Schools.
3. Ghate, V.D., The Teaching of History, Oxford University press, Bombay (1961).
4. Kohli A.S., Teaching of Social Studies, Anmol publications pvt. Ltd., New Delhi (1996).
5. Kochhar, S.K., The teaching of Social Studies, Sterling pub. pvt. Ltd. New Delhi (1984).
6. Nauri. C.C. Hunt - Teaching High School Social Studies.

   James, A.. Banks Teaching strategies for the Social Studies.
7. NCERT, New Delhi (1970), Teaching History in Secondary Schools.
8. Ralph C. Crerton, Teaching Social Studies in Elementary Level.
9. Thirugnana Sambhandhan, சமூக அறிவியல் கற்பிக்கும் முறைகள்.
10. Venkatasamy, K., வரலாறு கற்பிக்கும் முறைகள்.
11. Yajnik. K.S., Teaching of Social Studies in India, Orient Longmens Ltd. Bombay (1966).

# அலகு – II

# செயல்திட்டம்

# (PROJECT)

## அறிமுகம்

செயல்திட்ட முறை பற்றி முழுமையாக விளக்குவதற்கு முன்பு ஒரு சில தலைப்புகளில் மாணவர்களைச் செயல்திட்டத்தை மேற்கொள்ளச் செய்ய வேண்டும். அவர்கள் செய்த முறைகளில் உள்ள குறைபாடுகளைப் பற்றியும், அவை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை விளக்க பல்வேறு வல்லுநர்களின் கருத்துக்களையும், படிநிலைகளையும் விளக்க வேண்டும்.

## அலகுக் கூறுகள்

2.1 செயல்திட்டமுறையின் நோக்கங்கள்

2.2 செயல்திட்ட முறை – படிநிலைகள்

2.3 செயல்திட்டமுறை – ஆசிரியரின் பங்கு

2.4 செயல்திட்ட முறையின் முக்கியத்துவம்

2.5 செயல்திட்ட முறையில் சில இடர்பாடுகள்

2.6 செயல்திட்டம் – தலைப்புகள்

2.7 முடிவுரை

2.8 பார்வை நூல்கள்

**கற்றல் செயல்கள்**

| வ. எண். | அலகுக் கூறுகள் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | செயல்திட்ட முறை – படிநிலைகள் | செயல்திட்டம் – உங்கள் மாவட்டத்தின் நவீன சாலைப் போக்குவரத்து வளர்ச்சி மற்றும் நெரிசலை குறைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் | போக்குவரத்து முன்னேற்றம் மற்றும் விளைவுகள் (மேம்பாலங்கள், நான்கு வழிப் பாதைகள், புதிதாக போடப்பட்ட சாலைகள், சாலை எச்சரிக்கை மின் விளக்குகள், சாலை சீரமைப்பு பணிகள், மக்கள் நெரிசல், சுற்றுசூழல் சீர்கேடுகள் | – | மாவட்டத் காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (அ) கிராம நிர்வாக அலுவலகம் |
| 2. | செயல் திட்டம் – படிநிலைகள் | செயல்திட்டம் வானிலை அறிக்கை – ஓர் ஆய்வு | ஏதேனும் 3 மாதங்களுக்குரிய செய்தித்தாள்களில் வரும் அன்றாட வானிலை அறிக்கைகளை சேகரித்து தொகுத்தல் (வெப்பநிலை, மழை அளவு, ஈரப்பதம்) | – | அன்றாட வானிலை அறிக்கைகளை செய்தித்தாள் மூலம் 3 மாதங்களுக்கு சேகரித்தல். |
| 3. | செயல்திட்டம் –மேற்கொள்ள ஏதுவாக உள்ள கற்றல் திறன்கள் | பட்டியலிடுதல், ஒப்படைப்பு | 3 முதல் 8 வகுப்பு வரை உள்ள சமூக அறிவியல் திறன் பகுதியில் செயல் திட்டத்திற்கு ஏதுவாக உள்ள திறன்களை கண்டறிதல் | கற்பிப்பு பயிற்சிக்கு செல்கையில் பள்ளியில் பாடப் புத்தகங்கள் ஆய்வு செய்தல் | – |

கற்றல் கற்பித்தலில், கற்பித்தல் முறை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. கற்பித்தல் முறைதான் கற்றலின் விளைவை நிர்ணயம் செய்கிறது. கற்பித்தலில் பல முறைகள் கையாளப்பட்டாலும், செயல் திட்ட முறை ஒரு சிறப்பு வாய்ந்த முறையாகக்கருதப்படுகிறது. ஜான் டூயி (John Dewey) என்ற அறிஞர்தான் இதற்கு முழுவடிவம் கொடுத்தவர். ஆனால் இவருக்கு

முன்பே கில்பேட்ரிக் (Kil Patrick) என்ற அறிஞர் இது குறித்துக் குறிப்பிடுகையில் இது ஒரு குறிக்கோளோடு அறிவியல் பூர்வமாகச் சமூகச் சூழ்நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற செயலாகும் என்றும், இச் செயல்திட்டமுறை ஒரு முக்கியம் வாய்ந்த கற்றல் மதிப்பு கொண்ட ஒன்றுக்கும் மேற்பட்ட அளவுத்திறன்களைக் கொண்டதாகும் என்றும் கருதுகின்றார்.

## 2.1 செயல் திட்டமுறையின் நோக்கங்கள்

- தானே கற்றல் முறையை மேற்கொள்ளத் தேவையான ஆர்வத்தையும், ஊக்கத்தையும் தோற்றுவித்தல்.
- செயல்பாடுகள் மூலம் பிரச்சனைகளையும், கருத்துக்களையும் (concepts) புரிந்து கொள்ளுதல்.
- உற்றுநோக்கல் திறனையும், கண்டறிதல் திறனையும் வளர்த்தல்.
- மற்றவர்களோடு இணைந்து, கூட்டாகச் செயல்படும் மனப்பான்மையைத் தோற்றுவித்தல்.
- செயல்புரிதல் மூலமாக மாணவர்களின் ஆற்றல்கள், திறன்கள் ஆகியவற்றை வெளிக்கொணர்தல்.
- பல்வேறு அனுபவங்களை நல்ல நோக்கமுள்ள செயல்பாடுகள் மூலம் பெறுதல்.

இந்தச் செயல் திட்டமுறையானது கீழ்க்கண்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

செய்து கற்றல் (Learning by Doing)

வாழ்ந்து கற்றல் (Learning by Living)

குழந்தைகள் ஒற்றுமையாகவும், இணைந்தும் செயல்படும்போது கற்றல் விளைவு அதிகமாக இருக்கும்.

## 2.2 செயல்திட்ட முறை – படிநிலைகள்

செயல் திட்டத்தை மேற்கொள்ளும்போது கீழ்க்கண்ட படிநிலைகளைப் பின்பற்ற வேண்டும்.

- சூழ்நிலையைத் தோற்றுவித்தல்
- தேர்ந்தெடுத்தலும் கருத்துரு தருதலும்
- திட்டமிடுதல்
- மேற்கொள்ளுதல்
- மதிப்பிடுதல்
- பதிவு செய்தல்

**சூழ்நிலையைத் தோற்றுவித்தல்:** செயல்திட்டம் ஒரு தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இது ஒரு குறிக்கோளையும், முக்கியத்துவத்தையும் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர், அன்றாட முக்கியமான பல கற்றல் செயல்பாடுகளுடன் தொடர்புடைய

செய்திகளைத் தெரிவித்துக் கலந்துரையாடல் செய்ய வேண்டும். அது அவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும்.

**தேர்ந்தெடுத்தலும் முன்மொழிதலும் (Choosing and Proposing):** இந்தப் படிநிலையில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் கீழ்கண்ட முறைகளில் அமைய வேண்டும்.

- பள்ளிச் செயல்பாடுகள், உண்மையான நிகழ்வுகளுடன் தொடர்புடையதாகவும், பள்ளி வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், சமூக வாழ்க்கைக்குப் பயன்படும் வகையிலும் அமைய வேண்டும்.
- ஒவ்வொரு செயல்பாட்டையும், மாணவர்கள் அவரவர் வகுப்பிற்கு ஏற்பவும், குறிக்கோள்களுக்கு ஏற்பவும் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- செயல்பாடுகளைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர் ஆர்வம் ஊட்டி அதற்கான சூழலை ஏற்படுத்தி மட்டுமே கொடுக்க வேண்டும். மாணவர்கள்தான் செயல் திட்டத்தைத் தெரிவு செய்ய வேண்டும் என மனவியல் அறிஞர் கில்பேட்ரிக் கூறுகிறார்.

**செயல்திட்டத்தைத் தெரிவு செய்யும்போது மனதில் கொள்ளவேண்டியவை:**

- தகுந்த சான்றுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- குறித்த காலத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும்.
- செய்து முடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் (Feasibility).
- மேலும் செயல் திட்டத்தினுடைய நோக்கம் புரிந்து கொள்கிற வகையில் விளக்கமாக இருத்தல் அவசியம்.

**திட்டமிடுதல் (Planning):** எந்த ஒரு செயலுக்கும் திட்டமிடுதல் மிகவும் அவசியமானது. ஆசிரியர் இங்கு மாணவனுக்கு வழிகாட்டியாக இருந்து செயல்பட வேண்டும். திட்டமிடுதலில், தேவைப்படும் காலம், பொருட்கள், பணம் மற்றும் செலவினங்கள் மற்றும் பயன்கள் போன்றவை இடம் பெற்றிருக்க வேண்டும்.

**செயல்படுத்துதல் (Execution):** செயல் திட்டம் தெரிவு செய்யப்பட்டு திட்டம் வரையப்பட்ட பிறகு ஆசிரியர், மாணவன் அந்தத் திட்ட வரைப்படி செயல்பட வழிகாட்ட வேண்டும். செயல்படுத்துதல்தான் செயல்திட்டத்தில் மிகவும் முக்கியமானது மட்டுமின்றி மிக நீண்ட பகுதியாகவும் இருக்கும். இந்நிலையில் ஆசிரியர் மிகக் கவனமாக மாணவர் செயல்பாடுகளை உற்று நோக்கி காலமும், பொருளும் விரையமாகாமலும் குறித்த வேகத்தில் செயல்படவும் வழிவகுக்க வேண்டும்.

**மதிப்பீடு (Evaluation):** செயல் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே ஆசிரியரும் மாணவரும் தனித்தனியாக அதனுடைய தன்மையை முன்னேற்றத்தை ஆராய்ந்து அதற்கேற்பத் தமது நடவடிக்கைகளைச் சரிப்படுத்திக்கொள்வது அவசியம். செயல் திட்டத்தினுடையப் போக்கை, திட்டமிட்டப்படி நடக்கிறதா என ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இச்செயல் மாணவர்களது ஆர்வம், திறமை, மனப்பான்மை ஆகியவற்றைத் தெளிவுபடுத்தி அதன் முக்கியத்துவத்தை விளக்கும்.

**பதிவு செய்தல் (Recording):** செயல் திட்டத்தினுடைய ஒவ்வொரு படியைப்பற்றிய தகவல்களும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். கருத்துரு, திட்டம், கலந்துரையாடல் விவரம், ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட வேலைகள் போன்றவை அவசியம் இருக்க வேண்டும். இதற்காகச் சென்ற இடங்கள், பயன்படுத்திய பொருட்கள் போன்றவையும் பதிவு செய்யப்பட வேண்டும்.

## 2.3 செயல்திட்ட முறை

### ஆசிரியரின் பங்கு (Role of the Teacher)

- ஆசிரியர் வழிகாட்டியாகவும், நண்பனாகவும், நல்ல ஆலோசகராகவும் இருக்க வேண்டும்.
- அவர்களது இடர்ப்பாடுகளை அவ்வப்போது உடனிருந்து களைய வேண்டும்.
- மாணவர்கள் குழுவில் ஒன்றாகவும், அமைதியாகவும் செயல்பட வைக்க வேண்டும்.
- மாணவர்கள் தவறு செய்யாமல் உடனிருந்து வழிகாட்ட வேண்டும்.
- ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய பங்கை அதில் தவறாமல் ஏற்று நடத்த வேண்டும் என்பதனை உறுதி செய்ய வேண்டும்.
- ஆசிரியரின் செயல் திட்டத்தை மாணவர்கள் மேற்கொள்கின்றபோது ஜனநாயக முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## 2.4 செயல் திட்ட முறையின் முக்கியத்துவம் (Merits of the Project Method)

- செயல் திட்டம், உளவியல் அடிப்படையில் செயல்படுத்துகின்ற ஒரு கற்றல் நிகழ்வு.
- மாணவர்களுக்கு உண்மையான அனுபவங்களை கொடுக்கின்றது.
- ஒற்றுமையின் முக்கியத்துவத்தை ஒவ்வொருவருக்கும் உணர்த்துகிறது. ஆர்வம் அடிப்படையாக அமைகிறது.
- பல திறன்கள், நாட்டங்கள், பண்புகள் கொண்டவர்கள் இணைந்து ஒரு செயலை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது.
- இது கற்றலில் சுதந்திரமாக ஈடுபட வழிவகுக்கின்றன.
- இது பல்வேறு தொடர்புடைய பாடங்களை, செய்திகளை கற்றுக்கொள்ள உதவுகிறது.
- ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நல்ல இணக்கத்தைத் தோற்றுவிக்கிறது.
- மாணவர்களுக்குள் தன் மதிப்பையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது.
- ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு உதவுகிறது.

## 2.5 செயல்திட்ட முறையில் சில இடர்ப்பாடுகள் (Limitations of the Project Method)

1. அதிக நேரமும், பணமும் செலவாகும்
2. ஆசிரியரின் வேலைப்பளு அதிகரிக்கும்.
3. பள்ளிச் செயல்பாடுகள் தடைபடும்.
4. எல்லோரும் சமபங்கெடுத்துக் கற்கும் நிலை இருக்காது.
5. எல்லாப் பாட அலகுகளுக்கும் இம்முறையைப் பயன்படுத்த இயலாது.

## 2.6 செயல்திட்டம் – தலைப்புகள்

சமூக அறிவியலில், கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளைப் போல மாணவர்களுக்குச் செயல் திட்டங்களைத் தெரிவு செய்து கொடுக்கலாம்.

1. சூரியக் குடும்பம்
2. சுனாமியும் அதன் விளைவுகளும்
3. பருவக்காற்றுகளும் அவை கால நிலையின் மேல் தோற்றுவிக்கும் தாக்கங்களும்.
4. தொழிற்சாலைகள் (விவசாயம் சார்ந்த / கனிவளம் சார்ந்த மற்றும் அந்தந்தப் பகுதிக்கு தகுந்தாற் போல்)
5. வரலாற்றுச் சிறப்பிடங்கள்.
6. சுற்றுலாத் தலங்கள்.
7. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின் தாக்கம்
8. தகவல் தொடர்பு / தகவல் தொழில் நுட்ப முன்னேற்றத்தில் இந்தியா
9. சிந்து சமவெளி நாகரிகம்.
10. பல்லவர்களும் கட்டிடக் கலையும்
11. மக்களின் சமூக, பொருளாதார நிலை பற்றிய புள்ளி விவரங்கள் சேகரித்தல்.
12. மத்திய, மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் செயல்படும் முறை.
13. மாதிரிகள் சேகரித்தல் (உலக நாடுகளின் அஞ்சல் தலைகள், கொடிகள், நாணயங்கள் மற்றும் மண் வகைகள், பாறைகள், இலைகள் போன்றவை)

## 2.7 முடிவுரை

செயல்திட்ட வேலைகளுக்கு வித்திடுபவர் ஆசிரியரே ஆவார். எனவே பாடங்களைக் கற்பிக்கும் பொழுதும், படித்த பாடப்பகுதிகளை மதிப்பீடு செய்யும் நிலையிலும் செயல்திட்டங்களை தெரிவு செய்வது ஆசிரியரின் முக்கிய பணியாகும். அதேபோல் மாணவர்கள் செயல் திட்டத்தை முடித்த பின்னர் அவர்களின் செயலைப் பற்றிய பாராட்டுதல்களையும், ஊக்குவிப்பையும், ஆசிரியர்கள் தர வேண்டியது மிகவும் அவசியம். இவ்வாறு அமையும் பொழுதுதான் செயல் திட்டமுறை வெற்றியுடனும் சிறப்பாகவும் அமையும்.

செயல்திட்ட முறை ஒரு அறிவியல் பூர்வமான கற்றல் கற்பித்தல் முறையாகும். வரலாற்று நிகழ்வுகளையும், நம் சுற்றுப்புறத்தில் ஏற்படும் இயற்கை மாற்றங்களையும் கண்ணுற்று, அவை நம் அன்றாட வாழ்வில் எத்தகைய தொடர்பு கொண்டுள்ளன என்பதையும் மாணாக்கர் அறிந்து கொள்ள செயல்திட்ட முறை ஒரு பயனளிக்கும் முறையாக உள்ளது. எனவே காலமும், செலவும் கூடினாலும், அனுபவக் கல்வியைத்தரவல்ல இம்முறையை மாணாக்கர்க்கு அறிமுகப்படுத்தி செயல்படுத்துவது இன்றியமையாதது.

எனவே மாணவர்களின் கற்றல் வேகத்திற்கேற்ப கொடுக்கப்படும் செயல்பாடுகளில் ஒன்றாட செயல்திட்டம் ஒரு சிறப்பான கற்பித்தல் அணுகுமுறை என்பதைக் கண்டோம். இத்தகைய அறிவுப் பூர்வமான செயல்பாடுகள் மட்டுமே மாணவர்களின் திறமையை வெளிக்கொணர்வதற்கும், சிறந்த மதிப்பீட்டிற்கும் உதவுகின்றது. இம்முறையில் கொடுக்கப்படும் குழுச்செயல்பாடுகள் மாணவர்களிடையே சுமூகமாக உறவை வளர்க்கின்றது. செயல்திட்டங்கள் உண்மையான அனுபவங்களை மாணவர்களுக்குக் கொடுப்பதால், ஒரு நிலையானக் கற்றலை அவர்கள் பெறுகின்றனர். இவ்வாறு தாங்கள் கற்றதை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறனையும் பெறுகின்றனர்.

## 2.8 பார்வை நூல்கள்


1. Dash B.N. & Dr. I.V. Radhakrishna Murthy, Methods of Teaching Social Studies Neelkamal publications pvt. Ltd., New Delhi (2005).
2. Kohli. V.K., How to teach science, Vivek publishers, India (1998).
3. Salim Basha S.A. & Digumarti Bhaskara Rao, Methods of Teaching Geography - Discovery publishing House, New Delhi (2004).
4. திருஞானசம்பந்தர், வரலாறு கற்பிக்கும் முறைகள், 2005.
5. திருஞானசம்பந்தர், சமூக அறிவியல் கற்பிக்கும் முறைகள் Tamil Nadu Text Book Society, Chennai.
6. Venkataswamy. K, வரலாறு கற்பிக்கும் முறைகள்.

### 3.3.4 நில வரைபடங்கள், புவி மாதிரி, நிலப்படப் புத்தகம் வேறுபாடுகள்

| அடிப்படைக் கூறுகள் | நில வரைப்படம் (Map) | புவி உருண்டை மாதிரி (Globe) | நிலப்படப் புத்தகம் (Atlas) |
|---|---|---|---|
| அளவை | பெரிய அளவையிலும் சிறிய அளவையிலும் வரையக் கூடியவை | புவியின் உண்மையான நிலத்தோற்றத்தை பிரதிபலிப்பவை | வரைப்படங்களை சுருக்கித் (Drawn to Small Scale) தயாரிக்கப்பட்டவை. |
| அமைப்பு | இரு பரிமாண அமைப்பு | முப்பரிமாண அமைப்பு | இருபரிமாண அமைப்பு |
| விவரம் | குறிப்பிட்ட பிரதேச வரைப்படங்களும், அதற்குரிய விளக்கங்கள் மட்டுமே குறிக்கப்பட்டிருக்கும். | புவியின் ஒரு பகுதியை பற்றியோ, கண்டத்தை பற்றியோ, நாட்டைப் பற்றியோ, சரியான அளவில் விளக்கங்களை அறிய முடியும். | வரைப்பட விளக்கங்களுடன் பொருளடக்கம், அகராதி, புள்ளி விவரங்கள் பற்றிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டு இருக்கும். |
| வடிவம் | சமதள அமைப்பினை கொண்டவை | கோள வடிவம் (ஜியாய்டு) ஒத்தவை | சமதள அமைப்பினைக் கொண்டவை |
| பயன் | கல்விச் செயல்பாடுகளில் கற்பித்தலுக்கு உறுதுணையாக உள்ளன. | கோள வடிவம் (ஜியாய்டு) ஒத்தவையாக இருத்தலால், புவி வடிவம் பற்றிய உண்மை அறிவு கிடைக்கின்றது. | தானேக் கற்றலுக்கு உறுதுணையாக உள்ளன. |

# அலகு – III

# புவி மாதிரி, நிலவரைப்படம் மற்றும் நிலவரைப்படப் புத்தகம் படித்தறிதல்

## அறிமுகம்

சமூக அறிவியல் கற்பித்தலில் துணைக் கருவிகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். தற்போதைய கற்றல் அணுகு முறையில், செயல் வழிக்கற்றல் சிறப்பானதாக செயல்பட்டு வருகின்றது. செயல் வழிக்கற்றல் எனும் கற்றல் சூழலில் மாணவர்களுக்கு தேவைப்படும் கற்றல் கருவிகளாக நாம் பல கற்றல் அட்டைகளையும், மாதிரிகளையும், கல்வி தொழில் நுட்பக் கருவிகளையும் பயன்படுத்துகிறோம். இதில் மிகவும் அடிப்படையாக தேவைப்படும் கருவிகளாக புவிமாதிரியும், நிலவரைப்படங்களும், நிலவரைப்படப் புத்தகமும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சமூக அறிவியல், கற்றல் – கற்பித்தலில் இவை மூன்றும் முக்கிய மூன்று தூண்களாக விளங்குகிறது. இந்த அலகில் இவை மூன்றையும் எவ்வாறு படித்தறிதல் என்பதை பற்றி விரிவாகக் காண்போம்.

## அலகுக்கூறுகள்

3.1 புவி மாதிரியை படித்தறிதல்

- 3.1.1 அட்சக்கோடுகள்
- 3.1.2 முக்கிய அட்சக்கோடுகள்
- 3.1.3 அட்சக்கோடுகளும், காலநிலையும்
- 3.1.4 தீர்க்கக்கோடுகள்
- 3.1.5 தீர்க்கக்கோடுகளும், நேரமும்
- 3.1.6 முக்கியத் தீர்க்கக்கோடுகள்
- 3.1.7 அட்சக்கோடுகள், தீர்க்கக்கோடுகளின் முக்கியத்துவம்
- 3.1.8 புவி மாதிரியும், செயல்பாடுகளும்

3.2 நிலவரைப்படம் படித்தறிதல்

- 3.2.1 நிலவரைப்படங்கள் பொருள் மற்றும் பயன்பாடு
  - 3.2.1.1 பொருள்
  - 3.2.1.2 பயன்பாடு
- 3.2.2 நிலவரைப்படத்தின் அடிப்படைக் கூறுகள்
  - 3.2.2.1 நிலவரைப்படத் தலைப்பு
  - 3.2.2.2 திசைகள்

140

## 3.1 புவி மாதிரியைப் படித்தறிதல் (Globe Reading)

புவியியல் பாடக்கருத்துக்கள் அனைத்தும் நம் அன்றாட வாழ்வுடன் முற்றிலும் தொடர்பு கொண்டவை. புலனாகாத கருத்துக்கள் (Abstract Concepts) பலவற்றையும் மாணாக்கர்கள் அறியச் செய்வதற்குப் ''புவி மாதிரி'' ஒரு பயனுள்ள துணைக்கருவியாக அமைகிறது. புவியின் ''புவிவடிவம்''. புவியின் சாய்வச்சு, புவி தன்னைத்தானே சுழலுவதால் ஏற்படும் பகலிரவு, சூரியனைச் சுற்றுதலால் ஏற்படும் பருவகாலங்கள், காலநிலை மண்டலங்கள் போன்ற கருத்துக்களை விளக்க ''புவிமாதிரி'' இன்றியமையாத அடிப்படைக் கருவியாகப் பயன்படுகிறது .எனவே புவிமாதிரியின் கூறுகள் பற்றியும், அவற்றின் மூலம் கற்பிக்கக் கூடிய புவியியல் கருத்துக்களைப் பற்றியும் நாம் அறிந்து கொள்வது அவசியம்.

புவியை விண்வெளியிலிருந்து பார்க்கும்போது அது ஒரு நீலவண்ண முத்து போன்று தோற்றமளிக்கிறது. புவியின் முழுத்தோற்றத்தையும் பார்க்க முடிவதில்லை. புவியில் காணப்படும் கடல்கள், கண்டங்கள், நிலத்தோற்றங்கள் அனைத்தும் முழுமையாக நம்மால் பார்க்க இயலாவிடினும், அவற்றின் தோற்றங்களை முழுமையாகவும் துல்லியமாகவும் குறிப்பிட்ட அளவிலும் (Scale) கணக்கிட்டுப் புவி போன்ற மாதிரி உருவில் தயாரிக்கப்படும் ''புவிமாதிரி'' (Globe) மூலம் புவியின் வடிவம், $23\frac{1}{2}^0$ சாய்வு, அச்சு, துருவங்கள் போன்றவற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது. இன்றைய ''உலகமயமாதல்'' என்ற பொருளாதாரக் கொள்கை (Globalization) நம் அனைவரின் வாழ்விலும் கலந்துள்ள நிலையில் ஒவ்வொருவரும் உலக நாடுகளையும், அதன் இருப்பிடங்களையும் அறிந்து கொள்ளல் அவசியமாகிறது.

முதன் முதலாகப் புவி மாதிரி 150 BC இல் சிசிலியா (தற்போது துருக்கி) வைச் சேர்ந்த கிரேட்ஸ் (Creates) என்பவரால் அமைக்கப்பட்டது. மிகப்பழமையான 150 BC யில் தயாரிக்கப்பட்ட புவி மாதிரியானது இன்றும் இத்தாலி நாட்டில் உள்ள நேப்பில்ஸ் (Naples) அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. குளோப் (Globe) என்ற சொல் ''கிளோபஸ்'' (Globez) என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்தது.

புவி கோள வடிவமாக இருப்பதால் அதன்மேல் உள்ள ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்வது மிகவும் கடினமான ஒன்று. அவ்வாறு குறிப்பிட வேண்டுமானால் இரண்டு மேற்கோள் காட்டும் திட்டவட்டமான புள்ளிகள் (Reference point) தேவைப்படுகிறது. இதற்காகத்தான் புவியியல் வல்லுநர்கள், புவி மாதிரியின் மேல் தெற்கு வடக்காகவும், மேற்கு கிழக்காகவும், கற்பனைக் கோடுகளை வரைந்துள்ளனர். அவைகள் தீர்க்கக்கோடுகள் மற்றும் அட்சக்கோடுகள் என அழைக்கப்படுகின்றன.

***செயல்***


*உலகைச் சுற்றலாம் வாங்க!*

*உலக அரசியல் நிலவரைப்படம் எடுத்துக் கொள்க. ஒரு பென்சிலால் கீழே கொடுத்துள்ள குறிப்புகளால் இடத்தை அறிந்து கோடிட்டு வரைக.*

1. இந்தியாவின் தலைநகருக்கு செல்க.
2. இந்த இடத்திலிருந்து தீவு எனவும், மிகச்சிறிய கண்டம் எனவும் அழைக்கப்படும் ஒரு நாட்டிற்கு செல்க.
3. இந்த நாட்டிலிருந்து பசிபிக் பெருங்கடல் வழியாக மூன்று பக்கம் சீனாவாலும் ஒரு பக்கம் ரஷ்யாவாலும் சூழப்பட்டுள்ள நாட்டிற்கு செல்க.
4. அங்கிருந்து சவூதி அரேபியாவின் தலைநகரத்திற்கு செல்க.
5. அங்கிருந்து அட்லாண்டிக் பெருங்கடல் வழியே தென் அமெரிக்கக் கண்டத்தில் அமேசான் காடுகள் உள்ள நாட்டிற்கு செல்க.
6. அங்கிருந்து பனாமா கால்வாய் வழியே சென்று அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையோரத்தில் உள்ள மலைத்தொடருக்கு செல்க.
7. அம்மலையிலிருந்து, அந்நாட்டின் தலைநகருக்கு செல்க.
8. அங்கிருந்து அட்லாண்டிக் கடல் வழியே இரவிலும் சூரியன் உதிக்கும் நாட்டிற்கு செல்க.
9. அங்கிருந்து முதலில் சூரியன் உதிக்கும் நாட்டிற்கு செல்க.
10. அங்கிருந்து இந்தியாவின் தலைநகருக்குச் செல்க. என்ன ? பயணம் இனிதே இருந்ததா ?

### 3.1.1 அட்சக்கோடுகள் (Latitudes)

எந்த ஒரு வட்ட வடிவமான பொருளும் $360^0$ களைக் கொண்டிருக்கும். அதுபோலத்தான் கோளவடிவமான (Spherical) புவியும் $360^0$ களைக் கொண்டிருக்கிறது. புவியின் மையப் புள்ளியிலிருந்து அதன் தொடுகோட்டிற்குக் கோடுகள் படத்தில் காட்டப்பட்டவாறு வரையப்பட்டுள்ளன. இவைகள் அட்சக்கோடுகள் ஆகும். புவி நடுக்கோட்டிற்கு வடக்கில் 90 கோடுகளாகவும், தெற்கில் 90 கோடுகளாகவும் வரையப்பட்டுள்ளது. புவி நடுக்கோடு தான் மிக நீளமான சுற்றுவட்டக்கோடாகும். இதுதான் புவியை இரண்டு சமபாகங்களாகப் பிரிக்கிறது. புவி நடுக்கோட்டிற்கு வடக்கில் உள்ள பகுதி வட அரைக்கோளம் எனவும், தெற்கில் உள்ள பகுதி தென் அரைக்கோளம் எனவும் அழைக்கப்படுகிறது.




அட்சக்கோடுகள்

இந்த அட்சக்கோடுகள் மேற்குக் கிழக்காகப் புவிநடுக்கோட்டிற்கு இணையாக வரையப்பட்டிருக்கிறது. எனவே இவை இணைகோடுகள் (parallels) என அழைக்கப்படுகிறது. இவை புவி நடுக்கோட்டிலிருந்து வடக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் செல்லும்போது சுற்றளவில் குறைந்து கொண்டே செல்கிறது. மேலும் $90^0$வ மற்றும் $90^0$தெ அட்சக்கோடுகள் கூடு புள்ளிகளில்தான் குறிக்கப்படுகிறது. ஒரு அட்சக்கோட்டிற்கும் அதற்கு அடுத்த அட்சக்கோட்டிற்கும் உள்ள தூரம் 112கி.மீ. ஆகும். அட்சக் கோடுகளின் எண்ணிக்கை மொத்தம் 181 ஆகும்.

### 3.1.2 முக்கிய அட்சக்கோடுகள்

புவிநடுக்கோடு முக்கியமான அட்சக்கோடு அல்லது முதன்மை அட்சக்கோடாகும். புவியின் அச்சு இதனுடைய தளத்திற்குச் (Plane) $23½^0$ சாய்வாக உள்ளது.

வட அர்த்த கோளத்தின் $23½^0$ வட அட்சக்கோடு கடக ரேகை (Topic of Cancer) எனவும், தென் அர்த்தகோளத்தின் $23½^0$ தென் அட்சக்கோடு மகரரேகை (Tropic of capricorn) எனவும் அழைக்கப்படுகிறது. இந்த இரண்டு கோட்டிற்கும், இடைப்பட்டுள்ள பகுதி அயன மண்டலம் (Tropical Region) எனக் குறிக்கப்படுகிறது.

வட அர்த்தகோளத்தின் $66½^0$ வட அட்சக்கோடு ஆர்டிக் வட்டம் (Arctic circle) எனவும், தென் அர்த்தகோளத்தில் $66½^0$ தென் அட்சக்கோடு அண்டார்டிக் வட்டம் (Antartic circle) எனவும் அழைக்கப்படுகிறது. இந்த இரண்டு கோடுகளுக்கும் இடைப்பட்ட பகுதி வெப்ப மண்டலப் பகுதி (Temperate Zone) எனவும் அழைக்கப்படுகிறது.

வட அர்த்தகோளத்தில் ஆர்டிக் வட்டத்திற்கும் $66½^0$ வட துருவத்திற்கும் (North Pole - $90^0$N) இடைப்பட்ட பகுதியும் தென் அர்த்தகோளத்தின் அண்டார்டிக் வட்டத்திற்கும் ($66½^0$ தென்) தென் துருவத்திற்கும் (South Pole - $90^0$S) இடைப்பட்ட பகுதியும் கடும் குளிர் பிரதேசங்கள் (Frigid Zones) என அழைக்கப்படுகின்றன.

### 3.1.3 அட்சக்கோடுகளும் காலநிலையும் (Latitudes and Climate)


***செயல்***

*புவியின் வெப்ப மண்டலம், மிதவெப்ப மண்டலம் மற்றும் துருவ மண்டலங்களில் உள்ள நாடுகளைப் பட்டியலிட்டு ஒப்படைப்பு தயாரிக்க.*

புவி கோளவடிவமாக இருப்பதால் சூரியக்கதிர்களின் வெப்பப்படுத்தும் திறனைப் புவி நடுக்கோட்டிலிருந்து துருவத்தை நோக்கிச் செல்லச் செல்ல குறைந்து கொண்டே போகிறது. செங்குத்து கதிர்கள் (Vertical Rays) மிக குறுகிய தூரம் சென்று புவியின் மீது புவி நடுக்கோட்டுப் பகுதியில் விழுவதால் வெப்பம் அதிகமாகவும், அதிலிருந்து வடக்கிலும் தெற்கிலும் செல்லச் செல்ல சூரியக் கதிர்கள் சாய்வாக (Oblique Rays) விழுவதாலும் கடக்கும் தூரம் அதிகமாக இருப்பதாலும், அதிகப் பரப்பின்மீது விழுவதனாலும் வெப்பம் குறைவாக இருக்கிறது. சராசரியாகப் புவிநடுக்கோட்டில் வெப்பம் அதிகமாகவும், துருவத்தை நோக்கிச் செல்லச் செல்ல குறைந்து கொண்டே செல்லும்.

### 3.1.4 தீர்க்கக் கோடுகள்

புவிக் கோளத்தின் மேல் வரையப்பட்டுள்ள வட துருவத்திலிருந்து தென்துருவத்திற்குச் செல்லும் நேர் கோடுகள் தீர்க்கக் கோடுகள் என அழைக்கப்படுகிறது. இவைகள் அட்சக்கோடுகள் போல் இணைக்கோடுகள் (Parallels) அல்ல. இவைகள் இரு துருவங்களிலும் சந்தித்துக் கொள்வதோடு இவைகள் ஒரே நீளமுடையவை. எனவே இதில் கிரீன்வீச் தீர்க்கக் கோட்டை முதன்மைத் தீர்க்கக்கோடாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். இங்குத்தான் ராயல் வானியல் ஆய்வுக்கூடம் அமைந்துள்ளது. (Royal Astronomical Observatory System). இதனைச் சிறப்பிக்க இக்கிரீன்விச் மேல் செல்லும் தீர்க்கக்கோட்டைத் தெரிவு செய்தனர்.



தீர்க்கக்கோடுகள்

ஒவ்வொரு தீர்க்கக்கோடும் புவி நடுக்கோட்டைச் செங்கோணத்தில் வெட்டிச் செல்கிறது. இவற்றிக்குள்ள இடைவெளி புவி நடுக்கோட்டில் அதிகமாகவும் துருவத்தை நோக்கிச் செல்லச் செல்ல குறைந்து இறுதியில் துருவத்தில் சந்தித்து கொள்கின்றன. ஒரு வட்டத்தில் $360^0$ தீர்க்கக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. கிரீன்வீச் தீர்க்கக்கோட்டிற்குக் கிழக்கில் உள்ள தீர்க்கக்கோடுகள் கிழக்கு தீர்க்கக் கோடுகள் எனவும் மேற்கில் உள்ள தீர்க்கக்கோடுகள் மேற்குத் தீர்க்கக் கோடுகள் எனவும் அழைக்கப்படுகிறது. தீர்க்கக் கோடுகள் எண்ணிக்கை 360 ஆகும்.

### 3.1.5 தீர்க்கக்கோடுகளும் நேரமும் (Longitude and time)

***செயல்***

இந்தியாவின் நேரம் மாலை 5 மணி எனில் பங்களாதேசத்தின் ($90^0$ கி) திட்ட நேரம் என்ன?

இந்தியாவின் நேரம் மாலை 3 மணி எனில் பாகிஸ்தானின் ($65^0$) திட்ட நேரம் என்ன?

$0^0$ தீர்க்கக் கோட்டில் (GMT) சூரியன் உச்சநிலையில் பிரகாசிக்கும் பொழுது பகல் 12 மணி எனத் திட்டமிடப்படுகிறது. எனவே இங்கு நண்பகல் 12 மணி எனில் இந்தியாவில் என்ன நேரம் என்பதைக் கண்டுபிடி:–

புவி தன்னைத்தானே தன்னுடைய அச்சில் சுற்றிக்கொள்ள 24 மணி நேரம் ஆகிறது. இதனை ஒரு நாள் என அழைக்கிறோம். எனவே புவிக்கோளத்தின் மேல் வரையப்பட்டுள்ள 360 கோடுகள் எடுத்துக் கொள்ளும் நேரம் 24 மணி எனலாம். ஆக $15^0$ தீர்க்ககோடுகள் கடக்க 1 மணி நேரமும் $1^0$ கடக்க 4 நிமிடங்களும் ஆகிறது. இதனைக் கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.

ஒருமுறை சுற்ற : 24 மணி நேரம்

ஒரு தீர்க்கக்கோடு எடுத்துக்கொள்ளும் நேரம் = $\frac{24\text{மணி}}{360}$ (அ) $\frac{24 \times 60}{360} = \frac{1440}{360}$ = 4 நிமிடங்கள்.


புவி மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுவதால் நேரம் கிழக்கு நோக்கிச் செல்லச் செல்ல அதிகரிக்கிறது. (ஒவ்வொரு தீர்க்கக் கோட்டிற்கும் 4 நிமிடங்கள்) அதேபோல மேற்கு நோக்கிச் செல்லச் செல்ல நேரம் குறைகிறது. (ஒவ்வொரு தீர்க்கக் கோட்டிற்கும் 4 நிமிடங்கள்) கிரின்வீச் தீர்க்கக் கோட்டில் (Greenwich Meridian) அல்லது முதன்மை தீர்க்கக் கோட்டில் (Prime Meridian) நிலவும் நேரம் கிரீன்வீச் சராசரி நேரம் (Greenwich Mean Time) என அழைக்கப்படுகிறது. இந்த நேரத்தை வைத்து உலகில் உள்ள மற்ற இடங்களின் நேரத்தை எளிதில் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

***செயல்***

*ஏதேனும் 20 நாடுகளின் திட்டதீர்க்ககோடு, கோடுகளைக் கண்டுபிடித்து, அதன் அட்ச, தீர்க்கப் பரவல்களை ஒப்படைப்பாக எழுதுக.*

### 3.1.6 முக்கியத் தீர்க்கக்கோடுகள்

கிரீன்விச் தீர்க்கக்கோடு மிக முக்கியமான தீர்க்கக்கோடாகும். இதனை மையமாக வைத்துத்தான் மற்ற இடங்களின் நேரம் கணக்கிடப்படுகிறது. இதே போல் 180 ஆவது தீர்க்கக்கோடு "சர்வதேச தேதிக் கோடு" (International Date Line) என அழைக்கப்படுகிறது.




**சர்வதேச தேதிக் கோடு**

இந்த 180 தீர்க்கக்கோடு $0^0$ தீர்க்கக் கோட்டிற்கு எதிர்ப்புறமாக பசுபிக் பெருங்கடலின் மத்தியில் அமைந்துள்ளது. இந்தச் சர்வதேச தேதிக்கோடு அங்கு அமைந்துள்ள தீவுகளுக்கேற்ப, கிழக்காகவும், மேற்காகவும் வளைந்து கடற்பரப்பில் செல்லுகிறது. மேற்கிலிருந்து வந்து சர்வதேச தேதிக் கோட்டைக் கடந்து கிழக்காக வந்தால் ஒரு நாள் கூடும். அதேபோலக் கிழக்கிலிருந்து மேற்காகச் சென்று இக்கோட்டைக் கடந்தால் ஒரு நாள் இழப்பு ஏற்படுகிறது.

### 3.1.7 அட்சக்கோடுகள், தீர்க்கக்கோடுகளின் முக்கியத்துவம்

புவியின் மேல் உள்ள இடங்களைக் குறிப்பிட்டுக் கூற இந்த இரண்டு கோடுகளும் பயன்படுகின்றன.

புவி, கோள வடிவமாக இருப்பதாலும், தன்னைத்தானே சுற்றுவதாலும் நேரம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இடங்களுக்கு இடையே உள்ள நேர வேறுபாட்டைக் கணக்கிடத் தீர்க்கக்கோடுகள் பயன்படுகின்றன.

அட்சக்கோடுகளின் இருப்பிடத்தை வைத்து, புவியின் வெப்ப மண்டலங்கள் பிரித்துக் காட்டப்படுகின்றன.

### 3.1.8 புவி மாதிரியும் செயல்பாடுகளும் (Globe and Activities)

1. இரவு பகல் தோன்றுவதை விளக்குதல். (புவி மாதிரி மற்றும் டார்ச் விளக்கை வைத்துப் புவியின் சுழற்சி மற்றும் இரவு பகல் தோன்றுவதை விளக்குதல். மேஜையின்மீது புவி மாதிரியை வைத்து, அதன் பக்கவாட்டிலிருந்து டார்ச் விளக்கை ஒளிரச் செய்து என்ன நிகழ்கின்றது என்பதை அறிதல்.)
2. அட்சக்கோடுகள் – தீர்க்கக்கோடுகள் – தன்மை – வேறுபாடுகள் – சர்வதேச அட்சக் கோடுகளை தீர்க்கக் கோடுகளையும் அடிப்படையாக வைத்து எவ்வாறு ஓரிடத்தின் இருப்பிடத்தை அறியலாம் என்பதை விளக்குதல். சர்வதேச தேதிக் கோடு– அதன் முக்கியத்துவத்தை அறிதல் – புவியின் மேல் நிலம், நீர் போன்றவற்றின் பரவல் மற்றும் வேறுபாடுகள் பற்றி விளக்குதல்.
3. புவியின் வடிவம் மற்றும் அச்சு $23\frac{1}{2}^0$ கோணத்தில் சாய்வாக உள்ளது என்பதையும் புவி மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுகிறது என்பதையும் புவி மாதிரியை கையால் சுழற்றிக் காட்டி விளக்குதல்.
4. வெப்ப மண்டலங்களும் . அட்சக் கோடுகளும் – தொடர்பு படுத்தி விளக்குதல்.
5. முக்கிய அட்ச, தீர்க்கக் கோடுகள், அவை கடந்து செல்லும் கண்டங்கள், நாடுகள், நகரங்கள் போன்றவற்றை விளக்குதல்.
6. பெருங்கடல்கள், கடல்கள், ஆறுகள், வளைகுடாக்கள் போன்றவற்றின் அமைவிடம், முக்கியத்துவத்தை விளக்குதல்.
7. முக்கிய மலைகள், பீடபூமி, பாலைவனங்கள், சமவெளிகள் போன்றவற்றின் அமைவிடத்தை விளக்குதல்.
8. நேர வேறுபாடுகளை அறிய தீர்க்கக் கோடுகளைப் பயன்படுத்தி விளக்குதல்.
9. கடல்கள், பெருங்கடல்கள் ஆகியவைகளில் காட்டப்பட்டுள்ள நீல நிறத்தின் (Intensity of the colour) வேறுபாடுகளும் அவற்றிற்கான காரணங்களையும் அறிந்து கொள்ளுதல்.

10. தீவு, தீபகற்பம் போன்றவற்றின் வடிவம் அமைவிடம் போன்றவற்றை விளக்குதல்.

11. நீர் இணைப்புகள் (Straits) நில இணைப்புகள் (Insthmus) போன்றவற்றின் தன்மை, அமைவிடம், முக்கியத்துவம் போன்றவற்றை விளக்குதல்.

## 3.2 நிலவரைப்படம் படித்தறிதல்

சுற்றுப்புறச் சூழ்நிலை மனிதனின் வாழ்க்கை முறையை நிர்ணயிக்கிறது. சுற்றுப்புறச் சூழ்நிலையில் புவியின் இயற்கை மற்றும் கலாச்சாரக் கூறுகள் உள்ளடங்கியுள்ளது. இயற்கை மற்றும் கலாச்சாரக் கூறுகள் ஒரு சூழ்நிலைக்கும் மற்றொரு சூழ்நிலைக்கும் இடையே மாறுபட்டு காணப்படுகிறது. மாறுபட்ட சூழ்நிலையால் மக்களிடையே மாறுபட்ட வாழ்க்கை முறைகளும் காணப்படுகிறது. இம்மாறுபட்ட வாழ்க்கை முறைக்கான காரணங்களை அறிந்து கொள்ளவும், தான் வாழும் சூழ்நிலையில் கிடைக்கும் வளங்களை முற்றிலும் அறிந்து கொண்டு அவற்றின் மூலம் தம் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவும் புவியியல் கருத்துக்கள் பயன்படுகின்றன. இப்புவியியல் கருத்துக்களை உள்ளடக்கி "நில வரைப்படங்கள்" வரையப்படுகின்றன.

இவை புவியியல் கற்றல் கற்பித்தலுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. எனவே நிலவரைப்படங்கள் பொருள், தன்மை, அவற்றிலிருந்து பெறப்படும் தகவல்கள் மற்றும் தகவல்களை பெறும் முறை பற்றி மாணவ ஆசிரியர்களும், மாணவர்களும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது.

***செயல்***

*உலக நிலவரைப்படத்தைப் பயன்படுத்தி கீழ்கண்ட இடங்கள் இந்தியாவிலிருந்து எந்த திசையில் உள்ளன என்பதை அறிக.*

| | |
|---|---|
| *1. சீனா* | *8. ஜப்பான்* |
| *2. இலங்கை* | *9. ஆப்பிரிக்க கண்டம்* |
| *3. வங்காள விரிகுடா* | *10. ஏரல் கடல்* |
| *4. பசிபிக் பெருங்கடல்* | *11. அலாஸ்கா* |
| *5. பாக்தாத் நகரம்* | *12. பெய்கால் ஏரி* |
| *6. மத்தியத் தரைக்கடல்* | *13. யூரல் மலைத்தொடர்* |
| *7. இந்தோனேஷியா* | *14. நைல் ஆறு* |

### 3.2.1 நிலவரைப்படங்கள் – பொருள் மற்றும் பயன்பாடு

#### 3.2.1.1 பொருள்

நிலவரைப்படம் (Map) எனும் சொல் மேப்பா (Mappa) எனப்படும் லத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்ட ஒரு சொல்லாகும். 'மேப்பா' என்ற சொல்லுக்கு 'மேசையின் மீது விரிக்கப்பட்ட துணி' என்பது பொருளாகும். எனவே நிலவரைப்படம் என்பது புவி வடிவ (Geoid) மேற்பரப்பை விரித்தது போன்ற பரப்பில் புவியின் கூறுகளை விவரிப்பதற்காகத் தாளிலோ அல்லது துணியிலோ

வரையப்படும் வரைப்படம் எனப் பொருள் பெறப்படுகிறது. நிலவரைப்படத்தில் புவியின் கூறுகளான நிலப்பகுதிகள் மற்றும் நீர்ப்பகுதிகள் அனைத்தும் வரையப்பட்டிருக்கும்.

### 3.2.1.2 பயன்பாடு

விரைந்து பெருகும் தகவல் தொழில்நுட்பக் காலமான இன்று தகவல்களின் அளவும் தொடர்ந்து பெருகிக்கொண்டே செல்கின்றன. அனைத்துத் தகவல்களுக்கும் அடிப்படை விவரங்களாக அமையும் புவியின் வள ஆதாரங்கள் என்பது புவியிலுள்ள இயற்கை வளங்களான நிலம், நீர், பாறைகள், கனிம வளங்கள், வெப்பம், மழை, காற்று, மண் இயற்கைத் தாவரங்கள், விலங்குகள் போன்றவையாகும். மேற்கண்ட வள ஆதாரங்கள் பற்றிய தகவல் மட்டுமல்லாது, வளங்களை அடிப்படையாகக் கொண்ட விவசாயம், தொழில்கள், தொழில் மையங்கள், போக்குவரத்து, மக்கள் தொகை, மக்களடர்த்தி போன்ற பல்வேறு தலைப்புகள் சார்ந்த நிலவரைபடங்களும் வெவ்வேறு பயனுள்ள தகவல்களைத் தந்து கொண்டேயுள்ளன. இன்று உலகின் இரு இடங்களுக்கு இடையேயுள்ள தூரம், நேரம் மற்றும் திசை போன்றவற்றை அறிந்து கொள்வதற்கும் மிக எளிமையான கருவியாக விளங்குவதும் நிலவரைப்படங்களேயாகும். நம் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத தகவல் ஊடகங்களுள் (Media) ஒன்றாக விளங்கும் நிலவரைப்படத்தின் அவசியத்தையும் அதிலடங்கியுள்ள விவரங்களைப் படித்தறிந்து கொள்ளும் திறனையும் பள்ளி மாணவர்களுக்கிடையே உணர்த்திக் கற்பிப்பது அவசியம்.

மனித வாழ்க்கைக்கு எண்ணற்ற தகவல்கள் தேவைப்படுகின்றன. இன்றைய தகவல் தொழில்நுட்பம் முன்னேறியுள்ளதால் உலகின் பல்வேறு நாடுகளின் தகவல்கள் பல நாடுகளுக்கிடையே பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இத்தகவல்களுக்கு மூலகாரணமாக உள்ள புவிக்கூறுகளின் பரவல், புவி வளங்களின் பரவல் பற்றிய குறிப்புகளை அப்படியே நிலவரைப்படத்தில் சித்தரிக்க இயலாது. எனவே காலங்காலமாக முறைக் குறியீடுகளைப் பயன்படுத்தி நிலவரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

***செயல்***

*கலந்துரையாடல்: நிலவரைப்படங்களின் முக்கியத்துவம் மற்றும் நில வரைபடங்கள் பயன்படுத்தப்படும் துறைகள் பற்றிக் கலந்துரையாடுக.*

நில வரைப்படங்கள் சுமார் **2500** ஆண்டுகளுக்கு முன்னரே இருந்தன என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. நில வரைப்படக் கலையில் கிரேக்கர்களின் சாதனை பாராட்டத்தக்கது. நில வரைப்படங்கள் புவியையோ அல்லது புவியின் ஒரு பகுதியையோ முறைக் குறியீடுகளைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட அளவையில் வரையப்படும் வரைப்படங்கள் என்பதை அறிவோம். இத்தகைய நில வரைப்படங்கள் மற்றும் விளக்கப்படங்கள் (Diagrams) வரையும் 'கலையும், அறிவியலுமே' 'நில வரைப்பட நுண்கலை' (Cartography) என அழைக்கப்படுகிறது.

நமது நாட்டில் நில வரைப்படங்கள் யாவும் இந்திய அளவாய்வுத் துறையினரால் (Survey of India) உருவாக்கப்படுகின்றன. எல்லா நில வரைப்படங்களுமே புவியின் அனைத்துப் பகுதிகளையும் சர்வே செய்த பின்னரே உருவாக்கப்படுகின்றன. மேலும் புவிப்பரப்பில் புதிய தோற்றங்கள்

ஏற்படும்போதும், புவிப்பரப்பின் மாற்றங்களைக் காணும் பொழுதும் அப்பகுதிகளை நன்கு சர்வே செய்த பின்னரே திரும்பவும் வரையப்படுகின்றன. எனவே நில வரைப்படங்கள் அவ்வப்போது புதிய தகவல்களுடன் புதுப்பிக்கப்படுகின்றன.

உதாரணமாக டிசம்பர் **2005** ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரங்கள் சில வரைப்படங்களில் காண்பிக்கப்படுகின்றன.

முன்பெல்லாம் நில வரைப்படங்கள் வரைவது கடினமாகவும், நேரம் எடுத்துக் கொள்வதாகவும் இருந்தது. இன்று தொழில் நுட்ப முன்னேற்றத்தினாலும் செயற்கைக் கோள்கள் மூலம் பெறப்படும் வான்வெளி நிழற்படங்களினாலும் தொலை உணர்தல் முறை (Remote Sensing) மற்றும் புவியியல் தகவல் அமைப்பு முறை (Geographical Information System - GIS) போன்ற தொழில் நுட்பங்களினாலும் நிலவரைப்படங்களை உருவாக்குவது எளிதாக்கப்படுகிறது.

**'தொலை உணர்தல்'** **(Remote sensing)** என்பது புவியிலுள்ள வளங்களைக் கண்டறியும் ஒரு புதுமையான அறிவியல் முறையாகும். மனிதன் புவியிலுள்ள ஒரு பொருளைப் பற்றியோ அல்லது பரப்பைப் பற்றியோ அல்லது ஒரு நிகழ்ச்சியைப் பற்றியோ விவரங்களைச் சேகரிக்க அந்த இடத்திற்கே நேரடியாகச் செல்லாமல் தொலையுணர்வு கருவி மூலம் பெறப்படும் அறிவியல் முறை 'தொலை உணர்தல்' ஆகும். இம்முறை மூலம் மனிதர்களால் சென்று அடையக் கூடிய இடங்கள் மட்டுமின்றி, அடைய முடியாத பல இடங்களில் காணப்படும் வளங்களையும், விவரங்களையும் கண்டறிய முடிகிறது. வான்வெளி நிழற்படங்களும் (Aerial photographs) "தொலை உணர்தல்" கீழ் வரும் புள்ளி விவரங்களே ஆகும். இவை புவியைப் பற்றிய இயற்கை, கலாச்சாரப் புள்ளி விவரங்களை (அ) தகவல்களை இரு வழிகளில் தருகிறது.

அரசின் பல்வேறு திட்டங்களைத் தீட்டவும், செயல்படுத்தவும் பல்வேறு துறைகளிலும் தொலை உணர்தல் புள்ளி விவரங்கள் பயன்படுகின்றன.

புவியைப் பற்றிய இயற்கை, கலாச்சார புள்ளி விவரங்களை (அ) தகவல்களை இரு வழிகளில் பெறலாம். ஒன்று வானூர்திகளை மேடையாகக் கொண்டு பெறப்படும் கருப்பு, வெள்ளை மற்றும் வண்ண நிழற்படங்களே இப்புள்ளி விவரங்கள்; மற்றொன்று துணைக் கோள்களை மேடையாகக் கொண்டு அதன் மூலம் பெறப்படும் புள்ளி விவரங்கள். கருப்பு, வெள்ளை விவரங்கள், போலி வண்ண இணைப்போவியம், கணினிக்கேற்ற நாடாக்கள் கச்சிதமான வட்டு (Compact Disc) போன்ற நுட்பமான கருவிகள், மின்காந்த அலைகள் மூலம் பெறப்படும் அதிர்வுகளைப் புள்ளி விவரங்களாக நமக்குத் தருகின்றன.

மேலும் '**புவியியல் தகவல் அமைப்பு**' **(Geographic Information System - GIS)** என்பது புவியியல் தகவல்களையும் புவிப்பரப்பு சார்புடைய புள்ளி விவரங்களையும் அதற்குரிய தகவல்களையும் சேகரித்து, தொகுத்து, பாகுபடுத்திப் பயன்படுத்தும் வகையில் கணினியில் உருவாக்கப்பட்ட ஒரு மென்பொருள் தொகுப்பு (Software) ஆகும். எடுத்துக்காட்டாக நிலத்தோற்றம், நீர்வளம், இயற்கைத் தாவரங்கள், கனிவளம் போன்ற தகவல்களைத் துல்லியமாகவும் எளிதாகக் காட்டும் வகையில் ஏற்படுத்தப்பட்ட மென்பொருள் தொகுப்பே புவியியல் தகவல் அமைப்பாகும். வள மேலாண்மையில் (Resource Management) இவ்வமைப்பு பெரிதும் முக்கியத்துவம் பெறுகிறது.

இடம் சார்ந்த புள்ளி விவரங்கள், இதனைக் கையாளும் தொழில் நுட்பம் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டதே இவ்வமைப்பு. கணினி உதவியுடனான வேலைப்பாடே இதற்கு முக்கிய வளர்ச்சியாகும். கணினியினை அடிப்படையாகக் கொண்டு இவ்வமைப்பு செயல்படுவதினால், எண்ணற்ற புள்ளி விவரங்களை இதில் சேமிக்க முடியும். எதிர்காலத்தில் வேண்டியவற்றை மட்டும் எளிதில் பெற்றுக் கொள்ள முடியும். புதிய தகவல்களை முன்னர் உள்ள தகவல்களில் மேற்பொருந்தச் செய்து வேண்டிய தகவல்களைப் பெற முடியும். ஒவ்வொரு காலகட்டத்திலும் காணப்படும் தாவர, நீர்ப்பரவல் தகவல்களைப் பாதுகாத்து வேண்டியவாறுத் திருப்பப்பெற்றுக் கொள்ள இது ஏற்றதாக உள்ளது.

## 3.2.2 நிலவரைப்படத்தின் அடிப்படைக் கூறுகள்

நில வரைப்படங்கள் உண்மையான புவியையும், புவியியல் கூறுகளையும் பிரதிபலிக்கும் மிகச் சுருங்கிய படவடிவங்கள் எனினும் மிகப்பெரிய உலகின் அனைத்துக் கூறுகளையும் மிகச்சிறிய வரைப்படங்களில் விளக்கப்படுகின்றன. எனவே நிலவரைப்படங்களைத் தயாரிக்கும் பொழுது குறிப்பிட்ட அளவைகள், குறிப்புகள், முறைக்குறியீடுகள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

“நிலவரைப்படங்களைப் படித்தறிதல் என்பது (map reading) அவற்றின் அடிப்படைக் கூறுகளான 1. தலைப்புகள், 2. திசை, 3. அளவை. 4. தூரம், 5. அட்சக்கோடுகள் / தீர்க்கக்கோடுகள், 6. வண்ணங்கள், 7. முறைக் குறியீடுகள் போன்றவற்றின் மூலம் புவியைப் பற்றிய விவரங்களை அறியும் செயல்முறையாகும்.” எனவே வரைப்படங்களில் பயன்படுத்தப்படும் கூறுகளை நன்கு அறிந்த ஒரு மாணவனால், நிலவரைப் படங்களைப் படித்து விவரங்களைப் புரிந்து கொள்ள இயலும். எனவே இந்த அடிப்படைக் கூறுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவாகத் தெரிந்து கொள்வது அவசியம்.

***செயல்***

*உலகம் மற்றும் இந்திய இயற்கையமைப்பு நிலவரைப்படங்களில், நீ காணும் அடிப்படைக் கூறுகளைத் தனித்தனியே பட்டியலிடுக.*


### 3.2.2.1 நிலவரைப்படத் தலைப்பு (Title of the Map)

ஒவ்வொரு நிலவரைப்படத்திற்கும் ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக உலகம் – இயற்கையமைப்பு, இந்தியா – இயற்கையமைப்பு. நிலவரைப்படத்தைப் படித்தறிதலில் முக்கியமானதாக அறிய வேண்டியது அந்நிலவரைப் படத்தின் தலைப்பைப் படித்து, பின் அதன் இருப்பிடத்தைப் புவியில் அறிந்து கொள்வதாகும். உதாரணமாகத் தமிழ்நாடு இயற்கையமைப்பு வரைப்படத்தைப் படித்தறிய, தமிழ்நாட்டின் அமைப்பிடத்தை இந்திய வரைப்படத்தில் முதலில் பார்க்க வேண்டும். பின் வரைப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பின் கீழ் உள்ள தகவல்களும், விவரங்களும் தலைப்பிற்கேற்ப இருப்பதை அறிய வேண்டும்.

உதாரணமாகத் தமிழ்நாடு இயற்கையமைப்பு வரைப்படத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்குக் கடற்கரைச் சமவெளி போன்றவைகள் இருப்பதைக் காணலாம்.

### 3.2.2.2 திசைகள் (Directions)

நிலவரைப்படங்களில் திசைகள், ஒரு கோட்டு வடிவில் வரையறுக்கப்பட்டுள்ளன. இவை பல்வேறு புள்ளிகளின் கோண நிலையை பொதுவான ஆதார திசையை அடிப்படையாகக் கொண்டு, காண்பிக்கப்படுகின்றன. வடக்கைக் குறிக்கும் ஆதார திசைக்கோடு (Base Direction)↑வ என்ற குறியீட்டால் நிலவரைப்படத்தின் வலது மேற்புறத்தில் குறிக்கப்படும். இவ்வாறு குறிப்பிட்டிருந்தால் நிலவரைப்படத்தின் மேல்பகுதி வடதிசைப்பகுதி எனக் கருத்தில் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என நான்கு முக்கிய அடிப்படைத் திசைகளைக் கூறலாம். அடிப்படை திசைகளுக்கு இடையே கோண அடிப்படையில் இடைப்பட்ட திசைகளும் குறிக்கப்படுகின்றன.




**திசைகள்**

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய நான்கு திசைகளும் அடிப்படைத் திசைகளாகும். இடைப்பட்ட திசைகள் வடக்கிற்கும், கிழக்கிற்கும் இடையே வடகிழக்கு எனவும், தெற்கிற்கும் கிழக்கிற்கும் இடையே தென்கிழக்கு எனவும், வடக்கிற்கும் மேற்கிற்கும் இடையே வடமேற்கு எனவும், தெற்கிற்கும், மேற்கிற்கும் இடையே தென்மேற்கு எனவும் குறிக்கப்படுகின்றன.

***செயல்***

***I.*** *உலகம், இயற்கையமைப்பு மற்றும் அரசியல் நிலவரைப்படத்தின் துணைக் கொண்டு கீழே கொடுத்துள்ள குழுச் சொற்களின் வகைகளைக் கண்டறிக.*

*1. வடக்கு, தெற்கு, கிழக்கு ..........................................*

*2. பசுபிக், அட்லாண்டிக், ஆர்க்டிக் ..........................................*

*3. ஆசியா, தென் அமெரிக்கா, அண்டார்டிகா..........................................*

*4. இலங்கை, மடகாஸ்கர், கிரீன்லாந்து..........................................*

*5. பைகால், ஈரி, விக்டோரியா..........................................*

*6. யூரல், ராக்கி, அட்லஸ் ..........................................*

*7. நியூதில்லி, பிய்ஜிங், கெய்ரோ ..........................................*

*8. நைல், அமேசான், மிசிசிபி ..........................................*

*9. காஸ்பியன், வங்காள விரிகுடா, கரீபியன் ..........................................*

*10. பிரேசிலியன், குரோஷியா, கேனரி ..........................................*

*11. நந்ததேவி, கிளிமஞ்சாரோ, எவரெஸ்ட் ..........................................*

*12. கோபி, களஹாரி, சஹாரா ..........................................*

## 3.2.2.3 நிலவரைப்பட அளவை (Map Scale)

புவி மிகப் பெரியது. அதனை அதே அளவில் வரைய இயலாது. இதனால் புவியையோ அல்லது புவியின் ஒரு பகுதியையோ காண்பிக்க, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நிலவரைபடங்கள் வரையப்படுகின்றன. இப்படங்களே நிலவரைப்படங்கள் ஆகும். புவியின் அளவு மிகப்பெரியதாக இருப்பதால் அதனை விவரங்களுக்கும், இருப்பிடத்திற்கும் ஏற்ற விகிதப்படி நிலப்பட அளவையை நிர்ணயித்து வரைகின்றனர்.

நிலவரைப்படத்தில் இரு புள்ளிகளுக்கு இடையே உள்ள தூரத்திற்கும், புவிப்பரப்பின் மேல் அவை குறிக்கும் இடங்களுக்கும் இடையே உள்ள தூரத்திற்கும் உள்ள விகிதமே 'அளவை' எனப்படும்.

எடுத்துக்காட்டாக நிலப்பரப்பில் இரண்டு இடங்களுக்கு இடையே உள்ள தூரம் 1கி.மீ. எனில், நிலவரைப்படத்தில் அதே இடங்களுக்கு இடையே உள்ள தூரம் 1 செ.மீ. என்றோ 2. செ.மீ. என்றோ வரையப்பட்டிருக்கும் 1 செ.மீ. எனில் நிலவரைப்படத்தின் அளவை 1:100000 எனக் குறிக்கப்பட்டிருக்கும்.

## 3.2.2.4 நிலவரைப்பட அளவைகளைக் குறிப்பிடும் முறைகள் (Ways of showing Map scale)

நிலவரைப்படங்களில் அளவைகள் மூன்று முறைகளில் குறிப்பிடப்படுவதைக் காணலாம். அவை;

### (i) சொல்லிட்டு அளவை (By a statement)

இந்த முறையில், நிலவரைப்படங்களில் அளவையானது சொல்லால் விவரிக்கப்பட்டிருக்கும். (எ.கா) 1 செ.மீக்கு 1 கி.மீ எனக் குறிப்பிட்டிருந்தால், நிலவரைப்படத்தில் உள்ள 1செ.மீ. என்பது புவிப்பரப்பில் 1 கி.மீ. –ஐ குறிப்பதாகும். இம்முறையில் மாணவர்கள் அளவையை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

### (ii) பிரதிபின்ன முறை (By a Representative Fraction)

பிரதிபின்ன முறையில் அளவையின் விகிதத்தை ஒரு பின்னமாகக் குறிப்பிடலாம். இதில் தொகுதியும் பகுதியும் ஒரே அளவுத் திட்டத்தில் குறிப்பிடுதல் வேண்டும். இம்முறையில் தொகுதி எப்பொழுதும் ஒன்றாகவும், பகுதி அதற்குத் தக்கவாறும் இருத்தல் வேண்டும். இங்கே 'ஒன்று' என்ற


தொகுதி நிலவரைப்படத்தில் தூரத்தையும் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது புவிப்பரப்பில் தூரத்தையும் குறிக்கும்.

(எ.கா) 1 / 100000 (அ) 1: 1000000 என்று எழுதுதல் இதில் நிலவரைப்படத் தூர அலகு செ.மீ. எனில், புவிப்பரப்பிலும் அவை சென்டி மீட்டர்கள் ஆகும்.

### (iii) நேர் கோட்டளவை (By a linear graphical scale)

கோடுகளின் மூலம் அளவைகளை நிலவரை படங்களில் தெரிவிக்கும் முறையை நேர்கோட்டளவை என்பர். இதில் கிடைக்கோடு ஒன்று வரைந்து அதனை முதன்மைப் பிரிவுகளாகவும் (primary divisions) முதல் முதன்மைப் பிரிவை இரண்டாம் தரப் பிரிவுகளாகவும் (Secondary division) வரைந்து அளவைகளைப் பிரித்துக்காட்டலாம். எடுத்துக்காட்டாக, முதன்மைப் பிரிவுகள் கி.மீட்டர்களாக இருந்தால், இரண்டாம் தரப் பிரிவுகள் மீட்டர்களில் கொடுக்கப்பட்டிருக்கும்.

நேர் கோட்டளவை




### 3.2.2.5 நிலவரைப்படங்களில் தூரத்தை அளத்தல் (Measurement of Distance on Maps)

நிலவரைப்படங்கள் ஒரு குறிப்பிட்ட அளவையில் வரையப்படுகின்றன என்பதைக் கண்டோம். இந்த அளவையை அடிப்படையாகக் கொண்டு நிலவரைப்படங்களில் இரு குறிப்பிட்ட புள்ளிகளுக்கு இடையேயுள்ள தூரத்தைக் கண்டறியலாம். உதாரணமாக இருப்புப்பாதையில் நீளத்தைக் கண்டறிய வரைபடத்திலுள்ள இருப்புப் பாதையின் நீளத்தை அளந்து, வரைப்பட அளவையால் பெருக்கினால் உண்மையான நீளத்தை கண்டறியலாம். இரு இடங்களுக்கு இடையேயுள்ள நிலப்பரப்பு சமமாக இல்லாமல் மேடு பள்ளங்களுடன் இருக்கும்போதும், நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு வளைந்து, நெளிந்து சென்றாலோ அளவுகோலால் அவற்றின் நீளத்தை அளக்க இயலாது.

எனவே நிலவரைப்படங்களில் இரு இடங்களுக்கு இடையேயான தூரத்தை அளக்க பின்வரும் முறைகள் கையாளப்படுகின்றன. அவை;

(i) நூலைக் கொண்டு அளத்தல் (by thread)

(ii) பிரிக்கும் கருவியைக் கொண்டு அளத்தல் (by Divider)

(iii) தூரமானியைக் கொண்டு அளத்தல் (by Rotometere)

*செயல்*

*தமிழ்நாடு – ஆறுகள் நிலவரைப்படத்தில் காவிரி ஆற்றின் நீளத்தை நூலைக் கொண்டு அளந்து நிலவரைப்படத்தின் அளவையோடு ஒப்பிட்டு அறிக.*

### 3.2.2.6 அட்சக் கோடுகள் மற்றும் தீர்க்கக் கோடுகள்

புவியின் மீது கிழக்கு மேற்காக வரையப்பட்ட கற்பனைக் கோடுகளே அட்சக் கோடுகள் ஆகும். அட்சக் கோடுகளை வைத்து ஓர் இடத்தின் காலநிலையை எளிதாக நாம் கூறலாம். அதேபோல் வடக்கு தெற்காக வரையப்பட்ட கற்பனைக் கோடுகளே தீர்க்கக்கோடுகள் என்று அழைக்கப்படுகின்றன. தீர்க்கக்கோடுகளை அடிப்படையாக வைத்து ஓர் இடத்தின் நேரத்தைத் துல்லியமாக நாம் கணக்கிடலாம். மேலும் இந்த இரண்டு கோடுகளையும் வைத்து ஓர் இடத்தின் இருப்பிடத்தை அறியலாம். அட்சக் கோடுகள், தீர்க்கக்கோடுகள், தன்மை மற்றும் முக்கியக் கோடுகள் பற்றிய விவரங்களைப் புவி மாதிரிப் பாடத்தில் நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். எனவே அட்சக்கோடுகள் மற்றும் தீர்க்கக்கோடுகள் பற்றிய அறிவு ஒரு நிலவரைப்படத்தை படித்தறிதலுக்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

*செயல்*

*இந்தியா $8^0$வ – $37^0$வ அட்சம் முதல் $68^0$கி – $97^0$ கி தீர்க்கம் வரை பரவியுள்ளது. இதேபோல் நமது அண்டை நாடுகளின் அட்ச தீர்க்கக் கோடுகளின் பரவல்களைக் கண்டறிக.*

### 3.2.2.7 வண்ணங்கள் (Colours)

நிலவரைப்படங்களில் புவியின் பல்வேறு இயற்கை நிலத்தோற்றங்களை அனைவரும் எளிதில் அறிந்து கொள்ள பல வண்ணங்கள் மூலம் குறிப்பிடுகின்றனர். இவ்வண்ணங்களை நிலவரைப்படங்கள் உருவான காலம் முதல் இந்நாள் வரை சர்வதேச அளவில், பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே இவற்றை மாணவர்கள் உணர்ந்து கொண்டால்தான், நிலத்தோற்றங்களை எளிதில் கண்டறிந்து வகைப்படுத்த இயலும். நிலவரைப் படங்களில் கடல் மற்றும் நிலத்தோற்றங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வண்ணங்களாவன:


1. கடல் மற்றும் நீர் நிலைகள் – நீல நிறம்
2. மலை – பழுப்பு நிறம்
3. சமவெளி – பச்சை நிறம்
4. பீடபூமி – மஞ்சள் நிறம்

### 3.2.2.8 முறைக் குறியீடுகள் (Signs & Symbols)


முறைக்குறியீடுகள், நிலவரைப்படங்களைத் தயாரிக்கும்பொழுது அதில் பயன்படுத்தப் படுகின்றன. இக்குறியீடுகளை அறிந்தால்தான் நிலவரைப்படங்களிலிருந்து விவரங்களைப் படித்து அறிய முடியும். இதற்கெனத் தனியாக ஒரு மொழி உண்டு. இதில் குறியீடுகள், எழுத்துக்கள்,

கோடுகள், எல்லைக் கோடுகள், அளவைகள் போன்றவை உள்ளன. இதைத் தவிர, நிலவரைப்படங்களில் உயரம், காலநிலை, இயற்கைத் தாவரம், மக்கள் தொகைப் பரவல், ஆறுகள், இருப்புப் பாதைகள் சாலைகள் போன்ற குறியீடுகளும், கோடுகளும், நிறக்கலவைகளும் பயன்படுத்தப்படுகின்றன. சில அடிப்படை முறைக் குறியீடுகளைக் கீழ்கொடுத்து அட்டவணையில் காணலாம்.

கல்போடப்படாத சாலை
வண்டிப்பாதை
அகன்ற இரயில்பாதை
மீட்டர் இரயில்பாதை
இரயில் நிலையம்
கடக்கும் பாதை
இரயில்பாதை குகை
கரை
பாலத்துடன் கூடிய பாதை
கரைப்பாலம்
மண் அணை
குடியிருப்பு
மக்களற்ற குடியிருப்பு
கோவில்
பள்ளிவாசல்
ஆற்றுக்கரை (6மீ ஆழம்)
சமஉயரக் கோடுகள்
முக்கோண நிலையம்
மட்டக் குறிகள்
சுரங்கம்
வாழைமரம்
மூங்கில்
பனை
ஊசியிலைக் காடுகள்
புல்
போர்க்களம்
ஆதிவாசிகள் பகுதி
மின்சார நிலையம் (Circuit House) C.H



சதுப்பு நிலம்
உடைபட்ட பகுதி
புத்தமத கோவில்
பழைய கட்டிடங்கள்
பன்னாட்டு எல்லைக்கோடு
மாநில எல்லைக்கோடு
மாவட்ட எல்லைக்கோடு
தாலுகா எல்லைக்கோடு
காட்டு எல்லைக்கோடு
வற்றாத நீரோடை
பருவகால நீரோடை
ஓதப் பெருக்குள்ள நீரோடை
தீவுகளும் பாறைகளும் உள்ள நதி
நீரோடையுள்ள நதிப்படுகை
வறண்ட நதிப்படுகை
கால்வாய்
ஏரி – வற்றாத, வறண்ட
கிணறு – கரையுடன், கரையற்ற
மைல்கல் உள்ள கல் பரவிய சாலை
தேசிய நெடுஞ்சாலை
மாதா கோவில்
புகைப்போக்கி
இடுகாடு
கலங்கரை விளக்கம்
கோட்டை
தந்திக் கம்பி
தபால் நிலையம் (Post Office)
கல்லறை
ஊற்று
தந்தி நிலையம் (Telegraph Office)
பிரயாணிகள் மாளிகை (Dark or Traveller's Bungalow)
காவல் நிலையம் (Police Station)
முகாம் இடம் (Camping Ground)
விமான நிலையம்




ஒதுக்கப்பட்ட காடு (Reserved Forest) R.F.

பாதுகாக்கப்பட்ட காடு (Protected Forest) P.F.

*செயல்*

*குறியீடுகளைப் பயன்படுத்தி உங்கள் நிறுவனத்தின் அருகேயுள்ள நீர்நிலைகள், விவசாய விளைவு பொருட்கள், தொழிற்சாலைகள், சாலைகள், இருப்புப் பாதைகள், குடியிருப்புகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு வரைப்படம் தயாரிக்க.*

### 3.2.2.9 நிலவரைப்படங்களின் வகைகள்

நிலவரைப்படங்கள் நமக்குத் தேவையான அடிப்படை விவரங்களைக் கொண்டிருந்தாலும் அனைத்து நிலவரைப்படங்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொரு நிலவரைப்படமும் ஒரு சிறப்பான தலைப்புகளைச் சார்ந்த தகவல்களைத் தாங்கி நிற்கும். தகவல்களின் அடிப்படையில் நிலவரைப்படங்கள் பல வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

### (I) அரசு சார்ந்த நிலவரைபடங்கள்

அரசு நிறுவனங்கள் மூலம் இந்திய சர்வே துறையினரால் நிலங்களின் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வரையப்படும் நிலவரைப்படங்கள் அரசு சார்ந்த நிலவரைப்படங்கள் எனப்படுகின்றன. இவை அரசு அங்கீகாரம் பெற்றவை. இவ்வகை நிலவரைப்படங்கள் பல்வேறு வகையான நிலவரைப்படங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன.

### (a) நில அளவை நிலவரைப்படங்கள் (Topographic Maps)

குறிப்பிட்ட நிலப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட அளவில் வரையப்படும் நிலவரைப்படங்களே நில அளவை நிலவரைப்படங்கள் எனப்படும். இவை இராணுவத்துறையிலும் வருவாய்த் துறையிலும் பயன்படுத்தப்படுகின்றன.

### (b) நிலப்பயன்பாடு நிலவரைப்படங்கள் (Land use Maps)

புவியின் மேற்பரப்பிலுள்ள நிலத்தோற்ற அமைப்பு, இடத்தின் உயரம், இடத்தின் பயன்பாடு போன்ற அடிப்படையில் இவை வரையப்படுகின்றன. இதன் மூலம் நிலப்பயன்பாட்டு விவரங்களை எளிதில் பெறலாம். தனிப்பட்டோரின் சொத்து விவரங்களை அறிய இவை பெரிதும் பயன்படுகிறது. மேலும் அரசின் வரிவிதிப்புக் கொள்கைகளை அமல்படுத்துவதற்கும் இவை பெரிதும் தேவைப்படுகிறது.

### (II) (a) இயற்கையமைப்பு நிலவரைப்படங்கள் (Physical Maps)

உலகின் முக்கிய இயற்கையமைப்புகளான மலைகளின் உயரம், மலையின் மிக உயர்ந்த சிகரங்கள், பனிப்பரப்பு, பீடபூமி, சமவெளி கடல்பரப்புகள் போன்றவற்றின் பரவலை வரையறுக்கப்பட்ட வண்ணங்களுடன் தெரிவிக்கின்றன. (எடுத்துக்காட்டாக) ‘சம ஆழக்கோடுகள்’ கொண்டு கடலடி நிலத் தோற்றங்களை அறிய கடல் ஆழ நிலவரைப்படங்கள் (Bathymetric Maps) உதவுகின்றன. அதேபோல ‘வானிலை மற்றும் காலநிலை’ நிலவரைப்படங்கள் (Weather & Climatic maps) ஓரிடத்தின் தினசரி வானிலையையும் காலநிலையையும் காண்பிக்க பயன்படுகின்றன. வானிலை நிலவரைப்படங்கள் ஒரு நாளுக்குரிய சராசரி வானிலையை விளக்குகின்றன. பல்லாண்டுகளுக்குக் குறிப்பாக முப்பது ஆண்டுகளுக்கான வானிலை நிலவரைப்படங்களிலிருந்து காலநிலை நிலவரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை பல நாட்களுக்கான வானிலையின்

சராசரியை விளக்குகின்றன. இத்தகைய நிலவரைப்படங்கள் வானிலை ஆய்வுத் துறையினரால் (Meteorological Department) தயாரிக்கப்படுகின்றன.

இதேபோன்று இயற்கைத்தாவரங்கள், வனவிலங்குகள், மண் வகைகள் இவற்றின் பரவல்களைக் குறிக்கும் நிலவரைப்படங்களும் இவற்றில் அடங்கும்.

## II (b) கலாச்சார நிலவரைப்படங்கள்

இவை மக்களின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டுக் கூறுகளையும் அவற்றின் பரவல்களையும் தெரிவிக்கின்றன. மக்களின் கலாச்சாரக் குழுமார்கள் (Cultural Realms), இனப்பரவல் (Racial distribution), முக்கிய மொழிகள் போன்றவற்றை விவரிக்கின்றது.

கலாச்சார நிலவரைப்படங்களில் பொருளாதார நிலவரைப்படங்களும் (Economic maps) அடங்கும். இவற்றில் மக்கள் தொகைக் கூறுகளான மக்களடர்த்தி, வயது, மக்கள் தொகைப் பரவல், பாலினம், செய் தொழில்கள், தனி நபர் வருமானம், வாழ்க்கைத் தரம் போன்ற விவரங்கள் உள்ளடங்கும். மேலும் நிலவரைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு பெரிய அளவையுடன் உள்ளூர் படங்கள், மற்றும் ஒரு பொருளின் பரவல் படங்கள், பொருளாதார விளக்கப்படங்கள் போன்றவை வரையப்படுகின்றன. சிறிய அளவை நிலவரைப்படங்களே மக்களின் கலாச்சாரக் குழுமங்கள் (Cultural Realms), இனப்பரவல் (Racial distribution), முக்கிய மொழிகள் போன்றவற்றை விவரிக்கின்றன.

நிலப்பயன்பாட்டு நிலவரைப்படங்கள், அரசியல் பிரிவுகள் மற்றும் எல்லைகள் கொண்ட அரசியல் நிலவரைப்படங்கள் போன்றவையும் கலாச்சார நிலவரைப்படங்களாகும்.

## 3.2.3 நிலவரைப்படம் வரையும் திறன் (Map Drawing Skill)

நிலவரைப்படத்தைப் பார்த்து தகவல்கள் அறியும் திறன் போலவே, மாணவர்களிடையே வளர்க்க வேண்டிய மற்றொரு முக்கியத் திறன் உள்ளூர் நிலவரைப்படம் வரைதல், ''புறவரி நிலவரைப்படங்களில் விவரங்களைப் குறித்தல்'' மற்றும் ''வண்ணம் தீட்டுதல்'' ஆகும். இதில் தொடக்க நிலையில் உள்ள மாணவர்களுக்கு உள்ளூர் நிலவரைப்படம் வரையும் திறனை வளர்த்தல் வேண்டும். இதில் முதல் கட்டமாகப் பள்ளி வளாக மற்றும் உள்ளூர் வரைப்படங்களை உரிய அளவையில் வரையச் செய்யும் திறன்வளர்க்க வேண்டும். மாணவன் தனது வகுப்பறையையும், அதில் தான் உள்ள இடத்தையும் வரைப்படமாக வரையலாம். அடுத்ததாகப் பள்ளியின் சுற்றுச்சுவர் பகுதியை ஒட்டிய இடத்தையும் மற்றும் பள்ளி உள்ள உள்ளூர் சுற்றுப்புறம் படமும் தயாரிப்பதில் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். இதற்கு ஆசிரியர், பள்ளிக் கட்டிடத்திலிருந்து சுற்றுப்புறத்தில் காணப்படும் புவியியல் அமைப்பை மாணவர்கள் உற்று நோக்கி, புவியியல் கூறுகளை அடையாளம் காணும் கையில் ஒரு புறவரி நிலவரைப்படத்தைக் கொடுக்க வேண்டும். மாணவர்களை ஆசிரியர் பள்ளிக்கு வெளியே அழைத்துச் சென்று நிலவரைப்படத்தில் உள்ள பகுதியைச் சுற்றிக் காண்பித்து வழியில் பார்க்கும் இயற்கையமைப்பு வீடுகள், கடைகள், பேருந்து நிலையம், சாலையின் பெயர், விளையாட்டு மைதானம், கோவில், ஏரி, தபால் நிலையம் போன்றவற்றைப் படத்தில் குறிக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு குறிக்கும் பொழுது அவர்கள் திசை, முறைக்குறியீடுகள் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு இரு வகையான நிலவரைப்படம் வரையும் திறனை வளர்க்கலாம். அவை


(i) புறவரி நிலவரைப்படத்தில் வண்ணம் தீட்டி வரைதல்.

(ii) 'படி' எடுத்து பின் வரைதல் மற்றும் விவரங்களைக் குறித்தல். இந்தியா – பீடபூமிகள் மற்றும் சமவெளிகள்.

(iii) ஏற்கனவே உள்ள நிலவரைப்படத்தை அளவையில் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ (Reduction Enlargement) மாற்றுதல்.

இவ்வாறு நிலவரைப்படங்களை மாற்றம் செய்து பொழுது வடிவியல் முறையில் (Geometric Method) இவ்வரைப்படங்களைச் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ மாற்றங்களைச் செய்யலாம். இதற்கு ஒத்த சதுர முறை பெரிதும் பயன்படுகின்றது. பரந்த நிலப்பரப்புகளை இம்முறையின் மூலம் பெரிதாக்கவும், சிறிதாக்கவும் செய்யலாம்; இம்முறைக்கு, முதலில், கொடுக்கப்பட்டுள்ள நிலவரைப்படத்தை ஒரே அளவுள்ள சதுரங்களால் ஆன ஒரு சட்டத்தால் பிரித்துக் கொள்ள வேண்டும்.

புவிப்படத்தை பெரிதாக்கல் ஒத்த சதுரமுறை




**நிலவரைப்படங்களை பெரிதாக்குதல்**

எடுத்துக்காட்டாக 1:100 என்ற அளவையிலுள்ள நிலவரைப்படத்தை 1செ.மீ. என்ற பக்க அளவை கொண்ட சதுரங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பிரித்தபின் அதில் எத்தனை சதுரங்கள் குறுக்கிலும், நெடுக்கிலும் உள்ளன என்பதைக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். நீள்வாட்டில் 15 சதுரங்களும் பக்கவாட்டில் 10 சதுரங்களும் இதில் இருக்கும். இந்த நிலவரைப்படத்தைப் பெரிதாக்க வேண்டும் என்றால், வரைந்த 1 செ.மீ. அளவுள்ள சதுரங்களைவிட பெரிதான 2 செ.மீ. பக்க அளவை கொண்ட சதுரங்களாக நீளவாக்கில் 15–ம், பக்கவாட்டில் 10–ம் வரைந்து கொண்டு நிலவரைப்பட விவரங்களை வரைய வேண்டும். 1:100 என்ற அளவை நிலவரைப்படத்தில் உள்ள முதல் சிறு சதுரத்தின் விவரங்களைத் தற்போது 1:50 என்ற அளவைக்கு மாற்றிய புவிப்படத்தின் மீது வரைந்துள்ள 2 செ.மீ. பக்க அளவை கொண்ட முதல் சதுரத்தின் மீது குறிக்க வேண்டும்.

இதே போன்று நிலவரைப்படத்தைச் சிறிதாக்க வேண்டும் என்றால் 1/2 செ.மீ. பக்க அளவை கொண்ட சிறு சதுரங்களாக நீளவாக்கில் 7 1/2 செ.மீ நீளத்திற்கும், பக்கவாட்டில் 5 செ.மீ. அகலத்திற்கும் வரைந்து கொள்ள வேண்டும். இந்த அளவை இப்போது 1:200 ஆகும். எத்தனை முறை சிறிதாக்க வேண்டும் என்ற கணக்குப்படி ஒத்த சதுரங்களின் பக்க அளவை நாலில் ஒரு

பங்காகக் குறைக்க வேண்டும். அளவையை மாற்றிய பின், அடிப்படை நிலவரைப்படத்திலுள்ள முக்கிய விவரங்களையும், புறவரியையும் சிறிதாக்கிய நிலவரைப்படத்தில் கவனமாகக் குறிக்க வேண்டும்.

## 3.2.4 கற்றல் – கற்பித்தலில் நிலவரைப்படங்கள்

நிலவரைப்படத்தை பார்த்து தகவல்கள் அறியும் திறனையும், நிலவரைப்படங்களை வரையும் திறனையும் மாணவர்கள் பெறுகின்ற அதே நேரத்தில் ஆசிரியர்கள் கற்றல் – கற்பித்தல் நிகழ்வில் எந்தெந்த நிலைகளில் நிலவரைப்படங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற அறிவை வளர்த்தல் வேண்டும். செயல்முறையில் கற்றபின் பொழுது மதிப்பீட்டிகளான நிலவரைப்படங்கள் கற்றல் – கற்பித்தலில் இரு நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன:

(i) கற்றலின் பொழுது

(ii) மதிப்பீட்டின் பொழுது

**நிலை – கற்றலின் பொழுது**

- நிலவரைப்படங்களில் பாடத்தொடர்பான இடங்களைச் சுட்டிக்காட்டுதல்.
- ஒரு நாட்டின் எல்லையைக் கண்டறிதல்
- அரசியல் பிரிவுகளை அறிதல்
- வரலாற்றுப் பேரரசுகளின் எல்லையைக் கண்டறிதல்.
- ஓரிடத்தின் இயற்கையமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரங்கள் போன்றவற்றை அறிதல்.
- மற்ற கலாச்சாரப் பண்புகளையும் அதன் கூறுகளையும் (வேளாண்மை, தொழிற்சாலை, மக்கள் தொகை, போக்குவரத்து போன்றவை) பற்றிய பரவலை அறிதல்.
- மக்கள் தொகை, பொருளாதார நிலை.

**நிலை 2 – மதிப்பீட்டின் பொழுது**

- கற்றல் அடைவுகளை மதிப்பிடல்.
- தானே கற்றல் கருவியாகப் பயன்படல்.
- சுய மதிப்பீட்டுக் கருவியாகப் பயன்படல்.

எனவே கற்றல் – கற்பித்தலில் நிலவரைப்படங்களைப் பார்த்து தகவல்கள் அறிவதில் மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட செய்முறைப் பயிற்சிகளைக் கொடுத்து நிறைவு செய்யலாம்.

- மாவட்டத்தைச் சுற்றியுள்ள அண்டை மாவட்டங்களைக் கண்டறிதல்.
- மாவட்டத் தலைநகரின் பெயர், மாவட்டத்திலுள்ள வட்டங்களின் பெயர்களைக் கண்டறிதல்.
- மாவட்ட ஆறுகள், மலைகள், பெயர்களைக் கண்டறிந்து மாவட்டப் புறவரி நிலவரைப்படத்தில் அடையாளம் காட்டுதல்.
- மாநில நிலவரைப்படத்தில் தனது மாவட்டத்தை அடையாளம் கண்டறிதல்.
- மாநிலத்தின் எல்லையோரக் கடல்களின் பெயர்களைக் கண்டறிதல்.

- மாநிலத்தின் முக்கிய இயற்கையமைப்புகளை (மலைகள், பீடபூமிகள், சமவெளிகள், ஆறுகள்) கண்டறிதல்.
- இந்திய நிலவரைப்படத்தில் அரசியல் பிரிவு – மாநிலங்கள் அடையாளம் காணுதல்.
- தமது மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சி, வளர்ச்சிகளின் வழிகள் போன்றவற்றை உணரச் செய்தல்.
- நமது மாநிலத்தின் அண்டை மாநிலங்களின் பெயர்களைக் கண்டறிதல்.
- இந்திய இயற்கையமைப்பு நிலவரைப்படத்தில் ஆற்று சமவெளிகள், கடற்கரைச் சமவெளிகள், மலைகள், பீடபூமிகள், ஆறுகள் போன்றவற்றைக் கண்டறிதல்.
- இந்தியாவின் முக்கிய நகரங்கள், இருப்புப் பாதைகள் சாலை வழிகள் ஆகியவற்றைக் கண்டறிதல்.

இவ்வகைப் பயிற்சிகளுடன் மாணவர்களுக்கு உள்ளூர் நிலவரைப்படம் வரைதலுக்கான பயிற்சியையும் அளித்தல் வேண்டும். இதனைத் தொடர்ந்து புறவரி நிலவரைப்படத்தில் இடங்களைக் குறித்தல், வண்ணம் தீட்டுதல் போன்ற பயிற்சிகளையும் அளிக்க வேண்டும். இவை மாணவர்களின் நிலவரைப்படத் திறனை வளர்க்கவும், படைப்பாற்றல் திறனை வளர்க்கவும் கற்றலை நிலை நிறுத்திக் கொள்ளவும், சுய மதிப்பீடு செய்து கொள்ளவும் உறுதுணையாக விளங்கும்.

***செயல்***

***3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள முக்கிய நிலவரைப்படங்களைப் பணிமனை அமைத்து வரைந்து கண்காட்சி அமைக்க.***

இவ்வாறு நிலவரைப்படங்களை வரையும் திறனும், நிலவரைப்படங்களைப் பார்த்துத் தகவல்களை அறியும் திறனும் ஒரு மாணவனுக்குக் கிடைக்கப்பெற்றால்தான், அவனிடம் நிலவரைப்பட விவரங்களின் காரண காரியத் தொடர்பு, இணைத்துப் பார்த்தல், முடிவுகளை அலசி ஆராய்தல் போன்ற திறன்கள் வெளிப்படும். இத்திறனின் மூலம் மாணவன் நிலவரைப்படங்களில் தனித்தனியே அறியும் புவியின் கூறுகளை மக்களின் கலாச்சார, பொருளாதார மற்றும் சமூகக் கூறுகளோடு தொடர்புபடுத்தி அன்றாட வாழ்வில் பயன்படுத்த முடியும்.

சமூக அறிவியல் கற்றல் – கற்பித்தலில் நிலவரைப்படங்கள் முக்கியமானதொரு கற்றல் கருவியாகத் திகழ்கின்றது. கல்வித்துறையைத் தவிர வேறுபட்ட பலதுறைகளிலும் இதன் முக்கியத்துவம் பெரிதும் தற்போது போற்றப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு துறையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ புவியோடு தொடர்பு கொண்டுள்ளதால் புவியின் பல அமைப்புகளை விளக்கப் பயன்படும் நிலவரைப்படங்களும் அந்தந்தத் துறைகளோடு நெருங்கியத் தொடர்பு கொண்ட சாதனமாகத் திகழ்கின்றன. எனவே நிலவரைப்படங்களைப் பார்த்துப் படித்துத் தகவல்களை அறியும்திறன் மாணவர்கள் மட்டுமின்றி அனைவருமே வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகத் திகழ்கின்றது. நன்கு தயாரிக்கப்பட்ட நிலவரைப்படங்கள் பல நூறு பக்கங்கள் கொண்ட புத்தகங்களைவிட பல நூறு கருத்துக்களை உடனே தரக்கூடியதாக இருப்பதால் நாம் அனைவரும் இத்திறனை வளர்த்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

## 3.3 நிலப்படப் புத்தகம் – படித்தறிதல் (Atlas reading)

### 3.3.1 அறிமுகம்

தம் வகுப்பிலுள்ள மாணாக்கர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்த ஆறாம் வகுப்பு ஆசிரியர் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு வினாவினை வினவினார். பின்வரும் வினாக்களை நிலப்பட புத்தகத்தில் உள்ள தேசப் படங்கள் மூலம் தகுந்த பதிலை அரைமணி நேரத்திற்குள் எழுதப் பணித்தார்.

**ஆசிரியரின் வினாக்களாவன:**

1. வடஅரைக்கோளத்தில் உள்ள கண்டங்கள் மற்றும் பெரும் கடல்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. லண்டனில் பகல் 12 மணியாக இருக்கும் பொழுது, மதுரையில் எத்தனை மணியாக இருக்கும்? என்று கணக்கிடுக.
3. ஆஸ்திரேலியா கண்டம் ஒரு தீவா? தீபகற்பமா? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது எனக் கூறுக.
4. மங்களுர், பெங்களுர் இவ்விரண்டு ஊர்களும் எந்தெந்த அட்சத்திலும், எந்தெந்தத் தீர்க்கத்திலும் அமைந்துள்ளன எனக் குறிப்பிடுக.
5. பூமி சூரியனைச் சுற்றுவதால் ஏற்படும் விளைவினை நிலப்படப் புத்தகத்திலுள்ளவாறு படம் வரைந்து விளக்குக.

மாணாக்கர்களும் உடன் தம்மிடமிருந்த நிலப்படப் புத்கத்தினைப் பிரித்தவாறு குழுக்களில் அமர்ந்து மனமகிழ்வுடன் வினாவிற்கான விடைகளைக் கண்டறிந்து ஆசிரியரின் பாராட்டைப் பெற்றனர். பின் ஒவ்வொரு குழுவினரும் அனைத்து மாணவர்களுக்கும் தமது விடைகளைக் கண்டறிந்த விதம் பற்றி எடுத்துக் கூறினர்.

இவ்வகுப்பறைச் சூழல் திட்டமிட்ட வழிகாட்டுதலாலும், மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வினாக்களாலும் எப்போதும் தம்மிடம் வைத்துள்ள நிலப்படப் புத்தகத் துணையாலும், மாணவர்கள் குழு ஈடுபாட்டுடன் வினாக்களுக்கான விடைகளைத் தாமே கண்டறிய முடிந்தது. எனவே சமூக அறிவியல் கற்றல்கற்பித்தல் செயல்பாடுகளுக்கு நிலப்படப் புத்தகம் பெரிதும் துணை புரிகிறது என்பதையும் நிலப்படப் புத்தகத்தைப் படித்தறியும் முறையை மாணாக்கர்களுக்கு விளக்கினால், ஒவ்வொரு மாணவனும், மனிதனும், சுற்றுப்புறத்திற்கிடையேயுள்ள தொடர்புகளையும் தாம் சமூகத்தில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளையும் கற்று அறிந்து கொள்ளும் திறன் பெற முடியும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

### நோக்கங்கள்

1. நிலப்படப் புத்தகத்தின் பொருளினை அறிந்து கொள்ளுதல்.
2. நிலப்படப் புத்தகத்தின் அமைப்பினைப் புரிந்து கொள்ளுதல்.
3. நிலப்படப் புத்தகத்தின் விவரங்களை அறிந்து கொள்ளச் செய்தல்.

**நிலப்படப் புத்தகம் என்றால் என்ன ?**

*செயல்*

*இந்தியாவில் கடற்கரையை எல்லைகளாகக் கொண்ட மாநிலங்களின் பெயர்களையும், நிலப் பகுதியை எல்லைகளாகக் கொண்ட மாநிலங்களின் பெயர்களையும் பட்டியலிடுக.*

உலகில் உள்ள கண்டங்களின் மற்றும் நாடுகளின் இயற்கை, தட்பவெப்பம், மழையளவு, மண்வகை, இயற்கைத் தாவரங்கள், அரசியல் பிரிவுகள், மற்றும் பொருளாதாரம் பற்றிய விளக்கங்களைத் தெரிந்து கொள்வதற்குப் பல வழிமுறைகள் இருப்பினும், துல்லியமாக எளிதில் பயன்படுத்த உதவும் கருவி (Tool) நிலப்படப் புத்தகம் என்பது நாம் அறிந்ததே.

“கோள வடிவத்தினைக் கொண்ட புவியை முழுவதுமாகவோ அல்லது புவியின் ஒரு பகுதியையோ ஒரு சமதளப் பரப்பில் சிறிய அளவில் வரையறுக்கப்பட்ட குறியீடுகளினால் உருவாக்கப்படும் நிலப்படங்களின் தொகுப்பே நிலப்படப் புத்தகம்” என்கிறோம்.

## 3.3.2 நிலப்படப் புத்தகத்தின் அமைப்பு

நிலப்படப் புத்தகம் நிலப்படங்களைப் போன்றோ புவி உருண்டை மாதிரி போன்றோ அல்லாமல், புத்தக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு விதமான வரைபடங்கள் உள்ளன. இவ்வரைப்படங்கள் ஒரு நாட்டின் வடிவத்தையும், அந்நாட்டின் அமைப்பையும் விளக்குவதாக அமையும். இவ்வரைப்படங்கள் ஒரு குறிப்பிட்ட அளவில் வரையப்பட்டிருக்கும். உதாரணமாக 1:100000 என்று வரைப்படத்தின் கீழே குறிக்கப்பட்டிருந்தால் மேப்பில் ஒரு செ.மீ. என்பது நிலத்தில் 100000 செ.மீ. க்குச் சமமானது. அல்லது 1 கிலோமீட்டருக்குச் சமமானது என்று பொருளாகும். இந்த அளவைக்குக் கீழே மற்றொரு அளவையும் வரைப்படத்தில் குறிக்கப்பட்டிருக்கும். இந்நிலப்படப் புத்தகத்தில் மேற்கண்ட அளவையில் உள்ள நிலப்பகுதியில் 1000 கி.மீட்டர் உள்ள விவரங்களை 1. செ.மீ. க்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

நிலவரைப்படத்தில் வரைப்படங்கள் வரையறுக்கப்பட்ட முறைகுறியீடுகளால், குறிப்பிடப்பட்ட விவரங்கள் காட்டப்பட்டிருக்கும். வரையறுக்கப்பட்ட குறியீடுகள் என்பது வழிவழியாக முற்காலத்திலிருந்து இயற்கை, பொருளாதாரம் மற்றும் கலாச்சார அமைப்புகளுக்கு வழங்கப்படும் அடையாளக் குறியீடுகள் ஆகும். இக்குறியீடுகளே பொதுவாக நிலவரைப்படங்களிலும் (Map), நிலப்படப் புத்தகத்திலும் (Atlas), புவி உருண்டை மாதிரியிலும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கும்.

உதாரணமாகக் கடலினைக் காட்டுவதற்கு நீல நிறத்தைக் காட்டும் குறியீடே தேசப் படத்திலும், புவி உருண்டை மாதிரியிலும், நிலப்படப் புத்தகத்திலும் காட்டப்பட்டிருக்கும். கலாச்சார அமைப்பான நீளமான கோடுகள் (கோட்டுக் குறியீடு) சாலைகளைக் காட்டுவதற்குக் குறியீடுகளாக இருப்பதையும் காணலாம்.

நிலப்படப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் ஒரு தலைப்பு உடையது. உதாரணமாக ஆசியா – இயற்கை அமைப்பு, ஆசியா – அரசியல், தென்கிழக்கு ஆசியா – தீபகற்பம், தென் ஆசியா – அரசியல் பிரிவுகள் போன்று உலகத்தைப் பற்றிய விவரங்களும் ஒவ்வொரு தலைப்பின் கீழும் தெளிவாக வரையப்பட்டுள்ளன. நிலப்படப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வரைபடத்திலும், தேசப்படத்திலும், புவி உருண்டை மாதிரியிலும் வரையப்பட்டுள்ள அட்சங்களும், தீர்க்கங்களைப் போல் வரையப்பட்டுள்ளன.

### 3.3.3 நிலப்படப் புத்தகத்தில் அடங்கியுள்ள விவரங்கள்:

நிலப்படப் புத்தகத்தில் அடங்கியுள்ள விவரங்களை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. நிலப்படப் புத்தகத்தில் உள்ள புள்ளி விவரங்கள்,
2. புவி பற்றிய பொது விவரங்கள்.
3. உலகம், உலகில் உள்ள கண்டங்கள், கண்டங்களில் உள்ள நாடுகள், பெருங்கடல் சிறு கடல்கள் அமைப்புகள், கடலடி நிலத்தோற்றங்கள்.
4. அகராதி (Index) ஆகியவை விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

அந்தந்த நாட்டில் உபயோகப்படுத்தப்படும் நிலப்படப் புத்தகத்தில் அந்த நாடுகளுக்குரிய விவரங்கள் முன்னிலைப்படுத்தப்படும். உதாரணமாக

நாம் பயன்படுத்தும் நிலப்படப் புத்தகத்தில் நம் நாடான இந்தியாவின் மாநிலங்கள், மாவட்டங்கள், தலைநகரங்கள் போன்றவற்றின் புள்ளி விவரங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலங்களின் பரப்பளவு அவற்றின் மக்கள் தொகை, மக்கள் அடர்த்தி ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை, கல்வியறிவு விகிதம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர நிலப்படப் புத்தகத்தில் உள்ள தேசப்படங்களில் பயன்படுத்தியுள்ள வரையறுக்கப்பட்ட முறை குறியீடுகள் பற்றிய விளக்கம் குறிப்புரையாக இடம் பெற்றுள்ளன. சில நிலப்படப் புத்தகத்தில் பல நாட்டின் பெயர்களில், தற்காலத்தில் மாற்றப்பட்ட புதிய பெயர்கள் ஒப்பிட்ட விளக்கமும் தரப்பட்டுள்ளன.

மேற்கண்ட புள்ளி விவரங்கள் யாவும் மாணவர்களும், ஆசிரியர்களும், மற்ற துறையினரும் தாம் வாழும் இடத்தையும், மாவட்டத்தையும், மாநிலத்தையும் மற்ற மாவட்டங்களுடன், மாநிலங்களுடன் முறையே ஒப்பிட்டு உணர முடியும். இதனை அடிப்படையாகக் கொண்டு மனித வாழ்க்கை முறை, வேறுபட்ட கலாச்சாரம், வேறுபட்ட விளை பொருட்கள், மற்றும் வாழ்க்கைத்தரம் போன்ற விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கு இப்புள்ளி விவரங்களே பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியப் புள்ளி விவரங்களைத் தவிர, தமிழ்நாட்டின் சமீப காலப் புள்ளி விவரங்களான மாவட்ட வாரியான பரப்பளவு, மக்கள் தொகை, மக்கள் அடர்த்தி, கல்வி அறிவு விகிதம், சுற்றுலாத் தலங்கள் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

புவியியல் புள்ளி விவரங்களான புவியின் பரப்பளவு, நிலப்பரப்பு, நீர்ப்பரப்பு, பூமத்திய ரேகை, தீர்க்க ரேகை, வட்டச் சுற்றளவு, புவியின் எடை, நீளமான நதிகள், முக்கிய உள்நாட்டு நீர்நிலைகள், உயரமான நீர் வீழ்ச்சிகள், முக்கியப் பெருங்கடல்கள் மற்றும் கடல்கள், முக்கிய அணைக்கட்டுகள், உயரமான சிகரங்கள், முக்கிய நிலப்பரப்பளவு பற்றியும் துல்லியமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

விண்வெளி மண்டல விவரங்கள் பரிமாணப் (True Dimension) படங்களாக விவர அட்டவணையுடன் விளக்கப்பட்டுள்ளன. சூரிய மண்டலத்தில் ஒவ்வொரு கோளும் சூரியனிடமிருந்து அமைந்துள்ள தூரம் அதன் சுழற்சி நேரம், வெப்பநிலை, கோள்களின் அடர்த்தி, கண்டுபிடிக்கப்பட்ட துணைக் கோள்களின எண்ணிக்கை ஆகியவையும் விளக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர கிரகணங்கள் ஏற்படும் விதங்கள், பருவ காலங்களான கோடை, குளிர், வசந்தம், இலையுதிர் காலம், சமபகல் இரவு நாட்கள், இரவு பகல் ஏற்படுதல், சந்திரனின் பல்வேறு தோற்றங்கள் ஆகியனவற்றைப் பற்றியும் படவிளக்கத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நிலப்படப் புத்தகத்திலும் நமது மாநிலமான தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பு, அரசியல் பிரிவுகள், மழையளவு, வெப்பநிலை, புவி அமைப்பு, தாதுப் பொருட்கள், மண், நீர், சக்தி வளங்கள் போன்றவை விளக்கமான உரிய குறியீடுகளுடன் புரியும் வகையில் விளக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று இந்தியா, ஆசியா, தென்கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஒசியானியா போன்றவற்றிற்கும் விளக்கம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்பிலுள்ள நிலப்படத்துடன் தலைப்பைச் சார்ந்த புள்ளி விவரங்களுக்கு ஏற்றாற்போல் இருபரிமாண விளக்கப்படங்களும் (பட்டை விளக்கப்படம், வட்ட பகுப்பு படங்கள்) கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்விளக்கப்படங்களின் மூலம் நாட்டின் பல்வேறு பொருட்களின் பொருளாதார உற்பத்தி நிலையினைத் தெரிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு ஆண்டிலும் உள்ள உற்பத்திப் பெருக்கத்தினை அறிந்து அதற்கான முன்னேற்ற நடவடிக்கையும் எடுக்க முடியும். இடத்தின் அமைவிடத்தை அறிந்து கொள்ளத் துணையாக இருக்கும் அகராதி, நிலப்படப் புத்தகத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் உலகில் உள்ள இடங்களின் பெயர்கள் ‘அகர’ வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இடத்திற்கும் அந்தப் பெயர், குறிப்பிடப்பட்டுள்ள பக்கத்தின் எண் ஆகியவை தெளிவாக (தடித்த எண்ணாக) கொடுக்கப்பட்டுள்ளன. சில இடங்களைத் தவிர, என்னை இடங்களுக்கும் அட்ச ரேகையும், தீர்க்க ரேகையும் கொடுக்கப்பட்டுள்ன. இதன் மூலம் அவ்விடங்களின் அமைவிடத்தை எளிதில் கண்டுபிடிக்க முடிகிறது. உதாரணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மதுரை | 15 | $9^0$54’ | 21 | $78^0$6’கி |
| மும்பை | 14 | $19^0$21 | $72^0$48’கி | |

***செயல்***

*கீழ்க்காணும் நகரங்களின் அட்ச, தீர்க்க ரேகையின் மதிப்பை நிலப்படப் புத்தக உதவியுடன் கண்டுபிடிக்கவும்.*

| | நகரங்கள் | அட்சங்கள் / தீர்க்கங்கள் |
|---|---|---|
| 1. | புதுடெல்லி | – |
| 2. | கோல்கத்தா | – |
| 3. | சென்னை | – |
| 4. | பெங்களூர் | – |

இதில் மதுரை நகரம் 15 ஆவது பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்நகரம் $9^0$54’ வடக்கு அட்ச ரேகையும் $78^0$6’ கிழக்கு தீர்க்க ரேகையும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் அறிவிக்கிறது. இதன் மூலம் உலகில் உள்ள நாடுகள், நகரங்களின் இருப்பிடத்தை மாணவர்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

மேலும் நிலப்படப் புத்தகத்தில் உள்ள வரைபடத்தில் அட்ச ரேகையின் மதிப்புகள் வலது கை மற்றும் இடது கை ஓரப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. தீர்க்க ரேகையின் மதிப்புகள் மேல் பகுதி மற்றும் கீழ்ப் பகுதி குறிக்கப்பட்டுள்ளன.

## 3.3.5 அன்றாட மனிதச் செயல்பாடுகளில் நில வரைப்படம், புவி உருண்டை மாதிரி, நிலப்படப் புத்தகத்தின் பயன்கள்

### நிலவரைப்படங்கள் (Maps)

சமூக அறிவியலில் நிலவரைப்படங்கள் (Map) முக்கியமானதொரு சாதனமாகத் திகழ்கின்றது. புவியியல் தவிர வேறுபட்ட பல துறைகளிலும் வரைப்படங்களின் முக்கியத்துவம் பெரிதும் தற்போது போற்றப்பட்டு வருகின்றது. அன்றாட நிகழ்வில் ஒவ்வொரு துறையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ, புவியோடு தொடர்பு கொண்டுள்ளதால் புவியின் பல அமைப்புகளை விளக்கப் பயன்படும் நில வரைப்படங்களுடன் அவ்வியல்களுக்கான தொடர்பும் தவிர்க்க முடியாததாகிறது. நாகரிகமான வாழ்க்கைக்கு ஒரு முக்கியமான கருவியாக விளங்குகின்றது.

ஆட்சியாளர்களுக்குச் சிறப்பான உறுதுணையாகவும், பயணம் செய்வோர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்கின்றன.

வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வருகிறவர்கள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் சென்று சுற்றுலா மேம்பாட்டு இடங்களைக் கண்டுகளிக்க நில வரைப்படங்களைக் கொண்டு பயன்பெறுதலைக் கூறலாம்.

ஓரிடத்தைப் பற்றிய அமைவிடத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளப் பயன்படுகின்றன. அமைவிடத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அவ்விடத்தில் புவியியல் அடிப்படை சார்ந்த இருப்பிடம் தெளிவாக இருக்க வேண்டும். முதலாவதாக அட்ச ரேகை, தீர்க்க ரேகை இருப்பிடம், மற்றொன்று அருகிலுள்ள மற்ற பகுதிகளுடன் ஆன தொடர்பு ஆகிய இவ்விரண்டையும் வைத்துத்தான் ஓரிடத்தின் அமைவிடத்தைத் தெரிந்து கொள்ளலாம். இவ்விரண்டுமே நில வரைப்படங்களில் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். ஆகையால் மதுரை அல்லது மும்பை அமைவிடத்தை அப்பகுதியின் தலப்படங்களைக் கொண்டு இருந்த இடத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

- மழைப் பொழிவு, வெப்பநிலை, இயற்கைத் தாவரங்கள், இயற்கை வளங்கள் பற்றிய கருத்துக்களை விளக்குகின்றன.
- வட்டாரப் புவியியல் பற்றிய கருத்துக்களையும் அறிய முடிகின்றது.
- பொருளாதார, வாணிகப் புவியியலைப் பற்றித் தெரிந்து கொள்ள மாணவர்களுக்கு உறுதுணையாக உள்ளது.
- ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குப் புகட்ட வேண்டிய கருத்துக்களை எளிதில் புகட்டுவதற்கும் முக்கிய சாதனமாகத் திகழ்கின்றன.
- நில வரைபடங்கள் புத்தகத்தோடு இணைந்து கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.
- கப்பல் மாலுமிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

- விமான ஒட்டிகளுக்குத் திசைகளை அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்றது.
- ஒரு நாட்டின் எல்லைக் கோடுகளை வரையறுப்பதும், நிலவரைப்படங்களே. நாடுகளில் எல்லைகளை அறிந்து கொள்ள இராணுவத்தினருக்குப் பெரிதும் பயன்படுகின்றது.
- நகர வளர்ச்சிக்கும் திட்டமிடுதலுக்கும், பொறியியல் வல்லுநர்களுக்கும், சாலைகள், இரயில்வே, மின் இணைப்புகள், அணைகள், தேசியப் பூங்காக்கள் அமைப்பதற்கும், நிலவரைப்படங்கள் பயன்படுகின்றன.
- நிறங்களின் அடிப்படையில், குறியீடுகளின் முறையிலும், உற்பத்திப் பிரதேசங்கள், விவசாயப் பிரதேசங்கள், மக்கள் அடர்த்தி ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் முடிகின்றது.
- இன்றையச் சூழலில் ஓரிடத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஆதாரமாகத் திகழ்கின்றன.
- நிழற்பட நிலப்படங்கள் (Photo maps) மூலமாகச் சென்றடைய முடியாத இடங்களை ஆராய்ச்சிக்கு உட்படுத்தவும் முடியும்.
- வளி மண்டலத்தில் ஏற்படக் கூடிய தூய்மைக் கேடுகளையும், வெப்ப மண்டலத்தில் ஏற்படக் கூடிய விளைவுகளையும் நிலவரைப்படங்களின் மூலம் அறிய முடிகின்றது.

## புவி உருண்டை மாதிரி (Globe)

புவியை முப்பரிமாண வடிவத்துடன் காட்டுவதே புவி மாதிரியாகும். இது புவியின் வடிவத்தையும், நீர் மற்றும் நிலப்பரப்புகளையும் அதன் விகிதங்களையும் காட்டும் விளக்கமான மாதிரி என்றே கூறமுடியும்.

துணைக் கோள்களின் மூலம் தற்போது நலம் பெறும் நிழற்படங்கள் புவியின் தோற்றத்தைக் கோளமாகக் காட்டுகின்றது. புவியைப் பற்றிய நிழற்படங்கள் கோளமாகக் காட்டுகின்றனவே தவிர, புவியில் உள்ளவர்கள் இதன் தோற்றத்தைக் காண இயலாது. தமக்கெனத் தனியொரு உருவத்தினை அதாவது புவியிடைப் பகுதிகளில் சற்றுப் பருத்தும், துருவப் பகுதிகளில் தட்டையான அமைப்பையும் பெற்றிருப்பதால் புவியின் உருவம், ஜியாய்டு (Geoid) என்று அழைக்கப்படுகின்றது.

புவி மாதிரியின் மூலம் நாகரிக வளர்ச்சி தோன்றிய இடங்கள், தொழில் மற்றும் வேளாண் புரட்சிகள் ஏற்பட்ட இடங்கள், ஆங்கிலேயர் ஆட்சி பரவிய இடங்கள் ஆகியவற்றையும் அடையாளம் காட்டிக் கற்பிக்கலாம்.

மேலும் அன்றாட வகுப்பு நிகழ்வுகளில்

- கண்டங்களின் புவியியல் அமைவிடம்
- புவியின் வடிவம்
- இரவு பகல் ஏற்படுதல்.

- கடல்கள் / நாடுகள் பெயர்கள்
- ஆழ்கடலின் அமைவிடம்

- புவியின் சாய்வு ($23.5^0$)
- வளைகுடா, விரிகுடா
- கணவாய், தீவுகள், தீபகற்பங்கள்
- நிலத் தோற்றங்கள்
- காலநிலை, சிகரங்கள்
- சர்வதேச தேதிக் கோடு
- நேர மண்டலம்
- சுற்றுதல் / வலம் வருதல் – பூமி தன்னைத்தானே சுற்றுதல், சூரியனை வலம் வருதல்.

## நிலப்படப் புத்தகம் (Atlas)

சுவர் வரைபடங்களுக்கு அடுத்தபடியாக வகுப்பறைச் செயல்பாடுகளுக்கு வரலாறு மற்றும் புவியியல் கற்பித்தலுக்கு நிலப்படப்புத்தகம் மிகவும் அவசியமாகின்றது.

மாணவர்களின் விளையாட்டுமுறையில் இடங்களின் அமைவிடங்களைக் கண்டுபிடிப்பதற்கு அகராதி பகுதி உறுதுணை புரிகின்றது.

நிலப்படம் புத்தகம் புவி பற்றிய கருத்துக்களை அறிய தானே கற்றலுக்கும் வழிவகுக்கும்.

நிலப்படப் புத்தகம் நாடு, நகரங்கள், மக்கள் தொகை, கல்வியறிவு ஆகிய புள்ளி விவரங்களையும், ஆறுகள், நீர்வீழ்ச்சி, சிகரங்கள், கடல்கள், தீவுகள் உள்ளிட்ட புள்ளி விவரங்களையும் அறிந்து கொள்வதில் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது.

இயற்கை அமைப்பு, காலநிலை, கடல் நீரோட்டங்கள், மண்வகை, நீர்ப்பாசனம், மழையளவு, உள்ளிட்ட விவரங்கள் பொருத்தமான வண்ணங்களில் கொடுக்கப்பட்டிருப்பதால் மாணவர்கள் இவற்றின் வேறுபாடுகளை எளிதாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை எளிதில் கண்டறிய வசதியாகக் குறியீடுகள் இடம் பெற்றிருப்பதாலும் அதன் அமைப்பினைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. (உ.ம்) வேளாண்மை பற்றிய விவரங்களை அறிய உணவுப்பயிர், வணிகப்பயிர் என்று பிரித்து அறிய விளையும் பயிர்கள் குறியீடுகளாகவும் இடம் பெற்றுள்ளன.

## 3.4 முடிவுரை

சமூக அறிவியல் கற்றல் கற்பித்தல் துணைக் கருவிகளில் முக்கிய மூன்றுத் தூண்களாக உள்ள புவி மாதிரி, நிலவரைபடங்கள் மற்றும் நிலப்படப் புத்தகம் இம்மூன்றின் சிறப்பம்சங்களுமே அதைப் பயன்படுத்தும் விதத்தில்தான் உள்ளது. எனவே மாணவ ஆசிரியர்களாகிய நீங்கள் திறன்களுக்கு ஏற்றவாறு எந்தெந்த இடத்தில் பயன்படுத்தலாம் என்பதை ஆழ்ந்து சிந்தித்து முறையாகப் பயன்படுத்துதலிலும், படித்தறிதலிலும் உங்கள் திறனை வளர்த்தல் வேண்டும்.

சமூக அறிவியல் கற்பித்தலில் பல்வேறு துணைக்கருவிகள் பயன்பட்டாலும் இந்த மூன்றுத் துணைக்கருவிகள் மட்டுமே அடிப்படைக் கருவிகளாகத் திகழ்கின்றது. இவை பாடப்பொருளில் விளக்கமான அறிவைப் பெறவும், அறிவுப்பூர்வமான அனுபவத்தைப் பெறவும் வழிவகைச் செய்கின்றது. இம்மூன்று துணைக்கருவிகளையும் படித்தறியும் திறனை ஓர் ஆசிரியர் பெறுவதன் மூலம் மட்டுமே, கற்றல் – கற்பித்தலில் எவ்வாறு இவற்றைப் பயன்படுத்தலாம் என்ற திறனையும் பெறமுடியும்.

## 3.5 பார்வை நூல்கள்


1. George philips, Teaching of Geography in Secondary Schools.
2. Long. M., Handbook for Geography Teacher.
3. Marchant. E.C., Teaching of Geography at School Level.
4. Monkhouse F.J. & Wilkinson, H.R. Maps and Diagrams, B.I. Publication, New Delhi (1980).
5. Sethurakkayee. S, புவிப்படவியல் –ஓர் அறிமுகம், சண்முகம் பதிப்பகம், மதுரை.
6. UNESCO, Handbook of suggestions on the teaching of Geography.
7. Zamir Alvi, A Text book of Practical Geography, Vikas pub. pvt. Ltd. New Delhi (1998).
8. Zoe. A. Thralls, Teaching of Geography, Eurasia Pub. House, Pvt. Ltd., New Delhi, 1969.
9. Internet.

# அலகு – IV

# கருத்தரங்கம்

# (SEMINAR)

## அறிமுகம்

குறிப்பிட்ட துறை தொடர்பான திட்டங்கள், கொள்கைகள், செயல்முறைகள் பற்றி இன்றைய தேவைக்கேற்ப தலைப்பைத் தேர்ந்தெடுத்தல், தேர்ந்தெடுத்தத் தலைப்பில் வல்லுநர்களின் வழிகாட்டலோடு கட்டுரைகள் தயாரித்தல் அல்லது ஆய்வு செய்து முடிவு காணல் அவற்றைப் பெருங்குழுவில் (கருத்தரங்கில்) பகிர்ந்து கொள்ளுதல், பகிர்ந்து கொண்டச் செய்திகளை விவாதிப்பதன் மூலம் பங்கேற்பாளர்களின் அறிவுத்திறனையும் செயல் திறனையும் வளர்த்தல், அங்ஙனம் விவாதித்தக் கருத்துக்களைத் தொகுத்து நூலாக்கி எதிர்காலப் பயன்பாட்டிற்கு உதவுதல் என்னும் படிநிலைகள் கொண்டது, கருத்தரங்கம் ஆகும். கருத்தரங்கைப் பயன்படுத்தி கல்வியின் தரத்தை மேம்படுத்த முடியும்.

## அலகுக் கூறுகள்

4.1 கருத்தரங்கின் நோக்கங்கள்

4.2 கருத்தரங்கின் பொருள்

4.3 கருத்தரங்கின் தன்மை

4.4 கருத்தரங்கு – நடத்தும் முறை

4.5 கருத்தரங்கம் – படிநிலைகள்

4.6 கருத்தரங்க தலைப்புகள்

4.7 முடிவுரை

4.8 பார்வை நூல்கள்

**கற்றல் செயல்கள்**

| வ. எண். | அலகுக் கூறுகள் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | கருத்தரங்கு – படிநிலைகள் | கருத்தரங்கம் – நீ விரும்பும் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் | தேர்ந்தெடுத்த தலைவர் பற்றிய சுய விவரங்கள், ஆற்றிய அரும்பணிகள், தலைவரின் தனித்தன்மை, தலைவர் மூலம் தான் பெற்ற நன்மதிப்பு போன்றவை பற்றிய விவரங்கள் மற்றும் புகைப்படங்கள் | – | நூலகங்களில் உள்ள புத்தகங்கள் மற்றும் இணைய தளம் |
| 2. | கருத்தரங்கு – படிநிலைகள் | கருத்தரங்கம் – தொடக்க கல்வியை மேம்படுத்துவதில் மாணவ ஆசிரியராகிய உங்களின் பங்கு | தொடக்கக் கல்வியின் இன்றைய நிலை தொடக்க கல்வியில் தற்பொழுது காணப்படும் பிரச்சனைகள், அப்பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் உங்களின் பணி மற்றும் பங்கு | கற்பிப்புப் பயிற்சியின் பொழுது மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியருடன் கலந்துரையாடி கருத்தரங்கிற்கான தகவல்களைத் திரட்டுதல் | – |
| 3. | கருத்தரங்கம் தலைப்புகள் | பட்டியலிடுதல் | 6 முதல் 8 வகுப்பு வரை உள்ள சமூக அறிவியல் திறன் பகுதியில் கருத்தரங்கம் முறை மூலம் கற்பிக்க ஏதுவான திறன்களைக் கண்டறிதல். | கற்பிப்புப் பயிற்சிக்கு செல்கையில் பள்ளியில் பாடப் புத்தகங்களை ஆய்வு செய்தல் | – |

## 4.1 கருத்தரங்கின் நோக்கங்கள்

- கருத்தரங்கத் தலைப்புகள் சமூகத்தைத் தொடர்பு படுத்துவதாக இருக்க வேண்டும்.
- கருத்தரங்கம் என்பது சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் முறை என்பதால், அனைவரும் விருப்பத்துடன் பங்கேற்கும் வகையிலும், கொடுக்கப்படும் கருத்துக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையிலும், வாழ்க்கையை நடைமுறைப்படுத்தும் வகையிலும் அமைதல் அவசியம்.

- கருத்தரங்கம் ஒவ்வொரு நிலையிலும் வெற்றிகரமாக அமையும் வண்ணம் திட்டமிடுதல் வேண்டும்.
- கருத்தரங்கை தலைமை ஏற்று நடத்துபவர் கருத்தரங்குக் குறித்து தெளிவாக அறிவு பெற்றிருக்க வேண்டும்.
- ஒவ்வொரு கருத்தரங்கு அமர்விலும் தலைப்பு குறித்தக் கருத்துக்களைத் தெளிவான முறையில் வெளிப்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு அமர்விலும் பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட வேண்டும்.
- கல்வியாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், ஆசிரியர்களின் புத்தாக்க உத்திகளையும், பரிசோதனைகளையும் பெருங்குழுவில் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.
- பகிர்ந்து கொண்ட கருத்துகளை நடைமுறைப்படுத்தும் வகையில் பொதுமைப்படுத்துதல் வேண்டும்.
- கருத்தரங்கு முடிவில் கடைசியாக எடுக்கப்பட்ட முடிவின்படி தொடர்பணி ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்க கட்டுரையின் தொகுப்பு வெளியிடப்பட வேண்டும்.

## 4.2 கருத்தரங்கின் பொருள்

ஆய்வுப்பணி அல்லது உயர்கல்வியில் ஈடுபடும் மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தலைப்பில் வல்லுநர்களின் வழிகாட்டலோடு கருத்துக்களை வெளிப்படுத்தவும், விவாதித்து சீர்படுத்தவும் தரும் வாய்ப்பே கருத்தரங்கம் ஆகும்.

- விரிவுரை முறையில் வகுப்பறை நடைபெறுவதற்குப் பதிலாக, குழுவிவாத முறையில் நடைபெறும்.
- சிறப்பான பாடப்பகுதிகளில் சிறப்புக் கவனம் செலுத்தி கற்பதற்காக வடிவமைக்கப்பட்டது.
- குறிப்பிட்ட தலைப்பிலான கருத்துப் பரிமாற்றத்திற்கான கூட்டம்.
- ஆய்வு மாணவர் மற்றும் உயர்கல்வி முறைக்குரியக் கற்பிப்பு முறை.
- வல்லுநர் ஒருவர் தலைமையில் மாணவர்கள் ஒரு தலைப்பில் விவாதிக்கக் கூடுவது.
- ஒரு சிலரோ, ஒரு குழுவினரோ ஒரு குறிப்பிட்ட தலைப்பில் பல்வேறு நூல்களிலிருந்து தகவல்களைச் சேகரித்து, ஆய்வு செய்து பெற்ற முடிவுகளை, கட்டுரையாகத் தயாரித்து பகிர்ந்து கொள்வது.
- கருத்தரங்கக் கட்டுரைகளைத் தயாரித்துக் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளச் செய்வதால் ஒருவர் தான் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு தரப்படுகிறது. இதன்மூலம் தன் துறையைச் சார்ந்த உடனாளர்களின் திறன்களை வளர்க்க முடிகிறது.

- கருத்தரங்கில் கருத்துக்களைக் கட்டுரைகளாக்கி வாசிப்பதன் மூலம் குறிப்பிட்ட தலைப்பில் செய்திகளை ஆழமாகக் கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கிறது.
- பல்கலைக்கழகங்களில், கலந்தாய்வு அல்லது ஆய்வு அடிப்படையில் நடைபெறும் ஒருவகை கற்பிப்பு முறைதான் கருத்தரங்கம் ஆகும். "இது வல்லுநர்களின் வழிகாட்டலில் ஒழுங்குப்படுத்தப்பட்ட முறையில் நடைபெறும்" எனக் கருத்தரங்கம் குறித்து 'ஆக்ஸ்போர்டு அகராதி' குறிப்பிடுகிறது.

## 4.3 கருத்தரங்கின்தன்மை

- கருத்தரங்க அமைப்பாளரின் திட்டமிடலின் படி நடைபெறும்.
- ஒரு குறிப்பிட்ட தலைப்பு தொடர்பாக நடத்தப்படும்.
- குறைந்த எண்ணிக்கைக் கொண்டவர்கள் பங்கேற்க வேண்டும். அதிகபட்சம் இருபது பேர் கலந்து கொள்ளலாம்.
- வாரம் ஒருமுறையோ, தேவைக்கேற்பவோ நடத்தப்படுவது.
- இதில் பங்கேற்று கட்டுரை அளிக்க முன்பதிவு செய்து கட்டுரையையும் அனுப்ப வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் அனுப்பிய கட்டுரைகளில் கருத்தரங்கக் குழு தேர்வு செய்த கட்டுரைகள் கொண்ட ஆய்வுச் சுருக்கம் நூல் வடிவில் பங்கேற்பாளர்களுக்கு கருத்தரங்கின் போது தரப்படும்.
- தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகளே படிக்கப்பட்டு விவாதிக்கப்படும்.
- விவாதிக்கப்பட்ட கருத்துக்களைக் கட்டுரைகளில் சேர்த்து சீரமைத்து நூல்கள் கருத்தரங்கம் சார்பில் வெளியிடப்படும்.
- கருத்தரங்கின் மூலம் அக்குறிப்பிட்ட தலைப்பில் பங்கேற்பாளர்களுக்கு ஆழ்ந்த தெளிவு ஏற்படும்.
- இதில் விரிவுரை முறையை விட கருத்துப்பரிமாற்றம் சிறப்பாக நடைபெறும்.
- மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் தலைப்பைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

## 4.4 கருத்தரங்கு நடத்தும் முறை / கருத்தரங்க அமைப்பாளர்களின் பொறுப்புகள்

- தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்
- நிகழ்ச்சிக்கு திட்டமிடல்
- கருத்தரங்கத் தலைப்பு தொடர்பான வரைவுத் தயாரித்தளித்தல்.
- கட்டுரையாளர்களை ஊக்குவித்து கருத்தரங்கில் பங்கேற்கச் செய்தல்.
- கட்டுரையை மாணவர்களே படித்திட வழிவகை செய்திடல்.

- குறிப்பிட்ட தலைப்பு தொடர்பாக கூறப்படும் கருத்துகளை ஆர்வமுடன் கேட்டல் மற்றும் ஊக்கமளித்தல்.
- கட்டுரை தொடர்பான வினாக்கள் தொகுக்க கட்டுரையாளருக்கும் பங்கேற்பாளர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்படச் செய்தல்.
- வல்லுநர்கள், கட்டுரையாளர்கள், பங்கேற்பாளர்களின் கூட்டு முயற்சியால் சிறப்பான அறிவு பெறுதல்
- பங்கேற்பாளருக்கு ஆழ்ந்த அறிவு கிடைக்க உதவுதல்.
- எதிர்காலப் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடல்.

## 4.5 கருத்தரங்கை நடத்துவதிலுள்ள படிநிலைகள்

1. முன்தயாரிப்பு
2. கருத்தரங்கை நடைமுறைப்படுத்துதல்.
3. மீள்பார்வை மற்றும் மதிப்பிடல்.

### 1. தயாரிப்பு

**கருத்தரங்கை வடிவமைத்தல்:** கருத்தரங்கு நடத்துவதன் நோக்கம், மக்களோடு பகிர்ந்து கொள்ளவிருக்கும் செய்திகள், கருத்தரங்கின் மூலம் பங்கேற்பாளர்கள் பெறும் பயன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்தரங்கை வடிவமைக்க வேண்டும்.

**நிகழ்ச்சி குறித்து திட்டமிடுதல்:** கருத்தரங்கை நடத்துவதன் குறிக்கோள், கருத்தரங்கை நடத்துவதால் கல்வி மேம்பாட்டுக்குக் கிடைக்கும் பயன்கள், பங்கேற்பாளருக்குக் கிடைக்கும் பயன்கள், கருத்தரங்கின் குறிக்கோள், நோக்கங்கள், உத்திகள் ஆகியவற்றிற்கும் கல்வித்துறைக்கும் உள்ள தொடர்பு, கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரைகளைத் தருவதாலும், கருத்தரங்கில் கலந்து கொண்டு விவாதிப்பதாலும், பங்கேற்பாளர்களும், கட்டுரையாளர்களும் கல்வி குறித்துக் கற்றுக்கொள்ளும் புதிய தகவல்கள், கருத்தரங்கு நடத்த திட்டமிட்டுள்ள நாட்கள், ஒவ்வொரு அமர்வையும் நடத்தவிருக்கும் முறை ஆகியனவற்றை திட்டமிடுதல் அவசியம்.

கருத்தரங்க அமைப்பாளர் பார்வையாளர்களிடம் ஏற்படுத்த விரும்பும் கற்றல் விளைவுகளையும், அவற்றை நடைமுறைப்படுத்த கையாளவிருக்கும் உத்திகள் ஆகியவற்றையும் திட்டமிட வேண்டும்.

பெரும்பாலும் கருத்தரங்கில் கலந்துகொள்ள ஆர்வம் காட்டுபவர்கள் யார்? என்பதையும் அவர்கள் அவ்வாறு ஆர்வம் காட்டுவதற்கான காரணம், கருத்தரங்கின் மூலம் ஏற்படுத்த விரும்பும் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்தரங்க தகவலறிக்கையைத் தயாரிக்க வேண்டும். தகவலறிக்கையில் கருத்தரங்கம் நடைபெற இருக்கும் நாள், நேரம், இடம் ஆகியவற்றோடு பங்கேற்பாளர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கருத்தரங்கத் தலைப்பும், தலைப்பு குறித்த தகவல்களும் இடம் பெற வேண்டும்.

கருத்தரங்கத் தகவலறிக்கை தபால் மூலமோ, மின் அஞ்சல் மூலமோ, அல்லது நேரிலோ பங்கேற்பாளருக்கு உரிய நேரத்தில் தரப்பட வேண்டும்.

பங்கேற்பாளர்கள் கட்டுரைகள் தயாரித்து அனுப்புவதற்கு போதுமான காலம் அளிக்கப்பட வேண்டும்.

அனுப்பப்பட்ட கட்டுரைகளை கருத்தரங்கு நடத்துபவர்கள் துறைவல்லுநர்களைக் கொண்டு ஆய்வு செய்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரையாளர்களுக்கு கருத்தரங்கம் நடைபெறும் நாள் மற்றும் பிற தகவல்கள் குறித்து முறையாக செய்தி அனுப்ப வேண்டும். கருத்தரங்கு குறித்து அனைவரும் பேசும் வகையில் செய்திகள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். இவை பங்கேற்பாளர்களிடம் கருத்தரங்கில் பங்கேற்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும்.

## 2. கருத்தரங்கை நடத்தும் முறை

**அறிமுகம்:** அறிமுகம் நன்கு திட்டமிட்டதாகவும், நடைமுறைப்படுத்துவதற்கேற்ற இயல்பு கொண்டதாகவும் அமைய வேண்டும். தலைப்பை அறிமுகப்படுத்துதல், அமர்வுகளுக்கான திட்டம் குறித்தத் தகவலளித்தல், வரவேற்றல், அமர்வுகளின் நோக்கங்கள் ஆகியன இடம் பெற வேண்டும்.

**கற்றலுக்கான தூண்டல்:** கருத்தரங்க நிகழ்ச்சிகள் பங்கேற்பாளர்களை ஒவ்வொரு நிகழ்விலும் தாமே மனமுவந்து ஈடுபாட்டோடு, பங்கேற்கத் தூண்டும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

**கற்றல்:** மக்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பும் செய்தி, மக்கள் கற்றுக் கொள்ள வேண்டுமென விரும்பும் செய்தி, அவற்றை அவர்கள் அறிந்து கொள்ள கையாளவிருக்கும் உத்திகள் ஆகியனவே நிகழ்ச்சி அமைப்பதன் அடிப்படை ஆகும். கருத்தரங்கம் என்பதன் விளக்கம், கலந்துரையாடல் மற்றும் ஆராய்தல், படிப்படியாகத் திட்டமிட்ட கற்றல் நிகழ்வதற்கான கூட்டம், கருத்தரங்கில் கூறப்படும் செய்திகள், கேட்பவர்கள் தங்களை இக்குறிப்பிட்ட தலைப்பில் கூறப்படும் செய்திகளுக்கேற்ப மாற்றிக் கொள்வதாய் அமைய வேண்டும்.

கூட்டத்தின் இயக்குநராக இருந்து பெறும் அனுபவம், தலைப்பு மற்றும் அது தொடர்பான கற்பித்தல் மற்றும் ஆய்வு தொடர்பாக கேட்கப்படும் வினாக்கள் ஆகியன நல்ல மாற்றத்தையும் கற்றல் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும். கருத்தரங்க அமைப்பாளரின் பணி ஒரு சட்டத்தை, ஒரு வெளி வரைவை, திட்டத்தை அமைத்துக் கொடுப்பதாகும்.

கருத்தரங்க அமைப்பாளரின் பணி கருத்தரங்கினை மிகச்சீரிய முறையில் எடுத்துச் சென்று அதனை முழுமைப் பெறச் செய்தலே ஆகும்.

**கற்றல் வெளிப்பாடுகள்:** பங்கேற்பாளர்களிடம் சில வினாக்கள் வினவுவதன் மூலமாகவும் ஒரு செயல்பாடு தந்து தலைப்புக்கு நெருக்கமாக விவாதித்தல், கலந்துரையாடுதல் மூலமாகவும் கற்றலை வெளிப்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும். இவை, அமர்வு குறித்த உங்கள் இலக்கினை சென்றடைய முடிந்ததா? என மதிப்பிட உதவும். மீண்டும் ஒருமுறை விவாதிக்கப்பட்ட முக்கிய செய்திகளை எடுத்துக் கூறுவதன் மூலம் பெற்ற அறிவை நிலைக்க வைக்க முடியும்.

### 3. குறைநிறை நோக்கு மற்றும் மதிப்பீடு

கருத்தரங்கம் நடைபெற்ற முறை, கருத்தரங்கில் பங்கேற்பாளர்களின் அணுகுமுறை, நிர்ணயித்திருந்த கற்றல் இலக்குகளில் நிறைவேற்றப்பட்டவை, கருத்தரங்க தலைப்பிற்கு ஏற்ப நடந்த நிகழ்வுகள், திசை திருப்பிய நிகழ்வுகள், எதர்பாராத நிகழ்வுகள் ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டு கருத்தரங்கம் குறித்து மதிப்பிட வேண்டும். இது எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் கருத்திரங்கினை மேம்பட்ட முறையில் நடத்த உதவி புரியும். எதிர்காலத்தில் கருத்தரங்க அமைப்பாளர் கருத்தரங்கை நடத்திய பின் தன்னைத்தானே கேட்டுக் கொள்ள வேண்டிய வினாக்கள்.

கருத்தரங்கிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு பொருத்தமானதா ? இல்லையா ? அது எந்த அளவிற்கு சமூகப்பயனுடையதாகவும் கல்விப் பயனுள்ளதாகவும் இருந்தது ?

- கருத்தரங்கிற்கு முன்னதாக போட்டிருந்த திட்டம் போதுமானதா ?
- அமர்வுகள் குறித்த திட்டம் மிகச் சரியாக அமைந்திருந்ததா ?
- கருத்துக்களைக் கூறுதல் விவாதித்தல் இரண்டிற்குமிடையே சமநிலை காணப்பட்டதா ?
- அனைவரும் கருத்தரங்குகளில் பங்கேற்றனரா ?
- புதிய அறிவினைப் பெற யாரேனும் உதவினாரா ?
- கருத்தரங்கத் தலைப்பை போதுமான அளவில் அறிமுகம் செய்தேனா ?
- முதல் செயல்பாடு பங்கேற்பாளர்களை தலைப்போடு செயல்பட உதவியதா ?
- அமர்வுகளின் முக்கிய தகவல்கள் ஏதேனுமுண்டா ?
- இவற்றை அடுத்தமுறை இன்னும் மாற்றம் நிறைந்ததாக எப்படித்தர இயலும் ?

இவ்வினாக்கள் கருத்தரங்குகளை நடத்துவதில் கருத்தரங்க அமைப்பாளருக்கு இருந்த பொறுப்பைச் சரிவரச் செயல்படுத்தியதை உறுதிப்படுத்த உதவும். கருத்தரங்கு முடிந்த பின்னர் பங்கேற்பாளர் வெளிப்படுத்தும் கருத்துக்களே கருத்தரங்கின் வெற்றியை எடுத்துரைக்கும்.

நிகழ்வுகளை மதிப்பிடுவதற்கேதுவான திட்டமிட்ட வினாநிரலைப் பயன்படுத்தி தகவல்களைச் சேகரித்தும் மதிப்பிடலாம்.

கருத்தரங்கை திட்டமிட்ட நாளிலிருந்து நடத்தி முடித்த கடைசி நிமிடம் வரை நடந்த நிகழ்வுகளைக் கொண்டு அறிக்கை எழுதும்போது சிறப்பான மதிப்பீடாக இது அமையும். கருத்தரங்கின் முன்னேற்றம் சார்பாக திட்டமிடலுக்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் கிடைத்துள்ள தகவல்கள், பரிந்துரைகள் செய்ய உதவும்.

## 4.6 கருத்தரங்கத் தலைப்புகள்

தொடக்கப்பள்ளி சார்ந்த கருத்தரங்கத் தலைப்புகள்

1. ஆசிரியர் ஒரு தலைவர்
2. வகுப்பறையில் ஆசிரியர் மாணவர் இடைவினைகள்
3. வகுப்பறையில் கற்றல் நிகழும் விதம்

4. பள்ளியும் சமுதாயப்பங்கேற்பும்
5. பள்ளி மேலாண்மை
6. பள்ளிகளில் நன்னெறிக்கல்வி
7. மதிப்பீட்டு உத்திகள்
8. துணைக்கருவி தயாரித்தலும் பயன்படுத்துதலும்
9. நலக்கல்வி
10. மாணவர்கள் இடைநிற்றல், மற்றும் நீக்கம் ஏன் ?
11. இணக்கமான கற்கும் சூழல்.
12. தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்துதல்.
13. மாணவர்களின் வளர்ச்சியைப் பாதிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகள்.
14. பண்பாட்டுக் கல்வி.
15. பள்ளிக்கு மாணவர்களை ஒழுங்காக வருகை தரச் செய்யும் முறைகள்.
16. பள்ளியில் தரம் உயர்ந்த ஆலோசனைகள்.

**ஆசிரியர் கல்வி சார்ந்த கருத்தரங்கத் தலைப்புகள்**

1. பணிமுன் பயிற்சி – தரம் மேம்பட
2. பணியிடைப்பயிற்சி – நல்ல பயன்தர
3. கற்றல் கற்பித்தல் தொடர்பான ஆய்வுகள்
4. கற்றல் கற்பித்தலில் புதிய உத்திகள், கண்டுபிடிப்புகள்.

## 4.7 முடிவுரை

கருத்தரங்கமும் ஒரு வகை விவாதம் ஆகும். மேலும் ஆசிரியர்கள் தங்கள் அறிவினை மேம்படுத்திக் கொள்ள, சுற்றுவட்டாரத்தில் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகளில் தவறாது பங்கு கொள்ள வேண்டும். பெருகி வரும் தொழில் நுட்பத்திற்கு ஏற்ப, கல்வியின் தரம் உயர இது போன்ற கருத்தரங்குகளில் பங்கு கொள்ளுதல் மிகவும் அவசியமாகிறது.

## 4.8 பார்வை நூல்கள்


1. Methods and Techniques of Teaching - Sonali Publication.
2. திருஞான சம்பந்தர், வரலாறு கற்பிக்கும் முறைகள்.
3. இணைய தளம்
    1. http://timelives.ws
    2. en.wikipedia.org/wiki/seminar
    3. unionplus.educationplanner.com.
    4. https://gsrep.dhs.gov.
    5. www.cbs.curtin.edu.an
    6. www.aeispeakers.com.
    7. www.newi.ac.uk.

# அலகு – V

# களப்பயணம்

# (FIELD TRIP)

## அறிமுகம்

பயணம் என்றாலே மனிதர்களுக்கு பெரும் மகிழ்வைத் தரக்கூடியது. மனிதன் தன் இலக்கை அடைய செயல்படும் செயல்களில் ஒன்று பயணம் ஆகும். வாழ்க்கை–படகு என்றால் பயணம் அதில் நீரோடை போன்றது. பயணத்தின் போது மனிதன் புதிய அனுபவங்கள் பெற வாய்ப்புள்ளது. பயணத்தின் குறிக்கோள்கள் குடும்பத்திற்கும் பள்ளிக்கும் மாறுபட்டவை. பள்ளிப் பயணம் கற்றலை சிறப்படையச் செய்யும். இப்பாடத்தில் களப் பயணம் என்பதன் பொருள், பள்ளிப் பயணத்தின் நோக்கங்கள், பயணத்தை திட்டமிடல், செயல்படுத்துதல், செயல்விளைவு கூறல், பயன்கள் பற்றி விரிவாக ஆராய உள்ளோம்.

## அலகுக் கூறுகள்

5.1 களப்பயணம் – இலக்குகள்

5.2 களப்பயணம் – பொருள்

5.3. களப்பயணம் – முக்கியத்துவம்

5.4 களப்பயண பார்வை இடங்கள்

5.5 களப்பயணத்தோர்வின் சிறப்பம்சங்கள்

5.6 களப்பயணம் – வகைகள்

5.7 களப்பயணம் ஏற்பாடு செய்தல்.

5.8 தொடர்பணி

5.9 முடிவுரை

5.10 பார்வை நூல்கள்

மனித வாழ்க்கையே ஒரு பயண வாழ்க்கையாகும். வரலாற்று இடங்களை பார்வையிடுதல் என்பது மனிதனுக்கு ஒரு முதல்தர அனுபவமாகும். களப்பயணம் வரலாறு பாடம் கற்பிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. குழந்தைகள் உற்றுநோக்கியும், பல கேள்விகள் கேட்டும், பார்த்தவற்றை நினைவு கூர்தல் மூலமாக சமூக, இயற்கை சூழலைப் பற்றி அத்தியாவசியமான செய்திகள் மற்றும் செய்முறை அனுபவங்களைப் பெறுகின்றனர். இது கற்றல் பயணம் (Study tour) என்றும் அழைக்கப்படுகிறது.

## 5.1 களப்பயணத்தின் இலக்குகள்

1. களப்பயணம் மகிழ்வுறுக் கற்றலுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது.
2. சமுதாய வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்.
3. புத்தக அறிவைவிட நேரடி உற்று நோக்கலின் பயன்களை அறிதல்.
4. வரலாற்றுப் பாடம் கற்க ஆர்வம் பெறுதல்.
5. இயற்கையாக அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும், நடைபெற்ற நிகழ்வுகளையும் நேரடியாக கண்டறிதல்.
6. மாணவன் வண்ணம் தீட்டுதல், சிற்பங்கள், கட்டிடக்கலை மற்றும் ஓவியங்களை நேரில்கண்டு மதிப்பு கொள்ளுதல்.
7. புவியியல் நிலவெளித்தோற்றங்களை பார்வையிடுதல்.

ஆகியவை களப்பயணத்தின் முக்கிய இலக்குகள் ஆகும்.

## 5.2 களப்பயணம் பொருள்

களப்பயணம் என்பது சிறுதொலைப்பயணத்தைக் குறிக்கும். பயணம் என்றாலே சுற்றித் திரிதல் என்ற எண்ணம் வரும். பயணம் முடிந்ததும் உள்ளத்தில் மகிழ்ச்சி தரும். சுற்றித் திரிதல் என்பது பின்னர் சுற்றுலா (Excursions) எனப்பட்டது. களப்பயணம் மனிதற்கு மகிழ்வு தரக்கூடியது. மேலும் ஒரு பொழுது போக்காகவும், நேரடி அனுபவ அறிவை தர வல்லதாகவும் அமைகிறது.

## 5.3 களப்பயணம் – முக்கியத்துவம்

1. களப்பயணம் உள்ளத்திற்கும், உடலுக்கும் மகிழ்ச்சியை அளிக்கும்.
2. களப்பயணத்தின் மூலம் மாணவர்கள் வரலாற்று உண்மைகளையும் காலங்களையும், இடங்களையும் தெளிவாக எளிதாக உணரலாம்.
2. இயற்கைச் சூழலோடு நேரடித் தொடர்பு மற்றும் அனுபவம் ஏற்படுகிறது.
3. மாணவன் நான் படித்தேன் என்பதைவிட நான் பார்த்தேன் என்ற கற்றலில் அனுபவம் உள்ளது.
4. ஆசிரியர் – மாணவர் மற்றும் மாணவர் – மாணவர் நல்லுறவை வளர்க்கும்.
5. வேறுபாடு அற்ற நிலை, கூட்டுறவு மனப்பான்மை, கீழ்ப்படியும் தன்மை, மறதியிலாப் பதிவலையில் பதியும் திறன் மிகும்.

## 5.4 களப்பயண பார்வை இடங்கள்

1. சென்னை – பொருட்காட்சி சாலை, மாநகராட்சி செயலகம், அருங்காட்சியகம், உயிர்காட்சி சாலை, கோளரங்கம், கடற்கரை.
2. திருச்சி – கரிகாலன் கல்லணை, முக்கொம்பு, மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம்.
3. மகாபலிபுரம் – ஒற்றைக்கல் பஞ்சபாண்டவர் இரதங்கள், கடற்கரை கோவில்கள்.
4. தஞ்சாவூர் – பிரகதீஸ்வரர் ஆலயம், சரஸ்வதி மஹால், நூலகம்.
5. மதுரை – திருமலை நாயக்கர் மஹால், மீனாட்சி அம்மன் கோவில்.
6. செஞ்சி – செஞ்சிக்கோட்டை.
7. இராமேஸ்வரம் – இராமநாதசாமி கோவில் மற்றும் பிற.
8. குற்றாலம் – அருவிகள், மலைக்காட்சிகள், கோவில்கள்.
9. கன்னியாகுமரி – முக்கடல் சங்கமிக்கும் இடம், திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் பாறை.
10. புதுக்கோட்டை – சித்தன்னவாசல் ஓவியங்கள்.

மேலும் உள்ளூர் வளங்களை மிகுதியாக களப் பயண வாயிலாக பார்வையிடல் (உ.தா) கிராமிய தொழில்கள், அரசு அலுவலகங்கள், குடிசைத் தொழில்கள், கைவினைப் பொருட்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், கோவில்கள், பூங்காக்கள், அணைக்கட்டுக்கள் முதலியன.

## 5.5 களப்பயணத் தேர்வின் சிறப்பம்சங்கள்

1. வகுப்பறையில் கலந்துரையாடல் செய்த பாடத்தலைப்பிற்கு ஏற்ப தொடர்புடையதாக பயணம் இருக்க வேண்டும்.
2. வகுப்பறை கற்றல் அனுபவத்தை விட பாட சம்பந்தமாக நேரடி அனுபவம் தருவதாக அமைதல்.
3. களப்பயணம் திட்டமிடும்போது மிகக் குறைந்த தூர பயணத்தையே தேர்ந்தெடுத்தல்.
4. பெற்றோர்கள் மற்றும் தலைமை ஆசிரியர் முழு ஒப்புதலோடு பயணம் செயல்படல்.
5. அதிக பணச் செலவு இல்லாதிருத்தல்.

## 5.6 களப்பயணம் – வகைகள்

1. உள்ளூர் பள்ளி பயணம்
2. சமுதாயப் பயணம்
3. சுற்றுலா
4. கற்பனை பயணம்
5. பள்ளிக்குள் பார்வை
6. தனிப் பயணம் முதலியன

## 5.7 களப்பயணம் ஏற்பாடு செய்தல்

முழுமையான களப்பயணத்தின் படிநிலைகள் பின்வருமாறு.

1. சரியான இடத்தை தேர்வு செய்தல், 2. களப்பயண சிறப்பு இலக்குகளை வரையறுத்தல், 3. பயணத்தின் போது உடனுக்குடன் நிகழும் நிகழ்வுகளை திட்டமிடல், 4. முன் அனுமதி பெறுதல், 5. பயணச் செலவுகளை வரையறுத்தல், 6. பயணத்தினால் அதிகபட்ச பயன்களைப் பெற மாணவர்களை தயார் செய்தல், 7. நேர்த்தியானதாக களப் பயணம் இருத்தல், 8. தொடர் பணி செயல்கள் தொகுத்தல் போன்றவையாகும்.

களப்பயணம் சரிவர திட்டமிடப்படவில்லை எனில் நேரம், பணம் செலவு மிகுவதோடு குழப்பம் முடிவில் இருக்கும். வகுப்பு ஆசிரியர் மேற்பார்வையில் மாணவர்கள் அனைவரும் ஒற்றுமையாக செயல்பட திட்டமிட்டிருத்தல் அவசியம்.

### திட்டமிடலும் செயல்படுத்துதலும்

★ களப்பயணம் புறப்படுவதற்கு முன்பாகவே மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

★ மாணவர்களுக்கு துணையாக ஆசிரியர் நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

★ செல்வதற்கு வாகன வசதி ஏற்பாடு செய்தல்.

★ பார்வை இடத்தில் தங்கும் வசதிகள் ஏற்பாடு முன்பாகவே செய்திருத்தல்.

★ ஒரு சிறு சந்தேகத்திற்கும் இடமில்லாது திட்டம் தீட்டபட்டிருத்தல்.

★ பார்வை இடங்கள் பற்றி விபரங்களை மாணவர்களுக்கு அளித்தல்.

★ பார்வையின்போதே மாணவர்கள் தக்க குறிப்புக்களை எடுத்து கொள்ளுமாறு கூறுதல்.

வகுப்பு மாணவர்கள் குழுக்களாக பிரிந்து பற்பல பொறுப்புகளை பெற்று களப்பணியுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். பயண இடங்களின் படங்கள் மற்றும் போட்டோ நகல் சேகரித்து வைத்தல் வேண்டும். தலைமை மாணவன் கட்டளைக்கு மாணவர் ஒற்றுமையாக பணிந்து செயல்படுதல் அவசியம் ஆகும். களப்பயணம் முறையாக திட்டமிட்டு செயல்படுத்தினால் வரலாறு கற்பித்தல் நம் பள்ளிகளில் நல்லிணக்க புரட்சியை வீசச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

## 5.8 தொடர் பணி

ஒவ்வொரு மாணவனும் களப்பயணம் பற்றிய ஆவணம் தயார் செய்தல் வேண்டும். அனைத்து மாணவர்கள் அறிக்கையினையும் ஒன்று சேர்த்து ஒருமைப்படுத்தி ஆசிரியர் கருத்தரங்கம், குழு கலந்துரையாடல் மற்றும் வினாடி வினா நிகழ்வுகள் நிகழ்த்துவார். பின்னர் இதன் வாயிலாக பெற்ற அறிவு செயல்பாடுகளை தொகுப்பார். இக்கருத்துக்கள் பின்னர் விளக்கப் படங்களாகவும், வரைபடங்களாகவும், போட்டோ நகல் வடிவில் பள்ளி ஆண்டு மலர்களில் இடம் பெறுதல் வேண்டும்.

## 5.9 முடிவுரை

இத்தகைய செயல்முறை அனுபவங்களையும், இனிய நினைவுகளையும் அளிக்கும் களப்பயணமானது கற்றல் கற்பித்தலில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. சமூக அறிவியல் என்பது ஒரு சமூகத்தையோ, இயற்கைச் சூழலையோ உள்ளடக்கியதால் அதனை அனுபவ ரீதியாக பார்த்து உணர்தல் மற்றும் அறிதல் என்பது மிகவும் பொருந்ததக்கக் கூடியன. இது ஒரு தரமான நேரடி அனுபவத்தை நோக்கமாகக் கொண்டது. இந்நேரடி அனுபவத்தினால் புரியாதக் கடினப் பாடப்பகுதிகளும் கூட எளியப் பாடப்பகுதிகளாக மாணவர்களுக்கு அமைகின்றது. இதில் மாணவர்கள் ஒவ்வொருவருமே ஆக்கமும், ஊக்கமும் பெறுகின்றனர். மேலும் அவர்களிடையே ஒரு இணக்கமான சூழலும், ஒற்றுமையும் வளர்க்க வழிவகைச் செய்கின்றது. ஆசிரியர் – மாணவர் உறவு முறை மேம்பட்டு, இனிமையானக் கற்றலுக்கு வழிவகுக்கின்றது. மேலும் மாணவர்களிடையே 'உற்றுநோக்கி, கண்டறியும் திறன்' வளர்க்கும் ஒரு ஊடகமாகக் 'களப்பயணங்கள்' அமைகின்றன. களப்பயணத்தின் வெற்றியே, அதன் தொடர்பணியான களப்பயண அறிக்கையில்தான் உள்ளது. இதன்படி மாணவர்கள் தாங்கள் களப்பயணத்தில் உற்றுநோக்கிக் கண்டறிந்ததை பாடப்பொருளோடுத் தொடர்புபடுத்தி தகுந்த ஆதாரங்களோடும், புகைப்படங்களோடும் அறிக்கையைச் சமர்பித்து நிலையானக் கற்றல் அனுபவத்தைப் பெறுகின்றனர். எனவே ஆசிரியர்கள் கற்றல் திறன் பகுதிக்கேற்றவாறு களப்பயணத்தை அமைத்தல் அவசியமாகிறது.

## 5.10 பார்வை நூல்கள்


1. Ghate. V.D., The Teaching of History, Oxford Univ. Press. Bombay (1961).
2. Ghose. K.D., Creative Teaching of History.
3. Kochhar. S.K. The Teaching of Social Studies, Sterling Publisher pvt. Ltd. New Delhi, (1984).
4. Kohli. A.S. Teaching of Social Studies, Anmol pub. pvt. Ltd. New Delhi, (1996).
5. Salim Basha, S.A. & Digumarti Bhaskara Rao, Methods of teaching Geography.
6. Teaching of History in primary schools, NCERT, New Delhi (1970).
7. Yajnik. K.S. Teaching of Social Studies in India, Orient Longmans Ltd. Bombay (1966).

# அலகு – VI

# செயல் வழிக் கற்றல் முறை

# (ACTIVITY BASED LEARNING)

## அறிமுகம்

'நாம்' எவ்வளவு கற்பித்தோம் என்பது முக்கியமல்ல. கற்பித்தலில் எவ்வளவு மாணவர்களைச் சென்றடைந்தது என்பதுதான் முக்கியம்.

கற்பித்தல் முறைகள் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வருகின்றன. ஆசிரியர் மையக் கல்வி, குழந்தை மையக்கல்வி, மகிழ்வுறு கல்வி, இன்று, செயல்வழிக் கல்வி. தமிழ்நாட்டில் பெரும்பாண்மையான தொடக்கப் பள்ளிகளில் பல்வகுப்பு கற்பித்தல் சூழலே உள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளை ஓர் ஆசிரியர் கையாளும் போதும், அனைத்து வகுப்புகளையும் ஓர் ஆசிரியர் கையாளும்போதும், அனைத்து குழந்தைகளிடமும் முழு கற்றலை உருவாக்கிட செயல் வழிக்கற்றல் உதவுகிறது. மாணவர்கள் "'கற்றேன் என்று சொல்லுவதைவிட அனுபவத்தைப் பெற்றேன்' என்று கூறுவது தான் உண்மையான கல்வியாகும்" என ஜான்டுயி கூறுகிறார்.

மாணவர்கள் தரமான கல்வி பெறவும், அவரவர் வேகத்தில் தடையின்றிக் கற்கவும், தானே கற்றல், குழுவாக அமர்ந்து கற்கவும், சக மாணவர் உதவியோடு கற்றல் முழுமையாக நடைபெறவும் ஒன்று முதல் நான்கு வகுப்புகள் வரை செயல்வழிக் கற்றல் தமிழகத்தில் அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சமூக அறிவியல் கற்பித்தலில் இதனை கையாளும் வழிமுறைகளைத் தெரிந்து கொள்வோம்.

## அலகுக்கூறுகள்

6.1 செயல்வழிக் கற்றலில் அணுகுமுறைகள்

6.2 வகுப்பு நிர்வாகம்

6.3 குழு அட்டைகளும், குழுக்களும்

6.4 சமூவியல் (3 மற்றும் 4 வகுப்புகள்)

6.5 காலநிலை அறிதல்

6.6 ஆரோக்கிய சக்கரம்

6.7 தினசரி செயல்பாடுகள்

6.8 மனித உடல்

6.9 முடிவுரை

6.10 பார்வை நூல்கள்

**கற்றல் செயல்கள்**

| வ. எண். | அலகுக் கூறுகள் | வழங்கப்படும் செய்முறைப் பயிற்சி | தேவைப்படும் தகவல்கள் | விவரங்கள் சேகரிக்கும் இடம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பள்ளி | மற்ற இடங்கள் |
| 1. | செயல் வழிக்கற்றல் – வகுப்பு நிர்வாகம் | ஒப்படைப்பு – செயல்வழிக் கற்றல் வகுப்பு நிர்வாகத்தின் சிறப்பு | இடவசதி கீழ்மட்ட கரும்பலகைகள் கம்பிப்பந்தல் அட்டைகளைப் பாதுகாத்தல் | கற்பிப்புப் பயிற்சியின் பொழுது பள்ளியிலிருந்து இதற்கான தகவல்களை சேகரிக்க வேண்டும் | – |
| 2. | செயல்வழிக் கற்றல் குழுக்களும் குறியீடுகளும் | கற்றல் அட்டைகள் – ஒப்படைப்பு | 1. குழுக்கள் அமைக்கப்படும் அடிப்படைக் கூறுகள் 2. குறியீடுகளும் அவற்றின் விளக்கங்களும் | கற்பிப்புப் பயிற்சியின் பொழுது பள்ளியிலிருந்து இதற்கான தகவல்களைச் சேகரிக்க வேண்டும் | – |
| 3. | குறியீடுகளும் அவற்றின் விளக்கமும் கற்றல் அட்டைகள் | 10 கற்றல் அட்டைகள் III = 5 IV = 5 – ஒப்படைப்பு | கற்றல் அட்டைகள் (முக்கிய குறியீடுகள் உள்ள வரலாறு) | கற்பிப்புப் பயிற்சியின் பொழுது பள்ளியிலிருந்து இதற்கான தகவல்களை சேகரிக்க வேண்டும் | – |

செயல்வழிக்கற்றல் முறையை அறிந்து கொள்ள

1. கற்றல் செயல் அட்டைகள்
2. ஏணிப்படிகள்
3. குழு அமைக்கும் முறை
4. வகுப்பறை நிர்வாகம்

குறித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

## 6.1 செயல்வழிக்கற்றலில் அணுகுமுறைகள்

1. தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.
2. திறன் பகுதிகள் / திறன்கள் சிறு சிறு உட்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவைகள் கற்றல் படிகளாக அமைக்கப்பட்டுள்ளது.
3. ஒவ்வொரு கற்றல் படிகளுக்கும் பலவகை கற்றல் செயல்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளது.
4. அனைத்து கற்றல் படிகளும் சங்கிலிபோல் இணைத்துக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு கற்றல் ஏணிப்படி என்று பெயர். ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக கற்றல் ஏணிப்படி அமைக்கப்பட்டுள்ளது.
5. ஒவ்வொரு கற்றல் படியிலும் பின்வருமாறு செயல்பாடுகள் அமைக்க வேண்டும்.

(i). திறன் வளர்ச்சிக்கான தொடக்கநிலை செயல்பாடுகள்

(ii). அறிமுகப்படுத்தப்பட்ட திறனுக்கான வலுவூட்டல் செயல்பாடுகள்

(iii). இவற்றை சார்ந்த பயிற்சி செயல்பாடுகள்

(iv). மதிப்பீட்டு செயல்பாடுகள்

(v). குறைநீக்குச் செயல்பாடுகள்

(vi). வளம் பெருக்குச் செயல்பாடுகள்

(vii). திறன்கள் சார்ந்த கற்றல் அட்டைகள்

(viii). பல்வகுப்பு கற்பித்தல் முறைக்கேற்ப கற்பிக்க உதவும் குழு அட்டைகள்

(ix). குழந்தைளின் அடைவுகளைப் பதிவு செய்ய திறனடைவு பட்டியல்.

## 6.2 வகுப்பு நிர்வாகம்

செயல்வழிக்கற்றல் வகுப்புகள் சாதாரண வகுப்புகளைவிட சற்று கூடுதல் கவனத்துடன் அமைக்க வேண்டும்.

**அ. இடம்:** வகுப்பறையில் மாணவர்கள் சுதந்திரமாக செயல்பட போதிய இடம் வேண்டும். மாணவர்கள் ஆசிரியர்கள் உட்கார பாய்கள் போதுமானதாக இருக்க வேண்டும். எனவே மரப்பலகைகள், நாற்காலிகள், மேசைகள் போன்றவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.

**ஆ. கீழ்மட்ட கரும்பலகைகள்:** வகுப்பறை சுவர்களில் மாணவர்கள் பயன்படுத்தும் உயரத்திற்கு கரும்பலகை அமைக்க வேண்டும். இக்கரும்பலகையில் எழுதிப்பழக, ஒவ்வொரு மாணவருக்கும் குறிப்பிட்ட அளவு இடம் ஒதுக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அந்தந்த மாணவர்கள் அமர்ந்து பாடங்களையும் பயிற்சிகளையும் எழுதிப்பழகுவர். ஆசிரியர் ஒரு குழுவில் கவனம் செலுத்தும் போது மற்ற குழுவில் உள்ள மாணவர்கள் குறைந்த உயர கரும்பலகையைப் பயன்படுத்தலாம்.

**இ. கம்பிப்பந்தல்:** வகுப்பறையினுள் ஆசிரியரின் தலையில் தட்டாத உயரத்திற்கு மெல்லியக் கம்பிகளைக் கொண்டு பந்தல் ஒன்று அமைக்க வேண்டும். இக்கம்பிப்பந்தலில் மாணவர்களின் படைப்புகளை, வர்ணம் தீட்டி வரைந்தவற்றை, சேகரித்து அவைகளை அவரவர் பெயர்களுடன் தொங்க விட வேண்டும். புதிய படைப்புகள் உருவாக்கும்போது பழைய படைப்புகளை அகற்றிப் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

**ஈ. அட்டைகளைப் பாதுகாத்தல்:** கற்றல் அட்டைகளை அவற்றின் குறியீடுகளுக்கு ஏற்ப தனித்தனி பெட்டிகளில் (Tray) வைத்திடல் வேண்டும். ஒவ்வொரு பெட்டியின் முன்புறமும் அதில் வைக்கப்படும் அட்டையின் குறியீடுகளை (Logo) பெரிய அளவில் ஒட்ட வேண்டும். மாணவர்கள் குறியீடுகளைப் பார்த்து அதில் உள்ள அட்டைகளை தெரிவு செய்வர்.

ஒவ்வொரு பெட்டியிலும் நான்கு வகுப்புகளுக்கான சமக் குறியீட்டு (Same Logo) அட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் ஏணிப்படியில் தன் நிலைகளை குறியீடு பார்த்து அட்டைகளை தேர்வு செய்ய வேண்டும்.

அட்டையில் விளிம்பு வர்ணங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் அந்த அட்டை எந்த வகுப்பிற்கு உரியது என தீர்மானிக்க வேண்டும்.

| **வகுப்பு** | **வர்ணம்** |
|---|---|
| முதல்வகுப்பு | கருஞ்சிவப்பு |
| இரண்டாம் வகுப்பு | பச்சை |
| மூன்றாம் வகுப்பு | நீலம் |
| நான்காம் வகுப்பு | மஞ்சள் |

## 6.3 குழு அட்டைகளும், குழுக்களும்

முதன்முதலில் பள்ளியில் சேர்க்கப்படும் மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் முதல் குழுவில் தான் அமரவேண்டும். இங்கு ஒவ்வொரு பாடத்தின் அடிப்படைத் தன்மைகள் விளக்கப்படும். இக்குழு மாணவர்களை ஏணிப்படி முறையில் கற்றிட தயார்படுத்தும். இக்குழுவில்தான் உபகரணப்பெட்டி உள்ளது. இதில் அனைத்துக் குறியீடுகளும் அடங்கிய படஅட்டைகள் உள்ளது. மாணவர்கள் குறியீடுகளை புரிந்துகொள்ள பயிற்சி அளிக்க வேண்டும்.

### 6.3.1 குழு அட்டைகள்

பொதுவாக செயல்வழிக்கற்றலில் ஆறு குழுக்கள் உள்ளன. இந்த ஆறு குழுக்களுக்கும் ஆறு அட்டைகள் உண்டு. இந்த அட்டைகளை குழுஅட்டைகள் என்பர். ஒவ்வொரு அட்டையிலும் அக்குழுவில் இடம்பெறும் அனைத்து குறியீடுகளின் படங்களும், குழு எண்ணும் அச்சிடப்பட்டிருக்கும்.

முதல் இரண்டு குழுக்கள் முழுவதும் ஆசிரியர் சார்ந்தவை. மூன்றாவது குழு சிறிது ஆசிரியர் சார்ந்தது. நான்காவது குழு சக மாணவர் உதவியுடன் செயல்படுத்த வேண்டியது. ஐந்தாவது குழு சக மாணவர் சிறிது உதவியுடன் செயல்படுத்த வேண்டும். ஆறாவது குழு தானே கற்றல் குழுவாகும். இதில் தானே கற்றல் மற்றும் மதிப்பீட்டு செயல்பாடுகளும் உள்ளன.

சில வாரங்கள் மாணவர்கள் ஒன்றாக இருந்து சூழ்நிலையியல் அடிப்படைகளை தெரிந்த பின்னரே குழுப்பிரித்தலை செயல்படுத்த வேண்டும்.

## 6.3.2 குழுப்பிரித்தலின் அவசியம்

கற்றல் கற்பித்தலில் ஏற்படும் சுமைகளைக் குறைக்கவும், காலவிரயத்தைத் தவிர்க்கவும், மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ள துணைபுரிவதற்கும் குழுப் பிரித்தல் அவசியம். பாடக்குறியீடுகள் சில ஆசிரியர்கள் உதவியின்றி புரிந்து கொள்ள இயலாது. மற்றும் சில, சக மாணவர்களின் துணையுடன் புரிந்து கொள்ளும் பகுதியாக உள்ளன. சிலப்பகுதிகள், யாருடைய உதவியும் இல்லாமல் தானே கற்றுக் கொள்ளக் கூடிய பகுதிகளாக உள்ளன. இப்பாடப் பகுதிகளை அவற்றின் தன்மைக்கேற்ப பிரித்தெடுத்து ஒரே தன்மையுடையனவற்றை எல்லாம் ஒரே தொகுப்பில் சேர்த்து குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

## 6.3.3 மாணவர்கள் குழுவில் செய்யப்பட வேண்டிய அமைப்பு

முதலில் மாணவர்களுக்கு ஏணிப்படியின் அமைப்புகளை விளக்கவேண்டும். ஒவ்வொரு படிநிலையிலும் உள்ள குறியீடுகளுக்குரிய செயல்பாடுகளை அதே வரிசையில் செய்து முடிக்க முயல வேண்டும். ஒரு குறியீட்டினை செயல்படுத்தும் போது அக்குறியீடு ஆறு குழு அட்டைகளில் எந்தக் குழுவில் உள்ளது என்பதைக் கண்டறிந்து அக்குழுவிற்கு அம்மாணவன் செல்ல வேண்டும். ஆரம்ப நிலையில் மாணவர்கள் சரியான குழுவிற்கு செல்ல ஆசிரியரும் சக மாணவரும் உதவிட வேண்டும். தொடர்ந்து பயிற்சி மேற்கொள்ளும் போது மாணவர்கள் ஏணிப்படிகளில் உள்ள குறியீடுகளைப் பார்த்து அடுத்து தாங்கள் செல்ல வேண்டிய குழுவினை தெரிந்து கொள்ள வேண்டும்.

## 6.3.4 அட்டைகளை எடுத்தலும், வைத்தலும்

ஏணிப்படியைப் பார்த்து தான் கற்கவேண்டிய அட்டையை மாணவர்கள் தெரிந்து கொள்வர். மாணவர்கள் முன்பு படித்து முடித்த அட்டைகளையும், இனி படிக்க வேண்டிய அட்டைகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். குறியீடுகளும், எண்களும் சரியாக தெரிந்த பின்னரே அட்டைப் பெட்டிகளில் இருந்து சரியான அட்டைகளை எடுத்திட இயலும். அட்டையை எடுத்ததும் அதற்குரிய குழுவிற்கு சென்று முறையாகக் கற்றதும், மீண்டும் எடுத்த இடத்தில் வரிசை எண்படி அட்டைகளை வைத்திடவும் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்திட வேண்டும்.

## 6.3.5 குழு விளையாட்டுகள்

ஏணிப்படிகளில் பல குழு விளையாட்டுக்களும், பொம்மலாட்டம் போன்ற செயல்பாடுகளும் கொடுக்கப்பட்டிருக்கும். இச்செயல்பாடுகளை அனைத்து மாணவர்களையும் ஒன்றாகக் கூட்டி செயல்படுத்தலாம். இச்செயல்பாடுகள் முடிந்ததும் மாணவர்கள் அவரவர் குழுக்களுக்கு சென்றிட வேண்டும்.

## 6.3.6 காலநிலை அட்டவணை

இச்செயல்பாட்டை மாணவர்கள் குழுக்களாகத்தான் செய்யவேண்டும். மாணவர்கள் வகுப்பறையை விட்டு வெளியே சென்று காலநிலையைக் காண வேண்டும். தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் குறித்தல் வேண்டும்.

### 6.3.7 மாணவர்கள் அடைவு அட்டவணை

ஒரு முழு காகிதத்தில் கிடைமட்டத்தில் குறியீடுகளும், மேலிருந்து கீழாக வரிசை எண்ணும் மாணவர்களின் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு குறியீட்டில் உள்ள செயல்பாட்டை எந்த நாளில் தொடங்கி எந்த நாளில் முடித்தல் எனக் குறிக்க வேண்டும்.

மாணவர் அடைவுத் தொகுப்பு அட்டவணையில் மாணவர்கள் பெயர்களும், குறியீடுகளும் 30 சிறு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிறிய கட்டத்திலும் ஒரு மைல்கல்லில் உள்ள அக்குறியீட்டை முடித்து அம்மாணவன் எடுத்துக் கொண்ட நாட்களைக் குறிக்க வேண்டும்.

இத்தொகுப்பு அட்டவணை மாணவர்கள் ஒரு திறனை முடிக்க எடுத்துக் கொண்ட நாட்களை அறியவும், அவர்களின் அறிவுத்திறனை அளவிடவும் உதவும்.

## 6.4 சமூகவியல் (3 & 4 வகுப்புகள்)

### 6.4.1 குழுப் பிரித்தல்

சமூகவியலில் ஐந்து குழுக்களாக மாணவர்கள் பிரிக்கப்படுவர். இதில் முதல் இரண்டு குழுக்களும் ஆசிரியரை முழுவதும் சார்ந்த குழுக்கள் என்றும், மூன்றாவது குழு சிறிது ஆசிரியரைச் சார்ந்த குழு என்றும், நான்காவது குழு சிறிது சக மாணவர்களை சார்ந்தக் குழுவாகவும், ஐந்தாவது குழு முழுவதும் சுயச் சார்பு குழுவாகவும் பிரிக்கப்பட வேண்டும்.

### 6.4.2 குழுக்களும் குறியீடுகளும்

சமூகவியலில் ஐந்து குழுக்கள் உள்ளன. முதல் குழுவில் வாய், மெழுகுவர்த்தி, ஆலமரம் ஆகிய மூன்று குறியீடுகள் உள்ளன. இரண்டாவது குழுவில் அகல் விளக்கு, காமாட்சி விளக்கு, குத்துவிளக்கு ஆகிய மூன்று குறியீடுகள் உள்ளன. மூன்றாவது குழுவில் பொம்மலாட்டம், பெட்ரோமாக்ஸ் விளக்கு, சிம்னி விளக்கு, எறும்பும் பூதக்கண்ணாடியும் ஆகிய நான்கு குறியீடுகள் உள்ளன. நான்காவது குழுவில் ராந்தல்விளக்கு, தெரு விளக்கு, பென்சில், பாடப்புத்தகம் ஆகிய நான்கு குறியீடுகள் உள்ளன. ஐந்தாவது குழுவில் டார்ச் விளக்கு, குண்டு பல்பு ஆகிய இரண்டு குறியீடுகள் உள்ளன.

### 6.4.3 குறியீடுகளும் அவற்றின் விளக்கமும்

### பொதுவான குறியீடுகள்

**1. வாய் (பாடல்)**

இக்குறியீடானது திறனை அடிப்படையாகக் கொண்ட பாடல்களைக் குறிக்கும். ஏணிப்படியில் (0+7) எட்டு மைல் கல்லில் மட்டுமே இக்குறியீடு வரும். பாடலை ராகத்துடன் கற்றுக் கொடுத்தால் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு அதிகரிக்கும். மனதில் நிலைத்து நிற்கும்.

**2. ஆலமரம் (விளையாட்டு)**

விளையாட்டைக் குறிக்கும் இக்குறியீடு திறனைச் சார்ந்தே உள்ளது. விளையாட்டை மாணவர்கள் குழுவாக ஆசிரியர் முன்னிலையில் விளையாட வேண்டும். இக்குறியீடு ஏணிப்படியில் (0+9) 10 ஆவது மைல்கல்லில் வருகிறது.

**3. பொம்மலாட்டம்**

திரைக்குப் பின்னால் ஒளியின் உதவியால் பொம்மைகளை ஆடவைக்கும் ஆட்டமே பொம்மலாட்டம். பண்டையக் காலத்திலிருந்து புராணக்கதைகளையும், வீர தீர சரித்திரக் கதைகளையும் பாமரரும் புரியும் வகையில் இக்கலை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் பல வகைகள் உள்ளன. மிருகங்களின் தோலில் இருந்து எடுக்கப்படும் சவ்வினை உலரவைத்து, பதப்படுத்தி கதைக்கு ஏற்ற படங்கள் வரைந்து வண்ணங்கள் தீட்டி இந்த உருவங்களின் நிழல் வடிவங்களை திரையில் காட்டுவது பொம்மலாட்டத்தின் ஒரு வகையாகும்.

அட்டைத் துணிகள், நெகிழி (பிளாஸ்டிக்) முதலிய பொருட்களால் உருவ பொம்மைகளை செய்து அவற்றைக் குச்சிகளில் பொருத்தி திரைக்குப் பின்னால் காட்டி கதைகளை விளக்குவது, தற்போது நாம் நமது பாடப்பகுதியில் பயன்படுத்தப்படும் வகையாகும். ஏணிப்படியில் 2ஆவது மைல் கல்லில் இக்குறியீடு வருகிறது.

**4. பென்சில்**

இக்குறியீடு உருவங்களை வரையவும், புள்ளிகளை இணைத்து வண்ணம் தீட்டவும், வரைப்படத்தில் வண்ணம் தீட்டி இடங்களைக் கண்டறியவும் உதவுகிறது. மாணவர்களின் கற்பனையும் கைத்திறனையும் வளர்க்கக் கூடிய வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பயிற்சி ஏட்டில் குறிப்பிட்ட பென்சில் சின்னத்தில் இப்பயிற்சியினை செய்ய வேண்டும். இக்குறியீடு ஏணிப்படியில் (0+14) 15 ஆவது மைல் கல்லில் வருகிறது.

**5. பாடப்புத்தகம்**

கொடுக்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தில் பக்க எண்களைக் கொண்டு பாடப் பயிற்சியினை செய்ய வேண்டும். இக்குறியீடு ஏணிப்படியில் 14 ஆவது மைல் கல்லில் வருகிறது.

**6. எறும்பும், பூதக்கண்ணாடியும்**

களப்பயணத்தைக் குறிக்கும் இக்குறியீடு திறனைச் சார்ந்தே அமைக்கப்பட்டுள்ளது. பாடப்பகுதியில் அறிந்து கொண்ட கருத்துக்களை நேரடியாக அனுபவித்து உணர்ந்து கொண்டு தகவல்களை திரட்ட இக்களப் பயணம் உதவும் வகையில் அமைய வேண்டும். இக்குறியீடு ஏணிப்படியில் 5ஆவது மைல் கல்லில் வருகிறது.

## சமூகவியல் குறியீடுகள்

### 7. அகல் விளக்கு (கதை)

கதை கேட்க ஆர்வம் இல்லாத குழந்தைகளே இல்லை எனலாம். எனவே எளிய கதையின் வாயிலாக திறன் விளக்கப்பட்டுள்ளது. கதையானது ஏற்ற இறக்கத்துடன் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் உயிரோட்டமாக சொல்ல வேண்டும். பின் கதை அட்டைகளை மாணவர்கள் வாசிக்கவும் கொடுக்கலாம். இதனால் வாசிப்புத்திறன் பயிற்சி ஏற்படுகிறது. இக்குறியீடு ஏணிப்படியில் (0+7) 8 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 8. மெழுகுவர்த்தி (உரையாடல்)

ஒருவருக்கொருவர் தம் கருத்துகளை உரையாடலின் வாயிலாக விளக்க முடியும். உரையாடல் மூலமாக கவனித்தல், பேசுதல் போன்ற திறன்கள் வளர்கின்றன. திறனைச் சார்ந்த உரையாடல் உள்ளது. இரு மாணவர்கள், உரையாடல் அட்டைகளை வைத்து, வாசித்து, உரையாட வேண்டும். இது ஆசிரியர் மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும். இக்குறியீடு ஏணிப்படியில் (0+9) 10 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 9. குத்துவிளக்கு (படமும் வினாவும்)

பாடத்தின் பாடப்பொருளை மாணவர்கள் நன்கு உணரக்கூடிய குறியீடாக குத்து விளக்கு அமைகிறது. இதில் திறனைச் சார்ந்த படங்கள், கேள்விகள் என்ற இரு பகுதிகள் உண்டு. எல்லா மாணவர்களும் விவாதத்தில் பங்கு பெற வாய்ப்பளிக்க வேண்டும். ஆசிரியர்கள் எளிய வினாக்களையும் கேட்கலாம். இக்குறியீடு ஏணிப்படியில் 14 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 10. காமாட்சி விளக்கு (படித்துப் பார்)

மாணவர்களுக்கு பாடப்பொருளை மீண்டும் வலியுறுத்த இப்பகுதி அமைந்துள்ளது. மேலும் வாசித்தலில் மாணவர்கள் பயிற்சி பெற இக்குறியீடு உதவுகிறது. இக்குறியீடு ஏணிப்படியில் 14 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 11. இராந்தல் விளக்கு (என் இனிய இந்தியா)

நம் தாய் திரு நாட்டின் அரசியலமைப்பு, இயற்கை வளங்கள், பொருளாதார வளர்ச்சி, மக்கள்தொகை, கல்வி வளர்ச்சி, வேளாண்மை, விளையாட்டு, போக்குவரத்து போன்ற அனைத்து துறைகளைப் பற்றிய முக்கிய சில தகவல்கள் தேன் துளி போல வழங்கப்பட்டுள்ள பகுதி என் இனிய இந்தியாவாகும். இது பாடப்பகுதி மட்டும் அல்லாமல் மேற்கொண்டு சில தகவல்கள் மாணவர்களுக்கு பொது அறிவை வளர்க்கும் வகையில் செய்திகளாக வழங்கப்பட்டுள்ளன. இக்குறியீடு ஏணிப்படியில் (0+14) 15 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 12. பெட்ரோமாக்ஸ் விளக்கு (நாடகம்)

கருத்துக்களை நாடக வழக்கில் வழங்குவதில் உள்ள நன்மைகள் நாம் அறிந்த ஒன்றாகும். அவ்வகையிலே மாணவர்களைக் கொண்டு பாடப்பகுதியை நாடகமாக நிகழ்த்தப்படும் போது

அனைத்து மாணவர்களும் பங்கு பெறுகிறார்கள். நடிப்பு, பேச்சு, கேட்டல், உற்று நோக்கல் போன்ற அனைத்து திறன்களும் ஒருங்கே வளர வாய்ப்பளிக்கப்படுகிறது. தானே பங்கேற்று, விலங்குகள், பறவைகள் போன்று வேடம் ஏற்று நடிப்பதால் மகிழ்வுறு கற்றல் இங்கு நடைபெறுகிறது. இக்குறியீடு ஏணிப்படியில் 2 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 13. சிம்னி விளக்கு (வில்லுப்பாட்டு)

நம்முடைய பாரம்பரிய கிராமியக் கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டு மனதிற்கு இனிமையான, எளிமையான கலைகளில் ஒன்றாகும். கடினமான கருத்துக்களையும் கூட மிக இலகுவாக அறிந்து கொள்ளச் செய்வது வில்லுப்பாட்டாகும். அவ்வண்ணமே திறனை மாணவர்கள் இக்குறியீட்டின் மூலம் அறிந்து கொள்கின்றனர். இக்குறியீடு ஏணிப்படியில் ஒரே ஒரு மைல் கல்லில் வருகிறது.

### 14. தெரு விளக்கு (சேகரித்தல்)

மாணவர்கள் தகவல்களை, பொருட்களைத் திரட்டி வருதலே சேகரித்தல் ஆகும். திறனைச் சார்ந்த தகவல்களையும் பொருட்களையும் சேகரித்து வந்து அதற்கென கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பு ஏடுகளில் தகவல்களை எழுதியும், படங்களை ஒட்டியும், வைக்க வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு பாடப்பகுதி அல்லாமல் பொது விஷயங்களில் நேரடி அனுபவம் கிடைக்கின்றது. இக்குறியீடு ஏணிப்படியில் 14 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 15. டார்ச் விளக்கு (மதிப்பீடு)

ஒவ்வொரு மைல் கல்லிலும் மாணவர்களின் திறனடைவைக் கண்டறியும் பகுதியாக இக்குறியீடு அமைந்துள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தங்களின் தரத்தை அறிவதோடு மட்டுமில்லாமல் அடுத்த மைல் கல்லை துவக்க தங்களைத் தயார்படுத்திக் கொள்கின்றனர். இக்குறியீடு ஏணிப்படியில் 14 ஆவது மைல் கல்லில் வருகிறது.

### 16. குண்டு பல்பு (தேர்வு அட்டை)

இக்குறியீடு தேர்வுகளைக் குறிக்கும். காலாண்டு, அரையாண்டு, முழுஆண்டு என்று மூன்று தேர்வு நிலைகளைக் குறிக்கும் வகையில் இது உள்ளது. இதுவே கடைசி குறியீடு ஆகும். தேர்வு அட்டைகளில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களைப் பொறுத்து மாணவர்களின் தேர்ச்சி அமையும். இக்குறியீடு ஏணிப்படியில் 3 ஆவது மைல் கல்லில் வருகிறது.

## 6.5 காலநிலை அறிதல்

## 6.5.1 சூரியன், மேகத்தில் பாதி மறைந்த சூரியன்

இக்குறியீடு காலநிலைக் குறியீடாகும். இக்குறியீடு ஏணிப்படியில் காட்டப்படாவிட்டாலும் தினமும் செயல்படவேண்டிய குறியீடாகும். மாணவர்கள் குழுக்களாக அல்லது தனியாக இக்குறியீட்டின் செயல்பாடுகளைச் செய்ய வேண்டும். இதில் பதினொன்று காலநிலைக் குறியீடுகளும், காலத்திற்கேற்ற அட்டைகளைக் குறிக்கும் ஒரு குறியீட்டையும், ஆக மொத்தம் 12 படங்களைக் கொண்ட குறியீடுகளை உள்ளடக்கியன. ஒவ்வொரு படமும் ஒரு விளக்கத்தை கொண்டதாகும்.

| எண் | காலநிலை பாடம் | விளக்கம் |
|---|---|---|
| 1. | சூரியன் | அதிக வெயில் |
| 2. | மேகத்தில் பாதி மறைந்த சூரியன் | சுமாரான வெயில் |
| 3. | மேகம் | மந்தாரம் |
| 4. | மழையும் குடையும் | சிறிதளவு மழை |
| 5. | வீடும் மழையும் | அதிக அளவு மழை |
| 6. | மின்னலும் மழையும் | இடிமின்னலுடன் மழை |
| 7. | வானவில் | வானில் வானவில் தோன்றுதல் |
| 8. | பறக்கும் பட்டம் | சிறிதளவு காற்று |
| 9. | மரங்களும் சாய்ந்த மரங்களும் | மரங்களை சாய்க்கும் அளவு காற்று (புயல்) |
| 10. | சுருட்டிய கம்பளம் | மிதமான குளிர் |
| 11. | நெருப்பு | |
| 12. | ஆடைகள் | |
| | பனியன் | கோடைகால ஆடை (பருத்தி) |
| | கடுங்குளிர் கால ஆடை | (கம்பளி) |
| | கவுன் | இதர (பருத்தி, பட்டு) |

| கிழமைகள் | காலை | நண்பகல் | மாலை |
|---|---|---|---|
| திங்கள் | | | |
| செவ்வாய் | | | |
| புதன் | | | |
| வியாழன் | | | |
| வெள்ளி | | | |
| சனி | | | |
| ஞாயிறு | | | |

**6.5.2 அட்டவணையைப் பயன்படுத்தும் முறை:** வாரத்தின் ஏழு நாட்களிலும் இந்த அட்டவணையை நிரப்ப வேண்டும். விடுமுறை நாட்களில் மாணவர்களிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டால், அவர்கள் தேவையான தகவல்களுடன் பள்ளிக்கு வருவார்கள். பள்ளியில் அட்டவணையைப் பூர்த்தி செய்யலாம்.

இவ்வட்டணையை பள்ளியில் தினமும் நிரப்ப வேண்டும். காலை, நண்பகல் மற்றும் மாலை பள்ளிவிடும் நேரத்தில் மாணவர்களால் செய்யப்பட வேண்டும். எந்த நாளில், எந்த நேரத்தில் எத்தகைய காலநிலை உள்ளதோ அதைக் குறிக்கும் படத்தினை அக்கட்டத்தில் வரையவேண்டும்.

(எ.கா.) திங்கள், நண்பகல் சூரியன் தெரியாத அளவிற்கு மேகமூட்டமாக இருந்தால் மூன்றாவது படத்தில் உள்ள மேகமூட்டத்தைக் காட்டும் படத்தினை திங்கள் நண்பகலுக்கு உரிய கட்டத்தில் நிரப்பலாம்.

மாணவர்கள் குழுவாக செயல்பட்டு அட்டவணையை நிரப்ப வேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் காற்று வீசிக் கொண்டிருந்தால் அது எத்தகைய காற்று ? மிதமான காற்றா ? அல்லது மரங்களை வேருடன் சாய்க்கும் அளவிற்குப் பலமான காற்றா ? என்று மாணவர்கள் விவாதித்து முடிவெடுத்து அட்டவணையை நிரப்ப வேண்டும்.

மாதம் ஒரு முறை காலநிலை குறித்து ஆசிரியரும் மாணவர்களும் விவாதிக்க வேண்டும். அம்மாதத்தில் என்று, எப்பொழுது அதிக மழை பெய்தது ? எப்பொழுது அதிக அளவு காற்று வீசியது ? எத்தனை நாள் மித வெப்பமாக இருந்தது ? போன்ற வினாக்களுக்கு மாணவர்கள் காலநிலை அட்டவணையைப் பார்த்து பதில் தெரிவிக்க வேண்டும்.

குறிப்பிட்ட மாதத்தில் விற்பனைக்கு வரும் பழங்கள் யாவை ? பூக்கள் யாவை ? காய்கள் யாவை ? போன்ற வினாக்களையும் கேட்கலாம். குறிப்பிட்ட காலத்தில் அணிய வேண்டிய ஆடைகள் பற்றியும் விவாதிக்கலாம்.

## 6.6 ஆரோக்கிய சக்கரம்

இதில் ஒரே ஒரு அட்டைமட்டும் கடிகார அமைப்பில்இருக்கும். இது சூழ்நிலையியலில் ஏணியில் காட்டப்படாவிட்டாலும் தினமும் பயன்படுத்த வேண்டிய செயல்பாடாகும்.

கடிகார அமைப்பில் ஒரு வட்டத்திற்குள் ஒன்பது படங்கள் வரையப்பட்டிருக்கும். ஒவ்வொரு படமும் ஒரு உடல் நலச் செயல்பாட்டைக் குறிக்கும். இதில் ஒவ்வொரு படத்தையும் தொடும் வகையில் முள் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும்.

| படங்கள் | விளக்கங்கள் |
|---|---|
| தலைமுடி | எண்ணெய்த் தேய்த்து தலைவாரி சுத்தமாக இருக்கவேண்டும். |
| மூக்கு | மூக்கு சுத்தமாகவும் நீர் வடியாமலும் இருக்க வேண்டும். |
| பல் | பல் தினமும் துலக்கப்பட்டு, தூய்மையாக காக்கப்படவேண்டும். பல் துலக்காமல் உணவு உண்ணக்கூடாது. |
| முகம் கழுவுதல் | உடலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். மென்மையான சோப்பினால் உடலைக் கழுவினால், உடலில் படிந்துள்ள உப்புக்கள் நீங்கி உடலிலிருந்து தேவையற்ற வாசனை வராமல் காக்கலாம். |

| | |
|---|---|
| கழிப்பறை | காலை – மாலை இரு வேளைகளில் மலம் கழிக்கும் பழக்கம் ஏற்படவேண்டும். மலம் கழிக்க கழிப்பறையைத்தான் பயன்படுத்த வேண்டும். கண்ட கண்ட இடங்களில் மலம் கழிப்பது சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும். |
| தும்முதல் | தும்மும்போதும், இருமும்போதும் கைத்துண்டால் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் தும்மும்போது அல்லது இருமும்போது மூக்கு மற்றும் வாயின் வழியாக வெளியேறும் நீர் மற்றும் காற்று மற்றவர்களின் மீது அல்லது உணவுப்பொருட்கள் மீது பட ஏதுவாகும். இதனால் நோய் கிருமிகள் பரவலாம். |
| கைவிரல்கள் | நகங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். அளவிற்கு அதிகமாக வளரும் நகத்தினை வெட்டிவிட வேண்டும். நகத்தில்அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். |

மாணவர்கள் தினமும் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் வர வேண்டும். ஏதாவது குறையுடன் வந்தால் அதை அவர் மட்டும் அறிந்து நிவர்த்தி செய்து கொள்ள இக்குறியீடு உதவும்.

(எ.கா.)வகுப்பில் ஒரு மாணவன் சரியாக தலைவாரிக்கொண்டு வரவில்லை என்றால், ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் கண்ணை மூடச் சொல்ல வேண்டும். ஆரோக்கிய சக்கரத்தின் முள் சுற்றுகிறது என்று கூறிவிட்டு தலை வாராமல் உள்ள மாணவனை மட்டும் தொட்டு ஆரோக்கிய சக்கரத்தின் முள் நிற்கும் இடத்தைக் காட்ட வேண்டும். ஆரோக்கிய சக்கரத்தின் முள்தலைப்பகுதியை காட்டிக் கொண்டிருக்கும். சுட்டிக்காட்டப்பட்ட மாணவன் உடனே தலைவாரிக்கொள்ள வேண்டும். அம்மாணவன் மீண்டும் அவனிடத்திற்கு வந்த பின் அனைத்து மாணவர்களும் கண்களைத் திறக்க வேண்டும். இது போல ஆசிரியர், கவனித்த குறைகளை மாணவர்களுக்கு தனித்தனியாக சுட்டிக்காட்டி திருத்த வேண்டும். பின்னர் பொதுவாக, தான் கவனித்த குறைகளை, மாணவர்களுக்குத் தெரிவித்து, அக்குறைகளை எவ்வாறு நீக்க வேண்டும் என்பது பற்றியும் மாணவர்களுக்கு கேள்வி பதில் மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

## 6.7 தினசரி செயல்பாடுகள்: (புதிர்)

**6.7.1 கோழி கூவுதல் – எழுதுதல்:** பதினொரு படங்கள் கொண்ட இந்த செயல்பாடுகள் தாங்கிய அட்டை ஏணிப்படியில் வராமல் இருந்தாலும் அனைவரும் அறிந்திருக்க வேண்டியதொன்றாகும். இச்செயல்பாடுகளின் வரிசையை மாணவர்கள் அறிய வேண்டும். இப்பதினொரு செயல்பாடுகளும் தனித்தனி அட்டைகளில் வரையப்பட்டிருக்கும். இவற்றை குவியலாக மாணவர்களிடம் கொடுக்கவேண்டும். அவர்கள் எந்த செயல்பாட்டிற்குப் பின்னர் எந்த செயல்பாடு வரவேண்டும் என்பதை விவாதித்து வரிசையாக அடுக்க வேண்டும். அட்டைகளை சிந்தித்து அடுக்க வேண்டியிருப்பதால் இதனை “தினசரி புதிர்” என்று அழைக்கலாம். இச்செயல்பாடுகளை மாற்றி மாற்றி செய்தால் என்னவாகும் என்பதை மாணவர்களுடன் ஆசிரியர் விவாதிக்க வேண்டும். சரியான வரிசையில் அடுக்கிய பின் மாணவர்களைத் தங்கள் அன்றாட செயல்பாடுகளை இதன் வரிசைகளில் அடுக்க ஊக்கப்படுத்த வேண்டும்.




1. கோழி கூவுதல்
2. மாணவர்கள் எழுதுதல்
3. கழிவறை செல்லுதல்
4. பல் தேய்த்தல்
5. குளித்தல்
6. சாப்பிடுதல்
7. பள்ளி செல்லல்
8. விளையாடுதல்
9. குளித்தல்
10. பாடம் படித்தல்
11. சாப்பிடுதல்
12. தூக்கம்

## மனித உடல்

"மனித உடல்" குறியீடு ஏணிப்படியில் வரவில்லை என்றாலும் அனைத்து மாணவர்களும் அறிந்திருக்க வேண்டிய குறியீடாகும். இதில் ஒரு பிளாஸ்டிக் அல்லது அட்டையில் மனித உருவம் வெட்டப்பட்டிருக்கும். வெட்டப்பட்ட பாகங்கள் தனித்தனியாக இருக்கும். மாணவர்க்கு உடலுறுப்புகளின் பெயர்களை அறிந்து கொள்ளவும், அவற்றை உரிய இடங்களில் பொருத்தவும் தேவையான திறனை இக்குறியீடு மூலம் பெறுகிறார்கள். மேலும் மாணவர்கள் தங்களுக்குள்ளேயே உருவத்திலிருந்து எடுக்கப்பட்ட உடலுறுப்பை காட்டி பெயர் கேட்பதற்கும் அவற்றை உரிய இடங்களில் பொருத்தி விளையாடுவதற்கும் முற்படுவர்.

### சமூகவியலில் பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகள்

### 3–ம் வகுப்பு மற்றும் 4–ம் வகுப்பு

| வ.எண். | உருவம் | உருவத்தின் பெயர் | செல்பாடு | III | IV |
|---|---|---|---|---|---|
| 1. |  | வாய் | பாடல் | 8 | 9 |
| 2. |  | அகல் | கதை | 8 | 6 |
| 3. |  | குத்து விளக்கு | படமும், வினாவும் | 14 | 15 |
| 4. |  | மெழுகுவர்த்தி | உரையாடல் | 9 | 9 |
| 5. |  | காமாட்சி விளக்கு | படித்துப்பார் | 14 | 15 |
| 6. |  | ஆலமரம் | விளையாட்டு | 10 | 16 |
| 7. |  | இராந்தல் விளக்கு | என் இனிய இந்தியா | 15 | 15 |
| 8. |  | பொம்மலாட்டம் | பொம்மலாட்டம் | 2 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. |  | பெட்ரோமாக்ஸ் விளக்கு | நாடகம் | 2 | 2 |
| 10. |  | சிம்னி விளக்கு | வில்லுப்பாட்டு | 1 | 2 |
| 11. |  | பென்சில் | வரைதல், வண்ணமிடுதல் | 15 | 20 |
| 12. |  | பாடப்புத்தகம் | பாடப்பயிற்சி | 14 | 15 |
| 13. |  | எறும்பும் பூதக்கண்ணாடியும் | களப்பயணம் | 4 | 7 |
| 14. |  | தெருவிளக்கு | சேகரித்தல் | 4 | 15 |
| 15. |  | அலாவுதீன் அற்புதவிளக்கு | செயல்பாடுகள் | – | 17 |
| 16. |  | மேசை விளக்கு | செய்துப்பார் | – | 10 |
| 17. |  | டார்ச் லைட் | மதிப்பீடு | 14 | 15 |
| 18. |  | குண்டு பல்பு | தேர்வு அட்டை | 3 | 3 |

## 6.9 முடிவுரை

செயல்வழிக் கற்றல்முறை கற்பித்தலில் புதிய முயற்சி. பல்வகுப்புக் கற்பித்தல் மிகுந்த தமிழகத்தில் தரமான கல்வியை உருவாக்கும் திட்டம். அனைத்து மாணவர்கள் தம் தரம் உணர்ந்து விரைவாக, முழுமையாகக் கற்றுக் கொள்ள உதவுகிறது. குழந்தைகள் தாமே முயன்று கற்பதால் தன்னம்பிக்கை வளர்கிறது. மாணவர்கள் விரும்புகின்ற அனைத்து கற்பித்தல் முறைகளும் இத்திட்டத்தில் அமைந்துள்ளன. மாணவர்களின் படைப்பாற்றல், கூர்ந்து நோக்கும் திறன் வளர்ச்சிப் பெறுகிறது. செயல்வழிக்கற்றலை முழுமையாக புரிந்து பயன்படுத்துவோம். கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்.

## 6.10 பார்வை நூல்கள்

அனைவருக்கும் கல்வி இயக்ககம் (SSA) – செயல் வழிக் கற்றல் – கையேடு.